யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைப் பிரசுரம்—10.

87.6
285

# செந்தமிழ் வாசக மஞ்சரி

## முதற் றொகுதி

ACL-MKU
00730

சைவப் பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

புதிய பதிப்பு 1949 ரூபா 1-25.

(Copyright Registered)

இலங்கை

அரசினர் பாடபுத்தக பரிசீலனைச் சபையாரின்

**அங்கீகாரம் பெற்றது.**

செப்டம்பர், 16. 1952.

உ

# செந்தமிழ் வாசக மஞ்சரி

## முதற் றொகுதி

81

இந்துசாதனப் பத்திராசிரியர்


**பண்டிதர்: ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை**


தொகுத்தது.


மதுரை காமராசர் பல்கலை
அவ்வை
தி.க. சண்முகம் நூல
தமிழியல்துறை.



யாழ்ப்பாணம்

சைவ பரிபாலன சபையாரால்

தமது

சைவப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

விரோதி௵ மார்கழி௴

புதிய பதிப்பு ] 1949 [விலை ஒன்றேகால் ரூபா.



[*Copy Right Registered*]



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்.

# நான்முகம்

செந்தமிழ் வாசகமஞ்சரி (முதற்றொகுதி) யாகிய இந்நூல் இலங்கை வித்தியாபகுதியாரின் புதிய நிபந்தனை கட்கிசைய, ஆங்கில, தமிழ் ஜே. எஸ். ஸீ (J. S. C.) (Prep. S. S. C.) எஸ். எஸ். ஸீ வகுப்பு முதலிய உயர்தர வகுப்புகளிற் பயிலும் மாணவர்கட்கு உபயோகமாகும் முறையிற் புதிதாகத் தொகுக்கப்படலாயிற்று.

இந்நூலில் வசனபாகம் செய்யுட்பாகம் என இரு தொகுதியுண்டு. வசனபாகம் கடவுள் முதலாக முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது ஈறாக, பலவகைத்துறைப் பட்ட பரந்த, பாக்கள் இடையிடையே செறிந்த பத்துப் பாடங்களை யுடையது. இவற்றுட் பலபாடங்கள் அறிஞர்களாலும் சில பாடங்கள் எம்மாலும் எழுதப்பட்டவை. பாடங்களின் முகப்பில் அவதாரிகையும், ஈறுதோறும் பரீக்ஷை வினாக்கள், இலக்கண விளக்கம், இலக்கண வினாக்கள் என்னுமிவைகளும் அமைந்துள்ளன.

செய்யுட் பாகமானது: தாயுமானசுவாமிகள், ஔவையார், சிவஞானசுவாமிகள், பரஞ்சோதியார், பாரதியார், காளமேகப்புலவர், சத்திமுத்தப்புலவர் என்னு மிவர்கள் பாடிய அரும்பெருங் கவிகளையும், படிப்போர் கேட்போர் உள்ளமுருக இலகுவான சந்த நடையிற் கவி யியற்றும் புலமை பூண்டவராகிய ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திர புராணத்துள்ள நகர்நீங்கு காண்டத்தையும் கொண்டுள்ளது. இந்நூலகத்து நூற்றைம்பதிற்கு மேற்பட்ட தொகைகொண்ட செய்யுட்கள் தொகுக்கப் பெற்றுள்ளன; அரும்பதவிளக்கம் செய்யுட்பாடவுரை யென்னு மிவைகளும் நூலின் இறுதியில் நுட்பமான முறையில் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் உயர்தர வகுப்புகட்குப் பெரிதும் பயன்படு மென்பது எமது அபிப்பிராயம்.

இந்துசாதனாலயம்
வண்ணார்பண்ணை
15—12—49.

டி. வே. திருஞானசம்பந்தன்.

# விஷய அட்டவணை


| பாடம். | | பக்கம் |
|---|---|---|
| | **வசனபாகம்** | |
| 1. | கடவுள் ... ... ... | 1 |
| 2. | பதுமினி ... ... ... | 4 |
| 3. | சங்கச்செய்யுளின் பெருமை ... ... ... | 16 |
| 4. | பாரத நூலாசிரியர் ... ... .... | 25 |
| 5. | புலையும் கொலையுங் களவுந் தவிர் ... ... | 31 |
| 6. | வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் | 37 |
| 7. | சிலப்பதிகாரம் ... ... ... ... | 43 |
| 8. | அயோத்திகாண்டம் (நாடகம்) ... ... | 57 |
| 9. | பற்றுக்கள் ... ... ... ... | 69 |
| 10. | முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார் ... | 83 |
| | **செய்யுட்பாகம்** | |
| | கடவுள் வணக்கம் ... ... ... | 108 |
| | ஔவையார் பாடல் ... .... ... | 109 |
| | தமிழ்மொழியின் பெருமை ... ... ... | 113 |
| | காளமேகப்புலவர் பாடல் ... ... | 114 |
| | சத்திமுத்தப் புலவர் பாடல் / இரட்டையர் பாடல் ... ... | 121 |
| | அரிச்சந்திர புராணம் (நகர் நீங்கிய காண்டம்) ... | 122 |
| | அரும்பத விளக்கம் ... ... ... | 135 |
| | செய்யுட்பாட விளக்கம் ... ... | 141 |

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அன்பளிப்பு
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

உ

# செந்தமிழ் வாசக மஞ்சரி

## முதற் பகுதி.

### 1. கடவுள்

[இது கடவுளுண்டென்பதையும், அவருடைய கருணைத் திறத்தையும், அவரை நாம் சிந்தித்து வணங்கவேண்டு மென்பதையும், இன்னபிற வற்றையும் உதாரணமுகத்தால் விளக்கி இனிது கூறுவது; இப் பாடம், புலோலி. திரு. சு. சிவபாதசுந்தர மவர்கள் இயற்றிய சைவசமயசாரம் என்னும் நூலின் முதற்பாடமாகும்]

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
யொன்றனுக் கொன்று நின்றெழில் பகரில்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
வின்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்" —திருவண்டப்பகுதி.

ஆகாயத்தை இராக்காலத்திலே அண்ணாந்து பார்த்தால், அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னி விளங்குவதைக் காணலாம். அந்த நட்சத்திரங்கள் வெகு தூரத்திலே இருத்தலாற் சிறியவைகளாகத் தோன்று கின்றன. அவைகள் உள்ளபடி மிகப் பெரியவைகளாம். சூரியன் பூமியிலும் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரியவை களே. ஆதலால் இந்தப் பூமியையும் சூரியனையும் எண்ணில்லாத நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார்தாம் சொல்ல வல்லவர்! இந்த அளவில்லாத பெருமையையுடைய கடவுள் அன்பையே வடிவமாக உடையவர்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்திலர்

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.

ஆதலால் அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாததாகவே இருக்கும். பெற்ற தாயானவள் குழந்தை யிடத்தே எவ்வளவு அன்புடையவளாய் இருக்கிருள். கடவுளுடைய அன்பு தாயினுடைய அன்பிலும் கோடாநுகோடி மடங்கு அதிகமாய் இருக்குமல்லவா. தாயைக் காணும்போது குழந்தை எவ்வளவு ஆநந்தம் அடைகிறது. ஆதலால், தாயிலும்பார்க்க அதிகமான அன்பையுடைய கடவுளை நினைக்கும்போதும், அவரைக் கோயிலிலே காணும்போதும் நாம் எல்லையில்லாத ஆநந்தம் அடைய வேண்டும்; எமது மனம் கரைந்து உருகுதல் வேண்டும்.

“மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டு கொள்ளே.”

தாய் தந்தையர் குழந்தைக்கு வேண்டிய ஊண் உடை முதலியவற்றை அக் குழந்தை கேளாமலிருக்கவே கொடுத்து விடுகிருர்கள். குழந்தைக்கு வேண்டியவற்றுட் சிலவற்றை அவர்கள் அறியமாட்டார்கள். அவற்றைக் குழந்தை அவர்களுக்குச் சொல்லியபின்பு அவர்கள் கொடுக்கிருர்கள். கடவுள் எல்லாம் அறிபவர்; ஆதலால் எமக்கு வேண்டிய யாவற்றையும் அவர் தாமாகவே தருவார். நாம் அவரை ஒன்றுங் கேட்க வேண்டியதில்லை. அவரை வணங்குதலும், துதித்தலும், நினைத்தலும், பூசித்தலுமே நாம் செய்யவேண்டியவை.

“பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆநந்தமாய

தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே''

இந்த உடம்பு எம்மோடு எப்போதும் இருப்பதன்று. ஒரு நாளைக்கு நாம் இதைவிட்டு விலகவேண்டி வரும். அப்போது எமது தாய் தந்தையரும் சுற்றத்தவரும் நண்பரும் எம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள்; எமது பொருள் பண்டங்களும் தொடர்பற்றுப்போம். கடவுள் ஒருவரே எக்காலத்திலும் எல்லை யில்லாத அன்பைச் சொரிந்துகொண்டு எம்மோடு துணையாய் நிற்கும் மெய்ப் பொருள்.

'ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமா யுடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடி யோங்களுக்கே''

ஆதலால் எம்முடைய மனம் அவரையே நாடுதல் வேண்டும். நாம் எமது சீவனத்துக்கு வேண்டிய தொழில்களைச் செய்யும்போது, எமதுமனம் அவற்றிலே செல்லுமாயினும், அதன் நாட்டம் எப்போதும் கடவுளிடத்தே இருத்தல் வேண்டும்.

''நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே! யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே''

இரவும் பகலும் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசாய் அருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே.

பரீக்ஷை வினாக்கள்: 1. கடவுள் தமக்கு வடிவமாகக் கொண்டது எதனை? 2. கடவுள் உயிர்களிடத்து வைத்த அன்பு எப்படிப்பட்டது? 3. கடவுளுக்கு நாம் செய்யவேண்டியவை எவை? 4. ''இரவும் பகலும் ......''என்ற தொடக்கத்தை யுடைய பாட்டின் பொருளை எழுதுக.

இலக்கணம்: வேற்றுமை: பெயர்க ளனைத்தும் முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும்வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம்வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டுவேற்றுமைகளை யேற்கும்.

முதலாம் வேற்றுமை: இது எழுவாய் எனவும், பெயர் வேற்றுமை எனவுஞ் சொல்லப்படும். முதல்வேற்றுமையினது உருபாவது திரிபில்லாத பெயரேயாம். முதல்வேற்றுமை வினையையும் பெயரையும் வினவையும் கொள்ளும். உதாரணம்:

*அரசன் வந்தான். அரசன் இவன், அரசன் யார்?*

வேற்றுமை உருபினாலே கொள்ளப்படுஞ்சொல், முடிக்குஞ் சொல் எனவும், பயனிலை யெனவும் பெயர்பெறும். வினைமுதல், கருத்தா, செய்பவன் என்பன ஒருபொருட் சொற்கள். மற்றை வேற்றுமைகளுக் கிருத்தல் போல முதல் வேற்றுமைக்கு வேறுஉருபு இல்லையாயினும் ஆனவன், ஆகின்றவன், ஆகிறவன், ஆவான், என்பவன் முதலிய ஐம்பாற் சொற்களும் சொல்லுருபாக வருதலு முண்டு. தந்தையானவன், தாயானவள், மைந்தரானவர், கல்லானது, மரங்களானவை; மற்றவைகளும் இப்படியே.

---

## 2. பதுமினி

[இது, முற்காலத்து இலங்கையிற் பிறந்து இந்தியாவிலுள்ள இராஜபுத்தானத்து அரசனைமணந்து தனக்குந் தன் கணவனுக்கும் பெண்பாலினரேவர்க்கும் அழியாப் புகழைத் தேடிவைத்துத் தனது கற்புநெறியைக்காக்கும்படி உயிர்விடுத்த உத்தமியாகிய பதுமினியின் சிறந்த வரலாற்றை விரிவாக எடுத்துப் புகல்வதாகும்.]

பூர்வகாலத்திலே தம்முடைய அரிய உயிரைக்காட்டிலும் தம் கற்பே சிறந்ததெனக் கொண்டொழுகிய உத்தமிகளுட் பதுமினியென்னும் அரசியும் ஒருத்தியாவாள். இப் பதுமினி முற்காலத்தில் ஈழநாடென வழங்கிய இந்த இலங்கையை, இற்றைக்கு அறுநூறு வருடங்கட்கு முன்னர் ஆண்ட ஓர் அரசனுடைய உத்தம புத்திரி யென்பர். பதுமினி கல்வியறிவு, ஒழுக்கம், கட்டழகு என்னு மிவைகளில், தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாது விளங்கினள்.

இந்த அரச குமாரியினுடைய பேரழகு, கல்வியறிவு, பெண்மைநலம் முதலியவற்றிற்குரிய புகழ், இலங்கையில் மாத்திரமன்றி அயல்நாடாகிய இந்தியாவிலும் பரவியது. அக்காலத்திலே சித்தூரை இராஜதானியாகக் கொண்டு, இராஜபுத்தானம் என்னும் நாட்டை நீதியோடும் திறமையோடும் பரிபாலித்துவந்த வீமசிங்கன் என்னும் வேந்தன், ஈழநாட்டு அரச கன்னிகையாகிய பதுமினியின் நிகரற்ற வனப்பு, பெண்மைக்குரிய நலன்கள் என்னு மிவைகளைக் கேள்வியுற்று, அவளைத் தனக்குத் தேவியாகப் பெற விரும்பி, தன்னுட்டிலுள்ள பெரியோர் சிலரை ஈழ நாட்டிற்கு அனுப்பி மணம் பேசுவித்தான். பதுமினியின் பெற்ருர் சுற்றத்தார், முந்தியே வீமசிங்கனுடைய குலம் பேராற்றல் யுத்தத்திறமை முதலியவற்றைக் கேள்விப்பட்டிருந்தமையினல், அவனுக்குத் தங்கள் கன்னிகையை மணஞ்செய்து கொடுக்க இசைந்தனர். ஒரு சுப முகூர்த்தத்திலே, வீமசிங்கன் பதுமினி என்னும் இவர்களுடைய திருமணம் அரசவமிசத்தவர் முறைப்படி சிறப்பாக நிறைவெய்தியது. பதுமினியின் தந்தையாகிய ஈழநாட்டரசன் தனது அருமைப் புதல்விக்குச் சீதனமாக இரத்தினுபரணங்கள் முத்துமாலைகள் பெருநிதியம் முதலியவைகளையும், வரிசைகளாகப் பணிப்பெண்கள் சேடியர் ஏவலாளர் முதலியோரையும், ஈழத்துயானைகளையுங் கொடுத்து அவளுடைய நாயகனுடன் சித்தூருக்கு அனுப்பிவைத்தானென்று சரித்திரநூல் கூறும்.

பதுமினி தான் பிறந்த நாட்டிற் பெற்ற புகழைக் காட்டிலும் புகுந்தநாட்டிலே அதிக புகழைப் பெற்ருள். அரசருட்சிறந்த வீமசிங்கனைத் தனக்கு நாயகனுகப் பெற்றமையினுலே பதுமினியும், அவ்வுத்தமியைத் தனக்குத் தேவியாகக் கொண்டமையினுலே வீமசிங்கனும் பெருமை பெற்றனர்.

அக்காலத்திலே அலாவுதீன் என்னும் மகமதியன் டெல்லி (இந்திரப்பிரஸ்தம்) நகரை இராஜதானியாகக்

கொண்டு இந்தியாவில் மத்தியபாகத்தை ஆண்டுவருவா னுயினன். அவனுடைய சேனுபதியாகிய கபீர் என்பவன் மகா சூரன். அலாவுதீனுடைய கட்டளைப்படி கபீர் நால் வகைச் சைனியங்களையும் நடாத்திப் பல நாடுகளுக்குப் படையெடுத்துச் சென்று, ஆங்காங்குள்ள அரச சைனியத் தோடு எதிர்த்துச் சமர் செய்து, காலந்தோறும் அவ் வரசர்களை வென்று, அந் நாடுகளையும் அலாவுதீனுடைய பரிபாலனத்துள் ளாக்கினுன். அதனுல் அலாவுதீன் சக்கரவர்த்தியென அழைக்கப் படலாயினன். அலாவுதீன் சக்கரவர்த்தி பாஞனெனினும் தன்னுட்டைச் செங்கோன் முறையில் ஆண்டிலன். அவனிடத்திற் பொன்னுசை பெண்ணுசை மண்ணுசை என்னும் மூவகை ஆசைகளும் குடிகொண்டிருந்தன.

இங்ஙனமாக, இராசபுத்தானத்து அரசனுகிய வீம சிங்கனது தேவியாகிய பதுமினியின் பேரழகைப்பற்றிக் கேள்வியுற்ற மாத்திரத்தே, கொடுங்கோன் மன்னனுகிய அலாவுதீன், தான் அந் நாட்டினையும், அந்நாட்டிலுள்ள கற்பிற்கரசியாகிய பதுமினியையுங் கைப்பற்ற வேண்டு மென்ற துர்எண்ணங் கொண்டான். அவன் இராசபுத் தானத்திற்குப் படை செலுத்திச் சென்று, அங்குள்ள சிற்றரசர்களோடு யுத்தம் புரிந்து, அவர்களை ஒவ் வொருவராய் வென்று, அந்நாடுகளைத் தன்வசமாக்கிக் கொண்டு, ஈற்றில் தன் சைனியத்தைச் சித்தூருக்கு நடாத்திச் சென்றுன். சித்தூர்ராஜதானி நாற்புறத்தும் திண்ணிய அரண்களாற் சூழப்பட்டிருந்ததனுல், அலாவுதீ னுடைய சைனியம் அந்நகரை இலகுவிற் சென்று தாக்க இயலாமல், அப் பட்டினத்தை முற்றுகையிட்டு நின்றது. இதனையுணர்ந்த இராஜபுத்தானத்துப் போர் வீரர் அலாவுதீனுடைய சைனியத்தைத் தாக்கத் தொடங்கினர். இராஜபுத்திர வீரர்களெனிலோ சாமானியரல்லர். திண்ணிய யாக்கையும் அஞ்சா நெஞ்சும் மகா பராக்கிரம மும் படைத்தவர்கள்.

அலாவுதீனுடைய சைனியம் தொகையிற் கூடிய தெனினும், தொகையிற் குறைந்த இராஜபுத்திர வீரர்களோடு நிர்வகித்து நின்று போர்செய்ய ஆற்றாதனவாய்ப் பின்னிடுதலும், அதுகண்ட அலாவுதீன் வீரவார்த்தைகளைச் சொல்லி ஊக்க, அம் மகமதிய போர்வீரர்கள் பின்னிடாது எதிர்த்துநின்று யுத்தஞ் செய்தார்கள். இதனால் இருபக்கத்திலும் பலர் மாண்டனர்.

இவ்வாறு இருபக்கத்துள்ள சேனைகளுட் பலர் மாண்டொழிய, இராஜபுத்திரர்களும் மகமதியர்களும் ஒருவருக்கொருவர் எதிரிகளின் நிலைமையை அறியாதவர்களாய் யுத்தத்தை நிறுத்தி அப்போதைக்குச் சமாதானஞ்செய்து கொண்டனர்.

அலாவுதீன் அழகிற் சிறந்த இராணியாகிய பதுமினியைத் தான் ஒருமுறை கண்ணாரப் பார்த்துவிட்டாற் போதுமென்றும், அதன்பின்னர்த் தன் சைனியங்களுடன் தனது நாட்டிற்கு மீண்டுவிடுவதாகவும் சொல்லி வீமசிங்கனிடந் தூதனுப்பினன். கேட்ட வீமசிங்கன் உடனே பெருஞ் சீற்றமும் வெறுப்பும் அடைந்தான். அதனை அவதானித்த அவனது மந்திரிமார், அலாவுதீனுடன் தாங்கள் மாறுபட்டால், தங்கள் நாட்டிற்குப் பெரும் அழிவு வருமென்றஞ்சி ஒரு உபாயஞ்சூழ்ந்து, தங்களரசனாகிய வீமசிங்கனை வணங்கி "மகாராஜாவே! எங்கள் அன்னையாகிய மகாராணியை அந்த அந்நியன் ஒருபோதும் நேரிற்பார்க்க வொண்ணாதெனினும், எங்களரசியின் பிரதிவிம்பத்தை மாத்திரம் நிலைக்கண்ணாடியில் ஒரு நிமிஷம் பார்த்துவிட்டு மீண்டுவிடலாம் என அலாவுதீனுக்குத் தெரிவிப்பது புத்தியாகுமென்றனர். பதுமினியின் சம்மதப்படி வீமசிங்கனும் ஒருவாறு உடன்படுதலும், மந்திரிமார் அச் செய்தியை அலாவுதீனுக்கு ஒற்றர்மூலம் தெரிவிக்க, அதனைக்கேட்ட அலாவுதீன் பேரானந்தமடைந்தான்.

அலாவுதீன் பதுமினியின் பிரதிவிம்பத்தைப் பார்ப்பதற்காகிய ஒழுங்குகள் அரசமாளிகையிற்றானே செய்யப்பட்டன. இராஜபுத்திரர்கள் சத்தியந் திறம்பாதவர்கள், நம்பிக்கைத் துரோகஞ் செய்யாதவர்கள், சுத்தவீரர்கள் என்னுமிவைகளை யெல்லாம் அலாவுதீன் முந்தியே அறிந்துள்ளானாதலின், தன் சைனியங்களை யெல்லாம் வெகு தூரத்தில் ஒதுங்கி நிற்கவிடுத்துத் தான் தன்னந்தனியே வீமசிங்கனுடைய மாளிகையுள் வந்து புகுந்தான். சில ராஜபுத்திரர்களும் மந்திரிமாரும் அவனை மாளிகையுள் அழைத்துச் சென்று, அங்குள்ள ஒரு அழகிய மண்டபத்திலே ஒரு திரையின் இப்புறத்தில் நிற்கச் செய்தனர். சில நிமிஷங்கள் கழிவதற்கிடையில் அத்திரை அகற்றப்படவே ஒரு நிலைக்கண்ணாடி காணப்பட்டது. அக் கண்ணாடியிற் பதுமினியின் பேரழகோடுகூடிய பிரதி விம்பந்தோன்றி, ஒரு நிமிஷத்தில் மின்னல்தோன்றி மறைவதுபோல் மறைந்தது. கண்ட அலாவுதீன் தான் முன்னர்க் கேள்விப்பட்டதைக் காட்டிலும் நூறு மடங்கு அழகோடு பதுமினியின் பிரதிவிம்பம் தன் கண்களுக்குப் புலப்பட்டதை அவதானித்து அற்புதவயத்தனாய் நின்றான்.

"தையலார் மயலிற்பட்டார் தமக்கொரு மதியுண்டாமோ" என்றவாறு, அவன் சிறிதுநேரம் அவ்விடத்திற்றானே சித்தப்பிரமை கொண்டுநின்றான். அயலில் நின்ற இராஜ புத்திர மந்திரி பிரதானிகள் அவனை வீமசிங்கனிடம் அழைத்துச் செல்ல, அந்த அரசன் அவனைத் தக்கவாறு ஏற்று உபசரித்தான். சத்துருவானாலும் தம் வீடுதேடி வந்தாற் பெரியோர் அவனை ஏற்று உபசரிப்பர்.

வீமசிங்கனும் அலாவுதீனும் அவ்விடத்தை விட்டகன்று அரமனை வாயிலின் புறத்தே வந்தனர். அலாவுதீன் வீமசிங்கனை நோக்கி "மகாராசாவே, நாம் சமாதானமாகிவிட்டோம்; மேலும் மெய்காப்பாளர்தாமு மில்லாமல் நான் தன்னந்தனியே இங்கு வந்தமை உம்மீதுகொண்ட விசுவாசத்தினாலல்லவா? ஆதலினால் நீரும் என்னுடன்,

சிறிதுதூரம் வந்து என்னை வழிவிட்டு மீளுதலாகுமே என்றான். வஞ்சகமற்ற நெஞ்சினனாகிய வீமசிங்கன் அவனுடைய கேள்விக்கிசைந்து, தன் படைத் துணைவ ரெவருமின்றி அலாவுதீனுடன் வார்த்தை யாடிக்கொண்டு செல்வானாயினான். சில காததூரஞ் சென்றவுடன், அலாவுதீன் ஏதோ குறிப்புக்காட்ட, சரேலென, மகமதிய வீரர் சிலர் தோன்றி வீமசிங்கனைப் பற்றிக்கொண்டு போய்ச் சிறைப் படுத்தினர். அப்பொழுதுதான் அலாவு தீன் தன்னை வஞ்சித்தா னென்பதை வீமசிங்கனுணர்ந் தான்.

"ஒன்னுரைத் தேறேல்" என்பது பழமொழியல்லவா. வீமசிங்கன் தன்னிடஞ் சிறைப்பட்டமையினால், அலாவு தீன் "ஆசை வெட்கமறியாது" என்றபடி, பதுமினி தனக்கு மனைவியானாற்றான் வீமசிங்கன் சிறையினின்றும் விடுதலை செய்யப்படுவான் என்றும், இல்லையேல் அவ னுடைய உயிருக்கு ஆபத்து நேருமென்றுந் தெரிவித் தான். அலாவுதீனுடைய தீய நோக்கத்தைக் கேள்வி யுற்ற சித்தூர்ச் சனங்கள் பெருஞ் சீற்றங் கொண்டார் கள். "மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்" என் றிருப்பவும், தங்க ளரசன் அதற்கு மாறாக அலாவுதீன் மீது நம்பிக்கை வைத்தமையே அரசனுக்கு ஆபத்தாய் முடிந்த தென்று பச்சாத்தாபப் பட்டார்கள்.

இங்ஙனமாகத் தன் கணவன் பகைவன் கையிற் சிக்கியமையைக் கேட்டமாத்திரத்தே பதுமினி ஏக்கங் கொண்டு அறிவு சோர்ந்தாள்; பின் ஒருவாறு தேறி னாள்; சுடுமணலிற்பட்ட புழுப்போல் அவளுடைய உள் ளந் துடித்தது; சற்று நேரத்துள் அவள் தன் மனத் தைத் திடப்படுத்திக் கொண்டு சிறிது சிந்தித்து, "முள் ளால் முள்ளை எடு" என்ற பிரகாரம், அலாவுதீனாகிய அத் துர்த்தனை வஞ்சனையால் வென்று தனது நாயகனை மீட்க வேண்டுமென்று நிச்சயித்தாள்.

பதுமினி அந்த வேளையில் இலங்கையிலிருந்து தன்னைக் காணும்வண்ணம் சித்தூரில் வந்திருந்தவர்களாகிய தன் மாமனோடும் மைத்துனனோடும் யோசித்து நிச்சயஞ் செய்துகொண்டு, அலாவுதீன் சித்தூர் முற்றுகையை விடுத்துத் தன்னுடைய சேனைகளை அந்நகர எல்லைக்கப்பால் இட்டுச் சென்றால், தான் தன் சேடியர் முதலிய பரிவாரங்களுடன் அலாவுதீன் இருக்குந் தானத்துக்கு வருவதாகத் தூதனுப்பினாள். தூதுவர்கள் உடனே சென்று அச்செய்தியை அலாவுதீனிடந் தெரிவித்தார்கள். அதனைக்கேட்ட அலாவுதீன் சொல்லொணு ஆனந்த மடைந்தான். பதுமினியைத் தக்கவாறு வரவேற்பதற்காகிய ஆயத்தங்களனைத்துஞ் செய்தான். பதுமினியின் உள்ளக் குறிப்புணர்ந்து அதற்குத் தகத் தான் நடந்து கொள்வதாகவும் தூதர் மூலஞ் சொல்லியனுப்பினான். சித்தூரெல்லையை விட்டகன்று அப்பாற் செல்லும்படி தன் சேனைகளுக்குக் கட்டளையிட்டான். சித்தூரின் புறத்தேயுள்ள ஓர் வெளியான இடத்திற் பாடிவீ டமைத்து அதன்கண் பதுமினியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தபடி யிருந்தான்.

அவன் செயல் அங்ஙனமாக, பதுமினி எழுநூறு சிவிகைகளில் எழுநூறு யுத்த வீரர்களை ஆயுதபாணிகளாய்த் தனித்தனி ஏறும்படி செய்தாள். மேலும் தாம் அணிந்துள்ள அங்கியுட் படைக்கலங்களை மறைத்துள்ள ஆயிரக்கணக்கான ராணுவவீரர்களுக்கு அச்சிவிகைகளைச் சுமக்கும்படி கட்டளையிட்டாள். அச் சிவிகைகளின் மத்தியிலுள்ள ஒரு சிறந்த சிவிகையில் தன்னுடைய உயிர்ப்பாங்கியர் சிலருடன் ஏறினாள். அச் சிவிகையிற் சில ஈட்டிகளும் மறைத்து வைக்கப்பட் டிருந்தன.

இங்ஙன மெல்லாஞ் செய்தபின், சிவிகைகள் அலாவுதீனிருக்கும் பாடிவீட்டைநோக்கிச் செல்லலாயின. அவை தூரத்தில் வருவதைக் கண்ட அலாவுதீன் தான் காதலித்த அரசியாகிய பதுமினி பெண்பாலினராகிய பன்னூற்றுக்

கணக்கான பரிசனர் சூழத் தன்னிடத்திற்கு வருகின்ருளென்று ஆனந்த பரவசனுய் நிற்கும்போது, பதுமினி விடுத்த ஏவலாளர் சிலர், அலாவுதீனிடம் முந்தியே வந்து அவனை வணங்கி நின்றனர். அலாவுதீன் அவர்களை நோக்கி வந்த காரணம் என்னவென அவர்களிடம் வினவுதலும், அவர்கள் அவனை மீட்டும் வணங்கி "மகாராணி உம்மிடம் வருதற்கு முந்தித் தனது கணவனைக் கடைசி முறையாகக் கண்டு சற்று நேரம் வார்த்தை யாடுவதற்கு உமது உத்தரவை வேண்டி நிற்கின்ருள்" எனக் கூறினுர்கள். "மகாராணி தன் இஷ்டப்படி செய்யலாம்" என அலாவுதீன் சொல்லுதலும், அச் செய்தியை ஏவலாளர் மீண்டு சென்று தங்கள் அரசியிடம் தெரிவித்தனர்.

அலாவுதீனுடைய அநுமதிப்படி, பதுமினி ஏறிய சிவிகையும், அவள் உயிர்ப்பாங்கியர் ஏறியிருப்பன என்று மதிக்கப்பட்ட சில சிவிகைகளும் வீமசிங்கன் சிறைச்சாலைக்குக் கொண்டுபோக விடப்பட்டன; சிறைச்சாலையை அடைந்தவுடனே பதுமினி தன் கணவனைக் கண்டு தன் உள்ளக்கிடக்கை முழுவதையும் மெல்ல அவனுக்கு எடுத்துக்கூறித் தன்னுடன் கொண்டுவந்த யுத்த உடையையும் ஆயுதங்களையும் அவனிடங் கொடுத்து, அவனைத் தரித்துக் கொள்ளச் செய்து, தானும் ஆயுதந் தரித்தவளாய்த் தன் கணவனுடன் வேருெரு சாதாரண சிவிகையில் ஏறிக்கொண்டு சித்தூர்க் கோட்டையை நோக்கிச் செல்வாளாயினுள். அச் சிவிகை செல்லும் போது கண்டவர்கள் உண்மையை உணராதவர்களாய், சேடியர்கள் வந்த சிவிகை, பதுமினியை அங்கு விடுத்து மீண்டு போகின்றதென எண்ணிக்கொண்டனர். ஆனுல் அலாவுதீன் பதுமினியும் தோழியரும் தங்கள் சிவிகைகளில் ஏறித் தன்னுடன் தெல்லிமா நகருக்கு வருவரென எதிர்பார்த்த வண்ணம் இருந்தான். இதற் கிடையில், மூடப்பட்ட சிவிகையிற் சென்ற வீமசிங்கனும் பதுமினியும் அத் தானத்தை விட்டகன்று சில காததூரம் போன

பின், அங்கே முந்தியே ஆயத்தஞ் செய்து வைத்திருந்த வாம்பரிகளின்மேல் ஏறிக்கொண்டு வேகமாகச் சென்று தம் அரணுட் புகுந்தனர்.

சிறைக்கூடத்தை நோக்கிச் சென்ற பதுமினி குறித்த காலஎல்லை கழிந்தும் மீண்டு வாராமையைக் கண்ட அலாவுதீன் சஞ்சலமடைந்தான். ஏதோ கிருத்திரமம் இருக்க வேண்டுமெனச் சந்தேகங் கொண்டான். தன்மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு பின்னருஞ் சிறிது நேரம் பொறுமையோடிருந்தான். பதுமினி மீண்டு வந்திலள். சக்கரவர்த்தியாகிய தன்னைப் பதுமினி அலட்சியஞ் செய்கின்றுளெனச் சீற்றங் கொண்டான்.

இங்ஙனமாக, பதுமினியின் பெண் பரிசனங்களென்றும் சிவிகை சுமப்போரென்றும் தான் மதித்திருந்தவர்கள், அங்ஙனமன்றி ஆயுதபாணிகளாய், தனித்தனி சிங்கேற்றை நிகர்த்தவர்களாய், சமர் செய்யும் நோக்கத்தோடு சித்தூர் அரணை நோக்கிப் புறப்பட்டுப் போவதைக் கண்டான்; உள்ளந் திடுக்குற, ஏக்கங்கொண்டான்; "நம்பி மோசம் போனேனே" யென்று கழிவிரக்கங் கொண்டான். உடனே அவன் சஞ்சலமுற்ற தன் உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு, அயலில் நின்ற சேனை வீரர் சிலரை நோக்கி, அந்த இராஜபுத்திர வீரர்களைச் செல்லவொட்டாது தடுத்துத் தாக்கிக் கொல்லும்படி கட்டளையிட்டான். இவர்கள் சென்று அவர்களைத் தாக்கவே, இருதிறத் தார்க்குமிடையே பெருஞ் சமர் மூண்டது. இதற்கிடையிற் சித்தூர் அரணிலிருந்தும் சில இராஜபுத்திர வீரர் புறப்பட்டுத் தம்மினத்து வீரர்களோடு சேர்ந்து மகமதிய வீரர்களைத் தாக்கவே, அவர்கள் நிர்வகித்து நின்று யுத்தஞ் செய்ய ஆற்ருது பின்னடைந்தனர். அதனைக் கண்ட அலாவுதீன் அவமானம் கவலை கோபம் என்னும் இவைகள் தன்னுள்ளத்தில் மாறி மாறி நிகழ, தன்னுடைய எஞ்சிய சைநியங்களோடு தனது இராசதானியாகிய டெல்லிமாநகரத்துக்கு மீண்டான்.

அந்த நேரத்திலே தோல்வியுற்றமையினுல் அலாவுதீன் தன் எஞ்சிய சைநியங்களுடன் தன் நகரத்திற்கு மீண்டானேயன்றி, அவன் சித்தூரை விட்டு ஒரே போக்காகப் போனுனல்லன் என்பதை வீமசிங்கனும் சித்தூர்ச் சனங்க ளனைவரும் அயிர்த்தனர். அதனுல் வீமசிங்கன் தன் சைநியங்களையும் சித்தூரிலுள்ள அரண்களையும் பெலப்படுத்தினுன். மாற்ருர் எந்த நேரமும் வந்து போராற்றுவா ரென்று எதிர் பார்த்த வண்ணம் இருந்தான்.

அவன் செயல் அங்ஙனமாக, அலாவுதீன் தன் ஞளுகைக்குட்பட்ட போர் வீரர்களை யெல்லாம் ஒருங்கு திரட்டினுன். யுத்தவீரர்களல்லா வாலிபர்களையும் யுத்தம்பயிற்றுவித்துச் சிறந்த யுத்தவீரராக்கினுன். முன்னர்த் தான் தோல்வியுற்று இரண்டு மூன்ருண்டுகள் சென்ற பின், அலாவுதீன் தன் சேனு சமுத்திரத்தை நடாத்திக் கொண்டு சித்தூரை அடைந்து அந்நகரத்தை முற்றுகை யிட்டான்; அதுகண்ட வீமசேனனும் இராஜபுத்திர வீரர்களும், மாற்ருன் படையை வெல்வது அசாத்தியமென வுணர்ந்தன ரெனினும், அவனிடத்திற் சரண்புக நினைந்திலர். மகமதிய சைனியத்திற்கும் இராஜபுத்திர சேனைக்குமிடையே பெரும்போர்மூண்டு சில நாட்களாக நடந்தது. இராஜபுத்திர போர்வீரர் மாத்திரமல்லாமல் சித்தூரிலுள்ள ஆண்பாலாருள், பாலர் விருத்தர் நோயாளர் அங்கவீனர் ஒழிந்த ஏனையோரனைவரும் தங்கள் மகாராணியின் கற்பினைப் பாதுகாக்கும் பொருட்டும், தங்கள் ஜாதியின் பெருமையைப் பாதுகாக்கும் பொருட்டும் இராஜபுத்திர சேனையோடு சென்று கலந்து வீராவேசத்துடன் பகைவரைத் தாக்கிச் சமர் செய்தனர். இதனுல் மகமதிய சேனுவீரருட் பலர் மாண்டொழிய எஞ்சிநின்ருேர் சிறிது தளர்ச்சி யுற்றனர். ஆனுல் இராஜபுத்திர வீரருடைய வெற்றி நீடித்தநேரம் நிற்க

வில்லை. அலாவுதீனுடைய சைநியம் புற்றீசல்போல மேலும் மேலும் சென்று சேர்ந்து இராஜபுத்திர வீரர்களுடன் கொடுஞ்சமர் புரிய, அவர்களுட் பலர் மாண்டனர். எஞ்சிநின்ற வீரர்களும் பின்னிடுதலின்றிப் போர்செய்து உயிர் மாண்டனர். வீமசிங்கனும் பகைவரோடு எதிர்த்து யுத்தஞ்செய்து யுத்தமுனையில் உயிர் மாண்டு வீரசொர்க்கம் புக்கான்.

இவை இங்கனமாக, பதுமினியும் பல ஆயிரக்கணக்கான இராசபுத்திர மகளிரும் மஞ்சள் உடை தரித்து, கூந்தலிற்பூமாலைசூட்டி, நெற்றியில் திலகமிட்டு, ஆபரணாதிகள் அணிந்து, தேவியைத் தியானித்து வணங்கித் துதித்தவண்ணம், முந்தியே மூட்டிச் சுவாலித் தெரிகின்றதாகிய அக்கினியுட் பிரவேசித்து, கற்புக்கரசிகள் வாழும் மேலானகதியை அடைந்தார்கள். இந்த ஈழநாட்டு இராசகுமாரியாகிய பதுமினிதேவியின் பூதவுடம்பு அழிந்துவிடவும், அவளுடைய புகழுடம்பு இன்றும் நின்று நிலவுகின்றதல்லவா?

இராசபுத்திர வீரர்களும் அவர்களுடைய அரசனும் யுத்தத்திலே மாண்டார்களெனினும், பதுமினியும் இராசபுத்திர மகளிர்களும் சித்தூர் மாளிகைகளில் இருப்பார்கள் என்று எண்ணி அலாவுதீன் தன் பரிசனரோடு சித்தூர் நகரத்துட் புகுந்தான். புகுந்தபோது அப்பட்டினமானது மனுஷ சஞ்சாரமின்றி மயானம்போல் எரிந்து கிடக்கக் கண்டான்; ஏக்கங் கொண்டான்; தான் செய்த தவறை யெண்ணி யெண்ணிக் கவலைப்பட்டான். இராசபுத்திர வீரர்களின் அபிமானத்தையும், அங்குள்ள பெண்களுடைய கற்பின் திறத்தையும் பாராட்டினன். ஆனாலும் அவன் தன்னுடைய எண்ணங் கைகூடாமையாற் பைத்தியகாரன்போல் மனமுடைந்தவனாய்த் தெல்லி நகருக்கு மீண்டான்.

**பரீக்ஷை வினுக்கள்:** 1. பதுமினி பிறந்த நாடு எது? 2. அவளது கணவன் ஆண்டநாடு எது? 3. அலாவுதீன் என்பவனுடைய வரலாற்றைச் சுருக்கிக் கூறுக. 4. அவன் பதுமினிமீது நீதியற்ற மோகம் கொண்டமைக்குப் பிரதான காரண மென்ன? 5. அலாவுதீனுடைய சேனுபதியின் பெயரென்ன? அச்சேனுபதி எப்படிப்பட்டவன். 6. அலாவுதீனிடத் துள்ள மூவகை ஆசைகள் எவை? 7. அலாவுதீன் பதுமினியை ஒருமுறை பார்க்க வேண்டு மென்றபோது, பதுமினி அதற்கு இசைந்தமைக்குக் காரண மென்ன? 8 பீமசிங்கனை அலாவுதீன் எப்படித் தன்னிடஞ் சிக்கச் செய்தான்? 9. தன் கணவனைச் சிறையிலிருந்து மீட்பதற்குப் பதுமினி செய்த உபாய மென்ன? 10. பதுமினி தன் கற்பைக் காத்த வரலாற்றைக் கூறுக.

**இலக்கணம்:**

இரண்டாம் வேற்றுமை: இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு "ஐ" என்னு மொன்றுமேயாம். இது வினையையும், வினைக்குறிப்பையுங் கொள்ளும்; இந்த ஐ உருபு தன்னையேற்ற பொருள்களைச் செயப்படு பொருளாக வேற்றுமைப் படுத்தும்; அவ்வாறு வேறுபட்ட செயப்படுபொருளே இவ்வுருபின் பொருளாகும். இச் செயப்படு பொருளானது ஆக்கப்படுபொருள், அழிக்கப்படுபொருள், அடையப்படுபொருள், நீக்கப்படுபொருள், ஒக்கப்படு பொருள், உடைமைப் பொருள் முதலிய வெனப் பலவகைப்படும்.

**உதாரணம்:**

| | | |
|---|---|---|
| புடைவையை நெய்தான் | — | ஆக்கப்படு பொருள் |
| மரத்தைத் தறித்தான் | — | அழிக்கப்படுபொருள் |
| மனைவி மக்களை யடைந்தான் | — | அடையப்படுபொருள் |
| உயிரைத் துறந்தான் | — | துறக்கப்படுபொருள் |
| அரியை யொப்பான் | — | ஒக்கப்படுபொருள் |
| கல்வியையுடையான் | — | உடைமைப்பொருள் |

இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்கும் (மறைந்தும்) வருதலுண்டு; உ—ம்: நான் பாடம் படித்தேன்; குழந்தை பால் குடித்தது.

**சூத்திரம்:** "இரண்டா வதனுரு பையே, அதன்பொருள்
ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல்,
ஒத்தல் உடைமை ஆதியாகும்"

• வினு: முதல் வேற்றுமைக்குரிய வேறு பெயர்கள் எவை? முதல் வேற்றுமை எவைகளைக் கொள்ளும்? முதல் வேற்றுமையின் சொல்லுருபுகள் எவை?

## 3. சங்கச் செய்யுளின் பெருமை.

[இது சங்கச் செய்யுளின் பெருமையை எடுத்து விரித்துரைப்பது: நாட்டுப்பற்று, அரசன்பாலன்பு, அரசருங் கல்வியும், குடியினன்பு, தெய்வக்கோள்கை, புலமை, தறுகண்மை முதலியன தோகுத்தெழுதப்பட்டுள்ளது. எழுதியவர் ஸ்ரீமதி. சு. கரும்படு சோல்லியம்மையார்.]

எந்நாட்டு மக்களும் தம் முன்னோரின் பெருமையை உணர்ந்து கொள்வதில் ஆர்வம் உடையராய் இருத்தல் இயல்பே. தமிழராகிய நாம் நம் மூதாதையரின் சிறப்பை உணர்வதற்குச் சங்கநூல்கள் சிறந்த கருவியாக அமைந்துள்ளன. சங்க நூல்களாவன:-பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பன. இவை சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் வாழ்ந்திருந்த நல்லிசைப் புலவர்கள் பாடிய செய்யுட்களின் தொகையாகும்.

சங்கச் செய்யுள், ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் அருளிச்செய்த தொல்காப்பியம் என்னும் தெள்ளறிவுக் கருவூலத்தை, அரும்பெறல் இலக்கண நூலைத் தமக்கு இலக்கணமாகக் கொண்டவை. தொல்காப்பியப் பொருளதிகாரத்திற் பேசப்படும் பொருள் அகம், புறம் என்னும் இருபகுதி உடையது. மக்கள் எய்துதற்கரிய உறுதிப் பொருளாகிய அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நான்கும், அகம், புறம் என்னும் இரு பொருட் பகுதியில் அடங்கும். அகம் என்பது இன்பம். புறம் என்பது அறம், பொருள், வீடு என்னும் முப்பகுதியை உடையது. எனவே, இவ் விருவகைப் பொருள்களையும் பற்றி எழுந்த செய்யுட்கள் உறுதிப் பயன் நான்கையும் கூறுவனவாம்.

சங்கச் செய்யுட்களைப் பயில்வோர் அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றைப்பற்றி நம் முன்னோர்

கொண்டிருந்த கருத்துக்களைச் செவ்விதின் உணரலாம்; அவர்கள் எவ்வாறு தம் வாழ்க்கையை நடத்தினரென்பது உணரலாம்; பல திறப்பட்ட மக்கள் வாழ்க்கையை அறியலாம். இன்றைய நம் வாழ்க்கையினும், நம் முன்னோரின் வாழ்க்கை சிறந்திருந்ததாகத் தோன்றுமேல், அவ்வுயர்நிலையை மீண்டும் அடைதற்குரிய முயற்சி செய்வோம். தாழ்ந்திருந்ததாகத் தோன்றுமேல் அத்தாழ்வு மீண்டும் அணுகாமல் தடுப்போம்.

நாட்டுப்பற்று.

சில நூற்றாண்டுகளாக அடிமைத்தளைப்பட்டுக் கிடந்து அண்மையில் உரிமைபெற்ற நமக்கு நாட்டுப்பற்றே முதற் கடமையாகத் தோன்றுதல் இயல்பு. சங்க காலத்துத் தமிழரின் நாட்டுப் பற்றினை நோக்குவோம். பூதப் பாண்டியன் என்னும் வேந்தன் கூறிய வஞ்சினத்தில், "என்னுடன் பொருவேம் என்னும் வேந்தர்களை நான் வென்று காணேன் ஆகில், இன்னின்ன தீமைகளைச் செய்தேன் ஆகுக என்று கூறியதன்றி, இறுதியில், மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த தென்புலங் காவலின் ஒரீஇப் பிறர், வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே" (புறம் 71) அதாவது, "பல்லுயிரையும் காக்கும் அரசர் குலத்திற் பிறந்து, சிறந்த பாண்டிநாடு காக்கும் காவலின் நீங்கிப் பிறருடைய வன்புலங்களைக் காக்கும் காவற் கண்ணே இக்குடிப் பிறப்பின்னீங்கி, யான் பிறப்பேனாகுக" என்றது காண்க.

இவ்வேந்தன் கூற்றால், அவனுக்கு மீண்டும் பிறப்பு உளதேல், பாண்டிநாட்டிலே பாண்டியர் குடியிலே பிறக்க அவன் விரும்புவதை அறிகின்றோம். என்னே அவனது நாட்டின்பற்று!

ஒருவனது நாட்டை இழித்துக்கூறின், அது அவனையே இழித்துக் கூறியதாகும் எனப் பண்டையோர்

கருதினர் என்பது "நகுதக்கனரே, "நாடுமீக்கூறுநர்" என்ற பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடலால் அறியலாம்.

அரசன்பால் அன்பு.

பண்டைத் தமிழரசர் தங்குடிகளைக் கண்ணும் கருத்துமாய்க் காத்துவந்தனர். குறைவேண்டுவோர்க்கும், முறைவேண்டுவோர்க்கும் செவ்வி எளியராய் இருந்தனர். கோல் கோடாது இறை முறைபுரிந்தனர் என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் சங்க நூல்களில் உள்ளன. இறைமாட்சி, செங்கோன்மை முதலிய திருக்குறள் அதிகாரங்களே சான்று.

அதுவன்றி,

"அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைசெய்து
மெலிகோல் செய்தேன் ஆகுக"

எனப் பூதப்பாண்டியனும்,

"என்னிழல் வாழ்நர் நெங்நிழல் காணது
கொடியன் எம்இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"

எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் கூறியமை காண்க.

"காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி"

(குழந்தையைப் போற்றும் தாய்போல், நாடு காவலைப் பேணுக) என்று அரசர்க்கு அவ்வப்போது சான்றோரும் அறிவுறுத்தினர்.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் எவ்வாறு தன்னாட்டினைக் காவல் செய்தான் என்பதை இடைக்காடனார் கூறுவது காண்க.

"தண்புனற் பூசலல்லது நொந்து
களைக வாழிவளவ என்றுநின்

முனைதருபூசல் கனவினு மறியாது
புலிபுறங் காக்குங் குருளைபோல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி'' (புறம் 42)

(குளிர்ந்தநீர், கரையை மோதும் புனலது ஆரவார மன்றிப் போர் என்ற பூசலை உன்னாட்டில் வாழ்வோர் கனவிலும் அறியார். குருளைகளைக் காக்கும் புலிபோல நீ காக்கின்றனை என்று புகழ்கின்றார்) அதனால், குடிகளுக்கு,

''நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்''

என்றனர் சான்றோர். செங்கோல் கோடியபோதும், குடிகளைக் காக்கத் தவறியபோதும் அரசர் தம் உயிரையும் நீத்தனர் என்பதற்கு ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியனே தக்க சான்றாவான். பொற்கைப் பாண்டியன் வரலாறும் செங்கோன்மைக்குத் தக்க சான்றாகும்.

அரசரும் கல்வியும்.

தமிழரசர் தாமே சிறந்த கல்வியாளராய் இருந்தனர். அதனாலன்றோ திருக்குறளில் கல்வியைப்பற்றிய அதிகாரங்கள் அரசியலில் அமைந்துள்ளன. பாண்டியரிற் சங்கம் ஏறினர் பலர் என இறையனார் களவியலிற் காண்கின்றோம். மூவேந்தர் குடிப்பிறந்தோர் பலர் பாடிய பாட்டுக்கள் தொகை நூல்களிற் காணப்படுகின்றன. பாண்டியரிற் பூதப்பாண்டியன் தலையானங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலியோரும், சோழரில் கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நல்லுருத்திரன் முதலியோரும், சேரரிற் சேரமான் கணைக்காலிரும் பொறை, மாக்கோதை, பாலைபாடிய கடுங்கோ முதலிய நல்லிசைப் புலவராய மன்னருமாக எத்தனைபேர்! ''உற்றுழி உதவியும்'' என்ற நெடுஞ்செழியன் பாட்டினாற் கல்வியின்மேல்

அவன் வைத்திருந்த பெரும்பற்றும் கற்றூரைக் குலம் வயது முதலியவற்றின் குறைவு கருதாது பெருமைப் படுத்தல் அரசர் கடமை என்ற அவன் கருத்தும் உணரலாமன்றோ?

கற்றோர்க்கு அரசர் வழங்கிய வரிசைகள் எத்தனை? சிறப்பாகப் பதிற்றுப் பத்தில், சேரர்களைப் பாடிய புலவர்கள் பெற்ற பரிசுகள் எத்தகையன! நாடு கொடுத்தனர்; பொன் கொடுத்தனர்; தம் புதல்வரையும் புலவர்களுக்குக் குற்றேவல் செய்யவிடுத்தனர். முரசுகட்டில் ஏறிப் படுத்துறங்கிய புலவனைக் கொல்லாமல் தன் கையாற் கவரிவீசிய மன்னனும் உளனன்றோ? பாலை பாடிய உருத்திரங்கண்ணனுருக்குக் கரிகால் வளவன் பதினூறுயிரம் பொன் பரிசில் கொடுத்தானென்று கலிங் கத்துப் பரணியில்,

> "தத்து நீர்வரால் குருமி வென்றதும்
> தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
> பத்தோ டாறுநூ றுயி ரம்பெறப்
> பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்று சயங்கொண்டார் கூறுதல் காண்க.

கோவூர்க் கிழார், நரிவெரூஉத்தலையார், கபிலர், பரணர், அரசிற்கிழார் முதலிய புலவர்கள் அவ்வப்போது அரசர்களை இடித்துரைத்த நல்லறிவுரைகளை அரசர்கள் நன்கு மதித்து ஏற்றுத் திருந்தி வாழ்ந்தமை பலரும் அறிந்ததே. அவற்றிற்கு எடுத்துக் காட்டுகள் கூறப் புகின் கட்டுரை மிகவிரியும். இக்காலத்து அரசியலாரும் தமிழறிஞரைப் புறக்கணித்தலினின்று நீங்கித் தமிழ்ப் புலவரை மதித்து, அவர்தம் அறிவுரையை ஏற்று ஒழுகின் நாடு பலவகையிலும் நலமுறும்.

குடி இயல்பு.

அரசர்கள் அறநெறி ஒழுகும் குடிகளையே தம் செல்வமாகக் கருதினர். குடிகள் ஒழுக்கந் தவறாமல்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1182
நன்கொடை எண்: 1182


வாழ்வதற்குப் பசிப்பிணியின்றி இன்புற வாழ்தலே இன்றியமையாதது என அரசர் உணர்ந்திருந்தனர். அதனல் நாட்டின் நீர் நிலைகளை ஒழுங்குபடுத்தி, விளைவை மிகச்செய்து, பசிப்பிணியை அறவே போக்கினர். புலவர் களும், அவ்வப்போது அக்கடமையை மன்னருக்கு நினைவூட்டி வந்தனர்.

பாண்டியன் நெடுஞ் செழியனைக் குடபுலவியனர் பாடிய பாட்டில் (புறம் 18.) "அரசே! மறுமை யுலகத் துச் செல்வத்தை நீ விரும்பினும், பகைவரை வென்று மேம்பட விரும்பினும், புகழை நிறுத்த விரும்பி னும், நான் சொல்வதை விரும்பிக்கேள். உடம்பிற் கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிர் கொடுத்தவர்க ளாவர். உணவை முதலாக உடைத்து அவ்வுணவினு லாகிய உடம்பு" என்பனபோன்ற கருத்துக்களைக் கூறி நீர்நிலைகளை அமைக்கும்படி கூறுவதுகாண்க.

அரசர்கள் நீர்நிலைகளை அமைப்பதிற் கருத்துச் செலுத்தி வந்தமைக்குக் கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டியதே தக்க சான்ருகும். அவர்களது நாடும் "களிறு மாய்க்கும் கதிர்க்கழனி" யனவாயின. வேலி ஆயிரம் விளையுட்டாக நிலம் விளைந்தது. குடிமக்கள் மன மகிழ்ச்சியோடு தம் அரசருக்கு இறைப் பொருள் கொடுத்து வந்தனர். விளைவு முதலிய குன்றிய காலையில் அரசர் குடிகளை வருத்தி வரிவாங்குதல் இலர். "காய் நெல் அறுத்துக் கவளங் கொளினே" என்ற பிசிராந்தையார் பாடலில் அரசன், அன்புகெட வரி வாங்கினல் நாடு கெடும் என்றும், நெறிஅறிந்து இறைகொள்ளின் நாடு கோடிபல நந்தும் என்றும் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவு உறுத்தல் காணலாம்.

வணிகரும் கொள்ளைலாபம் எடுக்கும் கொடுமதி இல்லாமலும், நிறைய வாங்கிக் குறையக் கொடுக்கும் குற்றமில்லாமலும், "கொள்வதூஉ மிகைபடா, கொடுப்ப

தூஉங்குறைபடாது" வாணிபஞ் செய்தனர்; நெடு நுகத்துப் பகல்போல வாழ்ந்தனர்.

தெய்வக் கொள்கை.

குடிகளும் அரசரும் இவ்வாறு முறை தவருமல் வாழ்தற்குச் சிறந்த காரணம் கல்வி அறிவுடைமை முதலியனவாம். இவ்வேதுக்களால் மக்கள் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உண்டு என உணர்ந்தனர். இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் என்ற உணர்ச்சி இருந்தது. வினைப் பயனில் நம்பிக்கையிருந்தது. வினைப்பயனை ஊட்டும் தெய்வத்தி னிடத்தும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சங்க நூல்களில் ஆலமர் செல்வன், நெடுவேள், மாயோன், பலராமன், இந்திரன், சாத்தன் முதலிய கடவுளின் செய்திகள் பல காணப்படுகின்றன. சிவபெருமானையே பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற் கடவுள் எனப் பேணினர் என்பது தெரிகின்றது. "பிறவா யாக்கைப் பெரியோன்," "இறைவன்" என்பன போன்ற சொற்ருெடர்கள் பல காணலாம், "நல்லவும் தீயவுமல்ல" என்ற கபிலர் பாடலினல், புல்லிய இலையை உடைய எருக்கம் பூவாயினும், கடவுள் வேண்டாம் என்னது என்று உணர்கிறோம்; இதனைப் போலும், "நாறும் பூவும் தேவர்க்காம், நாருப்பூவும் தேவர்க்காம்" என்ற பழமொழியும் எழுந்தது. எருக்கம் பூவும் பேணி அணிபவன் சிவபெருமானே. சிவவழிபாடே சங்க காலத்திற் சிறந் திருந்தது.

கடவுளர்க்கும், அவரது படைகளுக்கும், ஊர்திகளுக்கும், கோயில்கள் அமைந்திருந்தன. வைதிகத் தெய்வக் கோயில்களே யன்றிப் புத்தவிகாரங்கள், சமணப் பள்ளிகள் பல இருந்தன. நகரங்களில் முருகனுக்குத் திருவிழா எடுத்தலும், அவன் திருவுலா வருதலும், அப்போது ஆடவர் மகளிர் எல்லாங் கண்டு தொழுதலும் உண்டு எனப் பட்டினப் பாலையால் அறிகின்றோம். குன்ற

வர் முருகனுக்கு வெறியாட்டு எடுப்பதும், பொதுவர் திருமாலுக்குக் குரவையாடுவதும் முதலியனவாகத் திணைநிலை மக்கள் தெய்வத்தை வழிபடும் முறையும் படித்து இன்புறத்தக்கன.

தெய்வங்கள் காப்பாக, மக்களுக்குத் திருமாலின் ஐம்படைத்தாலி கோத்து அணிந்து வந்தனர். சிவபெருமானின் ஊர்தியும், கொடியுமாகிய ஆன்ஏற்றின் வடிவமும், சூலப்படையின் வடிவமும் செய்து குழந்தைகளுக்கு அணிவித்தல் உண்டென, மருதக் கலியால் அறியலாம்.

இம்மை மறுமைகளின் நிலையாமை உணர்ந்து, இறைவன் திருவடிக்கண் வைக்கும் அன்பே அறியாத இன்பமாம் என உணர்ந்து பாடிய பாட்டும் உண்டு என்பதைப் பரிபாடற் செய்யுளால் அறியலாம்.

புலமை தறுகண்மை முதலியன.

சங்க காலத்தில் ஆடவர்களே அன்றிப் பெண்டிரும் நிறைந்த புலமையும் சிறந்த வீரமும் உடையவரா யிருந்தனர். பெண்டிர் புலமைக்கு ஔவையார், காவற் பெண்டு, குறமகள், இளவெயினி, ஆதிமந்தியார், வெள்ளி வீதியார் முதலியோரின் பாடல்களே சான்றாகும். மகளிர் வீரத்துக்கு மூதின் முல்லை முதலிய துறைகளில் அமைந்த பாடல்கள் சான்றாகும்.

சுருங்கக் கூறின் அரசியல், உளப்பண்பு, கல்வி யறிவு, சமய உணர்ச்சி, தறுகண்மை முதலிய சிறந்த நாகரீக வகைகளிற் பண்டைத் தமிழர், இந்நாளினுஞ் சிறந்து வாழ்ந்தனர் என்றே தெரிகின்றது. இவ்வறிவை நமக்கு உதவும் சங்கநூல்களை நாம் போற்றிப் பயின்று பயன் பெறுவோமாக.

பரீக்ஷை வினக்கள்: 1. சங்க நூல்கள் எவை? 2. சங்ககால மென உத்தேசிப்பது எக்காலத்தை? 3. சங்கப்புலவர்கள் கைக்கொண்ட இலக்

கண நூல்எது? அதனை இயற்றியவர்யார்? 4. சங்கநூல்களிற் பயில்வோர் அறியத்தக்கன எவை? 5. பழைய அரசர்கள் தம் நாடுகளை நன்கு ஆண்டு வந்தனரென்பதற்குச் சில ஏதுக்கள் எடுத்துக் காட்டுக. 6. தமிழரசர் கல்வியை எவ்வாறு வளர்த்தனர்? 7. தமிழரசர் காலத்துக் குடியியல்பை விளக்கி யெழுதுக. 8. அக்காலத்து வாணிகர் முறையை விளக்கிக் காட்டுக. 9. சங்க நூல்களில் எடுத்துக் காட்டப்பட்ட தெய்வங்கள் எவை? சிவபிரானைப் பற்றி எவ்வாறு சொல்லப்பட் டிருக்கிறது?

**இலக்கணம்:**

**மூன்றும் வேற்றுமை:** மூன்றும் வேற்றுமைக்குரிய உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாம்; இவை வினையைக் கொள்ளும். இவற்றுள் ஆல், ஆன் உருபுகள் தம்மையேற்ற பெயர்ப் பொருளைக் கருவிப்பொருளாகவும், கருத்தாப் பொருளாகவும் வேறுபடுத்தும்; ஒடு, ஓடு என்னுமுருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். எனவே கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி யென்னும் மூன்று பொருளிலும் மூன்றும்வேற்றுமை நிகழுமென்பதாம். உடன், கொண்டு என்பன சொல் லுருபுகள்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| வாளால் வெட்டினன் | — | கருவி |
| அரசனுன் ஆகிய கோயில் | — | கருத்தா |
| தந்தையோடு மகன் வந்தான் | — | உடனிகழ்ச்சி |

"உடற் பிறப்பால் தோள் வலிபோம்" எனச் சில இடங்களில் ஆல் உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வருதலுமுண்டு.

**சூத்திரம்:** "மூன்றுவத னுருபு ஆல் ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்"

**வினு:** இரண்டாம் வேற்றுமை உருபு எது? பொரு ளென்ன? இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்குவர உதாரணஞ் சொல்லுக; இரண்டாம் வேற்றுமைக்குரிய சூத்திரத்தைச் சொல்லுக.

———

## 4. பாரத நூலாசிரியர்.

[இது, தமிழ்மொழியிற் பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் வரலாற்றையும், அவர் கவித்திறனையும், அவரிடத்துள்ள சிவபத்தியையும் தமிழிலுள்ள ஏனைய பாரத நூல்களைப் பற்றியும் தொகுத்துக் கூறுவதாகும்.]

பரத வமிசத்து அரசர்களின் சரித்திரத்தைக் கூறும் நூல் பாரதம் எனப்படும். இது முதனூலாற் கொண்டபெயர்; தத்திதாந்தம். இங்கே குறித்தபரதன் துஷ்யந்த ராஜனுக்குச் சகுந்தலையிடத்தே பிறந்த புத்திரன். இவனுக்குச் சர்வதமன னென்றும் பெயர். இவன் வமிசத்து உற்பவித்தவர் பாரதர் எனப்படுவர். தருமார்த்த காம மோக்ஷ மென்னும் புருஷார்த்தம் நான்கனையும் பயத்தலானும், வேதத்தை இருக்குமுதல் நான்காக வகுத்த வியாசமுனிவர் கூற ஐங்கரக் கடவுள் தமது செங்கரமொன்றில் ஒற்றை வெண்மருப்பை எழுத்தாணியாகக் கொண்டு மாமேரு வெற்பாகிய ஏட்டகத்துப் பொறித்தமையானும், இந்நூல் ஐந்தாம் வேதமென விதந்து கூறப்படும். இம் மகாபாரதம் இதிகாசங்களுள் ஒன்றாகும். (இதிகாசம் நாற்பயன் பயக்கும் புராதன கதையைக் கூறுநூல்); வடமொழியில் வியாசர் செய்த பாரதத்தைச் சங்கப்புலவர்களு ளொருவராகிய பெருந்தேவனர் தமிழில் வெண்பாவாக வியற்றினர். அது பெருந்தேவனர் பாரத மெனப்படும். புலவரும் பாரதம்பாடிய பெருந்தேவஞ ரெனப்படுவர். அவர்க்குப்பின் நமது கவிசிரேட்டராகிய வில்லிபுத்தூராழ்வார் 'விருத்தப்பாவாலியற்றுவாராயினர். இதனை வில்லி பாரதமென்பர். இது சங்கிரகமா யிருத்தலைக்கண்டு தொண்டைநாட்டு மாதலம் பேட்டையில், இற்றைக்கு முன்பின் நூறு வருடங்கட்கு முன் வசித்த அருங்கவிப் புலவரும் சைவ சமயத்தினருமாகிய நல்லாப்பிள்ளை யென்பவர் வில்லி பாரதத்துள்ள பத்துப் பருவங்களுட் சுருங்கச் சொல்லி யிருப்பவற்றை முதனூலி லுள்ளவாறே விரித்தும், வில்லிபுத்தூரார் பாடிய

அவ்வவ்வினப் பாக்களாலே பாடி அவற்றிடையே பெய்தும், ஈற்றில் நின்ற எட்டுப் பருவங்களைத் தாமே பாடியுஞ் சேர்த்தனர். அந்நூல் நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்கும். அது கஙு௲௦௦ கவிகள் வரையிற் கொண்டது. அதனை ஆதாரமாகக்கொண்டே, நமது நாட்டிற் சாமானிய சனங்களாற் படிக்கப்படும் பாரதக்கதை (வசனம்) எழுதப் பெற்றுள்ளது. நல்லாப்பிள்ளை பாரதம் சொன்னயம், பொருணயத்திற் குறைந்ததன்று. அவர் கவியருமையறியு மாற்றலிலார் சிலர் வெற்றெனத் தொடுத்த லென்னுங் குற்றமுடைத்தென வெளிற்றுரை பிதற்றுவர்.

இனி, வில்லிபுத்தூரர் வரலாறு வருமாறு: நூலாசிரியர் குமாரர் வரந்தருவார் கூறிய சிறப்புப் பாயிரத்தையும் கர்ண பரம்பரையையும் ஆதாரமாகக் கொண்டே இவர் வரலாறு ஈண்டு வரையற்பாலதாம். இவர் பெண்ணை நதி பாயும் நடுநாடென்னுந் திருமுனைப்பாடி நாட்டிலே சனியூரிலே பிராமண வருணத்திலே வீரராகவாசாரியரென்பவரது புதல்வராகப் பிறந்து, தக்க பருவத்தில் ஆரியமுந் திராவிடமும் பயின்று, ஆசு மதுரஞ் சித்திரம் வித்தாரமென்னு நால்வகைக் கவியும் பாடுவதில் வல்லுநராய், தமிழ்நாட்டு மூவேந்தராலுஞ் சன்மானிக்கப் பெற்றவராய், தாம் வழிபடு கடவுளாகிய திருமான்மீது திவ்விய பிரபந்தங்களைப் பாடி வருவாராயினர். அக்காலத்தில் திருமுனைப்பாடி நாட்டில் வக்கபாகை என்னும் நகரத்திலே கொங்கர் குலாதிபதியாக அரசுசெய்து, கல்வி செல்வம் கொடை என்னு மிவற்றிற் சிறந்து, புலவர் குழாத்தைச் சேர்த்து முச்சங்கத் தமிழ் நூல்களையும் அபிவிருத்திசெய்து, கண்டனென்னுஞ் சோழனுக்கு முடிசூட்டி, நாற்றிசையினுஞ் சென்று அவன் பகைவரைச் செயித்து, அவன் புலிக்கொடியை யெங்கும் நிலைநாட்டி, பல வளங்களையும் மேலோங்கச்செய்து வாழ்ந்த வரபதியாட்கொண்டானென்றும் கொங்கராய னென்றுங் கூறப்

படும் பெயர்களையுடைய பெருந்தகையாளன். இவரது கல்வித் திறமையைச் செவியுற்று, இவரைத் தன்னிட மழைத்துப் பெரிதுஞ் சன்மானித்து, தமிழ் மக்கட்கு உப காரமாக, மகாபாரதக் கதையைச் சுருக்கிப் பாடும்படி வேண்ட, இவர் பாடினர் என்பர்.

இஃதன்றி, இந் நூலாசிரியர் சகோதரருக்கும் இவ ருக்கு மிடையே தாயபாக சம்பந்தமாக வெழுந்த வியாச் சியத்தைத் தீர்த்தற் பொருட்டு அக் கொங்கராயனிடந் தெரிவிக்க, அவன் பாரதத்தைப் பாடிக் கொண்டு வந்த பின் விவாதந் தீர்த்துவிடுவதாகக் கூற, இவர் பாடிக் கொடு சென்றாரென்றும், பின்னர்த் துரியோதனனுதி யர்க்கும் பாண்டவர்க்கு மிடையே தாயபாகங் காரணமாக எழுந்த யுத்தத்தையும் பயனையுஞ் சிந்தித்து, இவர் தம் பாகத்தைச் சகோதரருக்குத் தாமே கொடுத்தன ரென் றுஞ் சிலர் கூறுவர்.

வில்லிபுத்தூரர் விஷ்ணுபக்தி பெரிதும் உடையவ ரென்றும், சிவதூஷணஞ் செய்யுமியல்பின ரென்றும், சந்தக்கவி பாடுவதில் நிகரற்றவராய் ஏனைய புலவர்க ளுடன் வாதஞ்செய்து, தோல்வி யுற்றவர்களின் காதினை ஆட்கொண்டான் கொடுத்த ஆயுதத்தால் அரிவது வழக்க மென்றும், இங்ஙன மொருசமயத்தில் அநந்தனென்னும் பாவலரொருவர் அபஜெயமுற, இவர் அவரது காதை அரியச்செல்ல, அப்புலவர் விநோதமாக "என்பெயரை யுடைய சேஷனுக்குங் காதில்லை, எனக்குமில்லாதுபோதல் நன்று" என்று கூற, இவர் அப்புலவரது சமயோசித வார்த்தையில் மகிழ்ந்து, கர்ணபங்கஞ் செய்யாது சென்றா ரென்றும், பின்னர் இவர் திருவண்ணாமலைக்குச் செல்ல, அங்குள்ள கவிவாணர்கள் இவரது வருகையை யறிந் தஞ்சி, அறுமுகக் கடவுள் திருவருட் செல்வராகிய அருண கிரிநாதரிடம் அடைக்கலம் புகுந்தனரென்றும், அவர் அப் புலவர்களை அஞ்சவேண்டாமென்று புகன்று, தம்

முடன் வாதம் புரியவந்த வில்லிபுத்தூரரை நோக்கி, "நீர் ஓர் அந்தாதி பாடுதிர், யான் அதற்கு உடனே பொருள் கூறுகின்றேன்; பின் யான் பாடும் அந்தாதிக்கு நீர் அர்த்தஞ் சொல்லுதிர்" என, அதற்கியைந்து, வில்லிபுத்தூரர் திருமான்மீது ஓர் அந்தாதி பாட, உடனே அருணகிரிநாதர் அர்த்தங்கூறி முடித்துப் பின்னர்க் கந்தரந்தாதி பாட, அதில்வரும் 'திதத் தத் தத்' என்றற்றொடக்கத்துக் கவிக்குப் பொருள் சொல்ல வியலாது மயங்கி, வில்லிபுத்தூரர் தாம் வைத்திருந்த கர்ணசேதனஞ் செய்யுங் கருவியை அவரிடங் கொடுக்க, அவர் அதனைப் பெற்று, "இனியாயினும் புலவர்களை மானபங்கஞ் செய்யாதீர்" எனப் புத்திகூறி விடுத்தன ரென்றும், வில்லிபுத்தூரர் வரும் மார்க்கத்தில் ஒரு சிவாலயம் எதிர்ப்பட, அவர் அவ்வாலயந் தமக்குப் புலப்படாவண்ணம் ஆலயத்திற்குந் தமக்கு மிடையே எழினியிடுவித்து, அப்பாற் சென்றபோது கண்ணொளி மழுங்கி யுளம்வருந்தி அயலே நின்ற பரிசனர் மூலமாக அருணகிரிநாதருக்கு அச்செய்தியைத் தெரிவிக்க, அவர் சிவாபராதத்தால் அது நிகழ்ந்த தென வுணர்ந்து மனநொந்து,

> "புரத்தை நரசிங்கத்தைப் போர்வேளைக் கூற்றை
> எரித்தவர்க்குத் தாசனெதிரே—நிரைத்தபுகழ்த்
> தேன்காட்டுஞ் சோணகிரித் தேசிகனைப் போற்றுமல்
> ஏன் கெட்டுப்போரு னிவன்"

என்னும் வெண்பாவைப் பாடியருளிக் கண்ணொளிபெறச் செய்து, மீண்டும் அவரைத் தன்னிடம் அழைத்துச் சிவ நிந்தைசெய்ய வொண்ணுதென நன்மதிபுகட்டி, அவர் பாடிய பாரதத்திலுள்ள சிவ நிந்தைகளை நீக்கும்படி பணிக்க, வில்லிபுத்தூரர் சிவ பரத்துவத்தினுண்மையை யுணர்ந்து, சிவ நிந்தைகளைக் களைந்து சிவ பரத்துவத்தை விளக்கிப் பாடின ரென்றுஞ் சொல்லுவர். இவ்வாசிரியர் தம்முடன் வாதஞ்செய்து தோல்வியெய்திய புலவர்கட்குக் கர்ணசேதனஞ் செய்தன ரென்பதற்கு:-

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய னீங்கில்லைக்
குறும்பியளவாய்க் காதைக் குடைந்து தோண்டி,
யெட்டியமட்டு மறுப்பதற்கோ வில்லியில்லை"

என்னுந் தனிக்கவி ஆதாரமாகக் கொள்ளக் கிடக்கின்றது. இவர் சிவபத்தி சிவ பரத்துவசம்மதமுடைய ரென்பது இந்நூலிலுள்ள தற்சிறப்புப் பாயிரத்தில், "மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கு, மென்னு மாசையால் யானுமீதியம் புதற்கிசைந்தேன்" என்னுஞ் சிலேடைமொழிப் பிரயோகத்தானும், அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தில் "ஆசறு கடவுளோர்க்கு மருமறை தனக்கு மெட்டாத், தேசவன்" எனவும், "கற்றவர் வளைத்துத் திரிபுரமெரித்தோன் கற்றவர் கருத்தினுற் காண்போன்" எனவும், "தத்துவ மறைக்கு மெட்டுதற்கரிய தன் வடிவில்" எனவும், "ஓரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவன்" எனவும், "வள்ளலெனை யாளுடைய மாதவனு மாதவனு மல்லமர் தொடங்கி யுறவே" எனவுஞ் சிவபிரானைக் குறித்துக் கூறியமையானும், அச் சருக்கத்திலே எம்பெருமான் றிருமேனியில் விசயன் வில்லடிபட்டமையைக் கூறும் "விண்ணிலுறை வானவரில்" என்றற் றொடக்கத்து வருமிரு செய்யுளானும், பதின்மூன்றும் போர்ச் சருக்கத்துள்ள தோத்திரப் பாக்களானும், பிறவாற்றானும் இனிது புலப்படுமென்க. இவர் காலத்தில் வடமொழிப் பதங்கள் விரவிய சந்தப்பாக்கள் பெரிதும் பாடப்பட்டன வென்பது இந்நூலானும், இந்நூலாசிரியர் காலத்தவரான அருணகிரிநாத ரியற்றிய நூல்களானும் அறியத்தகும். வில்லிபுத்தூரர் காலம் இவ்வளவினதென வரையறுத்துக் கூறுதற்குத் தக்கவாதாரங் கண்டிலேம். அருணகிரிநாதர், இரட்டைப் புலவர், இந்நூலாசிரியர் நால்வரும் ஒரே காலத்தின ரென்பதற்கு மாத்திரஞ் சில ஆதாரங்கள் உள; சற்றேறக் குறைய ருOO வருடங்கட்கு முன் வாழ்ந்தனரென்று கூறுவர்.

"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை" என்னும் சூத்திரத்திற் கண்டபடி, இந்நூல் காப்பிய நடையிலே சொல்லணி பொருளணிகளும் பலவகைச் சந்தங்களும் பொருந்தியுள்ளது. திருவள்ளுவர் முதலிய முன்னோர் மொழி பொருளேயன்றி அவர்மொழியும் ஆங்காங்குப் பெய்யப் பெற்றுள்ளது. யுத்தம் பாடுதலில் தமிழாசிரியர்களுள் இவரை நிகரற்றவ ரெனலாம். இவர் வியாசபாரதத்தையே பெரிதும் அநுசரித்தன ரென வடமொழி வல்லுநர் கூறுகின்றனர். சிறப்புப் பாயிரத்தை நோக்கும்போது இந்நூன் முழுவதும் பாடின ரென்றே புலப்படுகின்றது. முதற் பத்துப் பருவங்க ளொழிந்த ஏனைய பருவங்களின் கதி எவ்வாறாயிற்றோ அறிகிலேம். கம்ப ராமாயணத்திற்போல இந்நூலகத்தும் இடையிடையே ஆக்குவித்தோனைச் சிறப்பித்திருக்கின்றனர். அதனைக் காண்டவதகனச் சருக்கம், நிரைமீட்சிச்சருக்கம், பதினாறாம் போர்ச் சருக்கம், பதினேழாம் போர்ச்சருக்கம் என்னு மிவற்றிலுள்ள ௫௰-ம் ௧௰௪-ம் ௬௰-ம் ௫௫-ம் கவிகளான் முறையே யறிக. இந்நூலின் மாண்பையும் இந் நூலாசிரியன் மாண்பையுங் குறித்து எமது சிற்றறிவிற் கெட்டியவளவிற் கூறப்புகினும் விரியுமாகலின், அஃதஞ்சி விடுத்தாம்.

பரீக்ஷை வினுக்கள்: 1. பாரதம் என்றதன் கருத்தென்ன? 2. பாரதத்தை ஐந்தாம் வேதமெனச் சொல்வதேன்? 3. இதிகாச மென்றா லென்ன? 4. முதன் முதல் தமிழிற் பாரதம் பாடியவர் யார்? 5. தமிழ்ப் பாரதங்களில் விரிவான பாரதம் எது? 6. வில்லிபுத்தூராருடைய வரலாற்றைச் சுருக்கி எழுதுக. 7. வில்லிபுத்தூராருக்கும் அருணகிரிநாதருக்கு மிடையே நடந்த விவாதத்தைப் பற்றிக் கூறுக. 8. இரு புலவருள் எவர் சிறந்தவர்? 9. இவர் காலத்தில் விளங்கிய ஏனைய புலவர்களைச் சொல்லுக. 10. வில்லிபுத்தூரார் சிவபெருமான் பரமபதி யென்ற கொள்கை பூண்டவ ரென்பதற்குப் பாரதத்தில் எங்கேனும் பிரமாண முண்டா? உண்டேல் எடுத்துக் காட்டுக.

இலக்கணம்:

நான்காம் வேற்றுமை: இதன் உருபு 'கு' ஒன்றேயாகும். இது வினையையும், வினையோடு பொருந்தும் பெயரையுங் கொள்ளும். இவ்வுருபு தன்னை

யேற்ற பெயர்ப் பொருளைக் கோடற் பொருளாகவும், பகைதொடர் பொருளாகவும், நட்புத்தொடர் பொருளாகவும், தகுதியுடைப் பொருளாகவும், முதற்காரண காரியப்பொருளாகவும், நிமித்தகாரண காரியப்பொருளாகவும், முறைக்கியை பொருளாகவும் வேறுபடுத்தும்; அப்படி வேறுபட்ட கோடற் பொருள் முதலியன இவ்வுருபின் பொருள்களாம்.

உதாரணம்:

| | |
|---|---|
| 1. ஏழைக்கு அன்னமிட்டாள் | கோடற்பொருள் |
| 2. எலிக்குப்பகை பூனை | பகைத்தொடர் பொருள் |
| 3. கண்ணனுக்குத் தோழன் அர்ச்சுனன் | நட்புதொடர் பொருள் |
| 4. பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாதிருத்தல் | தகுதியுடைப் பொருள் |
| 5. மோதிரத்திற்கு வைத்த பொன் | முதற்காரண காரியப்பொருள் |
| 6. கூலிக்கு வேலை செய்தான் | நிமித்த காரண காரியப்பொருள் |
| 7. தசரதனுக்கு மகன் இராமன் | முறைக்கியை பொருள் |

குவ்வுருபு நிற்றற்குரிய சில இடங்களிலே பொருட்டு, நிமித்தம் என்பனவும், குவ்வுருபின்மேல் "ஆக" என்பதுஞ் சொல்லுருபுகளாக வரும்; உ-ம்: கூலியின் பொருட்டு, கூலியின்நிமித்தம், கூலிக்காக என்பன முதலியன.

சூத்திரம்: "நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கிதெனல் பொருளே"

வினா: மூன்றும் வேற்றுமைக்குரிய உருபுகள் எவை? மூன்றும் வேற்றுமையின் பொருள்கள் எவை? சொல்லுருபுகள் எவை? ஆல் உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வர உதாரணஞ் சொல்லுக. மூன்றும் வேற்றுமைக்குரிய சூத்திரங் கூறுக.

---

## 5. "புலையுங் கொலையுங் களவுந்தவிர்".

[இது, புலாலுண்ணல் கொலை களவு என்னு மிவற்றல் மக்களுக்கு நேருங் கேடுதிகளை இலகுவான முறையில் எடுத்துக் காட்டுவது; ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் வசனமாக வுள்ளது]

புலை.

புலா லுண்ணலாவது உயிரின் நீங்கிய ஊனைப் புசித்தல். புலால் கொலையினாலே கிடைத்தலால் புலாலுண்ணல் கொலைப் பாவத்தின் காரியமாகும். புலாலுண்டவன்

பின்னும் கொலை வாயிலாகப் புலாலை விரும்புதலால், புலாலுண்ணல் கொலைப் பாவத்துக்குக் காரணமாகும். இப்படியே எல்லா விதத்தாலும் புலாலுண்ணல் கொலையோடு தொடர்புடையதாதலால், புலாலுண்பவர் உயிர்களிடத்து அருளில்லாதவரே. ஆதலால் புலாலைப் புசித்துக் கொண்டு உயிர்களிடத்து அருளுடையோம் என்பது நடிப்பு மாத்திரமாமன்றி உண்மையாகாது. உலகத்திலே புலாலுண்பவர் இல்லையாயின், புலாலை விற்றற்பொருட்டு உயிர்க்கொலை செய்பவரும் இல்லை. ஆதலாற் கொலைப் பாவத்தைப் பார்க்கிலும் புலாலுண்ணலே பெருங் கொடும் பாவம்.

தம்மிலும் உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியாரிடத்தே சலபானம் பண்ணினும், அவரும் தாழ்ந்த சாதியார் என்று அவர்வீட்டிலே சலபானமும் பண்ணாத மனிதர்கள், புலையர்களுடைய மலத்தையும் புசிக்கின்ற பன்றி கோழி முதலியவைகளைப் புசிக்கின்றார்களே! அவர்கள் புலையரினும் தாழ்வாகிய புலையராவார்களன்றி உயர்ந்த சாதியாராகார்கள். அயல் வீட்டிலே பிணங் கிடந்தாலும் போசனஞ் செய்தற்கு மனம் பொருந்தாத மனிதர்கள், மிருகம் பக்ஷி முதலியவைகளுடைய பிணத்தைக் கலத்திலே படைத்துக்கொண்டு புசிக்கின்றார்களே! அன்னம் பானீயம் முதலியவைகளிலே மயிர் ஈ எறும்பு முதலியவைகளுள் ஒன்று விழுந்திருக்கக் கண்டாலும், மிக அருவருத்து உண்ட சோற்றையும் கக்கும் மனிதர்கள் மற்ச மாமிசங்களைப் புசிக்கின்றார்களே! ஊறுகாய் முதலியவைகளிலே ஒரு புழுவைக் கண்டால் அருவருத்துச் சரீரங்குலைந்து அவைகளை எடுத்தெறிந்துவிடும் மனிதர்கள் புழுத்த மாமிசங்களை விரும்பிப் புசிக்கின்றார்களே! தங்களெதிரே ஆடுகள் சிந்தத் தெறித்த கோழை தங்களுடம்பிலே படுதலும் பொறாது மனங்குலையும் மனிதர்கள், அவ்வாடுகளின் அம் மாமிசத்தை மூளையோடு மனமகிழ்ந்து புசிக்கின்றார்களே! பூமியிலுள்ள சுடுகாடுகள் மனிதர்களுடைய பிணத்துக்குச் சுடுகாடுகளா யிருக்கும்; மிருகங்களுக்

கும் பக்ஷிகளுக்கும், மற்சங்களுக்கும் சுடுகாடுகள் சீவ கருணையில்லாத மனிதர்களுடைய வயிறுகளேயாம்!

கொலை செய்தவரும், புலாலை விற்றவரும், புலாலை விலைக்கு வாங்கினவரும், புலாலைப் புசித்தவரும், புலால் புசியாதவரைப் புசிப்பித்தவரும், சிலர்சொல்லுக்கு அஞ்சிப் புலாலைப் புசித்தவருமாகிய எல்லாரும் பாவிகளே யாவர். புலாலுண்ணுமையினுலே தங்கள் உடம்பு மெலிகின்றது என்று உண்ணப்புகும் மனிதர்கள், புலாலுண்டு தங்கள் உடம்பைப் பருக்கச்செய்து நரகத்திலே நெடுங் காலம் துன்பம் அனுபவித்தல் நல்லதோ, புலாலுண்ணுமல் தங்களுடம்பை வாட்டி நித்தியமாகிய முத்தியின்பத்தைப் பெற்று வாழுதல் நல்லதோ, இதனைச் சிந்திக்கக் கடவர் கள்.

கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களெல்லா வற்றினும் ஸ்நானஞ் செய்தானுயினும், கடவுளைப் பூசித்தானுயினும், எண்ணில் கோடிதானஞ் செய்தானுயினும், ஞான சாத்திரங்களை ஓதி உணர்ந்தானுயினும், புலாலைத் தள்ளாது புசித்தவன் நரகத்தை அடைவன்.

அசரமாகிய மர முதலியவைகளைக் கொன்று புசித்தல் பாவமாயினும், அவைகள் எழுவகைத் தோற்றத் துள்ளும் தாழ்ந்த பருவத்தை உடையவையாதலால் அக் கொலையாலாகும் பாவம் சிறிதாகும். அசர பதார்த்தங் களை நாடோறும் கடவுள் அக்கினி குரு அதிதிகள் என்னும் நால்வகையோருக்கும் முன்னூட்டிப் பின் னுண்பானுயின், அவ்வசரக் கொலையால் வரும் பாவமும், உழுதல், அலகிடல், மெழுகுதல், நெருப்புமூட்டல், தண் ணீர் கவர்தல், நெற்குத்துதல் முதலிய தொழில்களால் வரும் பாவமும், அவ்வக் காலத்திலே நீங்கிவிடும்.

கொலை.

கொலையாவது உயிர்களை அவைகளுக்கு இடமாகிய உடம்பினின்றும் பிரியச்செய்தல். உயிர்களுக்கு இதஞ்

செய்தலே புண்ணியமும், அகிதஞ் செய்தலே பாவமு மாம். கொலையைப் பார்க்கினும் அகிதம் வேறில்லாமை யால், கொலையே பாவங்க ளெல்லாவற்றிற்குந் தலையா யுள்ளது. கொல்லாமையைப் பார்க்கினும் இதம் வேறில் லாமையால், கொல்லாமையே புண்ணியங்க ளெல்லாவற் றிற்குந் தலையாயுள்ளது.

கொலையில்லாத ஞானமே ஞானம், கொலை யில்லாத தவமே தவம், கொலையில்லாத தருமமே தருமம், கொலை யில்லாத செல்வமே செல்வம்; ஆதலினாலே, சோர்வினு லும் கொலைப்பாவம் சிறிதும் விளையாவண்ணம் எப்பொழு தும் அருளோடு கூடிச் சாவதானமாக இருத்தல் வேண் டும். கொலைசெய்ய ஏவினவரும், கொலைசெய்யக் கண் டும் அதனைத் தடுக்காதவரும், ஒருவன் செய்த கொலையை மறுத்து அவனை இராசாவுடைய தண்டத்துக்குத் தப்பு வித்தவரும், கொலைசெய்தவரோடு பழகினவரும் கொலைப் பாவிகளேயாவர்.

ஆதலால் எவ்வகைப்பட்ட வியாதிகளினாலே வருத்த முற்றாலும், சரீரத்தைப் பாதுகாத்துக்கொண்டே இருத் தல் வேண்டும். கோபத்தினாலும் வியாதி முதலிய பீடை களினாலும் தம்முயிரை வலியவிட்டவர் நரகத் துன்பத்தை அனுபவிப்பரென நூல்கள்கூறும்.

## களவு.

களவாவது பிறருடைமையாய் இருக்கும் பொருளை அவரை வஞ்சித்துக் கொள்ளுதல். களவினால் வரும் பொருள் வளர்வதுபோலத் தோன்றி, தான்போம்பொழுது பாவத்தையும் பழியையுமே நிறுத்திவிட்டு, முன்னுள்ள பொருளையும் தருமத்தையும் உடன்கொண்டு போய்விடும்; களவு செய்பவர், அப்பொழுது யாவராயினும் காண் பாரோ, அடிப்பாரோ, கைகால்களைக் குறைப்பாரோ; என்றும், பின்னும் இராசா அறிந்து தண்டிப்பானோ என் றும் பயந்து பயந்து மனந் திடுக்குறுதலினால், எந்நாளும்

மனத்துயரமே உடையவராவர். அறியாமையினலே களவு அப்பொழுது இனிதுபோலத் தோன்றினும் பின்பு தொலையாத துயரத்தையே கொடுக்கும்.

களவு செய்தவர் இம்மையிலே அரசனலே தண்டிக்கப்பட்டு எல்லாராலும் இகழப்படுவர்; அவரை அவர் பகைவர் மாத்திரமா, உறவினரும் சிறிதாயினும் நம்பாது அவமதிப்பர். களவினலாகிய இகழ்ச்சியைப் பார்க்கினும் மிக்க இகழ்ச்சி பிறிதில்லை. ஒருகாற் களவு செய்தவரென்று அறியப்பட்டவர் சென்ற சென்ற இடங் களிலெல்லாம், பிறராலே செய்யப்பட்ட களவும் அவராற் செய்யப்பட்டதாகவே நினைக்கப்படும்.

களவென்னும் பெருங் குற்றத்தைச் சிறு பருவத்திற் றுனே கடிதல் வேண்டும். கடியா தொழிந்தால், அது மேன் மேலும் வளர்ந்து பெருந் துன்பக்கடலில் வீழ்த்தி விடும். ஆதலாற் சிறுவர்களிடத்தே அற்பக் களவுகாணப் படினும், உடனே தாய்தந்தையர்கள் அவர்களைத் தண் டித்துத் திருத்தல் வேண்டும்; அப்படிச் செய்யாது விட்டால், அப் பிள்ளைகளுக்குப் பின்விளையும் பெருந் துன்பத்துக் குத் தாய் தந்தையர்களே காரண ராவார்கள்.

பரீக்ஷை வினக்கள்: 1. புலாலுண்ண லென்பதன் பொருளென்ன? 2. அது கொலைப் பாதகத்தின் காரியமாதல் எவ்வாறு? 3. புலாலுண்ப வருக்குச் சாதிப் பெருமையில்லை யென்பதை விளக்கிக் கூறுக. 4. கொலைப் பாதகரோடு ஒத்த பாவிகள் யார்? யார்? 5. தற்கொலை செய்தல் பாவ மாகுமா? 6. களவினல் வரும்பொருள் நிலைநிற்குமா? 7. களவெடுப்பவ ருக்கு மனச்சாந்தி யில்லையாமே; என்? 8. களவென்னுங் குற்றத்தை எப் பொழுது கடிதல் வேண்டும்? 9. "புலையுங் கொலையுங் களவுந் தவிர்" என் னும் விஷயமாக ஒரு வியாச மெழுதுக.

இலக்கணம்:

ஐந்தாம் வேற்றுமை: இதன் உருபுகள் "இன்" "இல்" என்பனவாம்; இவை வினையையும், வினையொடு பொருந்தும் பெயரையுங் கொள்ளும். இவ்வுருபுகள் தம்மையேற்ற பெயர்ப்பொருளை நீக்கப்பொருளாகவும், ஒப்புப்

பொருளாகவும், எல்லைப்பொருளாகவும், ஏதுப்பொருளாகவும் வேறுபடுத்தும்; அப்படி வேறுபட்ட நீக்கப்பொருள் முதலியன இவ் வுருபுகளின் பொருள் களாகும்.

உதாரணம்:

| | |
|---|---|
| மலையின்வீழ் அருவி<br>மலையில்வீழ் அருவி | நீக்கப் பொருள் |
| பாலின் வெளிது கொக்கு<br>பாலில் வெளிது கொக்கு | ஒப்புப் பொருள் |
| இலங்கையின் வடக்குப் பாக்குநீரிணை<br>இலங்கையில் வடக்குப் பாக்குநீரிணை | எல்லைப் பொருள் |
| கல்வியின் உயர்ந்தவர் கச்சியப்பர்<br>கல்வியில் உயர்ந்தவர் கச்சியப்பர் | ஏதுப் பொருள் |

நீக்கப்பொருளிலும், எல்லைப்பொருளிலும், 'இன்', 'இல்' உருபுகளின் மேல், நின்று இருந்து என்பன, உம்பெற்றும், பெறாதுஞ் சொல்லுருபுக ளாக வரும்.

நீக்கப் பொருள்: உ—ம்: ஊரினின்றும் புறப்பட்டான்; ஊரி லிருந்து மீண்டான்.

எல்லைப் பொருள்: உ—ம்: காட்டினின்றும் ஊர் காவதம்; வீட்டி லிருந்து வயல் கூப்பிடுதூரம்.

ஒரோவிடத்து எல்லைப்பொருளிலே, காட்டிலும், பார்க்கிலும் என் பவை, முன் ஐகாரம் பெற்றுச் சொல்லுருபுகளாக வரும். உதாரணம்: அவனைக் காட்டிலும் பெரியன் இவன்; இவளைப் பார்க்கிலுஞ் சிறியள் அவள்.

சூத்திரம்: "ஐந்தா வதனுரு(பு) இன்னும் இல்லும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே"

வினா: நான்காம் வேற்றுமையின் உருபுகள் எவை? பொருள்கள் எவை? சொல்லுருபுகள் எவை? ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு உதாரணம் கூறுக. சூத்திரம் கூறுக.

## 6. வித்துவசிரோமணி
## ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள்.

[வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் பிற்காலத்துள்ள உரையாசிரியர்களுட் சிறந்தவர்; கந்தபுராணம் இராமாயணம் முதலிய அரும்பெரும் நூல்கட்கு நுண்பொருள் காண்பதில் வித்துவ சிரோமணி ஒப்பாரும் மிக்காரு மில்லாதவர்; இது இப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துக் கூறுவதாம்]

திருநிறைந்தோங்கு யாழ்ப்பாண மாதாவின் செல்வப் புதல்வராகிய இப்பெரியார், பல வித்துவான்களுக்கு உறைவிடமாயிருந்த நல்லூரிலே, ஸ்ரீ. சரவணமுத்துச் செட்டியாரவர்களது அருந்தவத்தால் 1836-ம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் உச-ம் தேதி ஜெனனமானார். இவருடைய தாய்மரபு, கார்காத்த வேளாளர் குலத்திலே, பாண்டிமளவர் குடியிலே சிவஞானச் செல்வராய் இந்திய நாடெங்கும் பெருங்கீர்த்திவாய்ந்த ஞானப் பிரகாச முனிவரைத் தன்னு ளடக்கிய பெருமை வாய்ந்தது.

ஸ்ரீ. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் சிறுவராய் இருக்கும் பொழுதே, அவருடைய பிதா தேகவியோகமாயினர். அக்காலத்து, அரசாங்க உத்தியோகமும் அதிகாரமுங் கீர்த்தியும் பெருந்தகைமையும் வாய்ந்த இவரது மாதுலர்களால் இவர் செவ்வனே வளர்க்கப்பட்டார்; தமிழ்நாடெங்கும் சைவ சமயமும் செந்தமிழும் பரவி மேலோங்குதற்குத் தமது உடல் பொருளாவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்தவரும், செந்தமிழ்ச் சபா சிங்கமென எங்கும் பெருங் கீர்த்தி வாய்ந்தவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இவரது மாதுலர்களுள் ஒருவராவர். ஸ்ரீ. சரவணமுத்துச் செட்டியார் நாவலர் அவர்களுடைய இளைய தமக்கையை விவாகஞ் செய்தார்; அத்தாரத்திற் பிறந்த பிள்ளைகள் முதல் ஒரு பெண்ணும், பின் இப் பொன்னம்பலபிள்ளை யவர்களும், அதன்பின்

ஒரு பெண்ணும், பின் ஒரு ஆணுமாக நால்வராவர். இவர் தமது ஐந்தாம் பிராயத்திலே வித்தியாரம்பஞ் செய்யப் பெற்று முறையே கல்வி பயில்வாராயினர். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற பிரகாரம், இவருடைய நுண்ணிய விவேகத்தையும், கல்வியிற் கொண்டுள்ள ஆர்வத்தையும், முகத்திலே இயல்பாகப் பொருந்திய தேஜஸையுங் கண்டு மகிழ்ச்சி கொண்டு இவர்மீது அபிமானம் பாராட்டி வந்தனர் பலர் என்ப. இவர் பாலிய தசையிலேயே, அந்நாளில் நல்லூரிற் சிறந்த கல்விமானும் நைஷ்டிகப் பிரம சாரியாயு மிருந்த ஸ்ரீ. கார்த்திகேய உபாத்தியாயரிடம் நிகண்டு இலக்கணம் வாக்குண்டாம் முதலிய நீதி நூல்கள் ஆதியவற்றைக் கற்றூர். அதன் பின் தமது மாமனூராகிய ஸ்ரீலஸ்ரீ. நாவல ரவர்களிடம் நன்னூற் காண்டிகையுரை, விருத்தியுரை, திருவள்ளுவர்—பரிமேலழகருரை, திருவிளையாடற் புராணம், கந்த புராணம், பாரதம், இராமாயணம், தொல்காப்பியத்துக்கு நச்சினூர்க்கினியர் சேனாவரையர் இளம் பூரணர் ஆகிய மூவரது உரைகள், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூருவளி முதலிய நூல்களையும், இன்னும் பல சங்க நூல்களையும் சந்தேக விபரீத மின்றிக் கிரமமாகக் கற்றூர்.

பொன்னம்பலப்பிள்ளையவர்கள் தமது இளம் பிராயந் தொடங்கி மரணபரியந்தம் கல்வி கற்பதிலும், அதனை மாணவர்களுக்குப் போதிப்பதிலும், புராணங்களுக்கு இன்னிசையோடு அரியஉரை கூறுவதிலும் மனத்தைச் செலுத்தி வந்தார். அக்காலத்து அரசினர் இவருக்கு "நொத்தாரிசு" உத்தியோகம் கொடுத்தார்கள். இவரது மாதுலர்கள் கௌரவமான அரசாங்க உத்தியோகத்தர்களாக இருந்ததாலும், இவர் எவரும் மதிக்கத் தக்க பேரழகு வாய்ந்த வித்துவ சிரோமணியாய் விளங்கியமையாலும் இவரிடத்திற் பெரிதும் விருப்பம் வைத்த இவரது பந்துக்கள் இவருக்குப் பெண் கொடுப்பதற்கு,

மிக முயன்றும், இவர் கல்விமீது கொண்டுள்ள ஆர்வத்தினாற் போலும், விவாகஞ்செய்ய உடன்பட்டிலர்.

இவ் வியாழ்ப்பாணத்தின்கண்ணே யுள்ள விநாயகராலயம், சிவாலயம், சுப்பிரமணியராலயம் முதலியவற்றிலும், திருமடங்களிலும், வருடந்தோறும் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள்புராணம் என்னும் இவற்றை விதிப்படி படனஞ் செய்ய, இங்குள்ள சைவ நன்மக்கள் அப்படனத்தை நியதியோடு சிரவணஞ் செய்தலாகிய வழக்கமுண்டு; இப்படியான ஆலயங்களில் விசேஷ படனம் நடக்கும்போது, ஆங்காங்குள்ள அன்பர்கள் இப் பெரியாரை இரந்து அழைத்து அர்த்தஞ் சொல்லச்செய்து ஆர்வத்துடன் சிரவணஞ்செய்து வந்தனர். அங்ஙனம் அர்த்தஞ் சொல்லுங்காலத்தில், இப் பேராசிரியர் தமது கம்பீரமான தோற்றத்துடன் பூமகள் விலாசமும் நாமகள் விலாசமும் தமது முகத்திற் பொலிய, இயல்பாகவுள்ள இனியமிடற் றோசையோடு இராகங்கள் அமைய, நுட்பமுந் திட்பமும் வாய்ப்ப, கட்டுரை வன்மையுடன் உரை விரிப்பதைக் கேட்டால், அழுத பிள்ளையும் வாய்மூடி, அதனைக் கேட்டு மகிழ்ச்சியடையுமாம்; இக் கலா விநோதருக்குக் கைவந்த நூல் கம்பராமாயணமாகும். வண்ணை வைத்தியேசுவரர் கோயில் மண்டபத்தில், ஸ்ரீமத் பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் இராமாயணத்திற்குக் கிரமமாக விரிவுரை சொல்லிவந்த காலத்தில், யாழ்ப்பாணக் குடாநாட்டி லுள்ளார் ஆயிரக்கணக்கானோர் ஆங்காங்கிருந்து வந்து அவ்விரிவுரையாகிய அமிர்தத்தைச் செவி வாயாக மடுத்து ஆநந்த பரவசராய்ச் சென்றார்களாம். மாதுலராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களும் தமது மருகர் உரை சொல்லுந் திறமையைத் தம் மாணுக்கர் வாயிலாகக் கேள்வியுற்று அற்புதமடைந்தன ரெனச் சொல்வர். மேலே சொல்லப்பட்ட பல காரணங்களால், அறிஞ ரெல்லோருஞ் சேர்ந்து இக் கலா வல்லுநர்க்கு வித்துவசிரோமணி யென்ற பட்டத்தை மனப்

பூர்வமாகச் சூட்டினர். இவரது புகழ் மலையி லிட்ட தீபம் போல் யாழ்ப்பாணத்திலும் இலங்கை முழுவதிலும் தென்னிந்தியாவிலும் பரவியது.

தடாகத்திலுள்ள தாமரைமலரிற் பொருந்திய தேனை நுகரவேண்டி, வண்டுகள் நாற்றிசையிலுமிருந்து பறந்து வந்து அம்மலரில் மொய்த்தவாறு, நமது வித்துவசிரோமணியின் அரும்பெரும் கல்வியாற்றலைக் கேள்வியுற்று, இவர்மாட்டுச் செந்தமிழ் பயில்வான் வந்துசேர்ந்த மாணாக்கருக்கு ஒரு கணக்கில்லையெனலாம். அம் மாணாக்கருட் பலர் பிற்காலத்திற் பெரும் வித்துவான்களாகவும், நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியர்களாகவும் விளங்கியுள்ளனர். அவர்களுள் முதல் மாணாக்கராயுள்ளார் சிலரைமாத்திரம் இங்கே தொகுத்துரைக்குதும்; மட்டுவிற் சந்திரமௌலீச வித்தியாசாலையின் ஆதி தாபகரும், புலியூரந்தாதியுரை, திருவாதவூரடிகள் புராண விருத்தியுரை, அபிராமியந்தாதியுரை யென்னுமிவற்றை இயற்றினவரும், ஈழமண்டல சதக ஆசிரியரும், வித்துவ சிரோமணியவர்களால் "உரையாசிரியர்" என்னும் பட்டமளிக்கப்பெற்றவரும், சிதம்பரத்தின் கண்ணேயுள்ள நாவலர் கல்லூரியில் உ௩ வருடகாலம் (தமதுமரணபரியந்தம்) பிரதமாசிரியராக அதிக திறமையோடு கடமை பார்த்தவருமாகிய, ஆசிரியர் ம. க. வேற்பிள்ளையவர்கள் இவரது முதன் மாணாக்கருளொருவராய் விளங்கியவர். அவ்வுரையாசிரியர் தாம் இயற்றிய ஈழமண்டல சதகத்தில், தமது வித்தியா குரவருள் ஒருவராகிய இக் கலைச்செல்வரைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"பொன்னம் பலப்பெயர்ப் புட்கலா வர்த்தம்
புராதனரி யாதோததி
புகழ்சங்க லக்கியப் புணரிரா மாயணப்
பொருவறு மளக்கர் புவியிற்
றுன்னித் துலங்கி மலிசூதஞேலி மாலையாந்
தொல்ப யோததி காவியத்

துங்கவார் கவிபார தப்பரவை லக்கணத்
தொடுகடல்க டய்த்தே முந்தே
மின்னித் திடுக்கிட விடித்தியாழ்ப் பாணகிரி
மீதேறி நல்லை முடிமேன்
மேவிப் படிந்துசெந் தமிழ்மேதை நிதிமாரி
மிகவும் பொழிந் திட்டதிச்
சன்மத்து வித்தியார்த் திப்பயிர் தளைத்திடச்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே."

இன்னும் இவ்வுத்தம ரிடத்துக் கல்வி பயின்று தேறினோர் இவருடைய மருகராகிய ஸ்ரீ சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர், பிரமஸ்ரீ. ஐ. சிவ சங்கரஐயர், பிரமஸ்ரீ. பொன்னுத்துரை ஐயர், சிதம்பரம் நாவலர் காலாசாலைத் தரும பரிபாலகராயிருந்த ஸ்ரீ. ச. பொன்னம்பலப்பிள்ளை, யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலை அதிபரா யிருந்த ஸ்ரீ. த. கைலாசபிள்ளை, பண்டிதர் ஆ. மு. சோமாஸ்கந்தப் பிள்ளை, ஸ்ரீ. சி. சுவாமிநாத பண்டிதர், ஸ்ரீ. வை. சி. சிவகுருநாதபிள்ளை, ஸ்ரீ. சு. சபாரத்தின முதலியார், பிரமஸ்ரீ. சி. கணேச பண்டிதர், புலோலி, ஸ்ரீ. வ. குமார சுவாமிப் புலவர், வண்ணார்பண்ணை (தம்பியப்பா உபாத்தியாயர் என வழங்கும்) ஸ்ரீ. ம. தியாகராசர், தென்னிந்தியாவைச் சன்ம நாடாக வுடையவர்களாகிய உரத்தூர் ஸ்ரீ. கோ. வைத்தியலிங்க பிள்ளை, திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ. பொன்னு ஓதுவார், ஸ்ரீ. சுப்பிரமணிய ஓதுவார், காரைக்குடி ஸ்ரீ. சொக்கலிங்கச் செட்டியார், பழனி ஸ்ரீமத். குமாரசாமித் தம்பிரான் முதலாம் பன்னூற்றுக் கணக்கினராவர்.

இப் பேராசிரியர் உரைகண்ட நூல்கள் மயூரகிரி புராணம், வில்லிபாரத ஆதிபருவம் என்னு மிரண்டுமாம்.

இவற்றுள் முதற் சொல்லப்பட்டதாகிய மயூரகிரி புராணம், தென்னிந்தியாவிலுள்ள சுப்பிரமணிய தலங்களுள் ஒன்றாகிய குன்றக்குடியென்னுந் தலத்தின் மான்மியமாகும். அக்காலத்துள்ள காரைக்குடித் தனவைசியர் சிலருடைய வேண்டுகோட் கியைந்து, அப் புராணத்திற்கு இற்றைக்கு ௫௨ வருடங்கட்கு முன்னர்த் திட்ப நுட்பம்வாய்ந்த பொழிப்புரை யெழுதி அச்சிடுவித்துள்ளார். இரண்டாவதாக இவர் எழுதிய பாரத—ஆதி பருவப் புத்துரை இக்காலத்து உரையாசிரியர் எவராலும் இயற்ற முடியாத தெனலாம். அது பழைய சிறந்த நூலுரைகளுடன் வைத்து எண்ணத் தக்கது. வில்லி பாரதத்திற்கு இவர் எழுதத் தொடங்கிய புத்துரை நிறைவேறுதற்கு முன் இவர் இவ்வுலக வாழ்வை நீத்தமை தமிழகத்தார் செய்த தவக் குறைவாகும்.

எங்கள் வித்துவ சிரோமணி சென்ற ஏவிளம்பி வருடம் மார்கழி மாசம் ௫-ந் திகதி (18-12-1897) சனிக்கிழமை இரவு, கலைமகள் கதற, தமிழ்மகள் அலற, சைவ உலகமும் தமிழகமுஞ் சிந்தாகுலமுற, மாணாக்கர் துயர்க் கடற் படிய, சகலருங் கவலைகொள்ள தமது ௬௧-ம் வயசிற் சிவபத மடைந்தனர். இப் பெரியாருடைய பூத வுடம்பு நீங்கினும், புகழுடம்பு சைவமுந் தமிழும் உள்ளவரை நின்று நிலவுமென்பது நிசம்.

பரீக்ஷை வினாக்கள்: 1. வித்துவசிரோமணி எக்குலத்திற் பிறந்தவர்? 2. அவருடைய மரபிலே விளங்கிய வேறு இரு பெரியார்களைக் கூறுக. 3. வித்துவசிரோமணியின் உபாத்தியாயர்கள் எவர்கள்? 4. வித்துவசிரோமணியிடத்துக் கல்வி பயின்ற மாணாக்கர் சிலருடைய பெயரைக் கூறுக. 5. வித்துவசிரோமணி உரை யியற்றிய நூல்கள் எவை? 6. இவர் இவ்வுலகை விட்டு மறைந்த காலம் எது? 7. வித்துவசிரோமணியின் வாழ்க்கையைக் குறித்துச் சுருக்கமாக ஒரு வியாசம் எழுதுக.

இலக்கணம்:

ஆறாம் வேற்றுமை: இதன் உருபுகள் அது, ஆது, அ என்பனவாம். இவற்றுள் அது, ஆது உருபுகள் அஃறிணை யொருமைப் பெயரையும், அ உருபு அஃறிணைப் பன்மைப் பெயரையுங் கொள்ளும்.

உதாரணம்: சாத்தனது தலை, தனது கை, சிவன கைகள்.

இவ்வுருபுகள் தம்மை யேற்ற பெயர்ப்பொருளை, வருமொழிப் பொருளாகிய தற்கிழமைப் பொருளோடும், பிறிதின்கிழமைப் பொருளோடும் தொடர்புடைய பொருளாக வேறுபடுத்தும்; இவ்வாறு வேறுபட்ட தொடர்ப் பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்.

தற்கிழமைப் பொருளாவது தன்னோடு ஒற்றுமை யுடைய பொருள்; அது உறுப்பு, பண்பு, தொழில், ஒன்றன் கூட்டம், பலவின் கூட்டம், ஒன்று திரிந்து ஒன்றாயது என ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| உ—ம்: | சாத்தனது கை | உறுப்புத்தற்கிழமை |
| | சாத்தனது கருமை | பண்புத்தற்கிழமை |
| | சாத்தனது வரவு | தொழிற்றற்கிழமை |
| | நெல்லது குப்பை | ஒன்றன்கூட்டத்தற்கிழமை |
| | சேனையது தொகுதி | பலவின்கூட்டத்தற்கிழமை |
| | மஞ்சளது பொடி | ஒன்றுதிரிந்தொன்றாயதன் தற்கிழமை |

---

## 7. சிலப்பதிகாரம்

[ இது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் என்னுஞ் சிறந்த நூலின் வரலாற்றையும், அந்நூலின்கண் விரித்துச் சொல்லப்பட்ட கதையையும், நூலின் மாண்பதையுந் தொகுத்து இனிய தமிழ் வசன நடையிற் கூறுவதாகும்; திரு. கா. சுப்பிரமணியபிள்ளை யவர்கள் இயற்றிய தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலிலிருந்து அநுவதித்ததாகும் ]

கடைச்சங்கத்தார் காலத்திலே இயற்றப்பட்ட பெருந்தொடர்நிலைச் செய்யுள் மிகச் சிலவே. அவற்றுள் மிகச் சிறந்தது முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரமென்பது. இது சேர அரசன் செங்குட்டுவனது தம்பி துறவு பூண்டிருந்தவராகிய இளங்கோவடிகள் என்பாரால் இயற்றப்பட்டது. சிலப்பதிகாரக் கதையின் தலைவியாகிய கண்ணகி, இறந்த தன் கணவனோடு விண்ணிற்சென்ற காட்சியைக் கண்ட குன்றக்குறவர் இளங்கோவடிகட்கு

அதனை உணர்த்த அவரோடு உடனிருந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் கண்ணகியால் மதுரைப்பதி தீப்பட்டதைத் தான் நேரில் அறிந்ததாகச் சொல்லிக் கண்ணகி கதையின் நீதிமை உலகத்திற்கு விளக்கும் பொருட்டு ஒரு பெருங்காப்பியம் நாட்டவேண்டுமென்று இளங்கோவடிகளை வேண்டிக் கொள்ள, அவ்வடிகள் சேர சோழ பாண்டியர் மூவர்க்கும் பொதுவாகிய இக்கதையை முத்தமிழ் நயங்களும் விளங்க இயற்றி யருளினர். கண்ணகியின் சிலம்பு காரணமாக இதன் முடிபு ஏற்பட்ட தாகலின், சிலப்பதிகாரம் என்னும் பெயர் இதற்கு அமைக்கப்பட்டது.

இது புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் மூன்று பகுதிகளையுடையது. கதையின் தலைவனும் தலைவியும் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவிடம் புகார் என்னுங் காவிரிப்பூம் பட்டினம். அது சோழநாட்டி லுள்ளது. கோவலன் சிலம்பு விற்கப்போய்க் கொலை யுண்ட இடம் மதுரை. இது பாண்டிய நாட்டுத் தலைநகர். மதுரையைத் தீப்படுத்திய பின்னர்க் கண்ணகி சென்று தன் கணவனோடு விண்ணுலகஞ் சென்றவிடம் சேர நாட்டின் மலைப்பகுதி. அந்நாட்டின் தலைநகராகிய வஞ்சி யின்கண்ணே கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவனாற் கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே இக் காவியம் மூன்று நாட்டிற்கும் மூவேந்தர்க்கும் உரிய தாகும். இது முத்தமிழ்க் காவியமாயும், நால்வகை உறுதிப்பொருளை யுணர்த்துவதாயும் இருத்தலால், இதற் குரிய பெருமை மற்றைக் காவியங்களுக்கில்லை. இது முப்பது காதைகளையுடையது. காதையென்பது கதை கூறும்பாட்டு.

முதலாவது புகார்க்காண்டம் பத்துப் பகுதிகளை யுடையது. முதற் பகுதியாகிய மங்கல வாழ்த்துப்பாடலில் திங்கள், ஞாயிறு, மாமழை, புகார் என்பவற்றின் வாழ்த்

துக் கூறியபின், புகார் நகரத்தே வதிந்த மாநாய்கன் மகள் கண்ணகி என்பவளுக்கும், பெருங்குடி யென்னும் வணிகமரபினைச் சார்ந்த மாசாத்துவான் மகன் கோவல னுக்கும் மணம் நடந்தது கூறப்பட்டது. இதனுட் பொதி யம் இமயம் என்னும் இருமலையின் சிறப்புந் தலைவன் தலைவியர்க்கு மணஞ் செய்கின்ற காலத்து ஆண்டுமுறையே பதினாறு பன்னிரண்டு என்பதும், பெண்மகள் அழகிற்குத் திருமகளையுங் கற்பிற்கு அருந்ததியையும், ஆண்மகன் அழ கிற்குச் செவ்வேளையும் உவமை கூறும் வழக்கமும் அக் காலத்து மணச் சடங்கின் இயல்புங் காணப்படும்.

இரண்டாவது கோவலனுங் கண்ணகியும் இல்லறம் நடாத்தியது கூறுமுகத்தால், காவிரிப்பூம் பட்டினத்தின் வளமும், இருவரது இன்ப வாழ்க்கையின் சிறப்பும், தலைவியைக் கோவலன் அன்பு பாராட்டுந் திறனும், அற வழி நிற்பார்க்கும் இல் வாழ்க்கை பயன்பட வேண்டு மென்பதும் விளக்கப்பட்டன.

மூன்றாவது அரங்கேற்று காதையில் அரசனது அவைக்களத்தே மாதவியென்னும் பொதுமடந்தை மன்னற்குத் தன் ஆடல் பாடல் அழகுகளைக் காட்டிப் பரிசு பெற்றதைக் கூறுமுகத்தால், நாடகவியல்பனைத் தும் வகுத்தோதப்பட்டது. அவைக்கண் நாட்டியம் நடப்பதற்குமுன் தலைக்கோ லென்பதை இந்திரன் மக னாகக் கருதி யானைமேலேற்றி அதனை ஊர்கோலம் செய் வித்தல் அக்காலத்து வழக்கமென்று தோன்றுகின்றது. மாதவியென்பாள் சோழமன்னன் அவையில் தன் நாட்டி யத்தைச் செவ்வையாக அரங்கேற்றி ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்பெறும் மாலை ஒன்று பரிசாகப் பெற்றனள் என்றும், அத்துணைப் பொன் கொடுத்து அதனை வாங் கும் ஆடவனைத் தான் மணத்தல் கருதி மாதவி அதனைக் கூனி யொருத்தியிடங் கொடுத்தாளென்றும், அவ்வளவு பொன் கொடுத்துக் கோவலன் அதை வாங்கி மாதவி

யோடு கலந்து இன்பந்துய்த்து அவளை நீங்கா நிலைமை யடைந்தன னென்றும் கூறப்பட்டது.

நான்காவது காதையுள் அந்திமாலைச் சிறப்புக் கூறுமிடத்துக் கண்ணகியைப்போலப் பிரிவுற்றோர்க்கு அது துயரம் விளைத்தலும், கோவலன் மாதவி யென்னுங் காதலர்க்கு மகிழ்ச்சி யளித்தலும் விளக்கப்பட்டது.

ஐந்தாவது காதையுள் இந்திர விழவின் சிறப்புக் கூறுமிடத்துக் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள பலவகைத் தொழிலாளர்களுடைய தெருக்களும் வீடுகளும் இத்தகைய வென்பதும், கரிகால் வளவன் இமயம்வரை படையெடுத்துச் சென்றகாலை அவன் வச்சிரம், மகதம், அவந்தி முதலிய வடநாட்டு மன்னரிடம் பெற்ற பரிசுகள் இன்ன வென்பதும், இலஞ்சிமன்றம், வெள்ளிடை முதலிய பல மன்றங்களின் சிறப்பும், பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் கோயிலும், ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், கண்ணன் பலதேவன் இந்திரன் முதலியோர் கோயில்களும் அக்காலத்துச் சிறந்து விளங்கின என்பதுங் கூறப்பட்டன.

ஆறாவது கடலாடு காதையில் இந்திரவிழவு இருபத்தெட்டுநாள் நடந்த பின்னர், நகரத்தார் கடலாடச் செல்லும் வழக்கமும், மாயோன் முதலிய பலவகைத் தேவர்களின் கூத்துவகைகளும், மாதவியின் பலவகை அணிகளும், பல்வகைப் பண்டங்கள் விற்கும் வணிகர் செயலும், யவனர் முதலிய பலவகை அயல்நாட்டு மக்களின் வணிகமும், பலவகை விளக்குக்களின் சிறப்புங் காணப்படும். கோவலன் கோவேறு கழுதையிலும் மாதவி கொல்லாப் பண்டியிலுங் கடற்கரை சென்று புன்னை நீழற்கீழ்ப் புதுமணல் பரப்பிய இடத்தே இருவரும் இருந்தனர் என்பது கூறப்பட்டது.

ஏழாவது காதையில், கோவலன் காவிரியைப்பற்றியும் கடற்கரையைப்பற்றியும் பல இசைப்பாட்டுக்களை மாதவி

மனமகிழும்படி யாழில் அமைத்துப் பாடினன்; பின்னர் மாதவியும் பல பாட்டுக்கள் பாடியகாலை, கோவலன்மேல் அன்பிலளாய் வேறொரு குறிப்புடையள்போலச் சிலபாடல் களைப் பாடினள். உடனே கோவலன் மாதவி பொய்ம்மை மிக்க மாயத்தாள் என்று கருதி அவளைக் கைவிட்டுப் பிரிந்து சென்றான் என்பதுங் கூறப்பட்டுள்ளது. இக் காதையுட் பலவகை இசைப் பாடல்கள் காணப்படு கின்றன.

எட்டாவது வேனிற்காதையுள் தமிழ் நாட்டெல்லையும், இளவேனிற் காலத்துக்குரிய காமன் சிறப்பும், பிரிந்தவர் களது துயரும், மாதவி விடுத்த தூதினைப் பொருட்படுத் தாது அவளை இகழ்ந்த செய்தியைக் கேட்டு அவள் வருந்தியதுங் கூறப்பட்டன.

ஒன்பதாவது கனாத்திற முரைத்த காதையில், கண்ணகி யின் பாங்கியாகிய தேவந்தியென்பாள் கண்டகனவு முதற்கட் கூறப்பட்டது. பின்னர், கோவலன் கண்ணகி பாற் சென்று, மாதவியின் பொருட்டுத் தன் முன்னோர் பொருட்குவையைத் தொலைத்ததைக் கூறி மனநொந்த காலை, இன்னும் மாதவிக்குக் கொடுக்கப் பொருள் வேண்டுமென்று கருதியதாக வெண்ணிய கண்ணகி, 'இன்னும் என் சிலம்புகள் இரண்டுள்ளன. அவற்றைக் கொள்க' என்று கோவலனுக்கு உரைப்ப, அவன் ஒரு சிலம்பினை மதுரைக்குச் சென்று விற்றுப் பொருளீட்டி மீளுங் கருத்துடையேனென்று தெரிவித்து, அவளையும் உடனழைப்ப, அவளும் உடன் செல்லுதற்கு இசைந்தா ளென்பது தெரிவிக்கப்பட்டது.

பத்தாவது காதையுள், சித்திரைத் திங்கள் சோதி நாள் விடியற் காலம் மதி மறைந்து இருள் நிறைந்த பொழுதிற் புறப்பட்டுப் பல்வகைக் கோட்டங்களையுந் தொழுது போந்து ஒரு காதம் வழி சென்றவுடன், வழி நடப்பால் வருந்திய கண்ணகி மதுரை மூதூர் யாதென்று

புன்சிரிப்புடன் வினவினாள். மதுரை முப்பது காதம் வழியுள்ளது என்று சொன்னான். பின்னர் இருவருங் கவுந்தியடிகள் இருக்கின்ற பள்ளிக்குச் சென்று அவரை வணங்கவும், நீங்கள் உங்கள் உயர்நிலையை நீத்து யாண்டுச் செல்கின்றீரென வினவ, பொருளீட்டுதற் பொருட்டு மதுரைக்குச் செல்வதாகக் கோவலன் கூறினன். கண்ணகி சீறடிக்குப் பருக்கைக் கற்கள் துன்பஞ் செய்யுமென்று உணர்த்தியும், இருவருந் தாம் மேற்செல்லுதலை யொழியாரென்று கண்ட கவுந்தியடிகள், தாமும் அவரோடு உடன் செல்வதாகப் புறப்பட்டனர். வழியின் கடுமையெல்லாங் கவுந்தியடிகள் விலக்கித் தக்க துணையாகத் திகழ்ந்தனர். இப் பகுதியுள் வழியனைத்து மிக விளக்கமாகத் தெரிக்கப்பட்டது. அருகக் கடவுளது சிறப்பும் மிக விரிவாக இதனுட் கூறப்பட்டுள்ளது. காவிரிக் கரையிலுள்ள ஒரு பொழிலுள் கண்ணகியுங் கோவலனுந் தங்கியபோது அவர்களை இகழ்ந் துரைத்த ஒரு பரத்தையையும் அவள் காதலனையும் நரியாகும்படி கவுந்தியடிகள் ஆணையிட்டனர். கோவலன் கண்ணகி யென்பாருடைய வேண்டுகோளால் அவர்கட்குச் 'சாபம்' ஓராண்டில் நீங்கும்படி கவுந்தியடிகள் பணித்தார். இதனோடு புகார்க் காண்டம் முடிகின்றது.

இதற் கடுத்தது மதுரைக் காண்டம். இக் காண்டத்துட் ௧௧ முதல் ௨௨ வரை யுள்ள காதைகள் அடங்கும்.

குமரிக்குத் தெற்கே யுள்ள தமிழ் நாட்டைக் கடல் கொண்ட செய்தியும், பாண்டிய மன்னரின் பெருமையும், கோவலனுக்குந் தென்னாடு முழுதுஞ் சுற்றி வந்த ஒரு மறையாளனுக்கும் நடந்த உரையாடலும், அவன் இட்ட சித்தி, பவகாரணி, புண்ணிய சிரவண மென்னும் நீர்த் துறை முதலியவற்றின் பெருமை யுரைத்தலும், பின்னர்க் கவுந்தியடிகளோடு கோவலனுங் கண்ணகியும் ஒரு பொய்கையை யடைந்தகாலை, காட்டுத் தெய்வமொன்று மாதவி

யின் தோழியாகிய வசந்தமாலையின் வடிவங்கொண்டு கோவலன் முன்னே தோன்ற, கவுந்தியடிகளின் போதனை யால் உண்மை யுணர்ந்து மந்திரத்தால் அதை விலக்கி யதும், பின்பு அவர்கள் ஐயை கோட்ட மடைந்ததும் பதி னோராவது காடுகாண் காதையிற் கூறப்பட்டது.

பன்னிரண்டாவது பகுதியுள் ஐயை கோயிலில் மறக்குடியிற் பிறந்த சாலினி யொருத்தி மிகமுழக்கத் தோடு ஆடிக் கூறிய பாடல்களும், கண்ணகியை அவள் புகழ்ந் துரைத்ததும் பிறவுங் காணப்படும்.

பதின்மூன்றாவது காதையுள், வசந்தமாலை வாயிலாக மாதவி கோவலனுக்குத் தன்னுடைய கூந்தலை மண்ணிற் றெட்டுப் பொறித்த முத்திரையிட்ட முடங்கலை அனுப்பி யதும், அதனுட் கோவலனடிக்கு வணக்கங்கூறிப் பெற் றோர்களது சொல்லையுங் கடந்து குலப்பிறப் பாட்டியாகிய கண்ணகியோடு இரவின்கண் ஊரைவிட்டுப் போனதின் ஏது என்னவென்று கருதித் தன் நெஞ்சந் துன்பத்தி லழுந்துவதாகவும், கோவலன் தன் புகழ்க்கு ஒரு குறை வில்லாது நடந்து கொள்ளவேண்டிய தென்று மாதவி குறிப்பித்ததும், அம் முடங்கலுட்கண்டு மாதவிபால் யாதுந் தீங்கில்லை யென்றுந் தன்னாற் செய்யப்பட்ட செய்கையே பிரிவிற்கு ஏதுவாயிற் றென்றும் கோவலன் உணர்ந்தன னென்பதும் அறியக் கிடக்கின்றன.

பின்னர் இருவரும் மதுரை சென்று இடைக்குடி யுள் தமக்கோரிடம் பெற்றுத் தங்கியதும், மதுரையின் பல்வகைப் பகுதியின் வனப்பும், பதின்மூன்று பதினான்கு பதினைந்தாங் காதைகளிற் கூறப்பட்டன.

பின்னர்க் கொலைக்களக் காதையுள், ஆய்ச்சியர் கண்ணகிக்குச் சமையல் செய்தற்கு வேண்டிய பொருள் களை உதவியதும், கண்ணகி சமைத்துக் கணவனுக்கு உணவு அளித்ததும், உணவருந்தி அடைக்காய் தின்னும்

பொழுது தனது முன் வாழ்க்கையை நினைந்து வருந்தித் தன்னை யிகழ்ந்து கண்ணகியைப் புகழ்ந்ததும், அவனோடு உடன் புறப்பட்டுக் கண்ணகி வந்ததற்கு ஏதுக் கூறியதும், அவளை நன்மொழிகளாற் சிறப்பித்துச் சிலம்பொன்று பெற்று அதனை மாற்றிக்கொண்டு வருவதாகத் தான் புறப்பட்டதும் மிகவும் இரக்கத்தை விளைக்கத்தக்க பகுதிகளாகும்.

சிலம்புகொண்டு வெளிப்போந்த கோவலன் தனக்கு எதிரே கொல்லேறு ஒன்று வருவது கண்டும் அவன் இடைக்குலத்தைச் சார்ந்தவனல்லனாதலின் அதைத் தீக்குறி யென்றுணராது மேற்சென்று கடைத்தெரு சேர்ந்த காலை, நூறுபணியாளர் பின் செல்லச் சட்டையிட்டுப் போந்த பொற்கொல்ல னொருவனிடம் தன் சிலம்பைக் காட்டி விலைமதிக்கும்படி கேட்டபொழுது, அப்பொற் கொல்லன் அரசன் மனைவியின் பொற்சிலம் பொன்றைத் தான் திருடிக் கொண்டமையை மறைத்தற் பொருட்டுக் கோவலன் கொணர்ந்த சிலம்பே அரசமாதேவி சிலம் பென்று கூறிக் கோவலனைக் கள்வனாக்கக் கருதினான். அத் தீய கருத்தோடு கோவலனை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, அரண்மனைக்குச் சென்று காதலாற் பரவசப்பட்ட அரசனிடம் சிலம்பு திருடிய கள்ளனைத் தான் கண்டதாகப் பொற்கொல்லன் கூறிய அளவில், அக்கள்வனைக் கொல்லுதற்கு இங்கே கொண்டுவருக வென்று சொல்லக் கருதிய அரசன் சிறிது தவறி, அவனைக்கொன்று அச்சிலம்பைக் கொண்டு வாரும் என்று கட்டளையிட்டான். காவலாளரோடு சென்ற பொற்கொல்லன் கோவலனை அவர்களுக்குக் காட்டியபொழுது அவனுடைய முகக்குறி முதலியவற்றால் அவன் கள்வன் அல்லன் என்று காவலாளர்கள் சொன்னதைப் பொற்கொல்லன் மறுத்து அவன் கள்வனே யென்று வற்புறுத்தியபோது, அவர்களுட் கொலையஞ்சாத வொருவன் விரைந்துசென்று கோவலனை

வெட்டி வீழ்த்தினன். அதனோடு கொலைக்களக் காதை முடிகின்றது.

பதினேழாங் காதை: இடையர் குடியிற் சில தீக்குறிகள் கண்ட பெண்டிர் அவற்றிற்குத் தணிவாகக் குரவைக் கூத்தாடினர். ஆய்ச்சியரது இசைப் பாடல்கள் இப் பதினேழாவது பகுதியுட் காணப்படுகின்றன.

பின்னர்க் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி கேள்விப்பட்டுப் புலம்பியதும், கதிரவனை நோக்கி என் கணவன் கள்வனோ வென்று வினவியகாலை 'நின் கணவன் கள்வனல்லன்; இவ்வூர் தீப்படும்' என்றதோர் ஒலி யெழுந்தது. இது பதினெட்டாவது பகுதியுட் காணப்படுகின்றது.

அதன் பின்னர்க் கண்ணகி எஞ்சிய சிலம்பொன்றைக் கையிலேந்தித் தன் கணவனைக் காணுதற் பொருட்டுப் புறப்பட்டுப் போய்த் தன் கணவனுடைய உடலைச் சிலர் காட்டக்கண்டு கழிபெருந் துயருற்று,

'உண்பதோர் வினைகாணு விதுவென உரையாரோ
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுந ருறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்,
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉஞ்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்,
தெய்வமு முண்டுகொல் தெய்வமுமுண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலிற்
றெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்
என்றிவை சொல்லி' — ஊர்சூழ்வரி, ருo–கூo.

யழுது கணவனது மார்பைத் தழுவிக்கொண்டகாலை, அவன் உயிர்பெற் றெழுந்து நின்று அவள் கண்ணீரை மாற்றி விட்புலஞ் சென்றனன்.

கண்ணகி 'இது என்ன மாயமோ' என்று கருதி அரசனைக்கண்டு இதனைப் பற்றிக் கேட்கவேண்டு மென்று அரசன் அரண்வாயில் அடைந்தனள். தன் வரவை அரசனுக்கு அறிவித்து உட்சென்று, அரசன் யாரென வினவத் தான் மனுமுறைகண்ட சோழன் மரபில் வந்த அரசர் ஆளும் புகா ரென்னும் ஊரின ளென்றும், அந்நகரத்து மாசாத்துவான் மகனாய் ஊழ்வினையாற் கொலையுண்ட கோவலன் மனைவி தானென்றுங் கூறினாள். கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலன் றென்று அரசன் மொழிந்தகாலைத் தன்கணவன் கள்வன் அல்லன் என்று குறிப்பித்தற்குத் தன் சிலம்பினுள் வைக்கப்பட்ட மணி மாணிக்க மென்றாள். அரசியின் சிலம்பினுள் அமைக்கப்பட்டது முத்து ஆதலின், கண்ணகி தன் காற் சிலம்பை உடைக்க, அதன் உள்மணி அரசன்வாயிற் றெறித்து விழுந்தது. உடனே அரசன் தான் செய்தது தவறு என் றுணர்ந்து 'பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட யானோ அரசன், யானே கள்வன், என்று கூறித் தன்னை இகழ்ந்து மயங்கி வீழ்ந்து இறந்தனன். உடனே அரசமாதேவியும் உயிர் துறந்தனள்.

பின்னர்க் கண்ணகி வஞ்சினங்கூறித் தன் இடமுலையைக் கையாற் றிருகி மும்முறை வலம்வந்து ஊர்மேலெறியத் தீக்கடவுள் அவட்குத் தோன்றி யாரைத் தவிர்க்க வேண்டு மென்று கேட்டகாலை, 'பார்ப்பார், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழவியென இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்று கண்ணகி உரைத்தனள். உடனே கூடல்நகர் தீப்பற்றியது. தீப்பற்றிய செய்தி இருபத்திரண்டாவது காதையுட் காணப்படும்.

மதுரைக் கதிபதியாகிய தெய்வம் கண்ணகிமுன் தோன்றிப் பாண்டிய மன்னரின் செங்கோன்மை யெடுத்துக் கண்ணகிக்குக் கூறிக் கோவலன் வெட்டுண்டதற்கு

ஏது, சங்கம னென்னும் வணிகனை அவன் முற்பிறப்பிற் பகைவனுடைய ஒற்றனென்று பிடித்து அரசனுக்குக் காட்டிக் கொலை செய்ததும், அச்சங்கமன் மனைவியாகிய நீலி யென்பவள் பதினான்கு நாள் பலவிடத்தும் அலைந்து பின்பு ஒரு மலைமேலேறிக் கணவனைச் சேர்தற்பொருட்டு உயிர் விடுங்காலை, தனக்குத் துன்பஞ் செய்வோர் இத் துன்பத்திற்கு ஆளாவார் என்றதுமே யென்றுரைத்து, நீ இன்னும் பதினான்கு நாள் சென்று உன் கணவனைச் சேர்வா யென்று பகர்ந்து மதுரைத் தெய்வம் மறைந்தது. பின்னர்க் கண்ணகி இருத்தலு மில்லாது நிற்றலு மில்லாது மேற்றிசை வாயிலாகச் சென்று வைகைக்கரை வழியாக நெடுந்தூரம் போய், மலையேறி ஒரு வேங்கை மர நிழலில் நின்றகாலை, விண்ணினின் றிழிந்த ஊர்தியில் (விமானத்தில்) வந்த கோவலனோடு வானுலகம் புகுந்தனள். (மதுரையில் அரசாண்ட மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழிய னென்பான்.) இதனோடு மதுரைக் காண்டம் முடிவுற்றது.

இனி ஏழு காதையும் வஞ்சிக்காண்ட மெனப்படும். கண்ணகி கணவனோடு விண்சென்ற காட்சியைக் கண்ட வேடுவர் வியந்து குரவைக் கூத்தாடியது உசு-வது காதையிற் காணப்படும். அவ்வேடர்கள் சேரமன்னனாகிய செங்குட்டுவனுக்கும் அவன் தம்பியாகிய இளங்கோவடிகட்கும் இச் சங்கதியைத் தெரிவித்தார்கள். அவ்வரசன் மலைவளங் காண்பான் தன் தேவியோடு ஆங்குச் சென்றிருந்தான். அக்காலத்தே கண்ணகிக்கு மதுரைத் தெய்வங் கூறியதை நேரிற்கேட்ட சீத்தலைச்சாத்தனார் மதுரைச் செய்தி அனைத்தையும் அவ் வரசனுக் குரைத்தார். அரசன் கண்ணகிக்குக் கோயில் கட்டக்கருதி அவள் வடிவம் செய்தற்குக் கல்கொண்டு வருதற் பொருட்டு இமயம் நோக்கித் தன் சேனையோடு புறப்பட்டான். புறப்படு முன்னர், சிவபெருமானைத் தொழுது

அவரது சேவடி சென்னிமேற் கொண்டன னென்பது கால்கோட் காதையில்,

"தெண்ணீர் கடந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்" சுச-சுரு.

என்றமையாற் புலனும்.

திருமால் 'பிரசாத' த்தை வாங்கித் தோளிற் சாத்திக் கொண்டனனென்பது கூறப்பட்டது. பின்னர் வட நாட்டிற்குச் சென்று நூற்றுவர் கன்னர் என்னும் நட் பரசர்களது உதவியைக் கொண்டு ஓடமேறிக் கங்கையைக் கடந்து கனகன், விசயன், முதலிய ஆரிய அரசர்களை வென்று இமயத்திற் கொண்ட கல்லைக் கனகன், விசயன் என்னும் ஆரிய அரசர் தலைமேலேற்றிக் கங்கையை மீண்டுங் கடந்து கங்கைக்குத் தென்கரையில், சேனையோடு தங்கிய காலை, மாடலன் என்னும் மறையவனால் கோவலன் வரலாற்றையும் நெடுஞ் செழியனுக்குப் பின்பு இளங்கோ வேந்தன் அரசாட்சி செய்ததையும் கேள்விப்பட்டான். பின்னர், வஞ்சி நகரடைந்து மாடலனது நல்லுரை கேட்டுக் கனகவிசயரைத் தாம் வென்றதை இகழ்ந்த சோழ பாண்டிய மன்னர்பால் தான் கொண்ட சினந் தவிர்ந்து சிறையில் வைத்த அவ் வாரியமன்னரை விடுவித் துக் கண்ணகிக்குக் கோயிலமைத்து 'நித்திய நைமித்திக' வழிபாடுகளை நடைபெறும்படி ஏற்பாடு செய்தான். இச் செய்தியெல்லாம் உணர்ந்த கண்ணகியின் பாங்கி யாகிய தேவந்தியும் அவள் அடித்தோழியுங் கண்ணகி கோவிலுக்கு வந்து பிரிவாற்றாமையால் வருந்தியபோது கண்ணகி செங்குட்டுவனுக்கு வெளிப்பட்டு அவனை வாழ்த்தினாள். இம் மூவருடைய பிறப்பையும் தெய்வத்தின் உதவியால் அறிந்த செங்குட்டுவன், கண்ணகிக்கு நாள் வழிபாடு இயற்றும்படி தேவந்தியை வேண்டிக் கொண் டான். பத்தினிக் கடவுளை வணங்கியகாலை, அங்கு வந்

திருந்த ஆரிய அரசரும் மாளவ மன்னனும் இலங்கை அரசனுகிய கயவாகுவுந் தாங்கள் தமது நாட்டிற் செய்யும் பூசையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று குறையிரந்த காலை, அப்படியே வரந்தந்தேனென்று ஒரு குரலெழுந்ததைக் கேட்டு எல்லாரும் மகிழ்ச்சி யடைந்தார்கள்.

பின்னர்ச் செங்குட்டுவன் ஒரு வேள்வி யியற்றச் சென்முன். இளங்கோவடிகள் தேவந்திமேற் றோன்றிய கண்ணகியின் வாயிலாகத் தன் வரலாறுகளை உணர்ந்தார். தங்கள் நாடுகளில் வறுமை நீங்கி மழைபொழிதற் பொருட்டுக் கொற்கையிலிருந்த இளஞ்செழிய னென்னும் பாண்டியனும், உறையூரிலிருந்த சோழனுகிய பெருநற்கிள்ளியும்; இலங்கைக் கயவாகுவுங் கண்ணகிக்குக் கோயில் கட்டுவித்து நாள்வழிபாடும் விழா முதலியவைகளும் நடத்தினுர்கள். இளஞ்செழியன் கண்ணகிக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டதாக வரலாற்றிற் கூறப்பட்டுள்ளது. இதனேடு வஞ்சிக்காண்டம் முடிவு பெற்றது.

பரீக்ஷை வினுக்கள்: 1. சிலப்பதிகாரம் என்னும் நூல் எக்காலத்தில் இயற்றப்பட்டது? 2. இதனை இயற்றியவர் யார்? 3. அவர் இயற்ற வேண்டி நிகழ்ந்த காரணமென்ன? 4. இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயரிடப்பட்டமைக்கு ஏதுவென்ன? 5. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? 6. சிவபிரானை வழிபட்டமை, திருமாலை வழிபட்டமை சிலப்பதிகாரத்தில் எவ்வெவ் விடங்களில் எடுத்துக் கூறப்பட்டன? 7. கௌந்தியடிகள் யார்? 8. அந்த அடிகளுக்கும் கோவலன் கண்ணகிக்கு முள்ள தொடர் பென்ன?

இலக்கணம்:

ஆறும் வேற்றுமை: (தொடர்) பிறிதின்கிழமைப் பொருளாவது தன்னின் வேருய பொருள்; பொருள், இடம், காலம் என இது மூவகைப்படும்.

| | | |
|---|---|---|
| உ—ம்: | முருகனது வேல் | பொருட் பிறிதின்கிழமை. |
| | முருகனது குன்றம் | இடப் பிறிதின்கிழமை. |
| | காமனது வேனில் | காலப்பிறிதின் கிழமை. |

இவ்வுருபுகள் நிற்றற்குரிய இடங்களில், உடைய என்பது சொல்லுருபாக வந்து, இருதிணை யொருமை பன்மைப் பெயர்களையுங் கொள்ளும்.

உ—ம்: தசரதனுடைய மகன், தசரதனுடைய மக்கள்
தசரதனுடைய மாளிகை, அரசனுடைய நாடுகள்.

சிறுபான்மை அது உருபு, அரனது தோழன், நினது அடியார் என வருவனவற்றில், எனது, அவனது என்பன துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்றுநின்ற குறிப்புவினைமுற்று. எனது போயிற்று, அவனதை வாங்கினேன் என வருவனவற்றில், எனது அவனது என்பன மேற்கூறியபடி வந்த குறிப்புவினையாலணையும் பெயர்; இங்ஙனமன்றி, இவ்விடங்களில் வரும் அது என்பது ஆறும்வேற்றுமை யுருபன்று.

சூத்திரம்: "ஆற னொருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம்; பண்பு, உறுப்பு
ஒன்றன் கூட்டம், பலவினீட்டம்
திரிபினாக்கமாம், தற்கிழமையும்,
பிறிதின்கிழமையும் பேணுதல் பொருளே"

வினா: ஐந்தாம் வேற்றுமை யுருபுகள் எவை? அவை எவற்றைக் கொள்ளும்? ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கள் எவை? ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபுகள் எவை? ஐந்தாம் வேற்றுமைக்குரிய சூத்திரத்தைக் கூறுக.

# 8. அயோத்திகாண்டம் (நாடகம்)

## இரண்டாம் அங்கம்

### முதற் காட்சி

[இது, இந்நூலைத் தொகுக்கும் ஆசிரியர் நாடகரூபமாக எழுதிய இராமாயண அயோத்தி காண்டத்தின் இரண்டாம் அங்கமாதும்; மாணவர்களாயுள்ளார், தங்கள் கலாசாலையிற் பரிசளிப்புவிழா முதலியன நிகழும் வேளைகளில் இப்பாகத்தை நாடகமாக நடித்தல் உசிதமாம்]

காலம்: பின்பகல். இடம்: கங்காநதி தீரத்துள்ள ஒரு முனிவராச்சிரமம்.

[ஸ்ரீ ராமர் அங்குள்ள முனிவர்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றார். குகன் வருகின்றான்.]

குக: இந்த ஆச்சிரமத்திலேதான் ஸ்ரீராமபிரான் எழுந்தருளி யிருக்க வேண்டும்; சரி, சமீபத்திற் போய்க் கூப்பிட் டறிவோம்; (பர்ணசாலையின் வாயிலையடைந்து) சுவாமீ! அடியேன் கும்பிடுகின்றேன்.

இல: (சத்தத்தைக் கேட்டுப் பன்னசாலையின் புறத்தே வந்து) அப்பா! நீயார்? இங்கே யாரைத் தேடுகின்றாய்?

குக: சுவாமீ! நானொ ஏழை வேடன்; சிரிங்கிபேரம் என்னுங் கிராமத்தில் இருப்பவன்; என்னைக் குகனென்று சொல்லுவார்கள்; இந்த ஆற்றைக் கடந்து செல்பவர்களுக்கு ஓடம் விடுவது என் தொழில்; சுவாமியைக் கும்பிடும்படியாக இங்கே வந்தேன்.

இல: அப்பா! நீ இங்கேதானே நில்; எனது அண்ணனுக்கு உனது வரவைத் தெரிவிக்கின்றேன் (எனக்கூறி ஸ்ரீ ராமரிடஞ் சென்று) அண்ணா! வேடுவர் குலத்தவனும்; இக் கங்கையைக் கடப்பவர்களுக்கு ஓடஞ் செலுத்துபவனும்; சமீபத்தி லுள்ள சிரிங்கிபேரம் என்னுங் கிராமத்தில் வசிப்பவனும்; குகன் என்னும் பெயரையுடையவன்; பார்க்கும்போது தங்களிடத்து மிகவும் பத்தியுடையவன்போலக் காணப்படுகின்றான்; தங்களைத் தரி

மிக்க ஆசைகொண்டு இப் பர்ணசாலையின் புறத்தே நிற்கின்றான்.

இ: தம்பி! அப்படியானால் அவனை இங்கே அழைத்து வா.

இல: (அவனிடஞ் சென்று) அப்பா! தமையனார் உன்னை அழைத்து வரும்படி தெரிவித்தார்.

குக: பெரும் பாக்கியம் சுவாமீ. (இருவரும் ஸ்ரீராமரிடஞ் செல்கின்றார்கள்.)

இ: அப்பா! சமீபத்தில் வருவாய்.

குக: தெண்டம் சுவாமீ! (எனக்கூறி சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து வாய்புதைத்து மிக்க விநயத்துடன் நிற்கின்றான்.)

இ: ஏன் நிற்கின்றாய்; அப்படி அமருவாய்.

குக: சுவாமீ! இது ஏழை; இப்படி நிற்கின்றேன்; சாமிக்காக நல்ல தேனும், தெரிந்தெடுத்த மீனும் கொண்டு வந்திருக்கின்றேன். தங்கள் விருப்பமெப்படியோ?

இ: (பக்கத்திருந்த முனிவரை நோக்கி, குகனுடைய அன்பையும் அறியாமையையுங் குறித்துப் புன்னகை செய்து) அன்புடன் இடப்பட்ட கூழ் தேவாமிர்தத்தைப் பார்க்கினும் இனியதல்லவா?

முனிவர்: ஆம். அரசனே! அதற்கும் ஆட்சேபமுண்டா?

இ: (குகனை நோக்கி) அன்பனே! அத் தேனில் கொஞ்சந் தருகுதி; (குகன் இரு கரங்களாலுங் கொடுக்க அதனை வாங்கி அருந்தி) அப்பா! இந்தத் தேன் நல்லாயிருக்கின்றது; இஃதிருக்க, நாளைக்கு நாங்கள் இந்த ஆற்றைக் கடக்கவேண்டும்; ஆதலால், நீ இன்றைக்கு உன்னுடைய வீட்டிற்கு மீண்டுபோய் நாளை விடியலில் உன் சுற்றத்தவருடன் ஓடங்கொண்டு இங்கு வா.

குக: சுவாமீ! தங்கள் வார்த்தையைத் தட்டுகிறேனென்று என்னைக் கோபிக்க வேண்டாம்; தங்கள் திருக்

கோலத்தின் அழகைக்கண்டு பின் மீண்டு வீட்டிற்குப் போக என் மனம் எழவில்லை, இங்குத்தானே இருந்து தங்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகின்றேன்; அருள் செய்யவேண்டும்.

இ: (இலட்சுமணரையுஞ் சீதையையும் நோக்கி) ஆகா! இவ் வேடுவராசன் எம்மிடத்திற் பாராட்டும் பக்தியை என்னென்று பகருவேன்; (குகனை நோக்கி) அப்பா! உன் விருப்பம் அப்படியாயின், இந்த இரவை எங்களுடன் கழித்து விடிய உன் கிராமத்துக்குச் சென்று ஓடத்தைக் கொண்டுவந்து எங்களை அக்கரையிற் சேர்ப்பாய்.

குக: (நமஸ்கரித்து) மகாபாக்கியம் சுவாமீ! இந்த அடிமை ஒன்று அறிய விரும்புகின்றேன்: எதற்காகத் தாங்கள் நாட்டைவிட்டுக் காட்டிற்கு வந்ததோ?

இல: என தண்ணன் தந்தையினுடைய சத்தியத்தைக் காக்கும் பொருட்டு, சிற்றன்னையாகிய கைகேசியின் விருப்பத்தின்படி, தன் தம்பிக்கு அவ் விராச்சியத்தைக் கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் போகும் மார்க்கத்திலே இங்கு வரலாயினர்.

குக: ஆகா! அப்படியா! ஏதோ நானும் கொஞ்சம் புண்ணியஞ் செய்தமையினாலே, சுவாமியைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். (ஸ்ரீ இராமரை வணங்கி) சுவாமி! நானும் என்னுடைய இனத்தவர்களும் தங்களுக்கு வேண்டிய குற்றேவ லெல்லாஞ் செய்வோம்; தாங்கள் உண்ணுதற்கு வேண்டிய தேனுந் தினைமாவும் உண்டு; வேட்டை யாடுதற்குச் சமீபத்திலே மிருகங்கள் நிறைந்த காடுண்டு; ஸ்நானஞ் செய்வதற்குப் பரிசுத்தமான கங்கையுண்டு; உடுத்தற்கு மிருதுவான புலித்தோல் உண்டு; நித்திரை செய்வதற்கு உந்நதமான பரண் உண்டு; தேவலோகத்திலுள்ள பொருளாயினும் வேண்டுமானால் உடனே போய்க் கொண்டுவருவோம்; என் வேடுவச் சேனையோ தேவர்களையும் வெல்லத்தக்க

வலிமையுள்ளது; ஆதலால், சுவாமீ! எங்களுடைய குடிலிற் சிலகாலந் தங்கியிருந்து ஏழைகளுக்கு அருள் செய்யவேண்டும்; (என்று சொல்லி விழுந்து நமஸ்கரிக்கின்ருன்.)

இ: அன்பனே! உன் பக்தியை மெச்சினேன்; யான் கானகஞ் சென்று அங்குள்ள முனிவர்களைத் தரிசித்தபின் மீண்டு இங்கு வருவேன்; ஆதலால், இப்பொழுது என்னைத் தடை செய்யாதே. இன்றிரவு இங்குத்தானே தங்கி விடிந்தபின் உன் ஊருக்கு மீண்டு போய் ஓடங் கொண்டுவந்து எங்களை அக் கரையிற் கொண்டுபோய்ச்சேர்ப்பதே நீசெய்யவேண்டிய பேருதவி.

குக: சுவாமி கட்டளைப்படியே செய்கின்றேன்.

## இரண்டாங் காட்சி

காலம்:- காலை. இடம்: கங்கையின் மற்றக்கரை.

[ஸ்ரீ ராமர் முதலியோரை ஓடத்தில் ஏற்றிக் குகன் கங்கையின் அக்கரையிற் சேர்க்கின்ருன்.]

இ: அன்பனே! நீ செய்த பேருதவியை நான் ஒரு காலமும் மறவேன்; இப்பொழுது சித்திரகூடத்திற்குச் செல்லும் மார்க்கத்தை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

குக: (வணங்கி) சுவாமி! தங்கள் உத்தரவு கிடைத்தால் நானும் சித்திர கூடத்திற்கு உங்களுடன் வருகின்றேன்; அல்லாமலும் இக் காட்டிலே உள்ள பாதைகள் எனக்கு நல்லாய்த் தெரியும்; வேண்டிய வேண்டிய இடங்களில் தாங்களிருப்பதற்குப் பர்ணசாலைகள் அமைப்பேன்; நொடிப்பொழுதாயினும் தங்களை நீங்காமல் உடன் இருந்துகொண்டு வேண்டிய தொண்டுசெய்வேன்; உணவுக்காக இனிய காய், கனி, கிழங்குகளைக் கொண்டுவந்து கொடுப்பேன்; குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீர் கொண்டுவந்து தருவேன்; அதிக இருளிலும் வழிபிடித்துச் செல்லுவேன்; சத்துருக்கள் வந்தாலும் அவர்களுடன் எதிர்த்துப் போர் செய்து வெல்லுவேன்; துஷ்ட

மிருகங்களைக் கொல்லுவேன்; தாங்கள் அனுமதிதந்தால் ஏழையின் சேனைகளையும் உடன் கூட்டிக்கொண்டு வருவேன்; தங்கள் சித்தம் எப்படியோ?

இ: அப்பா குகனே! நீஎன்மேல் வைத்திருக்கும் அன்பை நான் எப்படிச் சொல்லுவேன்! இன்று தொடக்கம் உன்னையும் என் தம்பிமாரில் ஒருவனாக வைத்துக் கொண்டேன்; இலட்சுமணனை உன் தம்பியாகவும், இச்சானகியை உன் சுற்றத்தவளாகவும் மதித்துக்கொள்; இந்த நாடு முழுவதும் உன்னுடையதே; இது வரையில் நாங்கள் நான்கு சகோதரர்களிருந்தோம்; இன்றைக்கு உன்னுடன் ஐவரானோம்; என்னைப் பிரிந்தமையினாலே உன் தம்பியாகிய பரதன் சதா வருந்திக்கொண்டிருக்கின்றான்; அவனே அயோத்தியிலுள்ள சனங்களைப் பாதுகாக்கின்றான்; இங்குள்ள சனங்களை நீயே பாதுகாக்க வேண்டும்; அவர்களைத் துன்பமடைய விடவொண்ணாது; (குகனைத் தழுவி) தம்பி என் சொல்லைத் தட்டாதே; உன் நாட்டிற்குப்போ, நான் அயோத்திக்கு மீண்டு வரும்பொழுது உன்னிடத்திற்கு வருகின்றேன்.

குக: (வணங்கி எழுந்து அழுதபடியே) சுவாமி! அருளிருக்க வேண்டும்; போய் வருகின்றேன்.

இ: அப்பா வருந்தாதே, எப்பொழுதும் என் மனத்தில் உன் ஞாபக மிருக்கும், சுகமே போய்வா. (குகன் மூவரிடத்திலும் விடை பெற்றுச் செல்கின்றான்; இராமர் முதலிய மூவரும் சித்திரகூடத்தை நோக்கிச் செல்கின்றார்கள்.)

## மூன்றுங் காட்சி

காலம்: நண்பகல், இடம்: சித்திரகூடத்திற்குச் செல்லும் மார்க்கத்தில் பல தடாகங்கள் பூஞ்சோலைகள் செறிந்த ஒரு வனம்.

[ஸ்ரீ ராமர் அவ்வனத்தின் கண்ணுள்ள காட்சிகளைத் தமது தேவிக்குக் காட்டி வர்ணித்துக்கொண்டு செல்கின்றார்; இலட்சுமணர் பின்னே செல்கின்றார்.]

இ: அருந்ததியன்ன பெருந்தகைக் கற்பினுய்! கொண்டலைக் கண்டு மயில்களுக் குண்டான கொண்டாட்டத்தினுல் அவைகள் ஒருங்குகூடி நடிப்பன பாராய்.

சீ: ஆம் பிராணேசா! நன்ரு யிருக்கின்றது. பிராணநாதா! அதோ பாருங்கள் ஒரு மயில் எங்களைக் கண்டவுடனே ஆடுவதை விட்டுத் தன் கலாபத்தைக் குவித்துக் கொண்டு பயந்து ஒரு புறத்தேபோய் நிற்கின்றது.

இ: ஆம் கண்மணி! அக் கலாபமஞ்ஞை உன் சாயலைக் கண்டு நாணங்கொண்டு நடனத்தை விடுத்து ஒரு புறத்தே போய் ஒதுங்கி நிற்கின்றது.

சீ: பிராணேசா! அப்படியல்ல, தங்களுடைய திருமேனியின் நீல வர்ணத்தைக்கண்டு, அதனுல் நாணங் கொண்டு, மனம்விண்டு, அப்புறம்போய் ஒதுங்கியதென்று நான் எண்ணுகின்றேன்.

இ: கண்ணே! நல்லா யிருக்கின்றது உன் வார்த்தை.

சீ: நாதா! ஏன் இம்மான் கூட்டங்களெல்லாம் எங்களைக்கண்டு வெருண்டோடுகின்றன? சொல்லுங்கள்.

இ: கஞ்சமலரிற் சஞ்சரிக்கும் ஹம்ஸமும் அஞ்சும் நடையாளே! மானினம் ஏன் ஓடுகின்றன என்றனை; உன் விழிகளுக்குப் பயந்தே.

சீ: பிராணேசா! என்ன பரிகாசஞ் செய்கின்றீர்கள்; நாதா, அதோ பாருங்கள், தடாகக் கரையிலே பொன்போன்ற பூங்கொத்துக்களையும் நீண்ட காய்களையும் பொறுக்க முடியாமல், கொம்புகள் ஒசியப்பெற்றதாய் ஒருமரம் நிற்கின்றது; சில கொம்பர்கள் பூங்கொத்துக்களுடன் தடாகத்தி லுள்ள நீரிலே படிந்திருக்கின்றன, அதென்ன சொல்லுங்கள்?

இ: விண்ணுடருந் துதிக்கும் பெண்ணுரமுதே! அது கொன்றை மரமாகும்; உன்னுடைய இடையைப்

போல் நடக்க முடியாது நாணமடைந்து தடாகத்தில் மூழ்கி மறைய நினைத்தலை நிகர்க்கும் அது நீரின்கண்ணே படிந்திருக்குந் தன்மை.

சீ: (புன்னகை செய்து) பிராணேசா! இத் தடாகத்தின் சமீபத்திற்சென்று இதன் சிறப்பைப் பார்ப்போமா?

இ: ஆம் கண்ணே! வருவாய் செல்லுவோம்.

(தடாகத்தை நோக்கிச் செல்கின்றூர்கள்)

சீ: பிராணநாதா! பாருங்கள், இத் தாமரைப் பூக்கள் எவ்வளவு அழகா யிருக்கின்றன.

இ: காதளவோடிய கண்ணுளே! உனது வதனத்திற்கு அவைகள் உவமானமாக விரும்பி, சாட்சாத் ஈசனை நோக்கி நீரின்கண்ணே நின்று அருந்தவஞ் செய்தலை நிகர்க்கின்ற தல்லவா இத் தடாகத்திலே தாமரை மலர்கள் அலர்ந்திருக்குந் தன்மை.

சீ: ஏன் பிராணேசா! தங்களுடைய கண்களுக்கும் பாதங்களுக்கும் ஒப்பாக விரும்பித் தவஞ் செய்கின்றன என்று சொன்னலென்ன?

இ: கிளிமொழியாளே! நன்கு கூறினை; சமீபத்திலே யிருக்கின்ற தேரைகள் இக் கமல மலர்களிலுள்ள தேனை யுண்ணுது பார்த்துக்கொண்டிருக்க, சோலையின் கண்ணே சஞ்சரிக்கும் வண்டுகள் அக் கமல மலரை வந்து அண்டித் தேனை மொண்டு உண்டிருக்குந் தன்மை என் ஆருயிரே, எதை நிகர்க் கின்றது?

சீ: எனக்குத் தெரியவில்லை, பிராணேசா! சொல்லுங்கள்.

இ: பஞ்சினும் மெல்லடிப் பாவாய்! சொல்லுவேன் கேள்; தம் பிதா வித்துவானு யிருப்பவும், அவனது பிள்ளைகள் அவனிடத்தே கல்வி பயிலாது வீணே காலங் கழிக்க, அந்நியருடைய பிள்ளைகள் அவ் வித்துவானிடத்தில் வந்து கல்வியாகிய தேனைக் கிரகித்துக்கொண்டு போவதை நிகர்க்கின்ற தல்லவா?

சீ: ஆம், பிராணேசா! நன்ருகச் சொன்னீர்கள்,

(பாரத்துவாச முனிவர் சிறிது தூரத்தில் வருகின்ருர்.)

இல: அண்ணு! அதோ யாரோ ஒரு தபோதனர் விரைவாக வருகின்ருர், எங்களைக் காணுதற்குப்போலும்.

இ: (உற்று நோக்கி) ஆம், தம்பி! எம்மிடத்திற்ருன் வருகின்ருர்; அத் தபோதனரை நீ யாரென அறியாயா? அவர்தாம் தவத்தால் மேம்பட்ட பரத்துவாச முனிவர்; எமது தந்தையார் இம் மகானிடத்தில் மிகவும் பத்தி பாராட்டுவார்; வாருங்கள் நாம் அவரை எதிர்கொள்வோம்; (மூவரும் முனிவருக்குச் சமீபமாகச் சென்று) சுவாமீ! நமஸ்காரம்.

பரத்துவாசர்: புதல்வர்காள்! ஆசீர்வாதம், (சீதையை நோக்கி) அம்மா, ஜானகி! க்ஷேமமுண்டாகக் கடவது; (ஸ்ரீராமரை நோக்கி) அப்பா! ஸ்ரீராமா! உங்கள் வரவை யறிந்துதான் யான் இங்கே வந்தேன்; இஃதென்ன தவவேடம்?

இ: சுவாமீ! ஏதோ இத் தவ வேடத்தைப் பூணுதற்கு ஜென்மாந்திரத்தில் அற்ப புண்ணியஞ் செய்திருந்தேன் போலும்.

பரத்: சரி, காலமாகின்றது, காலதாமசம் பண்ணக் கூடாது; சமீபத்தி லிருக்கின்றது எனது ஆச்சிரமம்; வாருங்கள், நாங்கள் அங்கே சென்றபின் எல்லா விஷயத்தையும் சாவகாசமாய்ப் பேசிக்கொள்வோம்.

(முனிவர் பின்னே மூவரும் போகின்ருர்கள்)

## நாலாங் காட்சி

காலம்: காலை. இடம்: பாரத்துவாச முனிவர் ஆச்சிரமம்.

[முனிவர் புலித்தோ லாசனத்திலும் ஸ்ரீராமர் பிறிதோ ராசனத்திலும் உட்கார்ந்துகொண்டு ஒருவரோ டொருவர் சம்பாஷிக்கிருர்கள். இலட்சுமணரும் சீதையும் ஒரு புறமாக நிற்கின்ருர்கள்.]

பரத்: அப்பா ஸ்ரீ ராமா! தந்தை வாக்கிய பரிபாலனஞ் செய்யவேண்டு மென்னும் கருத்துடன் நீ இக்

கானகம் வந்தேனெனக் கூறுகின்றனையே; உன்னைப் பிரிந்து உன் பிதா எள்ளளவு நேரமும் உயிர்வாழ மாட்டாரே; எனக்கல்லவா தெரியும் என்னரிய நண்பராகிய சக்கரவர்த்தி உன்மீது வைத்திருக்கும் ஆசை.

இ: சுவாமீ! என்மீது எவ்வளவு அன்புதானிருந்தாலும், சத்தியத்தைக் காத்தலல்லவா உத்தமருடைய கடனும்; சிற்றன்னைக்கு அவர் ஈந்த வரத்தை இல்லையென்னலாமா? அல்லாமலும், தவமென்னும் மேலான செல்வத்தை யான் பெறும்பொழுது என் பிதா அதை எண்ணி மகிழ்வதன்றி, வருந்தலாமா? எல்லாமறிந்த தங்களுக்கு யானெடுத்துச் சொல்வதென்ன?

பரத்: இராமச்சந்திரா! உன்னைக் கண்ட மாத்திரத்தே என்னரிய நண்பராகிய சக்கரவர்த்தியைக் கண்டாற்போல் ஆனந்தங் கொண்டேன்; இந்த யௌவன பருவத்திற்றானே உனக்கு இத்துணை ஞானம் ஏற்பட்டிருக்கின்றது; ஆனால் அது ஆச்சரியமன்று; ஏனெனில் உன்னை நீ அறியாய்; அப்பா! திருமகளை நிகர்த்த இச் சானகியையும் உடன் அழைத்துக் கொண்டு துஷ்ட மிருகங்களும் இராக்கதரும் சஞ்சரிக்கின்ற கானகத்தின் கண்ணே அதிக தூரம்போவது புத்தியாகாது; யான் வசிக்கும் இவ்விடமோ சாமானியமான இடமல்ல; இது கங்கையும் சரயுவும் யமுனையும் ஒருங்கு சங்கமிக்கும் புண்ணிய ஸ்தானமாகையால், இதற்குத் திருவேணி சங்கமம் என்னுங் காரணப் பெயருண்டு; சமீபத்திலுள்ள இத் தீர்த்தமோ அரிபிரமேந்திராதி தேவர்களாலும் விரும்பப் படுவது; இவ் விசேடத்தை நோக்கியே யான் இங்கு உறைகின்றேன்; ஆதலால் நீவிரும் இவ்வாச்சிரமத்தின் கண்ணே இருந்துகொண்டு அரிய தவத்தைச் செய்யுங்கள்.

இ: சுவாமி! தாங்கள் கூறியது முழுவதும் உண்மையே! ஆனால் இந்த இடம் அயோத்தியினின்றும் அதிகதூர

மல்ல; நாங்கள் இங்கே வாசஞ் செய்வதை அயோத்திமா நகரிலுள்ளார் அறிய நேர்ந்தால், எம்மை மீண்டும் அயோத்திக்கு வரும்படி வேண்டிக் கொள்வார்கள்; ஆதலால் சுவாமீ! என்னை மன்னிக்க வேண்டும்; நாங்கள் இன்னுஞ் சிறிது தூரத்திற்போய் வசித்தலே புத்தியாகும்.

பரத்: (தனக்குள்) ஆம் தேவர்களும் முனிவர்களும் செய்த தவம் பொய்க்காது; என்றல் இவர்கள் செலவைத் தடுக்க முடியாது; (ஸ்ரீராமரை நோக்கி) அப்பா, இராமா! அப்படியா உன் அபிப்பிராயம்; சரி இப்பொழுது எவ்விடம் நோக்கிச் செல்ல அபேட்சிக்கின்ருய்?

இ: சுவாமி! சித்திரகூடஞ் செல்ல மெத்தவுஞ் சித்தங் கொண்டேன்; அதற்கு இன்னும் அதிக தூரஞ் செல்ல வேண்டுமா?

பரத்: அதிக தூரமில்லை; இன்னும் பத்துக் காதவழி தூரந்தா னிருக்கின்றது; அச் சித்திரகூடமும் மிக விசேட முடையது.

இ: சுவாமீ! நாங்கள் போய் வருதற்கு விடையளிக்க வேண்டும்; (வணங்குகின்ருர்கள்.)

பரத்: ஆம் சுகமே சென்று வாருங்கள்.

(மூவரும் போகின்ருர்கள்)

## ஐந்தாங் காட்சி

காலம்: மாலை. இடம்: சித்திரகூடத்தில் இலட்சுமணாற் புதிதாக அமைக்கப்பெற்ற பர்ணசாலை.

இல: அண்ணு! இதோ புதிதாக ஒரு பர்ணசாலை அமைத்திருக்கின்றேன்; தாங்களும் சீதாபிராட்டியும் வசித்தற்கு.

இ: (சீதையுடன் சமீபத்திற் சென்று பர்ணசாலையைப் பார்த்து அற்புதமடைந்து) ஆகா! நன்ரு யிருக்கின்

றது தம்பி! இராசகுமாரர்களுக்கு இத் தொழில் மெத்தத் தூரமாகுமே; நீ இதை அமைத்தற்கு எங்கு கற்றனை?

இல: அண்ணா! வறுமையுஞ் செல்வமும் ஒருவன் பங்கல்ல! வறியவர் செல்வராவர், செல்வர்கள் வறியராவர்; இது தங்களுக்கே தெரியும்; வறுமை வந்தகாலத்தும் வாழத்தக்கதாகப் பயின்று வந்தேன்.

இ: ஆகா! அப்படியா தம்பி! என்னாலல்லவா நீ இவ்வித மான துன்பங்களை யெல்லாம் அனுபவிக்கின்றாய்.

இல: அண்ணா! துன்பம் அயோத்தியா புரியிலேயே ஆரம்பித்து விட்டது; அதை எண்ணி யெண்ணி வருந்துவதால் என்ன பலன்?

இ: தம்பி! இப்பொழுதுதான் எங்களுக்கு வந்த துன்ப மென்ன? அரச வாழ்க்கையால் அடையும் பொருட் செல்வத்துக்கே அழிவுண்டு; அருந்தவமாகிய இச் செல்வத்திற்கு ஒரு காலத்தும் அழிவில்லை; அரசர் களினும் முனிவர் மேம்பட்டவரல்லவா? ஆதலால் இப் பொழுது துன்பம் வந்ததென் றெண்ணி நீ சிறிதும் வருந் தாதே; துன்பமும் இன்பமெனக் கொள்ளுதலே பெரி யோர் செயல்; (எனக்கூறி ஸ்ரீராமர் சீதாபிராட்டியுடன் பர்ணசாலையின்கண்ணே அமர, இலக்குமணர் காவல் புரிந்துகொண்டு வெளியே நிற்கின்றார்).

பரீக்ஷை வினாக்கள்: 1. குகன் யார்? 2. அவனுக்கும் இராமபிரா னுக்கும் நடந்த சம்பாஷணையைத் தொகுத்துக் கூறுக. 3. குகன் இராம ருக்குக் கையுறையாகக் கொடுத்த பொருள்கள் எவை? "உன்னைப் பிரிந்து உன் பிதா எவ்வளவு நேரமும் உயிர் வாழமாட்டாரே" என்று பாரத்துவாச முனிவர் சொன்னபோது, அதற்கு இராமபிரான் சொன்ன சமாதான மென்ன? 5. "துன்பம் அயோத்தியாபுரியிலேயே ஆரம்பித்துவிட்டது" என இலக்குமணர் சொன்னபோது, இராமபிரான் என்ன சமாதானஞ் சொன் னார்?

**இலக்கணம்:**

**ஏழாம் வேற்றுமை:** ஏழாம் வேற்றுமையின் உருபுகள கண், இல், உள், இடம் முதலியன; இவை வினையையும் வினையொடு பொருந்தும் பெயரையுங் கொள்ளும். இவ்வுருபுகள், தம்மையேற்ற பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்ப் பொருளையும், வருமொழிப் பொருளாகிய தற்கிழமைப்பொருளுக்காயினும் பிறிதின்கிழமைப் பொருளுக்காயினும், இடப்பொருளாக வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட இடப்பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்.

**உதாரணம்:**

| | | |
|---|---|---|
| மணியின்கண் ணிருக்கின்றது ஒளி | ...தற்கிழமை | பொருள் |
| பனையின்கண் வாழ்கின்றது அன்றில் | ...பிறிதின்கிழமை | இடமாயிற்று |
| ஊரின்க ணிருக்கும் இல்லம் | ...தற்கிழமை | இடம்இடமாயிற்று |
| ஆகாயத்திற் பறக்கிறது பருந்து | ...பிறிதின்கிழமை | |
| நாளின்கண் நாழிகை யுள்ளது | ...தற்கிழமை | காலம்இடமாயிற்று |
| வேனிற்கட் பாதிரி பூக்கும் | ...பிறிதின்கிழமை | |
| கையின்க ணுள்ளது விரல் | ...தற்கிழமை | சினையிடமாயிற்று |
| விரலின்கண் விளங்குகிறது மோதிரம் | ...பிறிதின்கிழமை | |
| கறுப்பின்கண் மிக்குள்ளது அழகு | ...தற்கிழமை | குணம்இடமாயிற்று |
| இளமையின்கண்வாய்த்ததுசெல்வம் | ...பிறிதின்கிழமை | |
| ஆடற்கணுள்ளது சதி | ...தற்கிழமை | தொழில்இடமாயிற்று |
| ஆடற்கட் பாடப்பட்டது பாட்டு | ...பிறிதின்கிழமை | |

மற்றைய உருபுகளும் இப்படியே வரும்.

**சூத்திரம்:** "ஏழனுருபு கண்ணாதியாகும்
பொருள்முத லாறும் ஓரிருகிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொரு ளென்க"

ஏழாம்வேற்றுமை யுருபுகள் மேலே சொல்லப்பட்டனவல்லாமல், இன்னும் பலவுள:

**உதாரணம்:**

| | | |
|---|---|---|
| கால்—ஊர்க்கால் | வலம்—கைவலம் | தேம்—கோட்டாய்தேத்து |
| கடை—வேலின்கடை | இடம்—என்னிடம் | உழை—அவனுழை |
| இடை—நல்லாரிடை | மேல்—உன்மேல் | வழி—நிழல்வழி |
| தலை வலைத்தலை | கீழ் நிழற்கீழ் | உழி – உறையுழி |
| வாய்—கடல்வாய் | புடை—எயிற்புடை | உளி—காவுளி |
| திசை—தேர்த்திசை | முதல்—சான்முதல் | உள்—குவட்டுள் |

வயின்—அவர்வயின் பின்—காதலிபின் அகம்—பல்லாரகத்து
முன்—கற்றூர்முன் பாடு—எம்பாடு புறம்—உயிர்ப்புறத்து
சார்—காட்டுச்சார் அளே—கல்லளே இல்—ஊரில்

[உதாரணச் சொல் விளக்கம்: சுரன் - பாலேநிலம்; கோடாய் - செவிலித்தாய்]

முற்சூத்திரத்தில் "ஆதி" என்றதனுல் பக்கல், பாங்கர், மாடு, முகம், பால், இன் முதலானவைகளும் உருபாய் வரும்.

சூத்திரம் (ஏழாம்வேற்றுமை யுருபுகள்):

"கண் கால் கடை இடை தலே வாய் திசை வயின்
முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்
பின் பாடு அளே தேம் உழை வழி உழி உளி
உண் அகம் புறம் இல் இடப் பொரு ளுருபே".

வினு: ஆரும்வேற்றுமை உருபுகள் எவை? அவற்றுள் அஃறிணே ஒருமைப் பெயரை ஏற்கும் உருபுகள் எவை? அஃறிணேப் பன்மைப் பெயரை ஏற்கும் உருபு எது? அவ்வுருபுகளின் பொருளென்ன? தற்கிழமைப்பொருள் பிறிதின்கிழமைப்பொருள்களே விளக்கி உதாரணங்கள் கூறு. ஆரும்வேற்றுமைக்காகிய சூத்திரத்தைக் கூறுக.

---

# 9. பற்றுக்கள்

[இது; பற்றுக்களின் ஆக்கம், சூழஉப்பற்று, பொருட்பற்று, கல்விப் பற்று, தற்பற்று, அறப்பற்று முதலியவற்றின் பேதங்களே எடுத்துக் காட்டு வாயிலாக இனிது விளக்குவதாம். பேராசிரியர் சு. சிவ பாதசுந்தரம்பிள்ளே யவர்கள் எழுதிய அகநூலிலிருந்து அநுவதித் தது ]

## பற்றுக்களின் ஆக்கம்

ஒரு தேவை ஓரினத்துப் பொருள்கள் யாவற்றிலுஞ் சென்று அவற்றுட் சிலவற்றிலே உறைத்து நின்று பற்றுக்களாகுமென்று இரண்டாம் அதிகாரத்திற் கூறப்பட்டது. தேவைகள் எவ்வாறு தனிப்பொருள்களில் உறைத்து நிற்கின்றன என்பதும், அவைகள் அவ்வாறு நிலேக்கும்போது உடனிகழ்வன எவை யென்பதும் இவ்வதிகாரத்தில் ஆராயப்படும்.

பற்றுக்கள் உண்டாகும் வகையைச் சில உதாரணங்களால் விளக்குவாம்: பற்றுக்களுள் நட்பும் பகையும் * யாவரும் நன்கறிந்தவை. இவைகள் பள்ளிக்கூடமாணாக்கருக்குள் உண்டாகும் வழியை ஆராய்வாம். பள்ளிக்கூடத்துக்குப் போகும் ஒரு பையன் முதலிலே தன் வகுப்புப் பிள்ளைகளோடு கூடுகிறான். அவர்களுள்ளும் எவன் ஒத்த குணமுடையவனாய் இருக்கிறானோ அவனோடு இவன் அதிகமாகக் கூடுகிறான். ஒத்த குணமுடைமையால், அவனுடைய பேச்சுங் கருத்துஞ் செயலும் இவனுக்கு இனிமையா யிருக்கும். இதனாலே ஒருவனை ஒருவன் காணுதற்குத் தாகங் கொள்ளுவான். பின்பு அவர்கள் சந்திக்கும்போது தாகம் நீங்கிப் பெருமகிழ்ச்சியடைந்து இன்புறுவார்கள்.

இப்படிச் சில காலஞ்செல்ல, இவர்களிடத்தே நட்பு என்னும் பற்று உண்டாகும். கூட்டத்தேவை உறைப்பாய் நிலைத்தலால் நட்பு உண்டாகின்றது. எவர்களிலும் செல்லும் இயல்புடையதாகிய கூட்டத்தேவை ஒருவனிலே நிலைத்தலாலே, இது பற்று எனப்படுகின்றது. இவர்கள் பிரிந்திருக்கும்போது தோன்றுந் தனிமைச் சுவை † இப்பற்றுக்குத் துணைக் காரணமாகும். இந்தப் பற்றினாலே ஒருவனுடைய நய நட்டங்களை மற்றவன் தனக்கு வந்தவைகளாகப் பாவித்து வருவான். அவனுக்கு இடர் வரும்போது, இவன் அவனைக் காக்க முயலுவான். அவனோடு

---

* மனம் எந்தப் பொருளைப் பற்றுகின்றதோ அது பற்றுப்பொருளாகும். மனம் நண்பனிலே செல்வதுடன் நில்லாது பகைவனிலுஞ் செல்லுமாதலால் விருப்புவெறுப்பு ஆகிய இரண்டும் பற்றுக்களாம். கடவுளைப் 'பற்றற்றான்' என்னு மிடத்துப் பற்று என்னுஞ் சொல் இவ்விரண்டினையுங் குறித்தலைக் காண்க.

† சுவை-மெய்ப்பாடு. தனிமைச்சுவையாவது ஒருவன் தனிமையாயிருக்கும் போதுயாரோடாவது கூடவேண்டுமென்றவிருப்பத்தோடு உண்டாகுஞ்சுவை

யாராவது சண்டைக்குப் போனல், இவன் அவனுக்குத் துணையாகச் சண்டைக்குப் போவான்; அவன் வெறுப்பவர்களை இவனும் வெறுப்பான். அவன் நேசிக்கிறவர்களை இவனும் நேசிப்பான். இனி, அந்த வகுப்பிலுள்ள வேருெருவனுடைய பேச்சும் நடையும் இவனுக்கு அருவருப்பாயிருக்கும். அவனுடைய செயல்கள் இவனுக்கு ஒவ்வாமையினுலே அவைகளைக் காணக்காண இவனுக்கு அவனிலே வெறுப்புண்டாகும். இந்த வெறுப்பு முற்றிவர, ஒருவரை யொருவர் வையவும் நேரும். இதனுலே கோபச்சுவை அடிக்கடி நிகழும். இப்படி நடந்துவர, அவர்களுக்கிடையிலே பகை யுண்டாகும். ஆகவே, இவன் அருவருக்க வேண்டிய எப்பொருளிலுஞ் செல்வதாகிய அருவருப்பு அவனிலே விசேஷமாக நிலைத்துப் பகையாகின்றது. இவ் வுதாரணங்களி லிருந்து பல பொருள்களிற் செல்லும் ஊக்கம் ஒரு பொருளில் விசேஷமாகத் தொழிற்பட்டு நிலைத்தலாலே, பற்று உண்டாகிறதென்பது பெறப்படுகின்றது. ஊக்கம் பல பொருள்களிற் செல்லுதலாலும், பற்று ஒரு பொருளில் மாத்திரம் செல்லுதலாலும், ஒரு பொருளிற் செல்லும் பற்று அப்பொருளிற் செல்லும் ஊக்கத்திலும் வலிமையிற் கூடியதாய் இருக்கும். பற்றின் வலிமைக்கு வேருெரு காரணம், அது உண்டாகும்போது உடனிகழ்வதாகிய சுவை. நண்பனைச் சந்திக்கத் தேவைப்படும் போதெல்லாம், தனிமைச் சுவை நிகழும். அவனைச் சந்திக்கும்போது அத் தாகம் நீங்கிக் கூட்டச் சுவை யுண்டாகும். பகைவனைச் சந்திக்கும் போது கோபச்சுவை யுண்டாகும். சுவைகள் மனத்தை அதிகமாய்த் தாக்குதலினுலே, அவை சேர்ந்துவரும் பற்றுக்கள் மனத்திலே வலிகூர்ந்துநிற்கும். அன்றியும், ஒரு பற்றினேடு பல ஊக்கங்கள் சேர்ந்து தொழிற்படும். நண்பனிலே கொண்ட பற்று காப்பூக்கத்தைச் செலுத்தி அவனை இடர்களி லிருந்து காக்குமாறு ஏவும்; போரூக்கத்தை ஏவி அவனேடு போர் செய்பவரோடு

போர் செய்விக்கும்; அருவருப் பூக்கத்தை ஏவி அவன் அருவருப்பவற்றை அருவருக்கச் செய்யும். பற்றுக்களோடு அவ்வப் பற்றுக்களுக்குரிய சுவையே யன்றிப் பிற சுவைகளும் விரவும். பற்றுள்ளவர்கள் பிழைசெய்யில், சில சமயங்களிலே கோபமும், வேறு சமயங்களிலே துக்கமும், அவர்களுக்கு நயம்வரில் மகிழ்ச்சியும், இடர்வரில் இரக்கமும், அது தீரும்வரையும் துக்கமும் நிகழும்.

ஆகவே, பற்றானது ஓர் ஊக்கத்தின் தொழிலினல் இடையிட்டுத் தோன்றி, உடனிகழுஞ் சுவையினல் வன்மையேறி, பிற ஊக்கங்களின் துணையைப் பெற்று, பிறசுவைகளும் நிகழ்தற்கிடமாகின்றது.

சுவையின்றி வரும் பற்று அற்ப வலியுடையதாய், பிற ஊக்கங்களைத் துணை கொள்ள மாட்டாததாய், நிலையற்றதாய் இருக்கும். கடவுளை வழிபடும் போது பத்திச்சுவை தோன்றாதாயின் அவ் வழிபாட்டிலிருந்து வரும் கடவுட்பற்று வலியற்றதாயிருக்கும். வியப்பு முதலிய மென் சுவைகளினல் வரும் பற்றுக்களின் வலியும் அற்பமானது. ஒருவரைக் கல்விமான் அல்லது நல்லொழுக்கமுடையவரென்று கண்டு அவரிலே கொள்ளும் மதிப்பினல் மாத்திரம் ஒருவன் பற்று வைத்தால், அந்தப் பற்று வலி குறைந்ததாய் இருக்கும். அவருக்கு யாதாயினும் இடர் வரும்போது அவன் அதைத் தீர்க்க முயலுவானயின், அம் முயற்சிக்குச் சிறு தடைகள் வந்தால் அத் தடைகளை நீக்க முயலுதற்கு மனம் செல்லாமலும் விடும். அவர் இவனுக்கு ஏதாயினும் உபகாரஞ் செய்தலினலே உண்டான பற்றாயின், அது நன்றிச் சுவையோடு கூடியதாதலால் வலியதாயிருக்கும். இவனுக்கு உபகாரஞ் செய்யாவிட்டாலும், இவனுடைய தேசத்தவர்களுக்கு அல்லது சாதியாருக்குப் பேருபகாரஞ் செய்துவந்த ஒருவரிலுள்ள பற்று சிலரில் இன்னும்வலி கூடியதாயிருக்கும். சுவை வன்மையைப் பெற்ற பற்று நெடு நாளைக்கு நிலைக்கும்.

சுவைகளுக்கும் பற்றுக்களுக்குமுள்ள ஒரு வேற்றுமை பற்றுக்கள் நிலைத்தலும் சுவைகள் நேரத்துக்கு நேரம் தோன்றி மறைதலுமாம்.

மட்டான வலி யுடைய பற்று நெடு நாளாகத் தொழிற்படா திருப்பின், அது வலி குறைந்து காலகதியில் மறைந்து விடும். புலாலுண்போரும் கட்குடிப்போரும் அவற்றை யுண்ணுதாரோடு நெடுங்காலம் வசித்தலினலே அவற்றிலுள்ள பற்றைக் கைவிட்டு அவற்றை மறந்து விடுகிறார்கள். பற்று வலிதாயின், அது தொழிற்படாத காலமெல்லாம் வலியேறி யேறிச் சந்தர்ப்பம் வாய்க்குங்கால் மித மிஞ்சித் தொழில் செய்யும். உற்ற சிநேகிதர்கள் ஒருவரை யொருவர் நெடுநாட் காணுமலிருந்து காணும்போது, அவர்களுடைய அன்பும் இன்பும் பொங்கி வழிகின்றன.

குழூஉப்பற்று

ஒரு மனிதனிலே பற்றுண்டாவதுபோல, ஒரு குழூஉவினருடைய கொள்கைகள் அல்லது முயற்சிகள் ஒருவனுக்குப் பிரீதியானவைகளாயின், அக் குழூஉவிலே அவனுக்குப் பற்றுண்டாகும். ஓர் ஊரிலே அரசியற் கட்சிகள் இரண்டிருந்தால், ஒருவன் தன் கருத்துக்கிசைந்த கட்சியிலே பற்றுவைத்து அக் கட்சிக்குத் துணை செய்வான். தொழிலாளிகள் தொழிலாளர் சங்கத்திலும், முதலாளிகள் முதலாளிமார் சங்கத்திலும் பற்றுவைப்பர். இரக்கமுள்ளவன் தேச சேவைச் சங்கத்திலும், கல்விப் பற்றுள்ளவன் பள்ளிக்கூடங்களிலும் கல்விச் சங்கங்களிலும் பற்று வைப்பான்.

பொருட்பற்று

பற்று மனிதனிலே யன்றிப் பொருள்களிலும் உண்டாகும். ஒருவர் நெடுங்காலமாகப் பாராயணஞ் செய்து வந்த தோத்திரப் புத்தகம் ஒன்று சில ஒற்றைகள் தவறி

யும் வேறுசில மடிந்து பழுதுபட்டு மிருந்தாலும், அதைக் கைவிட்டுப் புதுப் புத்தகம் வாங்க அவருக்கு மனம் வராது. ஏனெனில், அந்தப் புத்தகத்தை யெடுக்கும்போதெல்லாம் கடவுளிலே கொண்ட பத்திச்சுவை தோன்றிவர அதனாலே அந்தப் புத்தகத்திலே அவருக்குப் பற்றுண்டானமையினாலாம். ஓர் அரிய நண்பன் அதைக் கேட்டாலும் அவர் அதைக் கைவிடார். இப்படியே, நாங்கள் நெடுங்காலம் உபயோகித்து வந்த பொருள்களிலும் குடியிருந்த வீடு முதலியவற்றிலும் பற்றுண்டாகின்றது. ஒருவர்மீது வைத்த பற்று அவரைச் சேர்ந்தவர்களிலும் அவருடைய பொருள்களிலும் பிற காரணமின்றிச் செல்லும். ஒரு நண்பனிலுள்ள பற்று அவனுடைய தாய் தந்தையரிடத்துஞ் செல்லும். அவனுடைய பகைவர்களுக்கு இவனும் பகைவனாவான். ஒரு பகைவனிலுள்ள வெறுப்பு அவனுடைய சுற்ற மித்திரர்களிலுஞ் செல்லும். பிதாவிலுள்ள பற்றானது அவர் உப்யோகித்த எழுத்தாணி, கண்ணாடி, மிதிதடி முதலிய பொருள்களிற் சென்று அவைகளைப் பெருமை பாராட்டிச் சாவதானமாக வைத்தற்கு ஏதுவாகும். தொடர்பினால் வரும் இவ்வகைப் பற்றுக்கள் வலிகுறைந்தவை. இப்படியான பற்றுக்களிற் சில எங்களை யறியாமலே எங்களிடத்திருக்கும்; அப்பற்றுப் பொருள்களுக்கு இடர்வரும்போது அந்தப் பற்று வெளியாகத் தோன்றும். எனது நண்பனுடைய நண்பனோடு நான் ஒரு காலமும் உரையாடாம விருந்தாலும், அவனை யாராவது இகழ்ந்தால் எனக்குக் கோபமுண்டாகும். இதனால் அவனில் வைத்தபற்றை நான் அறியலாகும்.

கல்விப் பற்று

கல்விப்பற்று ஆராய்வூக்கத்தின் தொழிற்பாட்டினால் உண்டாவது. புதிதாகக் காணும் ஒன்றை ஆராயும் ஆசை இவ்வூக்கத்தால் வருவது. கல்வியாற் பெறப்படும் அறிவு

புதியதாதலால், கல்விப்பற்றை உண்டாக்குதற்கு ஆராய்வூக்கம் ஒன்றே போதியது. ஆசிரியர், மாணாக்கரது ஆராய்வூக்கத்தை எழுப்பி விடுவாரானால், மாணாக்கர் கல்விகற்க ஆசைப்படுவர். அவர்க ளிடத்தே அந்த ஆசை உண்டானதும், அவர்களுடைய ஆற்றலுக்குத் தக்க வேலையை அவர்களுக்குக் கொடுத்துக் கற்றற்கு வேண்டிய துணையையும் ஆசிரியர் செய்வாராயின், மாணாக்கருக்குக் கல்வியிலே பற்று உண்டாகும். கல்விப் பற்றுள்ளவர்கள் ஒரு விதமான வலாத்காரமு மின்றிக் கற்பார்கள். படிப்பு அவர்களுக்கு ஓர் இனிய பொழுது போக்காகும்.

ஒரு மாணாக்கன் கற்குங் கலைகளின் வகையும் அளவும் அவனுடைய ஆற்றலுக்கு உட்பட்டனவாதல் வேண்டும். அவை ஆற்றலைக் கடந்தவைகளாயின், அவன் அவற்றைச் சுமக்கமாட்டாதவனாய்க் கள்வப்படவுங் கூடும். ஒவ்வொருவருடைய ஆற்றலுஞ் சிற்சில கலைகளுக்கு வாய்ப்பானதா யிருக்கும். அக் கலைகள் அவர்களுக்கு மிகவும் இரசிக்கும். அதனாலே வேறு சில கலைகளிலே பற்றுக் குறையும். இயல்பாகப் பற்றுச் செல்லாத கலைகள் ஒரு தொழிலைப் பெறுதற்குத் துணையாகுமாயின், அந்தத் தொழிலிலே யுள்ள பற்றினால் அந்தக் கலைகளிலே பற்றுண்டாகும். அந்தக் கலைகளிலே கீர்த்தி வரத்தக்கதாயின், கீர்த்தியிலுள்ள பற்றினால் அவற்றிலே பற்றுண்டாகும். அல்லது, அந்தக் கலைகளைப் படிப்பிக்கும் ஆசிரியரிலே பற்றுண்டாயின் அதனாலே அவற்றிலே பற்றுண்டாகும். இவ்வாறு சில கலைகளிலே வரும்பற்று ஆராய்வூக்கத்தி லிருந்து தோன்றாமற், பிறவூக்கங்களிலிருந்து தோன்றும். இந்த ஊக்கங்களை ஆராய்ந் தறிந்து இவைகளை மாணாக்கரில் எழுப்பிப் † படிப்பிலே பற்றை

† இரசிக்காத கலைகளைக் கற்க மனத்தைச் செலுத்துதற்கு அகங்கார ஆட்சி அதிகமாக வேண்டப்படும். பிற்கால சீவியத் தொழிலிலும் இரசிக்காத வேலைகள் வருதலுண்டு. இவற்றைச் செய்தற்கும் அகங்கார வன்மை வேண்டும்.

வருவித்தல் ஆசிரியரது கடனாகும். கல்வியானது அறிதல், செய்தல், நயத்தல் என மூவகைப்படும். காண்டல் கருதல் உரை ஆகிய இவற்றால் அறிவைப் பெறுதல் அறிதலாகும். ஆடல் பாடல்களையும் வரைதல் சித்திரித்தல் முதலிய கைத்தொழில்களையும் பயிலுதல் செய்தற் கல்வியாம். சங்கீதம் சித்திரம் இலக்கியம் ஆகிய இவற்றின் இரசங்களைக் காணுதல் நயத்தலாம். இம்மூவகையிலும் செல்லும் பற்றே பூரண கல்விப் பற்றாகும்.

**தற்பற்று**

பற்றுக்களுள்ளே வன்மையாற் கூடியது ஒருவன் தன் மீது கொண்ட பற்று. அது தற்பற்றெனப்படும். தற்பற்றானது தற் பெருமை யென்றும் தன் மதிப்பென்றும் இருகூறாகும். இவற்றுள், தற் பெருமையாவது ஒருவன் பிறரைப் பொருட்படுத்தாமல் தன்னைப் பெரும் பொருளாகக் கொள்ளுதல்; இதுவே மனிதர் செய்யும் பெரும் பொல்லாங்குகளுக்கு வித்தாயுள்ளது. இது மதியை மயக்கி, விதியை விலக்கென்றும் விலக்கை விதியென்றும் மாற்றிக் காட்டும்; 'தற்பெருமையுள்ளவன் தன்னிலும் மேலானவர்களைத் தாழ்ந்தவர்களென்று எண்ணுவதுமல்லாமல், தனக்கொரு நியாயமும் பிறர்க்கொரு நியாயமும் வைத்துக் கொள்ளுவான். தற் பெருமை அகந்தையாயேனும் மமதையாயேனுந் தோன்றும். அகந்தையுள்ளவன் பிறரை மதியான், பிறர் தன்னை மதிக்கவேண்டுமென்று விரும்புவான்; பிறருக்கு உதவிசெய்யான், பிறர் தனக்குத் துணைசெய்ய வேண்டுமென்று விரும்புவான். தன்னுடைய காரியத்தைப் பெறுதற்காகப் பொய், புரளி, களவு, பலாற்காரம் ஆகியவற்றையுந் துணையாகக் கொள்ளுவான். மமதையுள்ளவன் தன் மனைவி மக்கள் முதலியோருடைய நயங்களை நீதி கேடாகப் பேணுவான். தன் மதிப்பாவது ஒருவன் தன்னை நல்லவனாக மதித்தல்; நல்லவனாக மதித்தலினாலே, நல்லவன் செய்யவேண்டிய செய்கைகளையே அவன் செய்வான்; நல்லவனுக்குரிய

குணங்களைப் பூணுவான்; எந்த ஆபத்து வந்தாலும் அற நெறி தவறுமல் அதனல் வருந்துன்பத்தை இன்பமாகக் கொள்ளுவான்; "பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை" என்றெண்ணி மற்றையவர்கள் செய் யுங் குற்றங்களைச் சகித்துக்கொள்ளுவான். பிறர் தனக் குத் தீங்கு செய்தால், அவர்களுக்கு நன்மை செய்வதே தன் நிலைக்குத்தகுந்த செயலென்றெண்ணி அவர்க ளுக்கு நன்மை செய்வான். துளசித்தாமருடைய மகனை அவருடைய அடிமையின் மகன் அடித்ததைக் கண்ட அவ ருடைய மனைவி அவருக்கு முறையிட்டபோது, அவனை அடித்துப் பழி வாங்குதல் தமது உயர்ந்த நிலைக்குத் தகா தென்று அவர் சொல்லி மனைவியைச் சாந்தப்படுத்தித் தன் மகனைக்கொண்டு அடிமையின் மகனுக்கு ஒரு மோத கங் கொடுப்பித்தார்.

சிறு பிள்ளைகளிலே நற்குணம் உதிப்பதற்கு அவர் களைத் தன் மதிப்புடையராக்குதல் ஒரு தக்க வழி. "தம்பீ, நீ ஒரு நல்ல பிள்ளை; நீ பிழையான வழிக்குப் போகமாட்டாய்" என்று மூத்தோர்கள் ஒரு சிறு பிள் ளைக்குச் சொன்னல், அந்தப்பிள்ளைக்கு அது பெரு மகிழ்ச்சியை யுண்டாக்கி நல்லொழுக்கத்திலே பற்றை விளைவிக்கும். ஒரு பிள்ளையைப் பார்த்து "நீ கெட்ட பிள்ளை" என்றுல், அந்தப்பிள்ளை தன் மதிப்புக்கெட்டுத் தீமை செய்யக் கூசுதலொழியும். சிறு தவறு செய்கிறவர் களை நீதிஸ்தலங்கள் குற்றவாளிகளாகக்கண்டு சிறைச் சாலைக்கு அனுப்புதல் அவர்கள் பெருந் துஷ்டராதற்கு வழியாகும்.

அவர்களுடைய பிழையின் மூலகாரணத்தை அறிந்து, அதை அவர்களுக்குக்காட்டி அவர்கள் அதில் அகப்படா திருத்தற்கு வேண்டிய உபாயத்தைச் சொல்லி அவர்களி டத்துத் தன் மதிப்பையுண்டாக்கி, அவர்களைத் தீய வழி யிலிருந்து காக்க முயலுவதே முதன் முறை குற்றமான

செயல்களில் அகப்பட்டோருக்குச் செய்யவேண்டிய பரிகாரம். தற்பற்று விரிந்து தன்னுடைய சாதி, மொழி, தேசம், சமயம், ஆகிய இவற்றிற்செல்லும். இவை முறையே சாதிப்பற்று, மொழிப்பற்று, தேசப்பற்று, சமயப்பற்று, எனப்படும். இவற்றிலுள்ள பற்றும் பெருமை மதிப்பு என இரு கூருக வரும். தற்பெருமை யுடையவர்கள் தங்கள் காரியங்களைப் பெறுதற்காக நெறி தவறுவது போல, தங்கள் சாதி சமயம் முதலியவற்றிலே பெருமை கொள்ளுகிறவர்களும் அவற்றுக்காக நெறி தவறுவார்கள். அவற்றிலே மதிப்புடையவர்கள் அவற்றை நயப்படுத்தற்காக அற நெறி தவருமற் பெருமுயற்சி செய்வார்கள்.

அறப் பற்று

இதுவரையும் பற்றுப் பொருள்களாகக் கூறப்பட்டவை பொறிகளாலறியப்படும் பொருள்கள். இவைகள் மனிதரில் ஒரு சாராருடைய பற்றுப்பொருள்கள். இவர்களுடைய பற்றுக்களின் எல்லை பொறிப் பொருள்களாதலால், இவர்களைப் பொறிப்படியிலுள்ளவர்கள், அல்லது பௌதிகப்படியினர் எனலாம். பொறிகளுக்கெட்டாத பொருள்கள் வாய்மை, பொறை, தயை, ஈகை, நடுநிலைமை முதலிய அறங்களாம். இவை புத்தியினலறியப் படுவன. இவற்றிலே பற்றுடையவர்களும் உண்டு. இப்படியானவர்களைப் புத்திப்படியினர் அல்லது அறப்படியினர் எனலாம். இவர்கள் பொருட் பற்றுடையராயிருந்து அப் பற்ருலுண்டாகுந் தொழில்களைச் செய்யும் போது, அறத்தொழில்களிலே விருப்பும் ஏனையவற்றில் வெறுப்பும் உண்டாகிவர, அறத்தொழிலிலுள்ள விருப்புப் பற்ருகத் தடிக்கப் பெற்றவர்கள் ஆவர். இவர்களுட் சிலர் ஒவ்வோர் அறத்திலே மாத்திரம பற்றுடையராயிருப்பர். சிலர் ஈகையிலும், சிலர் வாய்மையிலும், சிலர் பொறுமையிலும் பற்றுடையரா யிருப்பர். வேறுசிலர் பல அறங்களிலே பற்றுடையராயிருப்பர். ஒருவன்

எந்த அறத்திலே பற்றுடையவனோ, அந்த அறத்தி லிருந்து அவன் விலகும்போது, யாராவது அதைக் காட்டி விளக்கினால், அவன் அறநெறியி னின்றும் விலகான். பௌதிகப் படியிலுள்ளவர்கள் சில சமயங்களிலே ஏதாயினும் ஒரு பொருளைப் பெறுதற்குத் தீயவழியை அநுசரிக்கும் போது, அது அறவழியன்றென்று கண்டாலும் அப் பொருளிலேயுள்ள பற்றின்மிகுதியால் அதனினின்றும் விலகார்கள். *

ஆயினும் அப்பொருள் அற்பமானதாயின் இவர்களுட் சிலர் தீயவழியினின்றும் விலகுவர். பொருட்பற்றுடையோரும் பெரும்பாலும் அறநெறிப் பட்டேயொழுகுவர்; பொருட்பற்று அறத்தோடு முரணும்போது அறநெறியினின்றும் விலகுவர். இப்படியே, அறப்பற்றுடையோரும் தமக்கு வேண்டிய பொருள்களைச் சம்பாதிக்கையில் அறப்பற்று பொருட்பற்றோடு முரணுமாயின், அவ்வகைச் சம்பாத்தியத்தைக் கைவிடுவர். இவ்விருபாலாருக்கு முள்ள வேற்றுமை இவைகளாம். இவ்விருபாலாரிலும் பல திறத்தவர்களுளர், பொருட்பற்றுடையோர்களிற் சிலர் அற்பபொருளைப் பெறுதற்காகப் பெருங் கொடுமைகளைச் செய்வர். வேறு சிலர் பெரும்பொருளைப் பெறுதற்காகப் பெருங் கொடுமைகளைச் செய்வர். இன்னுஞ்சிலர் பெரும்பொருளைப் பெறுதற்காக அற்ப நீதியீனஞ் செய்வர். அறப்பற்றுடையோரிற் சிலர் அற்பமான அறத்தைப் பேணுதற்காக எதையும் தியாகஞ்

---

* ஆதலால் இவர்களுக்குப் புத்திசொல்லி இவர்களைத் திருத்தலாமென்றெண்ணுதல் பேதைமை. தொழில் பற்றின் வழிச் செல்லுமன்றி அறத்தின் வழிச்செல்லா தென்பதை உணராமல், பெற்றோரும், ஆசிரியர்களும், பிரசாரகர்களும் முறையே தம் மக்களுக்கும் மாணாக்கருக்கும் கேட்போருக்கும் போதனை செய்து அப் போதனை பயன்படாமையைக் கண்டு தம்முடைய வீண் போதனைக்காகத் தம்மை வைதற்குப் பதிலாக அவர்களை வைவர்.

செய்வர். வேறு சிலர் அவ்வளவு தியாகஞ் செய்யமாட்டாமல் அறத்தினின்றும் வழுவுவர். அறப் பற்றுக்கு வேண்டிய மனப்பான்மை இயல்பாக அமைந்திருந்தால், ஒருகால் உண்டான அறப்பற்று என்றும் நிலைத்திருக்கும். ஒருவன் பிற்காலத்திலே தயையிலே பற்றுவைப்பவனுயின், அவன் சிறுவயதிலே பிறருடைய தயையைக் கண்டு மகிழ்வான். அவன் குழந்தையா யிருக்கும்போது, ஒரு பசுக்கன்று கயிற்றிலே கால்களை மாட்டிக்கொண்டு நடக்கமாட்டாமல் இடர்ப்பட அந்தச் சிக்கை யாராவது எடுத்து விடுவதைக் கண்டால் அவன் மகிழ்வான். இரக்கமில்லாத செய்கையைக் காணும்போது கோபமும் இரக்கமான செய்கையைக் காணும்போது மகிழ்ச்சியும் அவனிடத்துண்டாகும். அன்றியும், வன்கண்ணரில் உவர்ப்பும் இரக்க முள்ளவர்களில் அன்பும் அவனிடத்தே உதிக்கும்.

இப்படியாகக் கோபம் உவர்ப்பு ஆகிய சுவைகள் வன்கண்மையோடும், மகிழ்ச்சி அன்பு ஆகிய சுவைகள் இரக்கத்தோடும் சேர்ந்து வருதலினுல், வன்கண்மையில் வெறுப்பும் இரக்கத்திற் பற்றும் உண்டாகும். அதன் பின்னர், இரக்கத்தின் நன்மையைக் கல்வியினுலும் கேள்வியினுலும் அவன் அறிந்து அதிலே விசேஷ பற்று வைப்பான். இந்தப் பற்றை வளர்க்கத்தக்க பெற்ருேர் அல்லது ஆசிரியர் அவனுக்கு வாய்த்தால், அவர்கள் அவனுக்கு இந்தத் துறையிலே பலவாருகத் துணை செய்வார்கள். இரக்கப் பற்றுடையோராகிய சிபி முதலியோர் உயிர்களிலே கொண்ட தயையினுலே செய்த அருஞ் செயல்களை எடுத்துக் காட்டுவார்கள். அல்லது அவர்களுடைய சரித்திரங்களை வாசிப்பிப்பார்கள். இவன் பிறருக்கிரங்கி உபகாரஞ் செய்யும்போது, அவர்கள் அதை மெச்சி அவனை உற்சாகப்படுத்துவார்கள். அவர்கள் பிற உயிர்களிலே கொள்ளுங் கருணையை அவன்

பார்த்துப் பின்பற்றுவான். அறப்பற்றுக்கு வேண்டிய மனப்பான்மை இயல்பாய் அமைந்திராவிடில், ஒருகால் அது தோன்றினும் இடையிலே அற்றுப் போகக் கூடும்.

ஒருவனுக்குச் சிறுவயதிலே இரக்கமான செய்கைகளில் மகிழ்ச்சியும், கொடிய செய்கைகளில் உவர்ப்புந் தோன்ற விட்டாலும், அவனைச் சார்ந்திருக்கிறவர்கள் தயையிலே பற்றுடையவர்களாயின், அந்தப் பற்று இவனுடைய மனத்திலே உண்டாதல் கூடும். அவர்களிலே இவன் எவ்வளவு அன்பாயும் மதிப்பாயும் இருக்கிறானோ, அவ்வளவு அதிகமாக அந்தப் பற்று இவனிலே வளரும். கொடுஞ் செயல்களைக் காணும்போதும் கொடியவர்களைக் காணும்போதும் அவர்களிலுண்டாகும் அருவருப்பைக்கண்டு, இவனுக்குக் கொடுஞ் செயல்களிலே வெறுப்புண்டாகும். பிறபாஷை பேசுகிறவர்களோடு கூடி வாழுகிறவன், அந்தப் பாஷையைச் சிரமமின்றிக் கற்றுக் கொள்வதுபோல, சகவாசச் சார்பின் பலத்தினாற் சிறுவர்கள் அறங்களிலே பற்றை வளர்த்துக் கொள்ளுகிறார்கள். வீடும் வித்தியாசாலையும் உத்தியோகஸ்தானமும் ஒரு பற்றுக்குத் துணை செய்யுமாயின், அந்தப் பற்று வலிபெற்று வளரும் ஆயினும், பயிற்சியால் வந்த பற்று சுவையினால் வந்த பற்றிலும் மென்மையானது; பெரும் இடர்கள் வரும்போது கெட்டழிந்து போம்.

பொருட் பற்றுடையோருக்குப் பொருளும் அறப்பற்றுடையோருக்கு அறமும் இனியவைகளாம். ஆயினும், பொருளினிமையினும் அறிவினிமை அநேக மடங்கு கூடியது.

பரீக்ஷை வினாக்கள்: 1. பற்றுக்கள் எவ்வாறு உண்டாகின்றன? 2. பற்றுக்களுக்கும் சுவைகளுக்கும் (மெய்ப்பாடுகளுக்கும்) உள்ள பேதம் யாது? 3. கல்வியின் வகைகளெவை? 4. கணிதம், சரித்திரம், பூமிசாத்

திரம் ஆகிய நூல்களைக் கற்றற்கு எவ்வூக்கங்களும் எப்பற்றுக்களுந் துணை யாகலாம்? 5. தற்பெருமைக்கும் தன்மதிப்புக்கு முள்ள ஒற்றுமை யாது? 6. அறப்பற்றுடையவனுக்கும் பொருட்பற் றுடையவனுக்குமுள்ள பேதங் கள் எவை? அறப்பற்றிற்கு முக்கியமான மூலஊக்கம் யாது? 7- பெற் றோர்க் கமையும் அறத்துக்கு மூலஊக்கம் எது? அதற்குத் துணையானவை எவை? 8. அறப்பற்றிற்குப்பின் பற்றாக்கம் துணையாதல் எவ்வாறு?

இலக்கணம்: எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகள் படர்க்கைப் பெயரீற்றில் ஏ, ஓ மிகுதலும், அவ்வீறு திரிதலும், கெடுதலும், இயல்பாத லும், ஈற்றய லெழுத்துத் திரிதலுமாம். இவை ஏவல்வினையைக் கொள் ளும். இவ்வுருபுகள், தம்மையேற்ற பெயர்ப்பொருளை முன்னிலையின் விளிக் கப்படு பொருளாக வேறுபடுத்தும்; அப்படி வேறுபட்ட விளிக்கப்படு பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்; விளித்தல் - அழைத்தல்( கூப்பிடு தல்).

உதாரணம்

| | |
|---|---|
| தந்தை - தந்தாய், நல்லாள் - நல்லாய், தோழி - தோழீ | ... ... ஈறுதிரிதல் |
| அரசன் - அரச, சோழன் - சோழ, | ... ... ஈறுகுன்றல் |
| மகன் - மகனே, நங்கை - நங்கையே, | ... ... மிகுதல் |
| நம்பி, நங்கை, தோழி, இராமன், | ... ... இயல்பு |
| மக்கள் - மக்காள், புலவர் - புலவீர் | ... ... அயல்திரிபு. |

இவற்றுட் பல உருபுகளை ஓரிடத்தே ஏற்று வருதலுமுண்டு;
உ—ம்: அப்பன் — அப்பா, ... ... ஈறு குன்றுதலும், அயல் திரிபும்
அண்ணன் — அண்ணாவோ! ... ... ஈறுகுன்றல், அயல்திரிதல், மிகுதல்;
சிறுபான்மை அளபெடையும் விளியுருபாகும்.

உதாரணம்: வேள் - வேஎள், அம்மான் - அம்மாஅன்,

சூத்திரம்: "எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
திரிபு, குன்றல், மிகுதல், இயல்பு, அயல்
திரிபுமாம், பொருள் படர்க்கையோரைத்
தன்முகமாகத் தான் அழைப்பதுவே"

வினா: ஏழாம் வேற்றுமையின் உருபகள் எவை? ஏழாம்வேற்றுமை யுருபுகள் எவற்றைக் கொள்ளும்? ஏழாம்வேற்றுமை யுருபுகளின் பொரு ளென்ன? ஏழாம்வேற்றுமையின் சொல்லுருபுகள் எவை யென்பதைச் சூத் திரங்கூறி விளக்குக. கண், கால் கடை, இடை, தலை, வாய், திசை, வயின் என்னுமிச் சொல்லுருபுகளை வைத்து உதாரணங் கூறுக.

## 10. முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்

[இக்கதை இந்துசாதனப் பொன்விழா வெளியீட்டி லிருந்து அநுவதித்த தாகும்; இதன்கண் வரும் பெயர்கள் புனை பெயரேனினும், கதை யெழுதும் மாபுபற்றிச் சில சேர்க்கப்பட்டுள்ளன வெனினும், இது இற்றைக்கு எண்பது எண்பத்தைந்து வருடங்கட்கு முன்னர் நிகழ்ந்த நிசமான வரலாறதும்]

முத்தன் சிறுபிள்ளையாக இருக்கும் காலத்திலேயே அவனுடைய தகப்பனுகிய வல்லிபுரம் இறந்துபோனுர். ஆனுலும் அவனுடைய தாயாகிய தையலம்மை அவனை வறுமையிற் செம்மையாய் வளர்த்து வந்தாள். ஐந்து வயதானதும் முத்தனைத் தாய் அயலிலேயுள்ள ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடத்திற் படிக்க வைத்தாள். தையலம்மை தன் ஒரேயொரு ஆண்குழந்தையைச் சீராய்ச் சிறப்பாய் வளர்த்தற்குக் கஷ்டப்பட்டாள். காலையில் அப்பஞ் சுட்டும் பிட்டவித்து விற்றும் அதனுல் வரும் ஊதியத் தைக் கொண்டே தானும் தன் பிள்ளையுங் காலங்கழித்து வந்தனர். படிக்கும் காலத்திலே முத்தன் நேரத்திற்கு உண வில்லாமையாலும், மாறிக்கட்டத் துணி யில்லாமை யாலும் இடையிடையே பள்ளிக்கூட நேரத்திற்குப் பிந் திப் போவதும் போகாமல் விடுவதுமுண்டு. அப்படி ஒழுங் கீனமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போனுனேனும், தன் னுடன் படிக்கும் பிள்ளைகளுள் அவனே திறமை வாய்ந் தவனுகக் காணப்பட்டான்.

ஒருநாள் அயற்கிராமத்திலே ஏதோ வேடிக்கை நடந்தமையினுல், முத்தனுடன் படிக்கும் பிள்ளைகளுட் பலர் பள்ளிக்கூடத்திற்கென்று புறப்பட்டு அங்கே போகா மல் ஒருங்கு சேர்ந்து யோசித்துக்கொண்டு அந்த வேடிக்கை பார்க்கப் போய்விட்டார்கள். முத்தன் அந்த வேடிக்கை பார்க்க அன்று போகவில்லையாயினும், வேறு ஏதோ காரணத்தினுலே அன்றைக்குப் பள்ளிக் கூடத்திற்குப் போகவில்லை. அந்தப் பிள்ளைகள்

பள்ளிக்கூடத்திற்கு வராமல் வேடிக்கை பார்க்கப் போனதை அங்கே கண்டவர்கள் யாரோ அடுத்த நாட் காலையில் வந்து சண்முகச் சட்டம்பியாருக்குக் கோள் மூட்டிவிட்டார்கள். சண்முகச் சட்டம்பியாரோ மிகவும் பொல்லாதவர். பிள்ளைகள் பாடத்தைச் சரியாகச் சொன்னாலும் அடிப்பார்; தவறாகச் சொன்னாலும் அடிப்பார்; தாம் படிப்பிக்கும் பாட்டுக்களில் தமக்கு ஏதும் விளங்காவிட்டாலும் அதற்காகப் பிள்ளைகளைத் தாம் தண்டிப்பார். சந்தேக விபரீதமற விளங்கிய ஒரு பாடத்தை, தடையறச் சொல்லக் கூடியதாய்ப் பலமுறை இராப்பகலாகப் படித்து மநநம் பண்ணிய ஒருபாட்டை, பிள்ளைகள் சண்முகச் சட்டம்பியார் சந்நிதானத்தில் ஒப்புவிக்கப் போனார்களாயின் உடனே ஏக்கங்கொண்டு மறந்து திகைத்து நிற்பார்கள். பேதி மருந்துண்ணாத பிள்ளைகள் சண்முகச் சட்டம்பியார் கையிற் பிரம்பெடுத்த மாத்திரத்தே மலசல விமோசனஞ் செய்த சந்தர்ப்பங் களு முண்டு. இப்படிச் சிறுபிள்ளைகளை அடித்து மனத் தைக் கலக்கிப் படிப்பித்தலாகிய இரக்கமற்ற செயலோடு கூடியவராக விருந்தாலும், அவர் தெய்வபக்தி யுள்ளவர். "அடா பிள்ளைகளே! தெய்வத்தைக் கும்பிட்டாற்ரு னெடா உங்களுக்குப் படிப்புவரும்; ஆனதால் நீங்கள் அயலிலேயுள்ள புளியடி வைரவர் கோயிலுக்கு வெள்ளி செவ்வாயிலேனும் போய்த் தோத்திரம் பண்ணிக் கும் பிட்டுப் படிப்புத்தர வேணுமென்று வைரவசுவாமி யைக் கேளுங்கள்" என்று சொல்வதுண்டு. பிள்ளைகளும் அப்படியே வெள்ளி செவ்வாய்க் கிழமைகளிற் போய்ச் "சட்டம்பி பொல்லானும் சற்று மிரங்கானும், கட்டைப் பிரம்பெடுத்துக் கட்டியடிப்பானும், நீட்டுப் பிரம்பெடுத்து நீட்டி யடிப்பானும்" என்று தோத்திரஞ்சொல்லி, சுவாமீ! படிப்புத்தா என்று கேட்பதை விடுத்து, "ஐயோ வைரவ சுவாமி! நீ உங்கேயிருப்பது மெய்யானால், எங்கள் சட்டம்பி யாரைச் சடுதியிற் சாகப்பண்ணி எங்களைக் காத்துக்

கொள்" என்று குறையிரந்து கும்பிட்டுக் கர்ப்பூரமும் கொளுத்துவார்களாம்.

இப்படிப்பட்ட சண்முகச் சட்டம்பியார் அடுத்த நாட்காலை பள்ளிக்கூடத்திற்கு வரும்போது ஒரு பிரம்பு, ஒரு புளியங்கம்பு, ஒரு கொய்யாத்தடி மூன்றையும் ஒரே அளவிற்குப் பாக்குவெட்டியால் நறுக்கிக் கக்கத்தில் இட்டுக்கொண்டு சர்வ சங்கார உருத்திர மூர்த்திபோல் வேகமாக வந்தார். சண்முகச் சட்டம்பியார் பிரசன்ன மாவதைக் காணும்போதே ஏங்கும் பிள்ளைகள், மூன்று வகையான கம்புகளுடன் அவர் வரும்போது என்ன பாடுபட் டிருப்பார்க ளென்பதைச் சொல்லவும் வேண்டுமா! சட்டம்பியார் பள்ளிக்கூடத்துட் புகுந்தார், பள்ளிக்கூடந் தொடங்கிவிட்டது; "நேற்றுப் பள்ளிக்கூடத்திற்கு வராத பிள்ளைகள் இங்கே வந்து நில்லுங்கள்" என்றார் சட்டம்பியார். முதனாள் வராத பிள்ளைகள் அத்தனைபேரும், தூக்குமரத்துக்குப் போவார்போற் சண்முகச் சட்டம்பியார் முன் பயந்து பயந்து மெல்லப் போய் நடுங்கிக்கொண்டு நின்றார்கள்; சிலர் சண்முகச் சட்டம்பியாருடைய கோபத்தோடு கூடிய முகத்தைப் பார்த்தார்கள்; சிலர் அவர் கொண்டுவந்த முக் கம்புகளையும் பார்த்தார்கள்; சிலர் இரண்டினையும் பார்த்தார்கள்; நேற்று ஏன் வரவில்லை என்ற கேள்வியில்லை; "உங்களுக்குத் தனித்தனி மூன்றடி உள்ளங்கையில் உறைக்க அடிப்பேன்" என்றார் சட்டம்பியார். முறை முறையாகக் கைநீட்ட மும்மூன்றடி கிரமகாக அடித்துக்கொண்டு வந்தார். முதலடியில் அழுபவரும், இரண்டாமடியிற் கத்துபவரும், மூன்றாமடியிற் கதறுபவரும், அடிக்க முந்தியே ஓலமிடுபவர்களுமாகக் காணப்பட்டனர் பிள்ளைகள். இரண்டு பிள்ளைகளுக்கு அடித்தவுடனே கொய்யாத் தடி சின்ன பின்னமாய்ப் போனது. பின்னும் நாலைந்து பிள்ளைகட்கு அடிக்கவே புளியங்கம்பு கிழிந்துபோய்

விட்டது. இறுதியிற் சீற்றமேறிய சண்முகச் சட்டம்பியார் தமது திருக்கரத்திற் பிரம்பைப் பரித்துக்கொண்டு கருமமாற்றத் தலைப்பட்டார். முறை முறையாக அடித்து வந்தார். நல்ல பிரம்பானதாற் சிறிது நின்றுபிடித்தது. ஈற்றிலே முத்தன்தான் நின்றான்; "முத்தன், வா," என்று உறுக்கி அதட்டிக் கூப்பிட்டார். பஞ்சப்புலன் களும் ஒடுங்கி ஒருவழிப்பட்டுச் சிவத் தியானத்திற் சிந்தையை விட்ட யோகிகளைப்போல, முந்தியே தன் ஐம்புலன்களும் அடங்கி யொடுங்கிச் சண்முகச் சட்டம்பி யாரின் திருவுருவத்தையும் அவர் செய்யும் தண்டச் செயலையும் தியானித்துக்கொண்டு நின்ற முத்தன், அட்டை ஊர்வதுபோல் மெல்ல மெல்லச் சமீபத்தில் வந்தான். சட்டம்பியார் அடிக்கத் தடியோங்கினர்; "ஐயோ! சட்டம்பியார், நான் வேடிக்கைபார்க்கப் போக வில்லை; என்னைக் கேட்டடியுங்கள்" என்று மனம்பதற, சரீரம் நடுங்க முத்தன் கத்தினன். அவர் ஓங்கிய பிரம் பைக் கீழே தொங்கப் பிடித்துக்கொண்டு "முத்தா, பயப் படாதே, உள்ளதைச் சொல்லு" என்று கோபத்திடையே சிறிது இரக்கம்பிறக்கச் சொன்னர். "சட்டம்பியாரையா! வேறு ஒன்றுமல்ல, மாறிக் கட்டிக்கொண்டு வருதற்குத் துணியில்லாமையினல் நான் நேற்றுப் பள்ளிக்கூடத் திற்குவர வாய்க்கவில்லை. துண்டொன்றைக் கட்டிக் கொண்டு உடுத்த துணியை உரிந்து தோய்த்து உலர இட்டேன்; மழைக்கோல மிருந்தபடியால் அது உலர வில்லை. கட்டிக்கொண்டுவர வேறு துணியுமில்லை. என்ன செய்வதென்று என் அம்மாவைக் கேட்டேன்; அம்மா அழுதுவிட்டு, நீ இன்று பள்ளிக்குப் போகவேண்டாம் எனறு சொன்னள். ஆனதினற்றான் நான் நேற்று வரவில்லை" என்று முத்தன் முழுவதும் விபரமாகச் சொல்லிக் கண்ணீர் விட்டான்.

முத்தன் சொன்ன பரிதாபத்தைக் கேட்ட மாத் திரத்திலே சண்முகச் சட்டம்பியாருடைய கன்மனமும்

கரைந்தது. "முத்து, நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே. உனக்கு வேட்டி துணி நான் வாங்கித் தருகிறேன். உன் அப்பர் இருந்த செல்வஞ் செல்வாக்கென்ன, பெருமை யென்ன; உனக்குத் தெரியாது; அவருடைய பிள்ளை யாகிய உனக்கா இந்த நிலைமை வந்ததென்று நினைக்க என்மனம் பயப்படுகின்றது. உன் அப்பர் எனக்கும் எவ்வளவோ உதவி அந்தக் காலத்திற் செய்தவர். ஆன தால் அவருடைய பிள்ளையாகிய உனக்கு நான் பதி லுதவி செய்யாவிட்டால் நான் நன்றி கெட்டவனாவேன். நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே. இன்றுதொடக்கம் உன்னை என் பிள்ளையாக வைத்து நடத்துவேன்" என்று பரிவுடன் சொன்னார். முத்தன் அதற்கு ஒரு பதிலுஞ் சொல்லாமற் கலங்கிக்கொண்டு நின்றான்.

அவன் பின் சட்டம்பியார் கட்டளைப்படி வகுப்பிற் போயிருந்து படித்தான். பள்ளிக்கூடம் விட்டபின் முத்தன் வீட்டிற்குப்போய் அன்று பள்ளிக்கூடத்தில் நடந்த கருமம் முழுவதையும் தன் தாயிடம் சொன்னான். கேட்ட தாய் பெரிதுங் கலங்கிக் கண்களில் நின்றும் நீர் சிந்தப் பெருமூச்சுவிட்டுத் தன் பிள்ளையைக் கவலை யுடன் பார்த்து "என் செல்வமே! நான் பெற்ற முத்தே!! நீ ஒருவரிடமும் ஒன்றும் வாங்கவேண்டாம். உன் அப்பர் நல்ல குலங்குடியிற் பிறந்தவர். நான் அவருக்குச் சொந்த மச்சாள். எனக்கும் என் பெற்றார்கள் நல்ல சீதனங் கொடுத்தவர்கள். என்னை அவர் கல்யாணம் முடித்தபிறகு போதிய பொருள் பண்ட மிருந்தாலும், ஏதும் தொழில் செய்யாமல் சும்மாவிருப்பது சரியல்ல என்று யோசித்து நெல் வியாபாரஞ் செய்யத் தொடங்கி னார். வியாபாரத்தினால் எங்களுக்கு நல்ல வருவாய் வந் தது. இப்படி நடந்து வருங்காலத்தில், 58-ம் ஆண்டு பெருமழைபெய்ய, புயலும் அடித்தது; அந்த நேரத்திலே எத்தனையோ கப்பல்கள் கடலில் அமிழ்ந்திப் போயின;

அரக்கனில் 500 மூடை நெல்வாங்கி வரும்படி பணம் அனுப்பியிருந்தவர் உன் அப்பர். பறுவதம் என்று சொல்லப்படும் கப்பலொன்று நெல்லேற்றிக்கொண்டு நடுக்கடலில் வரும்போது புயலில் அகப்பட்டுக் கடலில் மூழ்கியது; கப்பற்காரரிற் சிலர்மாத்திரம் தெய்வச் செயலால் உயிர்பிழைத்து எத்தனையோ மாசங்கட்குப் பின் ஊருக்குவந்து சேர்ந்தார்கள்; எங்களுக்கென்ற நெல்லு மூடைகள் முழுவதும் கடலுக்கு இரையாக, பெருந்தொகைப் பணத்திற்கு அழிவு வந்தது; கடன் கொடுத்த செட்டிமார் உன் அப்பரைப் பணந் தரும்படி நெருக்கினுர்கள்; உடனே அவர் உள்ளபொருள் பண்டம் காணி பூமி எல்லாம் விற்றுக்கொடுத்தும் கடன் தீர்க்கப் போதாமையினுல், என்னிடத்திருந்த தாலிக்கொடி யொன்றை விட்டுவிட்டு மற்றை "நகை" வகைகளை யெல்லாம் கழற்றி விற்றுவிட்டார்; அதன் பிறகும் பழைய நிலைமைக்கு வந்துவிடலாமென்று அவர் எத்தனையோ முறை முயற்சி செய்தார்; வாய்க்கவில்லை; 'பட்ட காலே படும் கெட்ட குடியே கெடும்' என்றவிதமாக, மேலும் மேலும் எங்களுக்கு இடைஞ்சலே வந்தது; தீராக் கவலையினுல் உன் அப்பர் உணவை வெறுத்தார்; நான் எத்தனையோ முறை, 'சுவரிருந்தாற்ருனே சித்திரந் தீட்டலாம்' பொருளை மனுஷன் தேடுவதோ, பொருள் மனுஷனைத் தேடுவதோ, உங்கள் மனத்தை உப்படி விடாதீர்கள்; கெட்டார் தழையாரோ கேடொருகால் நீங்காதோ, எல்லாந் தெய்வத்தின் செயல், கவலைப்படாதீர்கள், வாருங்கள் உண்ணுங்கள், என்று ஆறுதல் சொன்னுலும் அவர் ஓம் என்று கேட்டுக்கொண்டு கவலைக்கே ஆளானுர்; அந்த நேரத்தில் அவருக்கு நோயும்வந்து சேர்ந்தது; எங்களுக்குத் தரவேண்டிய கடன்காரர்களும் கொடுத்த கடனைத் தர மறுத்து விட்டார்கள்; மேலும் உன் அப்பர் நல்லாயிருந்த காலத்திலே தம் இனசனத்தவர் அயலவர் பலருக்கு எல்லா

வகையாலும் உதவிசெய்தவர்; படுக்கையிலே கிடந்து கொண்டு அப்படித் தாம் உதவி செய்தவர்கள் பலருக்கு ஆட்சொல்லி யனுப்பினர்; சீட்டெழுதி யனுப்பினர்; அவர்களுட் பலர் நல்ல நிலைமையி லிருந்தாரேனும் ஒருவரும் வந்து வருத்தம் பார்க்கத்தானும் நினைக்கவில்லை; அவர்கள் செய்த நன்றிகெட்ட செய்கையினல் உன் அப்பர் அதிக கவலைக்காளாக, நோயும் அதிகப்பட்டது; இன்னும் எங்களிடத்தில் உள்ளவை யெல்லாம் ஈடு வைத்தும் அறுதிவிற்றுஞ் செலவழித்தோம்; எங்கள் பொருள் முட்டுப்பாட்டை நான் அவருக்குக் காட்டாமல் இயன்ற வரையில் நடந்தேன்; எடியப்பா, ஆருங்கடன் பட்டவர்கள் எங்களிடத்தில் உதவிபெற்றவர்கள் வந்தார்களா? ஏதுந் தந்தார்களா? என்று படுக்கையிற் கிடந்தபடி என்னை இடையிடையே கேட்பார்; நான் 'ஒருவரும் வரவுமில்லை, ஏதுந் தரவுமில்லை' என்று பதில் சொல்வேன். மகனே, அப்பொழுது அவர் சொன்ன பாட்டொன்று என் ஞாபகத்தில் இருக்கிறது; அது நல்ல பாட்டு, ஞாபகத்தின்படி சொல்லுகிறேன் கேள் மகனே:-

"உண்டானபோது கோடானுகோடி யுறமுறையார்
தொண்டாகவந்து தொழும்புசெய்வார் செல்வந் துஞ்சிவிட்டாற்
கண்டாலும் பேசார் அழைத்தாலும் வாரார் கௌவை கௌவை
சண்டாளரோ டுறவாகாது ரத்ன சபா பதியே"

என்ற இந்தப் பாட்டை உன் தகப்பனர் இடையிடையே சொல்லிக்கொள்வார். அவருடைய நோய் கடுமையாய் விட்டது; வைத்தியரும் கைவிட்டு விட்டார்; ஆனல் வைத்தியர் எனக்கு உண்மையை அந்த நேரத்திற் சொல்லவில்லை; வைத்தியருடைய முகக்குறிப்பி லிருந்து இவருடைய ஆபத்தான நிலைமையை நான் அறிந்து கவலைப்பட்டேன். என் கவலையைக்கண்டு அவர் ஒரு நாள் என்னைக் கிட்ட இருக்கச்செய்து, "நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே; இது எனக்கு முடிவுக்குவந்த நோய்; விதியை விலக்கப் பிரமாவாலும் முடியாது; ஆனல்

ஒன்று சொல்லுகிறேன் கேள்; நான் இல்லாக்காலம் நீபெற்ற ஆண்குஞ்சினுல் உனக்குப் பிற்காலத்தில் நன்மையுண்டு, அவன் நல்லாயிருப்பான்; அவனுடைய சாதகம் அதிஷ்டமான சாதகம்; எங்கள் பிள்ளையையும் உன் மரியாதையையும் நீ பாதுகாத்துக்கொள்; எங்களுக்குத் தருமதியானவர்கள் ஏதுந் தந்தாலொழிய எவரிடத்தும் தருமத்திற்குப் பொருள் கேளாதே; கைநீட்டி வாங்காதே; நக்கினுர் நாவெடார் என்று ஊரிலே சொல்லுவார்கள். இயன்றவரையிற் பாடுபட்டு உழைத்து உன் பிள்ளைக்குக் கொடுத்து நீயும் வறுமையிற் செம்மையாகக் காலங்கழி; அரைக்காசுக்குப் போனமானம் ஆயிரங்காசு கொடுத்தாலும் மீண்டுவரப் போவதில்லையென்று சொல்லுவார்கள்; வறியவர் செல்வராவர், செல்வர் பின் வறியராவர், இது உலகத்தின் இயல்பு;

ஆலம்போல் நீலவிழி அங்கையற்க ணம்மையே
காலம்போம் வார்த்தைநிற்குங் கண்டாயே—சாலப்
பசித்தார் பொழுதும்போம் பாலுடனே அன்னம்
புசித்தார் பொழுதும் போம் போம்.

என்று பெரியோர் பாடியிருக்கிறுர்கள்; ஆனைமுதல் எறும்பீருகவுள்ள உயிரத்தனைக்கும் அமுதளிக்கும் ஐயனுக்கு, நீயும் உன் பிள்ளையும் அதிகமென் றெண்ணிக் கவலைப்படாதே. எங்கள் குலதெய்வம், அந்த வைரவப் பரம் பொருளிடந்தான் நான் என் அருமை மனைவியாகிய உன்னையும் என் பிள்ளையையும் ஒப்புவித்து விட்டுப் போகப் போகிறேன்; உலகத்தைக் காக்கிறபடியாற் கேத்திரபாலன் என்று பாராட்டப்படும் வைரவப் பரம் பொருள் இந்த உலகத்திலுள்ள உங்களிருவரையுங் காக்காது கைவிடுவாரென்று நினைக்கிறுய்? அந்தப் பெருமானை அனுதினமும் வழிபடு; உனக்கும் பிள்ளைக்கும் ஒரு குறையும் நேராது. நீ ஆறியிரு, தேறியிரு.... என்னல் அதிகம் பேசமுடியவில்லை; முட்டாக விருக்கிறது....என்றுர்.

"ஐயோ, நீங்கள் ஏன் அப்படியெல்லாஞ் சொல்லுகிறீர்கள்; நீங்கள் இப்பொழுது அதிகம் பேச வேண்டாம்; உங்களுக்கு ஒரு பிழையும் வராது; அந்தச் சூலம்பிடித்த தெய்வம் ஒருபோதும் என்னையும் என் பிள்ளையையும் அந்தரிக்க விடமாட்டாது என்று அழுதழுது நான் ஆறுதல் சொன்னேன். என்கண்ணே, அதன்பின் உன் அப்பர் ஒன்றும் பேசவில்லை; என் மனம் பதைபதைத்தது, சரீரம் பதறியது; நான் உடனே போய்ப் பால் கொண்டுவந்து பருக்கினேன்; உட்கொண்டார்; என்னை ஏறிட்டுப்பார்த்தார்; பிள்ளை எங்கே? என்றார். உன்னைப் படுக்கைக்குக் கிட்டக்கொண்டுவந்து காட்டினேன், உற்றுப் பார்த்தார்; பரம்பொருளே! என் பெண்டிர் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்; என்னை உன் திருவடி நீழலிற் சேர்த்துக்கொள், அடைக்கலம்! என்று மெல்லச் சொன்னார், உயிர் அடங்கியது; என்குடி முடிந்தது என்று கதறினேன்........" என்று சொல்லித் தையலம்மை அழுதலும், "அம்மா, அழாதீர்கள் நீங்கள் அழ எனக்கும் அழுகை வருகிறது" என்று முத்து அழுதழுது சொல்ல, தாய் பிள்ளையின் கலக்கத்தைக் கண்டு அழுகையையுங் கவலையையும் அடக்கிக்கொண்டு சற்றுநேரம் பேசாமலிருந்தாள். சிறிதுநேரம் அப்படியிருந்துவிட்டு ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு, "ஆனதால், மகனே, சண்முகச் சட்டம்பியா ரிடத்தாயினும், வேறு யாரிடத்தாயினும் நீ ஒன்றும் வாங்க வேண்டாம்; இது உன் தகப்பனார் கட்டளை; அவர் சொல்லை மீறவொண்ணாது. அல்லாமலும் என் அருமை மகனே! பஞ்சம்போம் பஞ்சத்திற்பட்ட வடுப்போகாது; நான் இன்னும் என்னால் இயன்றவரையில் உன்னை மரியாதையாகத்தான் வளர்க்க எண்ணியிருக்கிறேன்...." என்று கவலையுடன் சொல்லி முடித்தாள்.

தாய் தங்கள்வரலாற்றைச் சொன்ன நேரந் தொடக்கம் முத்தன் மனத்திற் கவலை ஏற்பட்டது; படிப்பிலும்

அவன்மனஞ் செல்லவில்லை, தன்னைப் பெற்றவளைத் துன்பப்பட விடவொண்ணுதென்பதே அவனுடைய சிந்தனை. அவனுடைய இனசனத்தவரும் அயலாரும் தன்னையும் தாயையும் அலட்சியமாக நடத்துவதைக் கண்டு அவன் பெருங்கவலை கொண்டான். தன்தகப்பன் தன் தாய்க்கு அந்தியகாலத்திற் சொன்ன, "உண்டான போது கோடானுகோடி உறமுறையார்" என்ற பாட்டைச் சொல்லிக் கவலைப்படுவான். அவன் ஒருநாள் தாய் ஆறுதலாக விருக்குஞ் சமயம்பார்த்து "அம்மா உங்களிடத்தில் ஏதும் பணம் ஐந்து பத்து உண்டோ" என்று கேட்டான். "கைம் பெண்டாட்டி, பிச்சைக்காறி, என்னிடத்தில் அஞ்சு பத்துரூபா அல்ல, அஞ்சு பத்துச் சதந்தானும் இந்த நேரமில்லையே; அதுகிடக்க மகனே, ஏன் அப்படிக் கேட்கிறுய்? உனக்கு இப்பொழுது பணம் எதற்கு" என்று பரிவுடன் அன்னை கேட்டாள். "அம்மா! வேறொன்றுமல்ல எங்கள் வரலாற்றை நீங்கள் எனக்குச் சொன்ன நாள் தொடக்கம் நான் ஏதும் முயற்சி பார்க்கவேணுமென்ற எண்ணம் என் தலையுட் புகுந்துவிட்டது; படிப்பிலும் மனம் போகவில்லை. இந்த ஊர் நீங்கள் நல்லாயிருந்த ஊர், செல்வஞ் செல்வாக்கோடு இருந்த ஒருவன் கெட்டு நொந்துபோனல், சொந்த ஊராயிருந்தாலும் அவ்வூரில் இருந்தால் அவன் மான மிழக்கவேண்டி நேரிடும் என்ற கருத்துப்பட, பஞ்ச தந்திரத்திற் படித்திருக்கிறேன். எங்கள் உற்ருர் உறவினர் எங்களுக்கு உதவிசெய்யாமல் விடுவதோடு மாத்திரம் நில்லாமல், எங்களைப் புறக்கணித்து நடத்தவும் தலைப்பட்டுக்கொண்டார்கள். ஆனதால் அம்மா, நீங்களும் வாருங்கள், நாங்கள் திருக்கோணமலைக்குப் போய் அங்கு ஏதும் முயற்சி பார்த்து மரியாதையாய் வயிறு வளர்ப்போம்; எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிருர்; இன்றைக்குப் புறப்படவும் எனக்குச் சம்மதம்; ஆனல் தோணிச் செலவுக்குப் பணமில்லை யென்பதுதான்

கவலை" என முத்தன் வாடிய முகத்துடன் தன் மாதாவுக்குச் சொன்னான்.

பிள்ளைசொன்ன அறிவான வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே பெற்றவளுடைய உள்ளம் வெய்யிலிடைப் பட்ட வெண்ணெயென உருகியது; கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக ஒழுகியது. "என்கண்ணே! எங்கள் கலிதீர்க்க வந்த குலக்கொழுந்தே, இந்தச் சின்னவயதில் உனக்கு இவ்வளவு ஞானம் பிறந்ததோடா, என் செல்வமே, துரையே, நீ கவலைப் படாதே, நானும் நீ எண்ணியதுபோலப் பிழைக்கலா மென்றுதான் எண்ணி யிருந்தேன்; ஆனால் உன் படிப்பைக் குழப்பக் கூடாதென்று எண்ணித்தான் இவ்வளவு காலமும் பேசாமல் இருந்தேன்; இருக்கக் குடி நிலந்தானும் இல்லாத எங்களுக்கு எந்த ஊருஞ் சொந்த ஊர்தானே. நீ துயரப்படவேண்டாம்; இன்னும் ஒரு மாச காலத்துள் என் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டியாயினும் அப்பம் தோசை சுட்டுவிற்கும் காசில் நாளுக்கு நாள் "மிச்சம்" பிடித்துச் சேர்த்துவைத்து உனக்குத் தருகிறேன்; அதன்பின் தோணி யேறிக்கொண்டு திருக்கோண மலைக்குப் போவோம்." என்று கண்கள் கலங்கச் சொன்னாள்.

தாயின் கலக்கத்தைக் கண்ட முத்தனுங் கலங்கினான். தன்தாயை உண்ணாமல் தின்னாமற் பட்டினி கிடக்கவிடுதல் முத்தனுக்குப் பிரியமல்ல. "ஐயோ, என்னைப் பெற்றபாவி பட்டினியுங் கிடக்கப் போகிறாளே, ஆண்பிள்ளை என்று நான் இருந்துகொண்டு என் ஆத்தாளைப் பசிகிடக்க, வருந்தவிடலாமா! இந்தப் பாதகம் என்னைத்தானே வந்து சூழும்; பசுபதீசுரர் இந்தச் சின்ன வயதில் என்னை இப்படிச் சோதிக்கத் தொடங்கினால் யார் நின்றுபிடிப்பார்? மார்க்கண்டேயர், சண்டேசர், சம்பந்தர் என்னு மிவர்களும் என்போற் சிறுவர்கள்

தாமே? அவர்களுக்கு மேலான வழியைக் காட்டிய நீ உயிர்களுக்கெல்லாம் தலைவனென்று பசுபதியெனப் பெயர் படைத்த நீ, நானும் உன் பிள்ளைதானே, எனக்கு ஒரு ஐந்து ரூபாவுக்கு வழிகாட்ட உன்னால் முடியாதா? ஏன் ஒருகண் மூடி ஒருகண் விழிக்கிறாய்; சுவாமி! என்னைப் பெற்றவள் பட்டினிகிடக்க நான் சகிக்கமாட்டேன். நீ செய்கிறதைச் செய்'' என்று முத்தன் தன் வீட்டிற்கு அயலிலுள்ள சிவன்கோயிற் சந்நிதானத்தில் நின்று தெய்வத்திற்கு முறையிட்டு விட்டுக் கவலையோடு தெரு வழியே போனான்.

வேலாயுதம்பிள்ளை அந்த ஊரிலே ஒரு பெரிய மனுஷன்; குலங்குடியிற் பிறந்தவர்; செல்வஞ் செல்வாக்கோடு கூடியவர்; தருமசிந்தனை யுடையவர்; சமயாபிமானம் பூண்டவர்; சைவப்பிள்ளைகள் அந்நிய மார்க்கப் பள்ளிக்கூடங்களிலே படித்துச் சமயாபிமானங் கெட்டு ஈற்றிலே சிலர் தம் மதத்தை விட்டு அந்நிய மதத்திற் சேர்வதைக்கண்டு மனம் பொறாராய், தாமாகவே ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையைத் தனியே தொடங்கி ஏழைப் பிள்ளைக ளிடத்துக் கல்வி வேதனமும் பெறாமல் நடத்தி வருபவர்; அவருடைய பள்ளிக்கூடம் இன்றும் நன்கு நடைபெறுகிறது; அவரை எல்லாரும் நன்கு மதித்து நடப்பார்கள்; குடும்பத்தில் ஒரு பிணக்கு வந்தாலும், வேறு கலகஞ் சண்டை நேர்ந்தாலும் அந்தப் பெரியவருக்கே அவர்கள் வந்து முறையிடுவார்கள்; அப்படியான பிணக்குக்களை யெல்லாம் அவர் தீர்த்துச் சமாதானமாக்கி விடுவார். அப்படிப்பட்ட அந்தப் பிரபு தமது வீட்டில் தெருப் பக்கமாக வுள்ள தலைவாசலில் ஒரு சாய்மணை நாற்காலியிற் சாய்ந்தபடி ஏதோ புதினப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார்; கோயிலிலிருந்து அந்த மார்க்கமாக வந்த முத்தன் அவரைக் கண்டமாத்திரத்தே தெருவில் நின்றபடி "இந்த ஐயாவை எல்லாரும் நல்லவர் பெரிய

வர் என்று சொல்லுகிறார்களே; இவரைக் காணவே என் பிதாவின் நினைவு வருகிறது; இவரிடத்தில் ஒரு ஐந்து ரூபா தரும்படி உள்ளதைச் சொல்லிக் கேட்டால் நிச்சயமாகத் தருவார்; ஆனாலும் கேட்கக் கூச்சமாக விருக்கிறதே'' என்று சிறிது நேரம் யோசித்தான்.

இப்படி நிற்கும்போது ஒரு பக்கமாகத் திரும்பிப் பார்த்த வேலாயுதம்பிள்ளை முத்தன் நிற்பதைக்கண்டு "முத்து! வா வா'' என்றார். முத்தன் சமீபத்திற் போய் விநயமாக நின்றான். "மகனே! நீ இப்பொழுது என்ன செய்கிறாய்; உங்கள்பாடுஞ் சங்கடந்தான்; உன் தகப்பனார் இருந்த செல்வஞ் செல்வாக் கென்ன! பெருமையென்ன! அப்படிப்பட்ட பெரியவனுடைய பிள்ளைக்கு இப்படி வந்துவிட்டது! சரி, என்ன செய்யலாம்! வாழ்வுந் தாழ் வும் உலகத்தில் எங்கு முண்டு; ஏன் நிற்கிறாய், உப் படி இரு'' எனலும், "இல்லை ஐயா, நான் இப்படி நிற்கிறேன்'' என்று சொல்லிவிட்டு முத்தன் பின்னரும் கவலையுடன் நிற்கக்கண்ட வேலாயுதம்பிள்ளை "முத்து, என்னிடஞ் சொல்லக் கூசாதே; உனக்கு நான் ஏதும் உதவி செய்வதானாற் சொல்லு; நான் செய்கிறேன்; என்ன வேணும்'' என்று பரிவுடன் கேட்டார். முத்தன் தன் வரலாறு முழுவதையுஞ் சொல்லி "ஐயா, நானும் என் தாயும் திருக்கோணமலைக்குப் போக நினைத்திருக் கிறோம், தோணிக்காசு கொடுக்க வகையில்லை; நீங்கள் ஒரு ஐந்துரூபா தந்தால் பெரிய உதவியா யிருக்கும்; ஐயா, போன இடத்தில் ஏதும் பிழைப்புக் கிடைத்தால் உங்கள் பணத்தைத்தான் முதலில் அனுப்பி வைப் பேன்; இல்லாவிட்டால் எனக்குப் புண்ணியத்திற்குத் தந்த தென்று எண்ணிக் கொள்ளுங்கள்'' என்றுகவலை யுடன் சொன்னான். "மகனே முத்து, நீ கவலைப்படாதே; நான் நீ கேட்கும் பணந் தருகிறேன்; மேலுந் தேவை யானாற் கேள், தருவேன்; நான் தரும் பணத்தை நீ எனக் குத் திருப்பித் தரவேண்டாம்'' என்று சொல்லிவிட்டு

அந்தப் பெரியவர் எழுந்து உள்ளேபோய் 6 ரூபா எடுத்துக் கொண்டுவந்து முத்தன் கையிற் கொடுத்து "நீ சுகமே போய்வா, நீ நல்லாயிருப்பாய்'' என்று ஆசி சொல்லிவிட, முத்தனும் அவரை நமஸ்கரித்துக்கொண்டு மீண்டான்.

முத்தன் மனச் சந்தோஷத்தோடு தன் வீட்டிற்குத் திரும்பிவந்து, தாயிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு நடந்ததைச் சொன்னான்; தாயும் மகனும் ஒரு நல்ல நாட் பார்த்துத் திருக்கோண மலைக்குப் புறப்பட்டனர். தோணி மார்க்கமாகப்போய் இருவரும் துறைமுகத்தில் இறங்கினார்கள்; அந்தவூர் அவர்களுக்குப் புதியது; எல்லாம் வேற்று முகமாகக் காணப்பட்டன. துறை முகத்தி லிருந்து சிறிதுதூரம் நோக்கமும் மார்க்கமும் குறியாது போனார்கள்; வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் புலப் படுதலும், அங்கேசென்று அங்குள்ள திருமடத்திற் போயிருந்தார்கள்; அதன்பின் செய்வதின்னதென அவர் களுக்குத் தெரியவில்லை. இருவருக்கும் பசி அதிகம்; திருமடத்துக் கிணற்றிற்றானே பல்துலக்கிக் கால்முகங் கழுவிக்கொண்டு சந்நிதானத்திற்குப் போதலும், அங்கே அறுமுகத் தெய்வத்திற்குக் காலைப்பூசை நடக்குஞ் சமய மாக விருந்தது; கோபுரவாசலில் விபூதி எடுத்துப் பூசிக்கொண்டு அடியவர் இடர்தீர்க்கும் அறுமுகப் பரம் பொருளுக்குத் தங்கள் குறையை முறையிட்டுத் தாயும் பிள்ளையும் வணங்கினர். பூசை முடிந்தபின் கோயிற் குருக்கள், குலத்திற்குரிய குணம் பூண்டவர்; தமிழ் சம்ஸ்கிருதம் இரண்டும் நன்கு பயின்றவர்; வந்த விருந் தோம்பி வருவிருந்தை எதிர்பார்த் திருப்பவர்; தெய்வ பக்தி யுள்ளவர்; அந்தணரென்று எவருஞ் சொல்லத் தக்கவர். எந்தநேரமும் பூரண ஆநந்தத்தோடு கூடியவர்; விபூதிப்பிரசாதம் முதலியன வழங்கும்போது இவ்விருவருக்கும் வழங்கினர்.

இவர்கள் அவ்வூருக்குப் புதியவர்களா யிருப்பதை மாத்திரம் குருக்கள் அவதானித்தார். கோயிலுக்கு வந்தவர்க ளெல்லாரும் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு போய்விட்டார்கள்; இந்த இருவர்மாத்திரம் சந்நிதானத்திலே யுள்ள மண்டபத்திற் கவலையோடிருந்தார்கள்; கோயிற் கரும மெல்லாம் முடித்துக்கொண்டு தம் வீட்டிற்குப் புறப்பட்ட குருக்கள், இவ்விருவரும் ஆங்கிருப்பக்கண்டு அவர்க ளிருக்கு மிடத்திற்குப்போய், "எந்தவூர்? எங்கு வந்தீர்கள்?" என்ற வினக்களை அன்புடன் வினவ, அவர்கள் தங்களுடைய வரலாறு முழுவதையும், தெய்வத்திற்கு முறையிடுவார் போற் குருக்களுக்குச் சொன்னார்கள்; குருக்கள் அவர்களைப் போசனஞ் செய்தற்குத் தம் வீட்டிற்கு வரும்படி அழைக்க, தையலம்மை "சுவாமீ! கேட்டது பெரிய காரியம்; எங்களுக்குப் பசி ஆற வேறு வசதியிருக்கிறது; குறைநினைக்க வேண்டாம்; வேணுமானால், என் பிள்ளையை மாத்திரங் கூட்டிக்கொண்டு போய் ஏதுங் கொடுங்கள்" என்று பணிவுடன் சொன்னாள். "அதைப்பற்றிக்காரிய மில்லை, நீரும் உண்ணலாம்; பிராமணர்க ளிடத்தில் உண்பதில் ஒரு குறைவும் வராது; அல்லாமலும் கோயிற் பிரசாதம்...." என்று குருக்கள் பின்னருங் கேட்க, தாய் மகனுடன் அங்குப்போய் உணவுண்டனள். மடத்தின் ஒரு அறையில் அவர்கள் இருப்பதற்கான சௌகரியங்களை யெல்லாம் குருக்கள் செய்வித்து வைத்தார்.

சிலநாட்களாக, அவ்விருவரும் அம்மடத்திலிருப்பதும் கோயிலின் தொண்டு செய்வதும் கோயிற் பிரசாதம் பெற்று உண்பதுமாக விருந்தார்கள். அவர்களுடைய நடையையும் ஒழுக்கத்தையும் நல்ல வார்த்தையையுங் கண்டு, குருக்களும் அயலிலுள்ளவர்களும் அவ்விருவரும் நல்ல குலங் குடியிற் பிறந்தவர்க ளென்பதையும், நல்லாயிருந்து கெட்டு நொந்தவர்க ளென்பதையும் அறி

மானத்தினல் அறிந்து கொண்டார்கள். "குலத்தளவே யாகுங் குணம்" என்றும், "சாதி சொல்லால் அறியலாம்" என்றும் பெரியோர் பாடியிருக்கிருர்களல்லவா? இப்படி அவர்கள் அங்கே சௌகரியமாக விருந்தாலும், வந்து சிலநாட் சென்றும் இன்னும் ஒரு முயற்சி கிடைக்கவில்லையேயென்று முத்தன் கவலேப்பட்டான்; ஆனல் அவன் தன் கவலையைத் தாயறியாதவாறு நடந்து கொள்வான்; "ஐயோ! கந்தசுவாமீ! திரைகடலோடியுந் திரவியந்தேடு என்றதை நினைத்து, அந்தவூரிலிருந்து உன்னுடைய இந்தவூருக்கு என்னைப் பெற்றவளையுங் கூட்டிக்கொண்டு வந்தேன்; மோட்ச வழியைக் காட்டுகிற நீ, நான் பிழைக்க ஒரு வழியைக்காட்டவொண்ணுதா? ஐயா! முருகா! எங்களைக் கடைக்கண் பார்" என்று அழுதழுது அந்தப் பெருமான் சந்நிதியில் முறையிட்டான்.

ஒருநாள் முத்தன் தன் தாயிடம் அநுமதி பெற்றுக் கொண்டு திருக்கோணமலைப் பட்டினத்தைப் பார்க்கப் புறப்பட்டுப் போனன். அவன் தன்னுடன் வந்தவனேடு கடைவீதியைப் பார்த்துக்கொண்டு போகும்போது, அங்கு ஒரு பெரிய கடைவைத்திருக்கும் வியாபாரியொருவர், கடையில் இருந்தபடி கைகாட்டி முத்தனை அழைத்தார். முத்தன் உடனே அவரிடம்போய் மரியாதையோடு நின்ருன். "தம்பீ, நீர் யாழ்ப்பாணமல்லவா" என்று அந்த வியாபாரி வினவ, "ஓம், அண்ணே," என்று முத்தன் விடை சொன்னன். அந்த வியாபாரி முத்தனுடைய ஊர், பெயர், பரம்பரை முதலியவைகளை யெல்லாம் விசாரிக்க, முத்தனும் ஒன்று மொழியாமல் அவைகளை யெல்லாஞ் சொன்னன். அந்த வியாபாரி முத்தனையும், கூடவந்த ஆளையுஞ் சற்று நேரம் இருக்கச் செய்து, முத்தனைப்பார்த்து "தம்பி, உன்னை எனக்கு இப்பொழுது நல்லாய் விளங்குகிறது; உன் தகப்பனுரை நான் நன்கு அறிவேன்; அவருடைய பிள்ளை உனக்கா இக்

கதி வந்தது? நானும் யாழ்ப்பாணத்தவன்தான்; உங்களுக்கு அயலூரில் இருப்பவன்; நீ தயவுசெய்து பின்னேரம் 4 மணிக்கு மேல் இன்றைக்கே தவறாமல் வந்து என்னைக் காணவேணும், போய் வாரும்," என்று சொல்லி அவர் ஆதரவுடன் முத்தனை அனுப்பிவிட்டார். முத்தன் இன்னும் தான் பார்க்க விரும்பிய சில இடங்களைப் பார்த்துக் கொண்டு விரைவாக மீண்டு தாயிடம் போய் நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாஞ் சொன்னான். தாயும் "ஏதோ கந்தசாமியார்தாம் எங்களுக்குத் துணை" என்று சொல்லிவிட்டுச் சிறிது ஆறுதலுடனிருந்தாள். பின்னேரம் நாலுமணிக்கு முந்தியே முத்தன் தன் தாய்க்குச் சொல்லிவிட்டு அந்த வியாபாரியிடம் போனான்; வியாபாரி "தம்பீ, நீ என்னுடைய கடையில் இருக்க விரும்புவாயோ" என்று கேட்க, முத்தன் ஆம் என்றான். "நாளைக்கு நல்ல நாள், வீட்டிற்குப் போய் உன் தாயிடஞ் சொல்லிச் சம்மதங் கேட்டுக்கொண்டுவா; சம்பளம் முதலியவைகளைப்பற்றி யோசிக்க வேண்டாம்; நீ பெரிய இடத்துப் பிள்ளையென்பது எனக்குத் தெரியும்; அதற்குத் தக்கபடி நடத்திக்கொள்ளுவேன்" என்று சொல்ல, முத்தன் அடுத்த நாட் காலை தான் வருவதாகச் சொல்லிவிட்டுத் தாயிடம் மீண்டான்.

அடுத்தநாட் காலை குறிக்கப்பட்ட நேரத்திற்கு முத்தன் கடைக்குச் செல்லுதலும், அங்கே முதலாளி தன் கடையிலுள்ள பிரதான கணக்கப்பிள்ளைக்கு முத்தனை இன்னானென விளங்கப்படுத்தி அவனையும் கடையில் வேலை கொள்ளும்படி சொல்ல, அப்படியே அவன் செய்தான். முத்தன் வறுமையின் கொடுமையை உள்ளபடி உணர்ந்தவனாதலினாலும், குலத்திற்குத் தக்க ஒழுக்கமுடையவனா யிருத்தலினாலும் தன் கடமையை நேர்மையோடும் விசுவாசத்தோடும் பார்த்து வந்தான். முதல் மாசம் முடிய முத்தனுக்கு ஐந்து ரூபா வேதனம் கொடுக்கப்பட்டது; அதைக் கொண்டுபோய்த் தாயிடம் கொடுத்தான். பிள்ளையின் உழைப்பைத் தாய் முதன் முதல்

வாங்கி அதில் ஒரு சிறு தொகையைக் கந்தசாமி கோயிலுக்கு நிவேதனத்திற்குக் கொடுத்துவிட்டு எஞ்சிய பணத்தைத் தன் செலவிற்கு வைத்திருந்தாள். முத்தனுடைய ஒழுக்கமான நடை, நேர்மை, ஆதரவான பேச்சு, சிக்கனம் முதலியவற்றைக் கண்டு அந்தக் கடையிலுள்ளவர்கள், கடை முதலாளி, கடைக்குப் பொருள்பண்டம் வாங்க வருவோர், அயலிலுள்ள கடைக்காரர் எல்லாரும் அவனிடத்திற் பிரியம் பாராட்டி நடந்தார்கள். முதலாளியும் முத்தனிடத்தில் விசேஷமான நம்பிக்கை வைத்துக் காலத்திற்குக்காலம் அவனுடைய வேதனத்தை ஏற்றிக் கொடுத்துவந்தார். அவனிடத்தில் அன்புடையவராய் எல்லாரும் அவனை முத்தன் என்று கூப்பிடுவதைவிட்டு முத்து என்று அழைத்து வருவாராயினர். முத்து கடையிற்சேர்ந்து ஆறு ஏழு வருஷங்கள் கழிந்துவிட்டன.

கால கதியில் முத்துவே அந்தக் கடையிற் பிரதான கணக்கப்பிள்ளையானான். முதலாளி தான் பிறந்தவூராகிய யாழ்ப்பாணத்தில் வந்து நிற்கும் காலங்களிலும் முத்துவே கடையை நடத்தி வருவான். முத்துவுக்குச் சம்பளமும் முப்பது ரூபாவிற்கு மேற்படவுண்டு. முதலாளி கணக்கில், கடைத்தெருவுக்குச் சமீபமாகத் தாயும் மகனும் இருக்கும்படி ஒரு வீடு "குத்தகைக்கு" எடுத்துக் கொடுக்கப்பட்டது; முதலாளி பலவூர்களிலும் போய்ச் சரக்குகள் வாங்கி அனுப்ப, முத்துவே அங்கிருந்து கடையைநடத்தி வருவானாயினன்.

அந்தக் கடையின் முதலாளிக்கு ஒரே யொரு மகள்; அவள் பெயர் தனலட்சுமி; முதலாளி தன் ஏக புத்திரியை நல்ல முறையிற் கல்வியூட்டி வளர்த்து வந்தான். அவள் மங்கைப் பருவம் அடைந்த பின், அதிக சீதன முண்டென்ற காரணம்பற்றிப் பல பகுதிகளிலிருந்து அவளுக்கு மணம் பேசி வந்தார்கள். ஆனாலும் தகப்பன் தன் பிள்ளைக்கு வயசு கொஞ்சமென்றும், சில வருடம் கழித்

துக் கல்யாணம் செய்து வைப்பதே தன் நோக்கமென்றுஞ் சொல்லிக் கடத்தி வந்தான். முத்துவினுடைய குலங் கோத்திரம் தன் குலங் கோத்திரத்தைக் காட்டிலும் சற்று மேலானதென்பதையும் அவன் அறிவான்; முத்துவின் குண ஒழுக்கங்களையும் அனுபவத்தில் நன்கு அறிந்து கொண்டான். தன் மகளை முத்துவுக்கு மணமுடித்து வைப்பதனுல், தாங்களும் சாதியில் ஏறலாமென்று அவன் நினைத்துக்கொண்டு ஊரில் வந்து நின்றபோது, முத்துவின் மரபு ஒழுக்கம் முதலியவைகளையும் தனது நோக்கத்தையும் மனைவிக்கு வெளியிட்டான். அவளுஞ் சந்தோஷத்துடன் அதற்கு உடன்பட்டாள். ஆனுல் முத்துவின் தாய் இந்தச் சம்பந்தத்திற்குச் சம்மதிப்பாளோ வென்ற சந்தேகம் புருஷனுக்கும் மனைவிக்குமிடையே யிருந்தது. முத்துவுக்கு அக்காலத்தில் வயசு இருபது வரையிலாய் விட்டது. முதலாளியின் மகளுக்கும் பதினறு வயசு வரையிலிருக்கும். முதலாளி தன் கடையில் வந்து நிற்கும் போது, முத்து கடையிலிருக்க அவனுடைய தாயிடம் போய்ப் பல கதைகளையும் பேசிவிட்டு ஈற்றில் தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டான். அதனைக் கேட்ட மனுஷி சந்தோஷப்பட்டு முதலாளியைப் பார்த்து, "அண்ணே, அவன் இனிமேல் உன்னுடைய பிள்ளை, உனக்கு எது இஷ்டமோ அதைச்செய்து வைக்கலாம்; நீ செய்து வரும் நன்மையை நாங்கள் சாகும் வரையில் மறக்க மாட்டோம்" என்ருள். இதனைக் கேட்ட முதலாளி யுள்ளத்திற் பெருஞ் சந்தோஷம் பிறந்தது. மனுஷி ஓம் சொன்ன பிறகு முதலாளி, முத்துவைத் தன் மருகன் போலவே மதித்து நடத்தி வருவானுயினன். ஆனுலும் தனது உள்ளக் கிடக்கையைத் தன் மனைவிக்குக் கடிதமூலமாகத் தெரிவித்தானே யொழிய வேறு எவருக்கும் வெளியிட்டானல்லன். கடைக்குப் பொருள்வாங்க வருவோரும், அயலிலுள்ள கடைக்காரரும் முத்து என்று சொல்வது கௌரவமல்லவென எண்ணிப் போலும் அவனை முத்துக்குமாரு

என்று அழைக்கத் தொடங்கினர்கள். முதலாளி கொண்ட நோக்கத்தைத் தாய் தன் பிள்ளைக்குச் சொன்னபோது "அம்மா, எல்லாம் இந்தக் கந்தசுவாமியின் திருவருளின் படி நடக்கும்" என்று சொன்னான்.

மணம்பேசி ஒருவருடமளவில் விவாகத்திற்கு நாள் நிச்சயிக்கப்பட்டது. முதலாளியெனிலோ தான்பிறந்த ஊரிலும் வியாபாரஞ் செய்யும் ஊரிலும் அதிக செல்வஞ் செல்வாக்குடையவன்; ஆதலினல், விவாக விஞ்ஞா பனத்தை அச்சிட்டுத் தன் சுற்றமித்திரர் அயலார் முத லிய எல்லார்க்கும் அனுப்பினன். அந்த விஞ்ஞாபனத் தில், இன்ன இடத்திலுள்ள எனது இல்லத்தில், இன்ன தேதியில், இத்தனை நாழிகையில்வருஞ் சுபமுகூர்த்தத்தில், செல்வச் சிரஞ்சீவி வ. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைக் கும், எனது ஏகபுத்திரி சௌபாக்கியவதி தனலட்சுமி யம் மாளுக்கும் விவாகஞ் செய்து வைக்கத் திருவருளை முன் னிட்டுப் பெரியோர் நிச்சயித்திருப்பதால்............என்றிருப் பக் காணப்பட்டது. விவாகம் யாழ்ப்பாணத்தில் முதலாளி யின் இல்லத்திற்றனே மிக்க ஆடம்பரத்தோடு விதிப்படி இனிது நிறைவேறியது. மூன்று நாட்களாகப் பலவகை யான கொண்டாட்டங்கள் நடைபெற்றன. தம்பதிகள் இறைவனருளால் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழ்வாராயினர். முதலாளியும் தனக்கு ஒரே யொரு மகளாதலினல், தன் நிலம் புலம் கடை வீடுவாசல் பொருள்பண்டமெல்லாவற்றையும், தனக்குந் தன் மனை விக்கும் சீவியங்கண்டு, மகளுக்குச் சீதனமாக எழுதிக் கொடுத்துவிட்டான்.

விவாகம் முடிந்தபின் சிலகாலம் மாமன் கடையை நடத்த, முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை தாயாருடன் ஊரி லேயே தமது மனையாள் வீட்டில் இருந்தார். கல்யாண வீட்டின் முன் சிலரும், பின்பலரும் இந்த முத்துக்குமார சுவாமிப்பிள்ளைதான் பழைய வல்லிபுரத்தின் மகன்

முத்தன் என்பதை அறிந்தார்கள். பலர் அவனுடைய நிலைமையைப்பற்றிச் சந்தோஷப் பட்டார்கள்; சிலர் பொறாமைப் பட்டார்கள். அவனை முந்திப் புறக்கணித்து நடத்திய இனசனத்தவரும் முறை பேசிக்கொண்டும், சொந்தம் பாராட்டிக்கொண்டும் முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை வீட்டிற்குப்போய்க் கொண்டாடுவாராயினர். அவருடைய சுற்றத்தவர்களுட் செல்வத்தோடிருந்த சிலர் மாத்திரம் "முத்தன் சீதனத்திற்காகச் சாதிவிட்டு இறங்கி விட்டான்" என்று தங்களுட் பேசிக்கொண்டனரேனும், அவன் வீட்டிற்குப்போய்ச் சமபந்தி வகித்தல் மாத்திரஞ் செய்யாது கொண்டாடி வந்தனர். முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் எங்கே சென்றாலும், அவருக்கு மரியாதை செய்தல் முதலிய உபசாரங்க ளெல்லாம் நடந்தன; வயசில் இளையவர்கள் மாத்திரமல்லாமல், மூத்தவர்களும் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையை வழிதெருவிற் கண்டால் தங்கள் சால்வையைத் தாழ்த்துதல், செருப்பைக் கழற்றி விட்டு ஒதுங்கிநிற்றல், "முதலாளி வாருங்கள்" என்று சொல்லுதல், எப்பொழுது வந்தீர்கள் என்று கேட்டு முப்பத்திரண்டு பல்லையும் காட்டி நமஸ்காரஞ் செய்தல் முதலிய உபசாரங்க ளெல்லாஞ் செய்தார்கள். அந்த நேரத்தில் முத்தனுக்கு நடந்த நடப்பு அவன் மாமனுக்குத்தானும் இல்லையென்று சொல்லலாம்.

ஆனால் முத்துக்குமார சுவாமிப் பிள்ளையில் ஒரு நூதனமான செயல் காணப்பட்டது; எவர் தம்மைக் கண்டு மரியாதை செய்தாலும், முத்துக்குமார சுவாமிப் பிள்ளை உடனே அவருக்கு "ஓம் நான் சொல்லுகிறேன்" என்று சொல்லி வந்தார். இப்படி இவர் சொல்வதற்கு நியாயம் என்னவெனப் பலர் அறிய விரும்பினாலும் அவரை நியாயங்கேட்க எவருந் துணியவில்லை; முத்துக் குமாரசுவாமிப்பிள்ளையும் ஒவ்வொருநாளும் வீட்டிற்கு மீண்டு போனவுடன், தமது பணப் பெட்டகத்தைத்திறந்து

ஏதோ "முணுமுணு"ப்பார்; இப்படி அவர் செய்வதை மனைவி இடையிடையே கண்டனளேனும், அவள் நியாயங் கேட்க நினைக்கவில்லை. இவர் இப்படிச் செய்து வருகிறாரென்பதை ஊர் முழுவதும் அறிந்தது. ஊரவர்கள் தங்களுள், அவர் இப்படிச் சொல்லுகிறாரே, சொல்வதன் நோக்க மென்ன என்று கலந்து பேசிக்கொள்வார்கள்.

முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையின் கல்யாணத்தில் வேலாயுதம் பிள்ளையும் சமுகமாயிருந்தவர்; வேலாயுதம் பிள்ளைக்குத் தாம் கடமைப்பட்டவ ரென்பதை முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை மறந்துபோகவில்லை; ஒருநாள் நமது பிள்ளையவர்கள் ஒரு தொகைப் பணத்தை எடுத்து மடியுள் வைத்துக்கொண்டு வேலாயுதம் பிள்ளையைக் காணும்படி அவர் வீட்டிற்குப் போனார். அவர் வரவைக் கண்ட வேலாயுதம்பிள்ளை "முதலாளி வாரும், வாரும், இப்படி உட்காரும்" என்று சொல்லி அயலே உள்ள ஒரு நாற்காலியைக் காட்டினார். ஆனால் வந்தவர் அப் படிச் செய்யாமல் அந்தப் பெரியவருடைய முன்னிலையில் விழுந்து கும்பிட "சே, சே, உது என்ன வேலை" என்று சொல்லி வேலாயுதம்பிள்ளை அவரைக் கையிற்பிடித்து எழும்பச் செய்தார். முதலாளி கண்களில் நீர் பெருக ஒரு புறத்தே விநயமாக ஒதுங்கிநின்று "ஐயா, நீங்களே எனக்குத் தாய் தந்தையும் குலதெய்வமும் ஆவீர்கள். உங்கள் புண்ணியத்தினாற்றான் நான் இப்பொழுது நல்லாயிருக்கிறேன். நீங்கள் அந்த நேரத்திலே எனக்குத் தந்துதவிய ஆறுரூபாவும் எனக்கு அறுநூறு ரூபா வுக்குச் சரி. ஆனதால் இப்பொழுது அறுநூறுரூபா கொண்டுவந் திருக்கிறேன். நீங்கள் அரைச்சதமேனும் வாங்கமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனாலும் உங்கள் பள்ளிக்கூடத் தருமத்திற்கு நான் தரும் இந்த அற்ப பணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உங் களைப் பணிந்து கேட்கிறேன்" எனக்கூறிக் குறித்த தொகையை வேலாயுதம்பிள்ளை முன்னிலையில் வைத்தார்.

"அப்படியே, நீர் விரும்பிய பிரகாரம் பள்ளிக்கூடத் தருமத்திற்கு உந்தப் பணத்தை உபயோகப் படுத்துகிறேன்" என்று சொல்லிவிட்டு, "முதலாளி, உம்மை ஒன்று கேட்கவிருந்தேன்; இப்பொழுதுதான் ஞாபகத்தில் வந்தது. உம்மை யாரும் மரியாதை செய்யும்போது, ஓம் நான் சொல்லுகிறேன் என்கிறீராமே; அதன் காரணத்தைப் பலர் அறியப் பிரியப்படுகிருர்கள்; நானும் அறிய விரும்புகிறேன். அதை எனக்குச் சொல்ல வொண்ணுதா" என்று கேட்டார்.

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை மிக்க வணக்கத்துடன் "ஐயா, என்னை முதலாளி யென்று நீங்கள்சொல்வது சரியல்ல; முந்திச் சொன்னபடி முத்து என்று சொன்னுற் போதும்; அந்த நியாயத்தை உங்களுக்குச் சொல்லாமல் நான் வேறுயாருக்கு ஐயா, சொல்வது; அந்தக் காலத்திலே என் இன சனத்தவர்களும் ஊரவர்களும் என்னைப் புறக்கணித்து அலட்சியஞ் செய்ததையும், அவைகளைச் சகிக்க முடியாமல் நான் உங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு என்னைப் பெற்றவளையுங் கூட்டிக்கொண்டு தோணியேறித் திருக் கோணமலைக்குப் போனதையும் நீங்கள் அறிவீர்கள்; 'அந்த முத்தன்' இந்த நிலைக்கு வந்த பிறகு, இப்பொழுது அவர்க ளெல்லாரும் பெரிய மரியாதைகள் செய்கிருர்கள். யோசித்துப் பார்த்தேன்; நான் பழைய முத்தனேதான் ஐயா, இந்த மரியாதைகளும் உபசாரங்களும் எனக்கல்ல, என்னிடத்திலுள்ள பணத்திற்குத்தான் என்பது புலப்பட்டது; ஆனதினுல் யார் யார் மரியாதை செய்கிருர்களோ, அப்படிச் செய்கிறவர்களுடைய பெயர்களை யெல்லாம் அவதானித்து வைத்துக்கொண்டு, வீட்டிற்கு மீண்ட உடனே அங்கிருக்கும் பணப் பெட்டகத்தைத் திறந்து, இன்னின்னுர் இன்றைக்கு உனக்கு மரியாதை செய்தார்கள் என்று தனித்தனி அவர்களுடைய பெயர்களைப் பெட்டகத்தி லிருக்கும் பணத்திற்

குச் சொல்லிவிடுவேன்; இவர்களும் மரியாதை செய்யும் போது எனக்கல்ல என்னிடத்திலுள்ள பணத்திற்குத் தான் என்று விளங்கி யிருப்பதாற்றான், ஐயா 'ஓம் நான் சொல்லுகிறேன் என்று அந்த நேரத்தில் அவர்களுக்குச் சொல்லி வருகிறேன்'' என்றார். இதனைக்கேட்ட வேலாயுதம்பிள்ளை பெருஞ் சிரிப்புச் சிரித்தார். இதனைக் கேட்டவர்க ளெல்லாரும் நினைத்து நினைத்துச் சிரித்தார்கள்.

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை புத்திரப்பேறு முதலாம் சகல சம்பத்துக்களையும் பெற்று, தான தருமங்களைச்செய்து, சத் கருமங்களில் ஈடுபட்டு உழைத்து இனிது வாழ்வாராயினர். அவருடைய தாயும் தனது மகன் வீட்டிற்றானே இருந்து பேரப் பிள்ளைகளையுங் கண்டு சந்தோஷமாக வாழ்ந்தாள்.

பரீக்ஷை வினாக்கள்: 1. முத்தனுடைய தாய் தந்தையர் பெயரென்ன? 2. முத்தனுந் தாயும் வறுமைப்பட்டமைக்குக் காரணமென்ன? 3. சண்முகச்சட்டம்பியாரைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக. 4. தாயும் மகனுந் திருக்கோணமலைக்குப் போனதேன்? 5. முத்தன் செல்வனானது எப்படி? 6. அவன் யாரை விவாகஞ் செய்தான்? 7. செல்வனானபின் முத்தன் பெயர் எப்படி நீண்டது? 8. ''ஓம், நான் சொல்லுகிறேன்'' என்று, அவன் தனக்கு மரியாதை செய்வோர்க்குச் சொல்லிக்கொண்டுவந்த காரணமென்ன? 9. பஞ்சம் போனாலும் பஞ்சத்திற் பட்ட வசை போகாதென்ற கருத்தமைந்த பாட்டைச் சொல்லுக. 10. முத்தன் செல்வஞ் செல்வாக்கையடைதற்கு ஏதுவாக விருந்தது எது?

இலக்கணம்: நுமன், நுமள், நுமர் என்னுங் கிளைப்பெயர்களும், எவன் முதலிய வினாப்பெயர்களும், அவன் முதலிய சுட்டுப்பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப்பெயர்களும், மற்றையான், பிறன் முதலிய மற்று பிற என்பன அடியாகப் பிறந்த பெயர்களும் விளிகொள்ளாப் பெயர்களாகும்.

சிறுபான்மை ஒருவேற்றுமையுருபு நிற்றற்குரிய இடத்தே, வேறொரு வேற்றுமை யுருபு மயங்கி வருதலுமுண்டு; அங்ஙனம் வரின், அந்த உருபைப் பொருளுக்கேற்ற உருபாகத் திரித்துக் கொள்க.

உதாரணம்

1. ஆலத்தினுல் அமிர்தாக்கியகோன், இங்கே ஐயுருபு நிற்றற்குரிய இடத்தில் ஆல் உருபு மயங்கியது.

2. காலத்தினுற் செய்தவுதவி, இங்கே கண்ணுருபு நிற்றற்குரிய இடத்தில் ஆல் உருபு மயங்கியது.

3. நாகுவேயொடு நக்குவீங்குதோள், இங்கே ஐயுருபு நிற்றற்குரிய இடத்தில் ஒடுவுருபு மயங்கிற்று.

4. ஈசற்கு யான் வைத்த அன்பு, இங்கே கண்உருபு நிற்றற்குரிய இடத்தில் கு உருபு மயங்கிற்று.

சூத்திரம்: "யாத னுருபிற் கூறிற்ருயினும்
பொருள்சொல் மருங்கின் வேற்றுமை சாரும்"

ஒரு வேற்றுமைப்பொருள் மற்ருெரு வேற்றுமையுருபுடன் தகுதியாக வருதலு முண்டு.

உதாரணம்:

சாத்தனுேடு சேர்ந்தான், இங்கே செயப்படுபொருள் மூன்றனுருபோடு வந்தது.

மதுரையை நீங்கினுன், இங்கே நீக்கப்பொருள் இரண்ட னுருபோடு வந்தது.

சீகாழிக்கு வடக்குச் சிதம்பரம், இங்கே எல்லைப்பொருள் நான்க னுருபோடு வந்தது.

வழியைச் சென்ருன், இங்கே இடப்பொருள் இரண்டனுருபோடு வந்தது.

இன்னும் இவ்வாறு வருவனவற்றை ஆங்காங்குக் கண்டுகொள்க.

வினு: எட்டாம் வேற்றுமையின் உருபுகள் எவ்வாறு உண்டாகும்? இவ்வுருபுகளின் பொருளென்ன? இவை என்ன வினையைக்கொண்டு முடியும்? உதாரணங்கள் கூறுக; எட்டாம் வேற்றுமைக்குரிய சூத்திரத்தைச் சொல்லுக. விளித்தல், விழித்தல் இரண்டிற்கு மிடையேயுள்ள பொருட் பேதமென்ன?

---

# செய்யுட் பாகம்

## கடவுள் வணக்கம்

அங்கிங் கெனாதபடி யெங்கும்பிர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக் கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்லதொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுஅது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலி செய்கு வாம்.

## குரு வணக்கம்

மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகு
விழிகொண்டு மையல் பூட்டும்
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்க மென்றும்
பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றியிப்
பொய்வேட மிகுதி காட்டிப்
பொறையறிவு துறவீதல் ஆதிநற் குணமெலாம்
போக்கிலே போக விட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகா யதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவாநு பூதி

மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டபின்
வாழ்வித்த ஞான குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

—தாயுமானசுவாமிகள்.

## ஔவையார் பாடல்

(கம்பர்போற் காவியம் பாடவல்லார் வேறெவருமில்லை யென்று சோழன் சொன்னபோது ஔவையார் பாடியது)

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் — யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது. (1)

(பழக்கத்தால் வருவனவும் உயர்பிறப்பா லுள்ளனவும்)

சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப் பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (2)

(நல்லவழியிற் செலவிடாப் பொருள் வீணே கெடும் என்பது)

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் — வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண். (3)

(ஔவைப்பிராட்டிக்கு அமுதூட்ட விரும்பி, இல்வாழ்வா னொருவன், பிராட்டியைத் தன்னில்லத்திற் கழைத்துக்கொண்டுபோய் உபசரித்து உணவு பரிமாறும்படி தன் பெண்டாட்டிக்குப் பணிக்க, அவள் உள்ளன்பும் இன்சொல்லு மின்றி உணவு பரிமாறியதை அவதானித்த ஔவையார் பாடியது)

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே — வீணுக்கென்

என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லாள் இட்ட அமுது. (4)

(இல்லத்திற் கிசையாப் பெண்டிருடன் வாழ்வதைக் காட்டிலும் துறவறம் நன்றென்றமை)

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி இருக்கலாம் — சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள். (5)

(தனக்கடங்காப் பெண்டிருடன் வாழ்விலும், நெருப்பில் வீழ்ந்து தற்கொலை செய்வது நன்றென்று கணவனுக்குத் தெருட்டியமை)

சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்ணென்று கொண்டாயே — தொண்டர்
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர். (6)

(சிலம்பி யென்னுந் தாசி கொடுத்த பணம் போதாதென்று பாதி பாடி மற்றைப் பாதியைப் பாடாமற் கம்பன்விட்ட வெண்பாவை ஔவையார் அவள் அன்போ டளித்த கூழைக் குடித்துவிட்டுப் பூர்த்திசெய்தமை)

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே — பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு. (7)

(கூழுக்குப் பாடியென்று ஔவையாரைக் கம்பன் அவமதித்துச் சிலேடையாக அடியென்று பாடியபோது, கம்பரை நிந்தித்துப் பிராட்டி பாடியது)

எட்டேகா லட்சணமே யெமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே — முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னா யடா. (8)

(இன்னதைக் காட்டிலும் இன்னது நன்றெனல்)

ஏசி யிடலில் இடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று — நேசமிலா

வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று. (9)

(ஈயாதான் இருந்தென்ன இறந்தென்ன, அவன் வாழ்க்கையாற் பயனில்லை)

பாடல் பெறுனே பலர்மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்கள் நாடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரிற்
கவிந்தென்ன மலர்ந்தென்ன காண். (10)

(கற்றது அற்பம், கற்கவேண்டிய பல, ஆதலாற் கல்விச் செருக்குக் கொள்ளற்க என்பது)

கற்றது கைம்மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிருள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண். (11)

(கொடியது எது என்று முருகக்கடவுள் வினவியபோது ஔவையார் பாடியது)

கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற அவள்கையி லுண்பது தானே. (12)

(இனியது எதுஎன்ற வினவிற்கு விடை)

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே. (13)

(பெரியது எதுஎன்ற வினாவிற்கு விடை)

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின் றோன்
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறு மண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே. (14)

(அரியது எதுஎன்ற வினாவிற்கு விடை)

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமும் தான்செய்த லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. (15)

(இவை வீணவை என்பது)

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபம் நன்
ஞுடில்லான் செங்கோ னடாத்துவதும்—கூடும்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டிர்
விருந் தில்லா வீடு விழல். (16)

(மூர்க்கரைச் சீராக்க முடியா தென்பது)

ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்த்த வசமாமோ—நீலநிறக்

காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கரைச்சீ ராக்கலா மோ. (17)

(அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் ஒரு கவியில் விளக்கியது)

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. (18)

(இன்னின்னார் நீங்க இன்னின்ன உடன் நீங்குமென்பது)

தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்(வு)
உற்றா ருடன்போம் உடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம். (19)

(இந்த இந்த நாடுகளில் இன்னின்ன வளம் உண்டென வகுத்துப்பாடியது)

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து. (20)

## தமிழ்மொழியின் பெருமை

(இதுவும் அடுத்தகவியும் சிவஞானசுவாமிகள்பாடிய காஞ்சிப் புராணத் துள்ளவை)

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார். (21)

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ. (22)

(இக்கவி பரஞ்சோதியார் பாடிய திருவிளையாடற் புராணத்துள்ளது)

கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச் சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ. (23)

(இது சுப்பிரமணிய பாரதியார் பாடல்)

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்!
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். (24)

## காளமேகப்புலவர் பாடல்

[இப்புலவர்வரலாற்றை விநோதரசமஞ்சரிமுதலிய நூல்களிற் கண்டுகொள்க]

(திருமால்கொண்ட அவதாரம் பத்தினையும் ஒருகவியிற்பாடுக எனஅதிமதுர கவிசொன்னபோது, அதற்கு ஒரு வெண்பாவேண்டா, பாதியிற்பாடு கிறேன்என்று காளமேகப்புலவர் பாடியது)

மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையி லுன்சென்மம் இயம்பவா — மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய். (25)

(அதிமதுரகவி முதலாம் புலவர்கள் இராசிகளையும் அவற்றின் வைப்புமுறை யையும் கொள்கையையும் ஒரு வெண்பாவில் வைத்துப் பாடுகஎன்ற போது காளமேகம் பாடியது)

பகருங்கால் மேடமிட பம்மிதுனங் கர்க்க
டகஞ்சிங்கங் கன்னி துலாம் விர்ச் — சிகந்த
நுசுமகரங் கும்பமீ னம்பன்னி ரண்டும்
வசையறு மிராசி வளம். (26)

(மும்மூர்த்திகளின்பெயர், நிவேதிக்குங்கறி, அமுது, அவர்கள் பரிக்கும் படை, பூணுவன, வாகனங்கள், எழுந்தருளியதானங்கள் ஆகிய இவைகளை ஒரு வெண்பாவில் அமைத்துப் பாடும்படி கேட்டபோது, காளமேகம்பாடியது)

சிறுவன் அளைபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல் — பொறியரவம்
வெள்ளேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழும் பூவே கறி. (27)

(ஈஏற மலைகுலுங்கிய தென்றமையைப் பாடும்படி கேட்டபோது பாடியது)

வாரணங்க ளெட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால் — நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னாலடித்த
புண்வாயி லீமொய்த்த போது. (28)

(குடத்திலே கங்கையடங்கியதாகப் பாடும்வண்ணம் கேட்டபோது பாடியது)

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும் — பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும். (29)

(ஒன்று தொடக்கம் பதினெட்டுமுடிய அடைமொழி யொன்றுமின்றிப் பாடும்படி கேட்க, பாடியது)

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறே ழெட்டொன்
பதுபத்துப் பதினொன்று பன்னிரண் — டேபதின்
மூன்றுபதி னான்குபதி னைந்துபதி னாறு
பதினே ழுபதினெட் டு. (30)

(கடல்நடுவிலே துகள் எழுந்ததாகக் கற்பனைசெய்து பாடவேண்டுமெனக் கேட்டபோது பாடியது)

சுத்தபாற் கடலி னடுவினிற் றூளி
தோன்றிய வதிசய மதுகேள்
மத்தகக் கரியை யுரித்தவன் மீது
மதன்பொரு தழிந்திடு மாற்றம்

வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள்
விழுந்துநொந் தயர்ந்தழு தேங்கிக்
கைத்தல மலரால் மார்புறப் புடைத்தாள்
எழுந்தது கலவையின் செந்துள். (31)

(ஆனைக்கும் ஆமணக்குக்குஞ் சிலேடை பாடும்படி கேட்டபோது பாடியது)

முத்திருக்குங் கொம்பசைக்கும் மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கும் நேராக் குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம். (32)

(யானைக்கும் வைக்கோலுக்குஞ் சிலேடை பாடும்படிகேட்க, பாடியது)

வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம். (33)

(பாம்பிற்கும் எள்நெய்க்கும் சிலேடையாகப் பாடும்படி கேட்க, பாடியது)

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது. (34)

(பாம்புக்கும் எலுமிச்சம் பழத்திற்குஞ் சிலேடையாகப் பாடியது)

பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். (35)

(மலைக்கும் சந்திரனுக்குஞ் சிலேடையாகப் பாடியது)

நிலவாய் விளங்குதலால் நீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று—தலைமேல்
உதித்து வரலால் உயர்மா மலையை
மதிக்குநிக ராக வழுத்து. (36)

(தேங்காய்க்கும் நாய்க்குஞ் சிலேடையாகப் பாடியது)

ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங்குலை தனக்கு நாணாது — சேடியே
தீங்காய தில்லை திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுமிணை செப்பு. (37)

(மீனுக்கும் பேனுக்கும் சிலேடையாகப் பாடியது)

மன்னீரி லேபிறக்கும் மற்றலையி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையாற் — சொன்னேன்கேள்
தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரையில்
மீனும்பே னுஞ்சரியா மே. (38)

(ஆட்டக் குதிரைக்கும் காவிரி யாற்றிற்குஞ் சிலேடையாகப் பாடியது)

ஓடுஞ் சுழிசுத்த முண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் — நாடறியத்
தேடு புகழான் றிருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே. (39)

(கீரைப் பாத்திக்கும் ஏறு குதிரைக்குஞ் சிலேடையாகப் பாடியது)

கட்டி யடிக்கையாற் கான்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால் — முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே. (40)

(ஆட்டிற்கும் குதிரைக்குஞ் சிலேடைபாடியது)

கொம்பிலையே தீனிதின்னுங் கொண்டதன்மேல் வெட்டுதலால்
அம்புவியின் அங்கடைய தாதலால் — உம்பர்களும்
தேடுநற் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆடுங் குதிரையுநே ராம். (41)

(துப்பாக்கிக்கும் ஓலைச் சுருளுக்குஞ் சிலேடைபாடியது)

ஆணி வரையுறலால் ஆனகுறிப் பேதரலால்
தோணக் கருமருந்தைத் தோய்ந்திடலால் — நீணிலத்திற்
செப்பார்க் குதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாக்கி யோலைச் சுருள். (42)

(வானவில்லுக்கும், திருமாலுக்கும், வெற்றிலைக்கும் பொருளமையப் பாடியது)

நீரி லுளதால் நிறம்பச்சை யாற்றிருமால்
பாரிற் பகைதீர்க்கும் பான்மையால் — சாருமனுப்
பல்வினையை மாற்றுதலால் பாரீர் பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை. (43)

(பூசினிக்காய்க்குஞ் சிவனுக்குஞ் சிலேடையாகப் பாடியது)

அடிநந்தி சேர்தலால் ஆகம் வெளுத்துக்
கொடியுமொரு பக்கத்திற் கொண்டு — வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனால்
பூசினிக்காய் ஈசனெனப் போற்று. (44)

(பச்சைவடம் பாகு சேலை சோமன் என்னும் பதங்கள் அமையப் பாடும்படி ஒருவர் கேட்டபோது பாடியது)

மாயன் துயின்றதுவும் மாமலராள் சொல்லதுவும்
ஏய குருந்திற்கொண் டேறியதும் — தூய
இடப்பாகன் சென்னியின்மே லேறியதும் பச்சை
வடப்பாகு சேலைசோ மன். (45)

(பொன்னுவரையிலை பூ காய் என அமைத்துப்பாடும்படி கேட்டபோது பாடியது)

உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் றன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப் — படுத்ததுவும்
அந்நா ளெறிந்ததுவும் அன்பி னிரந்ததுவும்
பொன்னு வரையிலைகாய் பூ. (46)

(பிள்ளையாருக்கும் முருகவேளுக்குஞ் சிவனுக்கும் சிலேடையாகப் பாடியது)

சென்னிமுக மாறுளதாற் சேர்கரமுன் னாலுகையால்
இன்னிலத்திற் கோடொன் றிருக்கையால் — மன்னுகுளக்
கண்ணுறுத லானுங் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணரனு நேராவ ரே. (47)

(பாம்புக்கும் வாழைப்பழத்திற்குஞ் சிலேடை)

நஞ்சிருக்குந் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது — விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம். (48)

(சிவபிரான், முருகவேள், விநாயகர், திருமால், சிவனடியார் என்னுமிவர்கட்குத் தனித்தனி ஆறுதலை என்னுஞ் சொன்னயம் அமையப் பாடும் வண்ணம் கேட்டபோது பாடியது)

சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானதே — சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தாநின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார். (49)

(காஞ்சி ஏகாம்பரநாத சுவாமியைச் சொப்பனத்திற்கண்டு அசதியாடிய தலைவியின் கூற்றாகப்பாடியது)

நேற்றிரா வந்தொருவன் நித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றூரா னென்று விடாயென்றேன் — ஆற்றியே
கஞ்சிகுடி யென்றான் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்றான் மறைந்து. (50)

( "கின்னரி வாசிக்குங் கிளி" என்றமைத்துப் பாடும்படி ஒருவர் கேட்டபோது பாடியது)

ஆடல்புரிந் தானென்றும் அந்நாளி லேமூவர்
பாடலுகந் தானென்றும் பான்மையினாற் — கூடலிலே
நன்னரிவா சிக்கு நடைபயிற்றி னானென்றும்
கின்னரிவா சிக்குங் கிளி. (51)

( திருவண்ணாமலையி லிருந்த சம்பந்தாண்டான் என்னும் பிரபு சவுரஞ் செய்வித்துக்கொண்டிருக்குஞ் சமயத்திற் காளமேகம் அவனிடம்போக, சமயமறியாமற் புலவர் அங்குவந்ததையிட்டு அவன் வெறுப்புற்று "ஓய் புலவரே, 'மன்' என்று தொடங்கி 'மலுக்கு' எனமுடியும்படி ஒரு பாட்டுப் பாடும்" என்று அலட்சியமாகச் சொல்ல, அகத்திற் சீற்றங் கொண்ட புலவர் வினாவிடையாகப் பாடியது)

மன்னுதிரு வண்ணா மலைச்சம்பந் தாண்டாற்குப்
பண்ணு தலைச்சவுரம் பண்ணுவதேன் — மின்னின்
இளைத்தவிடை மாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு. (52)

( "கரி" என்றுதொடங்கி "உமி" என முடித்துப் பாடும்படி ஒருவர்கேட்ட போது பாடியது)

கரியதனை யேயுரித்த கையா வளையேந்
தரியயற்கும் எட்டாத ஐயா — பரிவாக

அண்டரெல்லாங் கூடி யமுதங் கடைந்தபொழு
துண்டகஞ்சை யிங்கே யுமி. (53)

(முக்கால் முதல் கீழரை வரை பின்னஎண்கள் அமைய, கச்சிஏகாம்பரநாத சுவாமிக்குத் தோத்திரமாக ஒரு வெண்பா பாடுக எனக் கேட்டபோது பாடியது)

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன் — விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது. (54)

(நாகபட்டினத்துள்ள தாசி யொருத்தியின் சங்கீதத்தை நிந்தித்துப் பாடியது)

வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான்கண் டேன்கண்டே னென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார். (55)

(கடைமொழி மாற்றாகப் பாடியது)

மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கான் எண்ணெய்விற்பான் வண்ணான்
பரும்புடைவை தப்பும் பறை. (56)

கட்டளைக்கலித்துறை

(பதினாறு பேறுகளையும் ஒரு கவியில் அமைத்துப் பாடியது)

துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவுதனம்
அதிதா னியஞ்சவு பாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை யறங்குலம் நோயின்மை பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே. (57)

(நடராசப் பெருமான்மீது நிந்தாஸ்துதி பாடியது)

வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பா லடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை யம்பல வாணற்கோ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோவிங்ங னேயெளி தானதுவே. (58)

## சத்திமுத்தப் புலவர் பாடல்

[பாண்டியராச னொருவன் தன் சபையிலுள்ள புலவர்களை நோக்கி நாரைப் பறவையின் அலகிற்குச் சிறந்த உபமானஞ் சொல்லும்படி கேட்க, அப் புலவர்கள் தக்க ஒப்புச்சொல்ல அறியாது மயங்கினர்; அந்தநாளிரவில் நகர்சோதனையின் பொருட்டுச் சென்ற பாண்டியன், தன்னகரிலுள்ள பாழடைந்த பள்ளிக்கூட மொன்றின் பக்கலிற் போதும்போது, வறுமையின் கொடுமையினாற் பொருள் தேடும்படி வந்த புலவர், அந்தப் பாழடைந்த பள்ளிக்கூடத்திலிருந்து தம்மைப் பீடித்த வறுமையை நினைந்து கீழ்வரும் பாட்டைப் பாடினாரெனவும், அதனைக் கேட்ட பாண்டியன் தான் அறியவிரும்பிய உவமை அந்தப் பாட்டிற் செறிந்திருப்பதை யுணர்ந்து, ஓடிச்சென்று புலவரைப் பாராட்டி யழைத்துத் தன் மாளிகையிற் கொடுபோய்ச் சேர்த்து உபசரித்துச் சந்மானஞ் செய்து அவருடைய வறுமையை நீக்கினானென வும் வரலாறுண்டு. இதன் விரிவை விநோதரச மஞ்சரி முதலிய நூல்களிற் காண்க.]

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின் எம்மூர்ச்
சத்தி முத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையதுகொண்டு மெய்யது பொத்திக்
காலதுகொண்டு மேலது தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டன மெனுமே. (59)

## இரட்டையர் பாடல்

[இரட்டையர் ஒருதாய்வயிற்றில் ஏககாலத்திற் பிறந்த சகோதரரென்றும், முடவராகிய தமையனாரைக் குருடராகிய தம்பியார் சுமந்துசென்று பொருளிரக்து மியல்புபூண்டவர்களென்றும், தம்பியார்பாடும் விரு

விற்குத் தமையனார்பதில் பாடுவதென்றுஞ் சொல்வர். சிதம்பரத்திற் சென்று ஒரு லோபியிடம் பொருளிரந்தபோது, அந்தலோபி ஈயாமை கண்டு அவனை நிந்தித்து இருவரும் பின்வரும் பாட்டைப் பாடின ரென்ப.]

மூடர்முனே பாடல் மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா—ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனா னால்.

---

# அரிச்சந்திர புராணம்

## நகர்நீங்கிய காண்டம்

[இச் செய்யுட்கள் ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திர புராணத்துள்ள நகர்நீங்கு காண்டத்திலிருந்து தொகுக்கப்பெற்றன; அரிச்சந்திர மகாராசன் தனக் குரியனவாயுள்ள நாடுநகர் செல்வம் அதிகாரம் முதலிய எல்லாவற்றையுங் கௌசிக முனிவரிடம் கொடுத்து தனது தேவியோடும் மகனோடும் அயோத்திநகரைவிட்டு நீங்கிக் காசியை நோக்கிச் சென்ற வரலாற்றைக் கூறுவனவாகும்; அரிச்சந்திர புராணத்தைப் பாடிய புலவர் வீரகவிராய ரெனவும் சொல்லப்படுவர்; இவருடைய பாக்கள் இலகுவான சொற்களால் அமைந்தன, படிப்போர்க்கு இனிமை பயப்பன; உள்ளத்தை உருக்கு மியல்பின; சந்தவின்பம் அமைந்தன; மாணவராற் பெரிதும் விரும்பிப் படிக்கப்படுவன]

அறுசீர் விருத்தம்

தலம்முழுதும் தவமுனிவன் தனக்களித்தேம் இனியுறைதல் தகுதி அன்றென்(று), இலகுமணி மண்டபமும் எழில்மணிச்சிங் காதனமும் இழந்து போந்து, பலஅரசருடன் அமைச்சர் அழு துடன்போய்ப் பரதவிக்கப் பதாதி மொய்க்கக், குலமகனும் மடமயிலும் முன்னடக்கப் பின்னடந்தான் கொற்ற வேந்தன். (61)

தொடைதுறந்து முடிதுறந்து பணிதுறந்து துடிமுரசந் துறந்து தாமக், குடைதுறந்து வெண்கவரிக் குழாம்துறந்த கரிபரிதேர்க் குலந் துறந்து, கடைதுறந்து மறுகணைந்த காவலன்தன் திருமுகத்தைக் கண்டோர் எல்லாம், அடையமனம் அழிந்துருகி அவரவரே முகத்தில்அறைந் தழுவாரானார். (62)

மயிரோடும் சிறைஇழந்த போகில்போல் வேலியொடு வரம்பி ழந்த, பயிரேபோல் காம்இழந்த கரியேபோல் பொறி யிழந்த பாவை யேபோல், உயிரேபோய்ப் பரதவிக்கும் உடலே போல் மத்தால்உள் உடைந் தலம்பும், தயிரேபோல் தளர்ந் தலைந்து தத்தமக்கு நிகழ்ந்தஎல்லாம் சாற்ற லுற்றார். (63)

கொடிமீது செறிதேரும் குஞ்சரமும் பொன்சிவிகைக்குழா மும் இன்றிப், படிமீது நடந்திடவும் படித்தனவோ பார்வேந் தன் பாதம்! என்பார்; அடிமீது தொழும்அரசர் முடிமீதும் மடிமீதும் அன்றிச் சுட்ட, பொடிமீது நடந்திடவும் பொறுத் தனவோ குலக்குமரன் பொன்தாள்! என்பார். (64)

அஞ்சாயல் மடஅன்னத் தணிதூவி அதனுலும் அனிச்சத் தாலும், பஞ்சாலும் பதைபதைக்கும் பதத்தாட்குக் கால் நடையோ பலித்த தென்பார்; செஞ்சாலிக் கோசலமும் இராச குல வளநாடும் தேவர் நாடும், அஞ்சாமற் காத்தருள்எம் பெருமானுக் கிதுவோவந் தடுத்த தென்பார். (65)

'முல்லைமுகை நகையாளும் முடிவேந்த னும்மகனும் முழு தும் போன, எல்லையெலாம் மணஅறையும் மலர்அணையும் உண் டோ!' என்றிரங்கி வீழ்வார், 'தொல்லைவிதிப் பயனுலே வந் திரந்த மாமுனிவன் சொன்ன எல்லாம், இல்லையெனு தீந்தோ ருக் கித்தனையோ பெறும்பேறென் றேங்கி வீழ்வார். (66)

வல்லார்க்கும் மாட்டார்க்கும் மறமேநன் றென்றுரைப் பார்; மறம்நன் ருமோ?, அல்லார்க்கும் குழல்மடவீர்! அறமே நன் றென்றுரைப்பார்; அதுநன் ருகில், நல்லார்க்கும் தீயார்க் கும் எல்லார்க்கும் ஒருமையினுல் கடவா தென்னே?, எல்லார்க் கும் உளதாகில் எங்கோனுக் கிலையான தென்னே!' என்பார். ()

கொண்டிருந்த வளநாடும் குறையாத பெருந்திருவும் கொடித்திண் தேரும், பண்டிருந்த மாளிகையும் பரிசனமுந் தமக்களித்துப் பால னேடும், வண்டிருந்த தாரானும் வாள்நுத லும் வறியோர்போல் வனத்தே போகக், கண்டிருந்தும் விலக் காத கௌசிகனுர் தம்மனமும் கல்லோ!' என்பார். (68)

செம்மையினுல் உலகமெலாந் தனக்களித்துச் செறிவனத்தே தேம்பிச் செல்வோர், தம்மைவர வழைத்திருத்தி ஒருமனைக்குத்

தலம்சாயாத் தறுகண் பாவி, நம்மையெலாம் காத்தளிக்க வல்ல வனே! எனக்கரங்கள் நடுக்கி மாறு, வெம்மையினல் வெய் துயிர்ப்பார்; 'மின்னுமல் இடிவந்து வீழ்ந்த' தென்பார். (69)

என்றலமந் தனைவோரும் வயிறலைத்து விழுந்தேங்கி இரங் குங் காலே, கன்றினெடும் பிடியினெடும் கிளேயினெடும் வனம் புகுதும் களிறே போல, 'இன்றளித்த அருள்முனிவர்க் கேற் றனவோ ஏற்றிலவோ!' என்று ஏங்கிக், குன்றனைய மதில் கடந்தே தனிநடந்து சரையுவினைக் குறுகினனே. (70)

உரைபெறுசீர் இரவிகுலத் தரசர்க்கு வழிவழியே உரிமை யாய, சரையுளனும் தாதி 'அரிச்சந்திரற்கு வந்த வினை தானே தென்று, விரைமலர்த்தாள் பூண்டுகிடந் தரற்றிடவும் இழிந் தேகி விரைந்து போய்மேல், கரைஅணுகி விரிமணலில் விரிமலர் கள் சொரியுநறுங் காவிற் புக்கான். (71)

வரைக்கனக புயத்தினன்அம் மலர்க்காவில் விரிமணல் மேல் வந் திருந்தான், விரைக்கரும்பூங் குழலாளும் திருமகனும் இரு பாலும் வீற்றிருந் தார், திரைக்கடலுட் பொருனெனப்போய்ச் செங்கதிரோன்சென் றனன்; அச்சென்ற காலே 'உரைப்பனவும் விளப்பனவும் அறிதும்'என முனிவனும்வந் தொளித் திருந்தான்.

அக்காலத் தமைச்சரெலாம் அடல்வேந்தன் அடிபோற்றி, 'அரசே! நீமீண்(டு), எக்காலம் எழுந்தருள்வ தென்றுரைக்க ஆங்கவரை இருகண் நோக்கி, முக்காலங் களும்உணரும் முனிவ னுக்கின் றியான்கொடுத்த மூதூர் தன்னில், எக்கால மும்வருவ தில்லே' என்றான்; அமைச்சரெலாம் ஏங்கி வீழ்ந்தார். (73)

முன்செய்த தீவினையோ, முனிசெய்த உபகாரம் முன்னுண் டாகப், பின்செய்த கைம்மாறே, பேரரசு கொடுத்தகன்று பெருங்கா டெய்த?, மின்செய்த நெடுவேலாய்! மெய்த்தவனே யாம்துறந்து விட்டே மாகில், என்செய்வான்?' எனஉரைப் பார்; 'யாம்போதும் அவன்போருக் கெதிர்க்க', என்பார். (74)

'தோல்வந்து மார்பில்மலர்த் தொடைஎந்தத் தருப்பை முடிச் சுருக்கத் தோடே, கோல்ஏந்தும் குறுங்கைகதிர் வேல் ஏந்தக் கனகமுடி கோட ரத்தின், மேல்ஏந்தி இருடிஇருந் துல

காள அவன்குடைக்கீழ் வீணே அன்னான், கால்வந்தி வாழ்வ தில்யாம் கனல்மூழ்கல் அமையும்', எனுக்கட்டு ரைப்பார். (75)

'சடைபிடித்துங் கரம்பிடித்துந் தாள்பிடித்தும் மரஉரியால் தகைந்து டுத்த, உடைபிடித்தும் ஈர்த்தவனை உயர்வனத்தில் இப்பொழுதே ஓட்டு கின்றோம்!, மடைபிடித்த வயல்சூழும் வள நாடு நீபுரக்க வருவாய்!' என்று, படைபிடித்த மலர்க்கரத்தால் பதம்பிடித்து விறல்வேந்தர் பணிந்து வீழ்ந்தார். (76)

'படிபுரக்கும் மன்னவன்கேட் டிருகரத்தாற் செவிபுதைத் துப் 'பாவம் அந்தோ!, குடிகெடினும் உயிர்கெடினும் கொடுத் ததுவாங்கேன்!' என்று கூறும் எல்லே, கடிபொழிலிற் கரந் திருந்த கௌசிகனும் வந்தெதிர்ந்தான்; கண்ட போதே, அடி யிணைதன் முடிசார்த்தி இருகரத்தால் உறப்பூண்டான் அரசர் கோமான். (77)

'வெய்தாரீ வேடுவரால் விலங்கனைத்தும் கொல்வித்தாய்; வெகுண்டே னத்தை, எய்தாய்; என் மக்களையும் இசைகேட் டுத் துரந்தடித்தாய்; இன்றும் என்னை வைதாய்; நீஎனக்களித்த மண்டலத்தை யான்தரநீ' வாங்காயாகில், செய்தாய் இன்றிவர் உரைத்த தீமைஎல்லாம், என்னமுனி செப்பினனே. (78)

'சிறுத்தவர்கள் அறியாமற் செய்தபிழை அத்தனையும் செவ்வி யோய்! நீ, பொறுத்தருளா யாமாகில் பொறைஎன்னும்? முறை என்னும்? புலமை என்னும்?, ஒறுத்திடினும் வெறுத்திடினும் உனக்களித்த அரசுரிமை ஒருகாலத்தும், மறுத்தினியான் வாங் கேன்', என்றெடுத் துரைத்தான் மன்னன்; முனி வாட்ட முற்றான். (79)

'பொன்கேட்கப் பொன்னளித்தான், புவிகேட்கப் புவி யளித்தான்; போதா தென்று, என்கேட்கி னுந்தருவ தில்லை எனும் புன்மைஇவ னிடத்தில் இல்லை, முன்கேட்ட பொருளாலே மொழிவழுவந் தெய்தும்; அதுமுடக்க மானல், பின்கேட்டார் இகழ்வார்கள்; யாம்பொறுத்தும்;' எனநினைந்து பேச லுற்றான்.

'ஒன்றுரைக்க நீகேளாய் உண்மைக்கும் வண்மைக்கும் உரி யோய்! என்னை, இன்றுரைத்த பிழைபொறுத்தேன்; 'அழல் வேள்வி முடித்திடுதற் கீவேன்,' என்றங் (கு), அன்றுரைத்த

பொருளதனை அளிப்பாயோ அளியாயோ அரச!' என்றான், என்றுரைத்த கௌசிகனை அடிதொழுது வாய்புதைத்தங் கிது ரைப்பான். (81)

'உன்னுடனே உரைத்தபொருள் உனக்கடியேன் உகந் தளித்த உரிமைச் செல்வம், தன்னுடனே போனதெனா உணர்ந் தேன்ஆ யினும்முனிவால் தருவல் என்றோ, நின்னுடனே யான் உரைத்த சபதமினி மாறுவனோ? நீஆள் விட்டால், பொன் னுடனேதருவன்,' என்றான்; புகரோனை ஆவனழைத்துப் பொருத்தி னானே. (82)

உள்ளியதீ வினைஅனைத்தும் தனித்திருத்தி வகைவகையே உரைத்து 'நீபோய், அள்ளியிடும் பொருள்கவரா தானையின்மேற் கவண்சிலைபோம் அளவுத்தந்தாற் கொள்ளுதி', நீ பின்போன கூலியையும் பெறுதியெனாக் கூறித்தீய, வெள்ளிதனை உடன்கூட்டி டும் அழைத் தொருவாய்மை விளம்ப லுற்றான். (83)

'துன்றுபசிக் கடகுகனி தேடும்போ(து) எனக்கினிய சோறு வேண்டும்,' என்றுமொழி; தந்திடினும் ஏலாது 'வேண்டா' என்; இவன்ஊண் பெற்றால், 'அன்றுபொருள் தருமுன்உணற் ககலேன்நில் எனத்தடு; நம்அவதி வந்தால், நின்றவரைக் கரி குறித்து மறுதினத்தில் நில்லாமல் நீவா' என்றான். (84)

'அடுத்திருத்தி மனம்கலக்கி 'முனிக்களித்த மொழிமாறி 'அளியேன்' என்னா, எடுத்துரைக்கில் உன்அரசை யான்வாங் கித் தருவேன்'என்; இசைந்தானாகில், தடுத்தழைத்து வருதி; நமக்கதுபோதும்' எனப்பலவும் சாற்றிக் கூட்டி, விடுத்தனன்; விட்டரசனுக்கு விடைகொடுத்து மாமுனிவன் மீண்டு போனான்.

முனியேக மன்னவனும் முரிநெடுஞ் சேனைதனை 'முனிவன் தன்னோ(டு), இனிஏகும்; அவற்கினியார் எனக்கினியார்' என, அழுதங்கியாரும் மீண்டார், பனியேகு முனம்எழுந்து பைந் தொடியும் மன்னவனும் பாலன் தானும், தனியேகக் கண்டமைச் சன் சத்தியகீர்த்தியும் அவர்கள் தம்பின் சென்றான். (86)

வருகின்ற மந்திரியை மன்னவனும் கண்டுவிழி வழிநீர் வார, உருகினிய அன்பினுடன் 'நீபோந்தால் மறைமுனிவற் குறுநர் உண்டோ?, அருகிருந்து புவிநடத்த நின்போல்ஆங் கறிவுடையார்

யாரும் இல்லை, திருநகர்க்கே மீண்டேகென் றுரைத்திடலும் அமைச்சர்பிரான் செப்ப லுற்றான். (87)

'கோதிலாப் பெருங்குணத்தாய்! குற்றேவல் இந்நெடுநாள் கொடியேன் செய்தேன், ஆதலால் நீஏகும் அருஞ்சுரத்தில் பணித்தபணி ஆர்தான் செய்வார்?, மாதரார் உடன்ஏக மகன் ஏக நின்னுடன்யான் வாரேனாகில், ஏதிலான் ஆனேன் நான்!' என்றிடியே றுண்டமரம் என்ன வீழ்ந்தான். (88)

இடிவீழ்ந்த மரம்போல வீழ்ந்தரற்றும் மந்திரியை எடுத்து மேனிப் பொடிதுடைத்து முடிதடவிப் பொழிவிழிநீர் தனைமாற் றிப் பொருமல் ஆற்றி, 'கடிநகரில் இவனைவிடில் உயிர்விடுவன்' எனக் கதறிக் கலங்கிக் 'காமர், வடிவமுங்க மனங்கருக உயிர் நடுங்க வருந்தேல்; நீ வருதி' என்றான். (89)

கலிவிருத்தம்.

'வாழ்வினைவ ளர்ந்தபொழு தென்னின்மிக வாழ்ந்தாய்;
தாழ்வினைநி கழ்ந்தபொழு தென்றனொடு தாழ்ந்தாய்
சூழ்வினைந மைக்கடிது சுற்றின்அவை எல்லாம்
ஊழ்வினை,' எனச்சொலி உடன்கொடு நடந்தான். (90)

நண்பினொடு மின்புரிசை நன்னகரை நோக்கி
விண்புலம் எழுந்தமதில் வேலிதனை நோக்கித்
தண்புனல் வழங்கிடுத டங்களையும் நோக்கிக்
கண்புனல் சொரிந்தழுது காரிகைந டந்தாள். (91)

பாதகம லங்கள்பத றப்பதற வைத்துக்
காதலிந டந்தநடை கண்டரசர் கோமான்,
'தாதனருள் இப்படி இருந்ததென நக்கான்;
ஆதபன்அ முன்றெழும்அ ருஞ்சுரம்அ டைந்தார். (92)

அந்தநெடு வெஞ்சுரம்அ முன்றெழுதல் கண்டே
மைந்தனைஎ டுத்துமதி மந்திரிந டந்தான்;
பைந்தொடிப டும்பரிசு கண்டுயிர்ப தைத்தே,
'வந்தெனது தோளின் இவர்வாய்,' எனஉரைத்தான். (93)

'பூமகளும் மண்மகளும் ஏறுதல்பொ ருமல்
மாமுனிவ னுக்குறஅ ளித்தநின்ம ணித்தோள்

நாமகெடு வேல்இறைவ! நாயின்இகழ் பெண்பால்
ஆமெளியள் ஏறின்நர காழ்ந்தழிவன்', என்ருள். (94)

'என்றுமயில் கூறிட,இ ரங்கிஎறும் மன்னன்
நின்றுதளர் வெய்தி; விழிநீர்உகஉ யிர்த்து,
'மன்றல்சொரி கின்றகுழல் வல்லிஅணையாய் நிற்(கு)
என்றும் உளதிந்தஅறி வென்றழுது சென்ருன். (95)

நீரும்இலை, நெட்டிலையின் நீழல்இலை; நீள்பேய்த்
தேரதனை நீர்எனந டந்தடிசி வந்தார்;
வேரிநெடு வெந்தமர நீழலை விரும்பிச்
சேரினும்அ டர்ந்தரவு சீறிஎழும் அன்றே. (96)

காவலவன் அப்பரிசு கண்டுகைஅ றைந்தே.
யாவர்எழு பாரின் இது பட்டவர்கள்! என்னு
மூவரையும் நோகிலன்; அம் முனிவனையும் நோகான்;
தேவரையும் நோகிலன்; முன் தீவினையை நொந்தான். ()

மைதிகழ்கு றும்பொறைவ னத்திலிழி மால்யா (று)
எய்தி, அதன் வண்துறைஇ ழிந்துபுனல் உண்டு,
கைதவம்நி னைந்து. மிளிர் கண்கலுழி சிந்தப்
பெய்தமணல் வண்டலிடை பேதையொடிருந்தான். (98)

அந்தஅம யத்தடவி யும்பொழிலும் நண்ணி
வந்தடிவ ருந்தியவ ருத்தம் உணராமல்,
கந்தமொடு காய்கனி கவர்ந்தருகு வந்தே
மந்திரியும் மன்னவன்முன் வைத்தடிப ணிந்தான். (99)

அக்கணம்எ டுத்திறைவன் அக்கனியுள் எல்லாம்
மிக்கனதெ ரிந்துமறை விப்பிரன்முன் வைத்தே
தக்கனஉ ரைத்தெனது சஞ்சலம் உணர்ந்தே
இக்கனிஎ டுத்தினித ருந்தெனஇ சைத்தான். (100)

கோச்சகக் கலிப்பா,

'நீயும் முனியும் நிகழ்த்துநெறி முன் உணர்ந்து
தோயும் தயிர்நெய்பால் சோற்ருே டருந்தாமல்
காயும் கிழங்கும் கனியும்இலை யுந்தின்று
வாயும் வயிறும் வளர்க்கிலேன் மன்னவனே!' (101)

என்றுபுகர் இயம்ப, ஏங்கிக் குலை குலைந்து,
நின்று மொழிகுளறி, நெஞ்சடைத்து, வாய்புலர்ந்து
சென்று பணிந்து, திருக்கரத்தால் தாள்பூண்டு,
குன்றுஞ்சிலையுங் கரைந்துருகக் கூறலுற்முன். (102)

'நாடும்நகரும் முனிக்களித்து நான் அறியாக்
காடுதிசைநோக்கி வந்தமை நீ கண்டிலையோ?
வாடுந் தமியேன் வருந்திப்போய்ப் பால்அடிசில்
தேடும் பரிசுளதோ செப்பாய்தர' என்முன். (103)

'கன்நெஞ்ச ராய கௌசிகனார் நெஞ்சப்போல்
வன்னெஞ்சோ உன்னெஞ்சும்?' என்ன மயில்உரைத்தாள்,
தன்னெஞ் சுருகிஒரு சற்றே தயையாகித்
தின்னுங் கனியருந்தித் தெண்ணீருந் தான்குடித்தான். (104)

தாமந் திகழ்புயனுந் தையலா ளும்மகனும்
மாமந் திரியும் மலர்க்கரத்தா லேவாங்கித்
தேமென் கனிஅருந்திச் செவ்வாய் வெளுப்பேறத்
தாமும் புனல்அருந்தித் தாரணிமேற் கண்வளர்ந்தார். (105)

[ இதற்கிடையிற் கௌசிகமுனிவன் விருப்பத்தின்படி
விடாமழை பெய்யலாயிற்று ]

'மாறுவதும் இல்லை மழைதான் மறையோனே!
ஆறுபெருகிடுமுன் அப்பாற் படுதும்,' எனச்
சீறும் அரவேபோற் சினந்து, நீர் செல்லும் ஊர்
தோறும் வரஎனக்குக் காரணம்என்? சொல்லுமென்முன். (106)

'எந்நகரிற் புக்கேம்? இடர்வனத்தை விட்டினியோர்
நன்னகரம் சேர்ந்தால், அந்நாளே உனக்கடியேன்
சொன்ன பொருள்தருவேன்; தூயோய்! வருதி' எனு,
மன்னவனும் மந்திரியும் மாதும்அவன் தாள்பூண்டார். (107)

கலிவிருத்தம்

அன்று விடிந்தபின் அத்தலம் விட்டுச்
சென்று செழுங்கனி தின்றயல் நண்ணிக்
குன்று கடந்து குளிர்ந்தம லர்த்தாள்
கன்ற நடந்தணி கங்கைஅ ணைந்தார். (108)

மன்னவ கேள்வினை வந்தது சற்றே;
இன்னம் வரும்வினை எல்லை யிலாத;
முன்னம்உ ணர்ந்து, 'முனிக்களியேன்,' என்(று)
உன்னர செய்துதல் உத்தமம், என்றான் (109)

'நின்பரம் 'ஈந்திலன் யான்,' எனநிற்றல்;
என்பரம் நின்னர செய்தஅ ளித்தல்;
துன்பம்உ ணர்ந்திவை சொல்லல்து ணிந்தேன்;
மின்பயில் வேலவ! மீளுதி,' என்றான். (110)

அந்தணன் அவ்வுரை கூறிட, அண்ணல்
'மைந்தனும் மங்கையும் மற்றுமு ளோரும்
நைந்தெனு டன்தொலை வெய்தினும் நான்முன்
தந்தது மாறிலன்,' என்று தணித்தான், (111)

'சொன்னவை கொள்கிலை; சூழ்வினை எய்தின்
அன்னவை பட்டறி ஆகுல மன்னு!'
என்ன, விடிந்திருள் ஏகலும் ஏகி
மன்னன் நடந்தனன் மற்றவ ரோடும். (112)

## அறுசீர் விருத்தம்

[ இங்ஙனமாக, கௌசிகமுனிவன் அங்கே தோன்றுதல் ]

'எந்தம்நாயக! உனக் கெமர்நெ டும்பிழைஇ ழைத்த னர்கொலோ!
தந்த மாநிதியி னிற்சிலக ரந்துசில தந்த உளவோ!
உந்தம் ஏவல்தவ றிச்சிலர்பி ழைத்தெதிர் உரைத்த னர்கொலோ!
வந்த காரணம் எடுத்தினி துரைத்தருள் வருத்த மறவே.' (113)

[ அதுகேட்ட விசுவாமித்திரர் ]

'இந்த வெங்கடம்அ ணைந்துடல்த ளர்ந்துயிர்இ டைந்தனைஎனு
நொந்த னன்மனது நொந்தபடர் சிந்தனைத ணிந்தி டமுன்நீ
தந்த நாடுநகர் 'தந்ததிலை தந்ததிலை' என்று மொழிதந்(து),
அந்த நாடுதனில் வந்தரசு கொண்டுறைக' என்றருள்செய்தான்.

[ அதற்கு அரசன் கூறுதல் ]

'எந்தம் நல்லுயிரும் என்கிளைஞர் இன்னுயிரும் மன்னுயிர்களும்,
நந்தினும் உடல் பதைக்கர கத்தினில்இ ருத்திவிடினும்,

முந்த அந்தணர்அ றிந்திடமொ ழிப்படிஅ ளித்தபொருளைத்,
'தந்ததில்லை' என உன்றன்எதிர் நின்றுரை செயத்தகுவதோ!.

கடிஞை இட்டபலி யைக்கையில்எ டுத்தடுப சிக்கு நுகரும்
மிடியர் இப்புவியி டத்திலை;எ னக்கிதுவி தித்ததல' என்(று)
அடிக ளிற்காம்இ றுக்கினன்;இ றுக்கிடம றுத்த ரசன்முன்
கடிய சொற்கொடுவி னைக்கவுசி கப்பெயரி னன்க ழறுவான். ()

[ கௌசிகன் பின்னருஞ் சொல்லுதல் ]

'தொக்க பற்பலவி லங்குகள்தொ டர்ந்துடல்பி ளந்து நலியும்;
புக்க இக்குடிஞை யிற்குடிஞை பற்பல பொருப்பு மஃதால்,
இக்க டத்தினில்அ வத்தில்எளி திற்புகுதல் தக்க தலதென்
மக்க ளைத்திரும ணஞ்செய்தும கிழ்ந்து நின்வளம் பெறுதியால்'.

[ அதற்கு அரிச்சந்திரன் கூறுதல் ]

'குக்கிபுக் கதுசெருக் கொடுகு டற்கருவ ருப்பு வரவே
கக்கி விட்டதுபு சிப்பவர்க டற்புவியி டத்தில் உளரோ?
தக்க சொற்றிறம் உரைத்திலைச ழக்கினன்எ னப்பெ யரிடும்
இக்க ருத்தையினி விட்டுவிடு விட்டுவி, டெனக்க ழறினன்.

'இந்த உத்தரம்உ னக்கினிஎ னக்குரைசெ யத்த குவதோ?
வெந்த ழற்குள்எனை விட்டிடினும் வெட்டிவகி ரிட்டு விடினும்,
முந்து வன்பினுடன் என்வயின்மு னிந்தமுனி விற்க டியனேன்
தந்து விட்டபொருள் கொள்வதில்வி ருப்பம்ஒரு சற்றும் இலையே.

'புனித நின்சொலைம றுத்தலில் வெறுத்திடல்பொ றுத்தருள்' எனப்
பனித வழ்ந்தவிழி யன்படி விழுந்தடிப ணிந்து தொழலும்
முனிவெ குண்டிருவி ழிக்கடைசி வப்புறுநெ ருப்பெ ழமுனிந்(து),
இனிவ ரும்பரிசு கண்டிடுக என்றவண்அ கன்ற னனரோ. ()

கலிவிருத்தம்

கன்னியும் மன்னனும் காதல் மைந்தனும்
நன்னதி யமுனைவிட் டேகும் நாளிலே
சென்னியைத் துளக்கிக்கண் சிவந்து கௌசிகன்
வன்னியை வருகென மனத்தில் உன்னினன். (121)

வருகென நினைத்தலும் மலர்த்தண் சூழலில்
இருபிறப் பாளனுய் விரைவின் எய்தியே,
'அருமறை மாதவ! எனைஅ ழைத்தஅக்
கருமமே துரை,' எனக் கனல்விளம்பினன். (122)

கடுநெருப் பின்னணம் பகரக் கௌசிகன்
'நெடுவனம் பொடிபட எரித்து, நீமறித்(து)
அடுதிறல் மன்னனை அடர்ந்து, கோளொடுஞ்
சுடுகென்' உரைத்தனன்; அவனுஞ் சொல்லுவான். (123)

'கற்பினில் மிக்கவள் கன்னி; நன்னெறிப்
பொற்பினன் மன்னன்; யான்சுடவும் போதிலேன்;
வெற்பில்நின் றருந்தவ! வெளிஅ டக்கிநின்
சொற்படி மறுக்கிலேன் சுடுவன்யான்,' என்ருன். (124)

இவ்வகை கேட்டபின் முனிவன் ஏகினன்;
அவ்வழி நீங்கியே அகல எய்திட
வெவ்வழல் மறித்தினி திருக்க வேந்தனும்
நவ்வியன் னளுடன் நடந்து போயினன். (125)

வெறிகமழ் சோலையும் வெற்பும் வெண்திரை
எறிபுனற் பொய்கையும் நீங்கி யேகியே
செறிகழை வனத்திடைச் செல்லச் சேணிடை
பெர்றிகளும் கரும்பெரும் புகையுந் தோன்றின. (126)

கண்டனர், 'புகைவதே தென்'னுங் காலையில்
மண்டலம் வளர்ந்துயர் வானைத் தாவியே
அண்டரண் டங்களும் வெடிக்க ஆர்த்தழல்
மண்டலம் எங்கணும் வளைந்து கொண்டதே. (127)

இடஞ்சிறி திலையென எண்தி சாமுகம்
படர்ந்தன விலங்கெலாம் இரிந்து பாறிடக்
கடந்தஅத் தொகுதியைக் கடிது நாடியே
தொடர்ந்தன எனஅழற் சுடர் எழுந்ததே. (128)

அவ்வழல் வளைந்திட அரசர் கோமகன்;
'இவ்வழல் எவ்வழல்? என்று கூறலும்

செவ்வழல் அயிற்படைச் செல்வ! கேள்'என
வெவ்வழல் அனையநீர் வெள்ளி கூறுவான். (129)

'சண்டவெம் பசியினால் அழன்று தாவியே
அண்டகோ ளத்தினை அடர்ந்த செந்தழல்
மண்டலத் தரசர்தம் மரபில் ஓர்உயிர்
உண்டல தேகில தென்று ணர்த்தினான். (130)

'ஒருவரை ஆருயிர் உண்டு போகில்யான்
ஒருவனே இறப்பன்; நீர்உய்ந்துபோம்,' எனத்
திருவையும் மகனையும் நோக்கிச் செங்கணீர்
வரவர அனல்எதிர் மன்னன் ஏகினான். (131)

புரவலன் அடிகளைப் பூண்டமைச்சன், 'ஓர்
உரையிது கேட்டியான் ஒருவன் நிற்கவே
அரசழி வதுநலன் அன்று, நிற்றிநீ,
விரைவொடு 'கனலிடை வீழ்வல்யான்,' என்றான். (132)

அறுசீர் விருத்தம்

அன்னவை உரைக்க, அண்ணல் அவனைமார் பிறுகப் புல்லி,
'மன்னவர் தம்மை யன்றி மற்றவர் உயிரை உண்ணா(து)
என்னவும் கேட்டேன்; யான்நீ இறக்கினும் இறக்க வேண்டும்;
உன்னுயிர் விடாமல் என்றன் ஓருயிர் விடுதல் நன்றே. (133)

'இருவரும் இறந்தோம் ஆகில் இவரைஓர் பதியிற் சேர்க்க
ஒருதுணை உண்டோ? சொல்லாய், உறுபொருள் உணர்ந்தோய்!' என்னா
மருமலர் நறுந்தார் மன்னன் மறுதலைத் துரைக்கும் எல்லை
திருஎழில் வடமீன் கற்பின் திருந்திழை செப்ப லுற்றாள். ()

'மாந்தரால் இறத்தல் வாழ்தல் மாதரார்க் கென்று மேல்நாள்
ஆய்ந்தநூல் அறிந்தோர் கூறக் கேட்டனன் ஆத லாலே,
வேந்தனை விடாது காத்தி அண்ணல்நீ; யான்இவ் வெந்தீப்
பாய்ந்துயிர் விடுவேன்,' என்னாப் பைந்தொடி முந்திச் சென்றாள்,

அன்னைதான் ஏக மைந்தன் அலறிச்சென் றடிவீழ்ந்(து), 'அன்னாய்!
என்னைநீர் பயந்தீர் உங்கள் இடுக்கணுக் குதவ அன்றோ?

முன்னையூழ் விதியினாலே முந்தயான் தழலில் வீழ்வேன்;
பின்னைநீர் பிழைமின்,' என்றான் பெருகுநீர் அருவிக் கண்ணான்.

தையலாள் அச்சொற் கேட்டுத் தனையனைத் தழுவி மோந்து
'செய்யவாய்ப் பல்வீழ்ந் தில்லாய்! செய்திறம் அறிந்தாய் அல்லை!
ஐய! இத்துணிவும் இந்த அறிவும் எங்கடுத்த?' என்னாக்
கையினால் முகத்தில் மோதிக் கண்ணினால் அருவி சோர்ந்தாள்.

'செய்தவப் பயத்தி னாலே தோன்றிய செல்வ! செய்த
கைதவம் உண்டேல் நம்மைக் கடுங்கனல் கொல்லும்; அல்லால்
உய்தக உதவும்; உள்ளம் வருந்தலை; ஒழிநீ,' என்னா,
மொய்தழல் தன்னைச் சென்று முடுகிநின் றினைய சொல்வாள்.

'மறைவழி கடந்தே மாகில், வருவிருந் திகழ்ந்தே மாகில்,
முறைவழி செய்யே மாகில், மூப்பரை இகழ்ந்தே மாகில்,
பிறர்பொருள் நயந்தே மாகில், பிறர்நலம் கொன்றே மாகில்,
குறைசில செய்தே மாகில் கொல்,'எனக் கனலிற் பாய்ந்தாள்.

'மதுரமென் மொழியாள் கற்பு வளர்நெடு வடவைத் தீயின்
முதிர்தழல் அதுதான் என்னைச் சுடும்,' எனாமுழங்கு செந்தீ
அதிர்குரல் ஆர்ப்பு மாறி அடங்கிநா ஒடுங்கிக் காலைக்
கதிரவன் வரவு கண்ட இருளெனக் கழிந்த தன்றே. (140)

மண்டழல் தணிந்து மூங்கில் வனம்எலாம் வாவி ஆகி
முண்டகங் குமுதம் நீலம் முளரிகள் நிறையப் பூப்பக்
கண்டகம் குளிர்ந்து, கற்பிற் கரசியைப் புகழ்ந்து போற்றி,
வண்டலில் மணிகொ ழிக்கும் வாரண வாசி சேர்ந்தார். (141)

வாரண வாசி நண்ணி, வண்துறை யதனில் மேவி,
ஆரண நெறிநீ ராடி, அந்நதி அகன்று போகிப்
பூரணக் குணமார் மாதும் புதல்வனும் பின்னே போகக்
காரணத் தமைச்ச னோடும் காசிநன் னாட்டைச் சேர்ந்தான். ()

உ

# அரும்பத விளக்கம்

## வசன பாகம்:

### 1 கடவுள்

அண்டப் பகுதியின்...... என்றபாவின் விளக்கம்.

அண்டமாகிய பேருலகின் பகுதிகளின் உருண்டை வடிவமான விளக்கமும், அவற்றின் எல்லையற்ற இயல்புகளும், பல்வகை வளம் பொருந்திய பெருமைமிக்க தோற்றங்களும், அவை ஒன்றிற்கொன்று மேலாகநின்ற எழுச்சியின் வேறுபாடுகளைக் கூறுங்கால், நூற்றொரு கோடிக்கதிகமாக, அளவில்லாமற் பரந்து பெருகியுள்ளன. (அத்தகைய உலகுக ளெல்லாம்) வீட்டினுள்ளே (பலகணிவாயிலாகப்) புகுகின்ற பகலவன் கதிர்களிலே நெருக்கமாகக் காணப்படும் அணுக்களை யொப்பச் சிறியனவென்று சொல்லும்படியாகத் தான் பெரியனாய் விளங்கும் முதல்வன்.

மாயை: மாயாசக்தி, வித்தியாதத்துவங்களுள் ஒன்று.

அன்பும் சிவமும் ...... என்றபாவின் கருத்து.

அன்புவேறு சிவம்வேறு என இரண்டாக வகுத்துச் சொல்வார்கள் நல்ல ஞானமில்லாதவர்கள். அன்பும், சிவமும் ஒன்றா யிருத்தலை அவர்கள் அறியார்கள். அன்பும் சிவமும் ஒன்றென்ற இரகசியத்தை எல்லாரும் உணர்ந்தபின்பு 'அன்பே சிவமாய்' தாமும் அன்பாகிய சிவமயமாய் இனிது வாழ்வார்கள்.

"மெய்தா னரும்பி ...... என்ற பாவின் கருத்து.

(என்னை அடிமையாக) உடையவனே! (நின்பெருங் கருணைத் திறத்தை நினைந்து) உடம்புதானே மயிர்க்கூச்செறிந்து நடுநடுங்க, உனது வாசனை பொருந்திய திருவடிகளை (வணங்குவான்) எனது கைகள் தாமே தலைமேற் கூம்பப் பெற்றுக் கண்களினின்றும் (ஆனந்த) வெள்ளம்நிரம்ப, மனமானது ஆர்வத்தால் வெப்பமுடையதாக, நிலையற்றவற்றின் பற்றுத் தானே நீங்கியொழிய, உனக்கு வணக்கம், வெற்றி வெற்றி வணக்கம் என்றியம்பும் ஒழுக்கத்தையே நழுவவிடாது மேற்கொண்டு நிற்பேன், அடியேனைக் கண் பார்த்து ஏற்றுக்கொள்ளுக.

"பால் நினைந் தூட்டும் ......" என்ற பாவின் கருத்து.

பாலினைக் குழந்தைக்குப் பசிக்குங் காலத்தே அது அழுமுன்னே அறிந்து ஊட்டுகின்ற தாயைப் பார்க்கிலும் மிகவு மிரங்கித் தீவினையே

னுடைய உடம்பை உருகுவித்து உள்ளத்தே அறிவொளியை வளர்த்து வற்றுதவில்லாத பேரின்பமாகிய தேனைப் பொழிந்து இடந்தோறும் உடன் திரிந்த செல்வமே! சிவபெருமானே! உன்னை யான் இடைவிடாது உறுதியாகப் பற்றினேன். இனி என்னைவிட்டு நீ எங்கெழுந்தருளிச் செல்வது?

"ஒன்றுளுமாய்......" என்ற பாவின் கருத்து.

ஈன்றாளுமாய் - பெற்ற தாயுமாய், எனக்கு எந்தையுமாய் - அடியேனுக்குப் பிதாவுமாய், உடன் தோன்றினராய் - உடற் பிறப்பாகிய சகோதரராய், மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் - பிரம விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாய் உலகத்தையும் உலகத்தின்கணுள்ள உயிர்களையும் படைத்துக் காத்தருளுபவராகிய சிவபெருமான், மனத்துள் இருக்க என்றான் - அடியேனுடைய உள்ளத்திற் கோயில்கொண்டருளியிருக்கத் திருவுள மிசைந்தார்; இமையவர்க்கு அன்பன் - தேவர்களிடத்தில் இரக்கமுள்ளவர், தன்னடியோங்களுக்கு - தம்முடைய அன்பர்களாகிய எங்களுக்கு, திருப்பாதிரிப்புலியூர் - திருப்பாதிரிப்புலியூர் என்னும் திருத்தலத்திலே, தோன்றாத் துணையாயிருந்தனன் - வெளிப்படாத ஆதாரமாக இருக்கின்றார்.

"நாடகத்தால்......" என்ற பாவின் கருத்து.

(எம்மை அடிமையாக) உடையவனே; உனது அன்பர்போல (அன்பில்லாதிருந்தும்) அன்புடையார் போல, வஞ்சனையாக நடந்துகாட்டி, அன்பர் வீடு செல்வதற்கிடையே, யானும் முத்தியின்கண் போய்ச் சேர்தற்கு மிக அதிகமாகத் துரிதப்படுகின்றேன். பொன்னின் நலமுடைய மாணிக்க மலை போலும் ஐயனே, உன்போல் எப்போதும் நிகழும் அன்பினை என்நெஞ்சினூடே நிலைபெறவும், அதனால் நெஞ்சமுருகவும் உதவியருளுவாயாக.

"இரவும் பகலும்......" என்ற பாவின் கருத்து.

காவுண்டு எழுசூர்களைய - தேவர்களை ஒருங்கு பிடித்து விழுங்கும் வண்ணம், மாயமாக அந்தரத் தெழுந்த சூரபன்மனை வதைக்கும்படி, கதிர்போல் விரவுஞ் சுடர்வேல் விடுசேவகனே - சூரியனைப் போலச் செறிந்த கிரணங்களைக் காலுகின்ற ஒளியோடுகூடிய வேற்படையை அச் சூரபன்மனுக்கு மாறாகச் செலுத்தியவீரரே, இரவும் பகலும் - அல்லும் பகலும், இருதாள் துதிசெய்து பரவும் பரிசே பரிசாய் அருள்வாய் - தேவரீருடைய இரு திருவடிகளையும் வணங்கிப் போற்றும் பேற்றையே பெரும் பேறாகத் தந்தருளல் வேண்டும் (கந்தரனுபூதி).

## 2 பதுமினி

இராசதானி - அரசனிருக்கும் பட்டினம்; தலைநகர், சைனியம் - சேனை, படை; திறம்பாதவர் - தவறாதவர்; "தையலார் மயலிற்பட்டார் தமக்

கொரு மதியுண்டாமோ'' - பெண்களிடத்து ஆசை வைத்தவர்களுக்கு நல்ல புத்தியில்லையாகும், சித்தப்பிரமை - மயக்கம், மெய்காப்பாளர் - (அரசனுடைய) உடலுக்கு எவ்வகையான தீமையும் நேரவொட்டாது பாதுகாப்பவர்கள்; மெய் - உடம்பு, ''ஒன்னரைத் தேறேல்'' - பகைவரை நம்பாதே, மாற்றன் - பகைவன்; தூர்த்தன் - துஷ்டன்; ஒழுக்கம் கெட்டவன், சேடியர் - தோழியர், சிவிகை - பல்லக்கு, உயிர்ப்பாங்கி - உற்றதோழி, விசுவாசமானதாதி, சமர் - போர்.

## 3 சங்கச் செய்யுளின் பெருமை

ஆர்வம் - விருப்பம், நல்லிசைப்புலவர் - கீர்த்தியோடுகூடிய புலவர்கள், ஒல்கா - குன்றுதலில்லாத, தொல்காப்பியம் - தமிழிற் காணப்படும் பழைய இலக்கணநூல்; இதனை இயற்றியவர் தொல்காப்பியர் எனப்படுவர், வீடு - மோக்ஷம், செவ்விதில் - பூரணமாக, சந்தேகவிபரீதம் நீங்க, தளை - கட்டு ,விலங்கு; பண்டையோர் - பழையவர்கள்; மூதாதையர், நகுதக்கனர் - சிரிப்பிற்கு இடமாக வுள்ளவர், நாடுமீக்கூறுநர் - நாட்டைப் புகழ்ந்து சொல்வோர், முறை வேண்டுவோர் - நீதியை வேண்டிநிற்போர், செவ்விஎளியராய் - காட்சிக்கெளியராய்; செவ்வி - சமயம்; எனவே, எந்தச் சமயத்திலும் போய்க்கண்டு முறையிடத் தக்கவராய் என்பது கருத்தாம். கோல்கோடாது - செங்கோல் தவறாது; நீதிதப்பாது, இறைமாட்சி - அரசன்பண்பு; அறநிலைதிரியா - என்ற செய்யுளின் கருத்து: நீதிகோடாத அன்பால் நடக்கும் அரசசபையில் திறமையற்ற ஒரு மந்திரியை நியமித்து, நீதிதிறம்பிக் கொடுங்கோல் செலுத்திய மன்னன் கதியை நான் அடைகுக; மூலபாடத்தில் முறைசெய்து என்றிருத்தலை முறை திரிந்து எனத் திருத்திக் கொள்க; திரிதல் - மாறுபடுதல். என்னிழல் வாழ்நர் (அரசனென்றிருக்கும்) எனது ஆதரவில் வாழும்மக்கள், செல்நிழல் காணாது - தாம் குறைவற ஒதுங்கி வாழ்தற்கு இடமில்லாமையால், எம்இறை கொடியன் என - எங்கள் அரசன் மிகவுங் கொடுமையுள்ளவனென்று, கண்ணீர் பரப்பி - கண்ணீர்விட்டழுது, குடிபழிதூற்றும் கோலேன் ஆதுக - குடிசனங்களாயுள்ளார் அவர்தூற்றுக்கு (பிழை சொல்வதற்கு) உரிய கொடுங்கோன் மன்னன் நானேயாகுக: மூலபாடத்தில் செந்நிழல் எனத் தவறுயிருப்பதைச் சென்னிழல் எனத் திருத்திக் கொள்ளுக; மாறன் - பாண்டியன், பள்ளி . சமணப்பள்ளி, குருளை - குட்டி, நெல்லும் உயிரன்றே (உணவுக்கு இன்றியமையாப் பொருளாகிய) நெல்லும் உயிருக்குச் சிறந்த ஆதாரமன்று, நீரும் உயிர் அன்றே - (அவ்வாறான) தண்ணீரும் உயிருக்குப் பிரதானமான ஆதாரமல்ல. மலர்தலை உலகம் மன்னன் உயிர்த்து - பரந்த உலகத்திலுள்ள மக்கள் அரசனையே தமக்கு (மேலான) ஆதாரமாகக்கொண்டுள்ளனர்; உலகம் - இடவாகுபெயராய் நாட்டிலுள்ள மக்களைக் குறித்து

நின்றது. மூவேந்தர் - சேர சோழ பாண்டியர், செரு - யுத்தம். உற்றுழி யுதவியும் - ஆபத்து நேர்ந்தவிடத்து உதவிசெய்தும்; (செய்யுள்) தத்துநீர் வரால் குருமி கொண்டதும் - வரான்மற்சஞ் சஞ்சரிக்கும் நீர்வளத்தை யுடைய குருமி யென்னும் நாட்டினை வென்று பெற்றதும், தழுவு செந் தமிழ்ப் பரிசில் - விரும்புகின்ற செந்தமிழ்க்கவியின் பொருட்டுச் சன்மானமாக, வாணர் - கவிவாணர், பத்தொடாறு நூறுயிரம் பொன்பெற - பதினாறுயிரம் பொற்காசு பெறும்படி, பண்டு பட்டினப்பாலை கொண்டதும் - முற்காலத் திற் பட்டினப்பாலை யென்னும் நூலைப் பாடியதும் என்றவாறு. சயங் கொண்டார் - பரணி பாடுவதிற் சிறந்த ஒரு புலவர். இடித்துரைத்து - வற் புறுத்துக்கூறி, அறவே - முற்றாக, கழனி - வயல், நந்துதல் இங்கே விருத்தியாதல், மிகைபடுதல் - அளவிற்குமேற் படுதல்; நெடு நுகத்துப் பகல்போல வாழ்ந்தனர் - நீண்ட நுகத்தின்கண்ணேயுள்ள மதியாணிபோல (நடுவு நிலைமையுடையாராய்) வாழ்ந்தனர், பகல் - மதியாணி = நுகத்தின் மத் தியில் ஏர்க்காலுடன் பொருத்துதற்கு இடும் ஆணி - தான் நடுவே நின்று இருபக்க மாடுகளுக்கும் பாரத்தைச் சமபங்காக அமையச் செய்யும் அது, ஆலமர் செல்வன் - கல்லால விருக்ஷத்தின்கீழ் எழுந்தருளிய தெக்கிணு மூர்த்தியாகிய சிவன், நெடுவேள் - முருகவேள், சாத்தன் - ஐயனூர், ஊர்தி - வாகனம், குரவை - ஒருவகைக் கூத்து, ஐம்படைத்தாலி - திரு மாலுக்குரிய சக்கரம், வில், வாள், தண்டு, சங்கு என்பனவற்றை வட்ட வடிவாகிய பொற்றகட்டில் அமைத்து, அதன் விளிம்பில் துவாரஞ்செய்து பருத்தி நூலிலேனும் பொற்சரட்டிலேனுங் கோத்துக் கழுத்தில் அணியப் படுவது; இதனைப் பஞ்சாயுதமென்று வழங்குவர், ஆன்ஏறு - இடபம்; எருது.

## 4. பாரத நூலாசிரியர்

வமிசம் - பரம்பரை, முதனூல் - முதன்முதற் செய்யப்பட்ட நூல்; இப் பாரதத்திற்கு முதனூல் வியாசபாரதம். தத்திதாந்தம் - பெயர்ப்பகுதி யின்பின்னே தத்திதம் என்னும் விகுதிபெற்ற வடமொழிப் பெயர்ச்சொல்; காங்கேயன், பௌரவர், ஐந்திரம் என்றற்போல்வன. ஐங்கரக்கடவுள் - பிள்ளையார், மருப்பு - கொம்பு, வெற்பு - மலை, சங்கிரகம் - சுருக்கம், பருவம் - நூலின் பெரும்பிரிவு, வெற்றெனத்தொடுத்தல் - (பொருள் என் னுங் கருக்கொள்ளாது) வெளிறுபடக் கூறுதல், கர்ணபரம்பரை - எழுத்தி லின்றிப் பரம்பரையாக மூதாதையர் சொல்ல வழித்தோன்றல்களா யுள் ளார் கேட்டறிவது, கர்ணம் - காது; அந்தாதி - முதற் செய்யுளின் அந்தத்தில் வரும் மொழி அடுத்தசெய்யுளுக்கு ஆதியாக (முதலாக) அமையும்படி பாடப்படும் பிரபந்தம்; பெரும்பாலும் நூறு கவிகளால் அமைவது.

## 5. புலையுங் கொலையுங் களவுந் தவிர்

காரியம் - பயன், சலபானஞ் பண்ணுதல் - தண்ணீர் குடித்தல், பானீயம் - நீர்; பருகுவன. அசாம் - நிலையியற் பொருள்.

## 6. வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை

திரு - செல்வம், தேகவியோகமாதல் - இறத்தல், அர்ப்பணஞ் செய்தல் - தியாகஞ் செய்தல்; ஒப்புவித்தல். தேஜஸ் - ஒளி, பூமகள் - இலக்குமி, விலாசம் - அழகு, ஆநந்த பரவசர் - மகிழ்ச்சியினால் தம்மை மறந்தவர்; பெருமகிழ்ச்சியடைந்தவர். வித்துவ சிரோமணி - வித்துவான்கள் சிரசிற்சூடும் இரத்தினம். மனப்பூர்வமாக - மனமொத்து; மனதார. புட்கலாவர்த்தம் - எழுமுகில்களிலொன்று; பொன்மழை பொழியும் இயல்பினதெனச் சொல்லப் படுவது. நியாயப்பயோததி - நீதிநூற்கடல், பயோததி - கடல், புணரி, அளக்கர், ஆர்கலி, பரவை என்னுமிச் சொற்கள் கடல் என்னும் பொருள் கொண்டன. துன்னி - நெருங்கி, துலங்கி - விளங்கி, சூதனெலிமாலை - சூதமுனிவர்சொன்ன புராணங்கள், செந்தமிழ் மேதைநிதிமாரி - செந்தமிழறிவாகிய பொன்மழை, இச்சந்மம் - இம்மை; இப்பிறப்பு, வித்தியார்த்திப் பயிர் - மாணுக்கராகிய நெற்பயிர், மான்மியம் - மகத்துவம்.

## 7 சிலப்பதிகாரம்

குன்றக்குறவர் - மலைவாணர்; வேடுவர். கூலவாணிகன் - பல பண்ட வியாபாரி, தலைக்கோல் - கணிகையர்பெறுஞ் சிறந்த பட்டம். இலஞ்சி மன்றம் - குளம் முதலிய நீர்நிலையோடு கூடிய மண்டபம்; இதன் விரிவை, சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையிற் காண்க. கோட்டம் - கோயில், பொழில் - சோலை, ஐயை - துர்க்கை; காளி. சாலினி - தேவராட்டி, முடங்கல் - சீட்டு, வனப்பு - அழகு, அடைக்காய் - வெற்றிலை பாக்கு, கொல்லேறு - கொல்லு மியல்புள்ள எருது, தீங்குறி - அவசகுனம், உண்பதோர் வினைகாணு - உயிருண்பதாகிய செயல்; கொலையாகிய செயல், கொண்ட கொழுநர் உறுதுறை தாங்குறூஉம் - தம்மை மணந்துகொண்ட நாயகருக்கு நேர்ந்த பேராபத்தைச் சகித்துக்கொண்டு (வாளா) இருக்கும், பெண்டிரும் உண்டுகொல் - நற்பெண்டிரும் உலகிலுண்டோ (இல்லை) என்றபடி, வைவாளிற்றப்பிய - கூரிய வாளைக்கொண்டு அநியாயமாகத் தவறுசெய்த, கூடல்- மதுரை, |தெய்வமுமுண்டுகொல் - தெய்வமுமுண்டோ (இல்லை) என்றபடி, விட்புலம் - மேலுலகம், வஞ்சினம் - சபதம், தெண்ணீர் கடந்த செஞ்சடைக் கடவுள் - கங்கையை அடக்கித்தமது திருச்சடையிற் பரித்த சிவபிரான்.

**8 அயோத்திகாண்டம்**

சதா - எந்த நேரமும், அருந்ததி - வசிட்டமுனிவர் பத்தினி; கற்பிற் சிறந்தவள், கொண்டல் - முகில், கலாபம் - தோகை, மஞ்ஞை - மயில், மனம்விண்டு - உள்ளமுடைந்து; கவலைகொண்டு, கஞ்சமலர் - தாமரைப்பூ, ஹம்ஸம் - அன்னப்பறவை, விண்ணுடர் - தேவர்கள், வதனம் - முகம்.

**9 பற்றுக்கள்**

போருக்கம் - யுத்தத்தில் உள்ளஞ் செல்லுதல், குழு - கூட்டம், திறத்தவர் - வகையினர், தியாகஞ்செய்தல் - கொடுத்துவிடுதல்.

**10 முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்**

உண்டானபோது - பொரு ளிருக்கும்போது; செல்வ முள்ளபோது; கோடானுகோடி - பல கோடிக்கணக்கான, உறமுறையார் - சுற்றத்தார், தொண்டாகவந்து தொழும்பு செய்வார் - அடிமைகள்போல் வந்து குற்றேவல் செய்வார்கள், செல்வம் துஞ்சிவிட்டால் - செல்வம் ஒழிந்து போனால்(வறுமையுற்றால்) கேளவை - துன்பம்; (இச்செய்யுள் இரத்தினசபாபதிமாலை யென்னும் நூலிலுள்ளது), ஆலம்போல் நீலவிழி - நஞ்சை யொத்த கருநிறமான கண்களையுடைய, அங்கயற்கண் அம்மையே - மீனாட்சித் தாயே, காலம்போம் - பஞ்சகாலம் நீங்கிவிடுதலுங்கூடும், வார்த்தை நிற்கும் - பஞ்சகாலத்திற்பட்ட வசைமொழி நீடித்துநிற்கும், சாலப் பசித்தார் - பெரும்பட்டினி கிடந்தவர், பாலுடனே அன்னம் புசித்தார் என்றது செல்வரை.

---

# செய்யுட்பாட விளக்கம்

"அங்கிங்கெனாதபடி......"

அண்டபகிரண்டங்களாகிய தூரத்தி லுள்ளது பூமி பாதாளங்களாகிய சமீபத்திலுள்ளது என்று சுட்டிக் கூறாதவண்ணம் எவ்விடத்தும் பேரொளியாய்ப் பூரணானந்தமாகி சத்தியோடு விபுவாயிருப்பது எந்தப் பொருள், தன்னுடைய அருள்வெளியிலே எல்லாப் புவனங்களும் நிலைக்குமாறு விருப்பம்வைத்து உயிர்க்குள் உணர்வாகி விரிந்திருப்பது எந்தப் பொருள், மனத்தால் நினைத்தற்கும் வாக்காலுரைத்தற்கும் எட்டாமல் நிலைபெற்றுள்ளது எந்தப் பொருள், பல்வேறு சமயங்களும் தம்முடைய தெய்வமென்றும் எம்முடைய தெய்வமென்றும் எவ்விடங்களிலும் விடாதுபற்றி நேர்நின்று வாதிக்கவும் அவரவர் தெய்வமாக நின்றது எந்தப்பொருள், இவ்வாறு எவ்விடத்தும் முடிவுபெறாத பெரிய வழக்காகி எத்தொழிலினும் வல்ல ஒப்பற்ற சேதனமாகி பேரின்பவடிவமாய் எக்காலத்தும் நித்தியமாக இருப்பது எந்தப்பொருள், பின்னும் இரவுபகல் அல்லாது நின்ற ஓரிடத்தினை வாய்ந்தது எந்தப்பொருள், அந்தப்பொருளே யாவருடைய கருத்திற்கும்ஒத்தது, ஆதலால்அப்பொருளையே காணப்பட்ட பூதபௌதிகங்களாகவும் மௌனரூபமான வெளியீடாகவும் தியானித்துக் கைகூப்பி வணங்குவாம் என்க. (1)

"மின்னனைய பொய்யுடலை......"

தோற்ற வொடுக்கங்களால் மின்னலினை யொத்த பொய்யாகிய உடம்பினை நிலையுள்ள தென்றும், அஞ்சனந் தீட்டப்பெற்று விளங்குகின்ற கண்களைக்கொண்டு காமமயக்கமாகிய விளக்கினை யிடுகின்ற மாதர்கள் சுகமே உண்மையென்றும், உயர்ந்த மாளிகைகளின்மேல் உபரிகைகள் சொர்க்கலோகம் என்றும், சுவர்ணத்தினை அழியாது வளர்கின்ற பொருளென்றும் விரும்பி, இந்தப் பொய்வேடத்தின் பெருமையை வெளிப்படுத்தி, பொறுமை ஞானம் இருவகைப் பற்றையுந் துறத்தல் கொடைமுதலாகிய சற்குணங்க ளெல்லாவற்றையும் அவைசெல்லும் வழியிற் செல்லவிட்டு, தனக்கொப்பில்லாத உலோபகுண முதலாகிய பாழாகிய பிசாசம்பற்றிக் கொள்ள உலகில் லோகாயதனுடைய சமய வொழுக்கத்தினைப் பொருந்தாமல் வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதியைப் பொருந்தும்படி ஒருமொழியால் என்னைத் தடுத்தாட்கொண்டு அன்பினால் வாழச் செய்தருளிய ஞானாசாரியனே! மந்த்ரகுருவே யோகசாத்திரங்களை யுணர்ந்த குருவே, திருமூலநாயனார் வழித்தோன்றலாகிய மௌனதேசிகரே என்க.

## தனிப்பாடல் ஔவையார்

**"வான்குருவி......"**

ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற குருவிக்கூடும், வன்மையாகிய அரக்கும், பழைமையாகிய கறையானும், தேனும், சிலந்திப்பூச்சியின்கூடும் (அவ்வவையாலன்றி) மற்றவையாலும் மற்றையோராலும் செய்வது இயலாதாகும்- (ஆதலால்) நாம் மிகவுந்திறமை யுடையோமென்று வலிமை பேசவேண்டாம். எல்லார்க்கும் ஒவ்வொருகருமம் இலகுவிற் செய்தல் இயலும்.

அரக்கு - செந்நிற மெழுகு. (1)

**"சித்திரமும் கைப்பழக்கம்......"**

சித்திரம்வரைதலும் கைப்பயிற்சியாகும், செந்தமிழ் பேசவதும் நாப் பயிற்சியாகும், ஞாபகத்திலுள்ள கல்வியாவது மனத்தின் பயிற்சியாகும், எப் போதும் ஊடாடுவதும் ஊடாட்டத்தின் பயிற்சியாகும், (ஆனால்) சிநேகம், தயவு, ஈகை என்னும் இம்மூன்றும் ஒருவருக்குப் பிறப்பிலே யமைந்த குண மாகும்.

நடை - ஊடாடுதல், பெரியாரோடு ஊடாடின் உயரிய நடை உண்டா மென்றபடி. (2)

**"நம்பனடியவர்க்கு......"**

சிவனடியவருக்கு வழங்காத பொருள்கள் சூனியத்திற்குதவும், பேய்த் தனமான கருமங்களுக்குதவும், கொள்ளையிடப்படும், கள்ளுக்குடித்தற் குதவும், கொடுங்கோல் மன்னராற் கவரப்படும், மரணத்திற்கு ஏதுவாகும், கள்வரால் அபகரிக்கப்படும், நெருப்புக் கிரையாகும், அறிந்துகொள். (3)

**"காணக்கண் கூசுதே......"**

அன்பில்லாதவள் இட்ட உணவைப் பார்க்கக் கண்கூசுகிறதே, எடுக்க லாமோ வெனில் கை கூசுகிறதே, உண்ண சிறந்தவாய் திறக்கக் கூசுகிறதே, அநியாயமாக என்னுடைய உடம்பிலுள்ள எலும்புக ளெல்லாம் தீபற்றி யெரிகின்றதுபோல் எரிகிறவே. (4)

**"பத்தாவுக்கேற்ற......"**

நாயகனுடைய எண்ணத்திற்கு ஏற்ப நடக்கக்கூடிய மனைவியிருப்பளேல் அவளுடன் எவ்விதத்திலும் சேர்ந்து இல்வாழ்க்கை நடத்தலாம், சிறிதேனும் அதற்குமாறாக மனைவி நடப்பாளாயின் ஒருவருக்குஞ் சொல்லாமல் துற வறத்தைக் கொள்க. (5)

"சண்டாளி சூர்ப்பநகை......"

கோபக்காரி, சூர்ப்பநகை, தாடகை என்று சொல்லத்தக்க தோற்றத்தை யுடையவளை மனைவியென வைத்துக்கொண்டாயே, அன்பர்கள் காலிலிட்டுள்ள செருப்பின் சுவட்டுக்குத்தானும் பற்ருத உன்செல்வமுமொரு செல்வமா? நீ நெருப்பிலே வீழ்ந்து சாதல் தகும்.

சண்டாளி - கோபமுடையவள், சண்டாளம் - கோபம், சூர்ப்பநகை - இராவணனுடைய தங்கை. தாடகை இராவணனுடைய பாட்டி. மாரீசன், சுவாகு என்னும் அரக்கருடைய தாய். (6)

"தண்ணீருங் காவிரியே ......"

ஆறுகளுட் சிறந்தது காவிரியாறு, மாலையணிந்த அரசருட் சிறந்தவன் சோழன், நல்வளம் பொருந்தியநாடு சோழமண்டலம், பெண்களுட் சிறந்தவள் அழகிய சிலம்பி, அவளுடை தாமரைப் பூப்போன்ற கால்களில் அணிந்துள்ள சிறந்த பொன்ஞலாகிய சிலம்பே ஆபரணங்களுட் சிறந்ததாம்.

"எட்டேகால் லட்சணமே......"

எட்டேகால் லட்சணமே - அவலட்சணமே, எமன் ஏறும்பரியே - யமனேறுகிற வாகனமாகிய எருமையே, மட்டுஇல் பெரியம்மை வாகனமே - அழகில்லாத மூதேவியின் வாகனமாகிய கழுதையே, முட்டமேற் கூரையில்லா வீடே - பூரணமாக மேலே கூரையில்லாத அழிந்த வீடாகிய குட்டிச்சுவரே, குலராமன் தூதுவனே - ஸ்ரீராமருடைய தூதுவனுகிய குரங்கே, ஆரையடா சொன்ஞய் அடா - நீ சொன்னசொடி ஆரைக்கிரை யென்பதை அறிந்து கொள்ளடா.

எட்டு = அ, கால் = வ. குலராமன் தூதுவன் அநுமார். இங்கே குரங்கைக் குறித்து நின்றது. (8)

"ஏசியி டலி லிடாமையே ......"

ஒருவருக்குக் கொடுக்கும்போது ஏசிவிட்டுக் கொடுப்பதைக் காட்டிலும் ஏசாமல் இல்லையென்றுசொல்லிக் கொடாமல் விடுதல் நல்லது, எதிர்வார்த்தை பேசும் மனையாளைக் காட்டிலும் பேயின் கூட்டுறவு நல்லது; உள்ளன்பில்லாத சிநேகத்தைக் காட்டிலும் வைரித்த பகைநல்லது, வாழ்க்கைக்கு இடையூருன கஷ்டங்களை அனுபவித்தலிலும் இறந்து விடுதல் நல்லது. (9)

"பாடல் பெறுனே......"

புலவர்பாடும் பாட்டுக்களை ஏற்று அவர்களுக்கு ஏதும் பரிசில் வழங்காமலும், பலர் பாராட்டும்படி வாழாமலும், ஊராறிய நல்ல மங்கல கருமங்

களைச் செய்யாமலும் இருக்கின்ற இந்தச் சேடனென்பவனுடைய ஈயாமை யோடு கூடியவாழ்க்கை கெட்டாலென்ன, சிறந்தாலென்ன, எவ்வகையான பேதமுமில்லையாம். (10)

"கற்றது கைம்மண்ணளவு......"

புலவர்களே, படித்தது ஒரு சிறங்கைமண்ணளவு அற்பமென்றும் படிக்கப்படா திருப்பது உலகமளவு அதிகமென்றும் கல்விக் கிறைவியாகிய சரஸ்வதியே சொல்லுகிறாள், ஆனதால் வீணான பந்தயங்களை நீவிர் ஒருவரோ டொருவர் இட்டுக்கொள்ள வேண்டாம், ஏனென்றால், சிறியதாகிய எறும் பும் தன்னுடைய முன்னங்காலின் எண்மடங்கு நீளங் கொண்டதாகும்.

"கொடியது கேட்கின் ......"

(பொருள் வெளிப்படை) (12)

"இனியது கேட்கின்......"

இனியது கேட்கில் - இனியவற்றைக் கேட்க விரும்பினால், வேலோய் - வேலாயுதத்தைக் கையிலே கொண்ட முருகக் கடவுளே, ஏகாந்தம் - தனிமை, ஆதியைத் தொழுதல் - இறைவனை வணங்குதல் என்றபடி. (13)

"பெரியது கேட்கின்......"

எரிதவழ் வேலோய் - நெருப்புப்போல் ஒளியையும் வெம்மையையு முடைய வேற்படையைத் தரித்தவரே, புவனம் - உலகம், நான்முகன் - பிரமா, கரியமால் - நீலநிறமுள்ள விஷ்ணு, உந்தி - கொப்புள், குறுமுனி - அகஸ்தியர், அங்கை - உள்ளங்கை, அரவு - ஆதிசேட னென்னும் பாம்பு, தொண்டர் - சிவனடியவர் என்றபடி. (14)

"அரியது கேட்கின்......"

(பொருள் வெளிப்படை) (15)

"மாடில்லான் வாழ்வும்......"

செல்வ மில்லாதவனுடைய வாழ்க்கையும், நுண்ணிய விவேகமில்லாத வன் செய்யும் வியாபார முயற்சியும், நீர்வளம் நிலவளம் முதலாம் நலன்க ளில்லாத நாட்டையாளும் அரசனுடைய ஆளுகையும், சற்குருமூலமாகக் கல் லாத வித்தையும், நற்குணமில்லா மனைவியோடு நடத்தும் இல்லறமும், விருந் தினரை உபசரிக்க முடியாத வறுமையோடு கூடிய வாழ்க்கையும் பய னற்றனவாகும். மாடு - செல்வம், விழல் - வீண். இனி மாடு என்பதற்கு உழவுமாடு எனக் கொண்டு உழுதுண்டு வாழும் வேளாள வாழ்க்கையும் எனப் பொருள்கொள்ளினுமாம். (16)

"ஆலைப் பலா வாக்கலாமோ......"

ஆலமிலையும் பலாவிலையும் தோற்றத்தில் ஒருவாறு ஒற்றுமையுடையன போற் காணப்படினும் ஆல் பலாவாகமாட்டாது. சுணங்கன் - நாய், வசமாமோ - இயலுமோ, சீராக்கலாமோ - திருத்தலாமோ, இவைகள் முடியா என்றபடி. (17)

"ஈதலறம்......"

சற்பாத்திரர்களா யுள்ளார்க்கு மனப்பூர்வமாகக் கொடுத்தலே நிசமான தருமம், அநியாய வழியிலே தேடாமல் நீதியான முறையிலே தேடப்படுவதே சிறந்த பொருளாகும். அன்போடுகூடிய கணவனும் மனைவியும் ஒரேயெண்ணமுடையாராய் நடத்தும் இல்வாழ்க்கையால் அடையும் இன்பமே உண்மையான இன்பம், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றினையும் முறைப்படி அநுபவித்து உலகப்பற்றை வெறுத்து இறைவனிடத்து மெய்யன்புபூண்டு அவனது அருளைப் பெறுவதே நிலையான முத்தியாகும். (18)

"தாயோ டறுசுவைபோம் ......"

பெற்றதா யிறந்தாற் பிள்ளைக்கு நல்ல உணவுகெடும், தகப்ப னிறந்தாற் பிள்ளையின் கல்விவிருத்திகெடும், பிள்ளை யிறந்தாற் பெற்றோரின் (உண்மையான) செல்வங்கெடும், மங்கலமான வாழ்க்கை சுற்றத்தவ ரின்மையாற் கெடும், சகோதரம் இறந்தால் துணைவலிகெடும், மனைவி யிறந்தால் (மேலே சொல்லப்பட்ட) செல்வங்க ளெல்லாம் விட்டகலும். பொற்றாலி இங்கே அதனையணிந்த மனையாளைக் குறித்துநின்றது. (19)

"வேழமுடைத்து மலைநாடு ......"

மலைநாடாகிய சேரநாடு யானைகளை யுடையது, சிறந்த சோழநாடானது நெல் வயல்களை மிகவுங் கொண்டது; பாண்டியன் ஆண்டுவந்த தென்னாடாகிய பாண்டிநாடு முத்து விளையுங் கடற்றுறைகளை யுடையது, நல்ல தொண்டைநாடு படித்த பெரியோர்களை யுடையது. (20)

## தமிழ்மொழியின் பெருமை

"வடமொழியை......"

வலிய இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமான் சம்ஸ்கிருத பாஷைக்குரிய இலக்கணத்தைப் பாணினி யென்னும் முனிவருக்கு உபதேசித்து, அவ் வடமொழிக்கு ஒப்பான தொடர்புள்ள தமிழ் மொழிக்குரிய இலக்கணத்தை, உலகத்துள்ளவர்க ளெல்லாரும் வணங்கித் துதிக்குங் கும்போற்பன்னராகிய அகத்திய முனிவருக்கு உபதேசித்தருளினர், இப்படியானால், கடல்சூழ்ந்த இப்பூவுலகத்திலே இத்தமிழ்மொழியின் பெருமை இப்

படிப்பட்டதென்று எவராற் சொல்ல முடியும், (எவராலும் சொல்லிமுடியாதென்றபடி). குடமுனி - அகத்தியர், கொல்லேற்றுப்பாகர் - சிவபெருமான். (21)

"இரு மொழிக்குந்......"

சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இருமொழிகளுக்கும் ஆதி குரவரா யுள்ளவர் பரமசிவன், நல்ல இயல்புகள் அமைய இவ்விரு மொழிகளுக்கும் இலக்கணம் வகுத்தவர்கள் முனிவர்களுட் சிறந்தவர்களாகிய (முறையே) பாணினியும் அகத்தியருமாவர், இந்த இருமொழிகளையும் (ஆர்வத்தோடு) ஏற்றுப் பயின்று வழங்கியவர்கள் அறிவிற் சிறந்த பெரியவர்களாதலினால், இம்மொழிக ளிரண்டும் ஒத்த பெருமையுடையன என்பதில் எதுஞ் சந்தேகமுண்டோ (இல்லை யென்றபடி) (22)

"கண்ணுதற் பெருங் கடவுளும்"

நெற்றிக்கண்ணை யுடைய பரம்பொருளாகிய சிவபெருமானும் தமிழ்ச் சங்கப் புலவர்களுள் தாமும் ஒருவராக எழுந்தருளிப் பண்புறும்படி சிறப்பித்து (அகப்பொருள்) செய்த இனிய தமிழ்மொழியாகிய தேனை, ஏனை நாடுகளிலுள்ள இலக்கண வரையறைவற்றனவாகிய பாஷைகளோடு சமமெனவைத்தெண்ண நினைக்கலாகுமோ? (ஆகா தென்றபடி). (23)

"யாமறிந்த மொழிகளிலே......"

நாங்கள் அறிந்த பாஷைகளுள் தமிழ்ப் பாஷையைப்போல (ப்பயில்வோர்க்கு) இனிமைதரும் மொழியை எந்நாட்டிலும் அறிந்திலேம், பேளவில் மாத்திரம் தமிழரென்று சொல்லிக்கொண்டு, பாமரரெனவும் விலங்குகளெனவும் உலகத்தவர் அவமதிக்க, (பண்டுள்ள) பெருமைகெட்டு இவ்வுலகில் இப்பொழுது சீவித்தல் முறையாகுமோ? சொல்லுங்கள் (இங்ஙனம் இருத்தலை விடுத்து) இனிய தமிழ்மொழியின் ஒலியை நாடெங்கும் பரவச் செய்தல்வேண்டும். (24)

## காளமேகப்புலவர் பாடல்

"மேச்சுபுகழ் வேங்கடவா......"

பாராட்டப்படுங் கீர்த்தியோடு கூடிய திருவேங்கடத்தில் எழுந்தருளிய பெருமானே, நான் விரும்பிய பிரகாரம் பாதி வெண்பாவில் அடக்கி உமது அவதாரம் பத்தினையும்பாட அருள் புரியவேண்டும்: (1) மற்சாவதாரம் (2) கூர்ம (ஆமை) அவதாரம், (3) வராக (பன்றி) அவதாரம், (4) நரசிம்மாவதாரம், (5) வாமனாவதாரம், (6) பரசுராமாவதாரம், (7) ஸ்ரீராமாவதாரம், (8) பலராமாவதாரம், (9) கிருஷ்ணாவதாரம் (என்னுமிவைகளைக் கொண்டவரே) (10) கற்கி (குதிரை) அவதாரத்தை இனிக் கொள்பவரே; ராமா,

ராமா, ராமா என வருபவற்றிற்குமுறையே பரசுராமர், இரகுராமர் பலராமர் எனப் பொருள் கொள்ளப்பட்டது. வாமனம் - குறியவடிவம்; கோலம் - பன்றி, மா - குதிரை (இவ்வவதாரம் இனிமேல் நிகழ்வது.) (25)

''பகருங்கால்......'' [பொருள் வெளிப்படை.] (26)

''சிறுவன் அளை பயறு......''

வேதன் அரன் மால் (1) பிரமா, (2) சிவன், (3) விஷ்ணு இவர்களுக்கு (முறையே) கறியாவன: பயறு, பிள்ளை, (அளை) தயிர்; உணவாவன: செந்நெல்லரிசிச்சாதம், (கடு) நஞ்சு, (கு) பூமி; ஆயுதங்களாவன: தண்டு, மான்கன்று, சக்கரம்; அணிகளாவன: பூணூல், பாம்பு, கௌத்துவமணி; வாகனங்கள்: அன்னம், இடபம், கருடன்; இடங்களாவன: செந்தாமரைப்பூ, கயிலைமலை, பாற்கடல் என்பனவாம். சிறுவன் - சிறுத்தொண்டர் மகன்.

கல் - மலை, இங்கே கயிலைமலை; தாழ்அம் - ஆழமான பாற்கடல். (27)

''வாரணங்க ளெட்டும்......''

கண்ணபிரானை, இனிய வார்த்தையைப் பேசுகின்றவளும் இடையர் குலத்திற் பிறந்தவளுமாகிய அசோதை யென்னும் வளர்த்ததாய், பெரிய மத்தினாலேயடித்த தழும்பாகிய புண்ணில் ஈமொய்த்த சமயத்தில் (அக்கண்ணபிரான் சற்று அசைந்த காரணத்தினால்) எட்டுத்திக்கு யானைகளும் பெரிய மேருமலையும் கடல்களும் இப்பூவுலகமும்; (இதன்கணுள்ள சராசரங்கள் முதலிய) எல்லாஞ் சலனமுற்றன. வாரணம் - யானை. (28)

''விண்ணுக் கடங்காமல்......''

ஆகாயத்திற் பரக்க இடமில்லாமலும், மலைகளில் இடமில்லாமலும், நிலவுலகிலே (பாய) இடமில்லாமலும் கங்கா நதியானது பெருகிவந்த தெனினும், உமாதேவியாரைத் தமது இடப் பாகத்திலே வைத்த பரமசிவனுடைய சடைமுடியிற் கங்காநதி யடங்கலாயிற்று. (29)

''ஒன்றிரண்டு மூன்று......'' (பொருள் வெளிப்படை) (30)

''சுத்தபாற் கடலினடுவினில்......''

சுத்தமாகிய பாற்கடலின் நடுவிலே துகள் தோன்றிய அதிசயத்தைக் கேட்பாயாக, மதம் பொருந்திய யானை வடிவினனாகிய கயாசுரனுடைய தோலையுரித்தவராகிய பரமசிவன்மேல் மன்மதன் (பூ அம்பு செலுத்தலாகிய) போரைச்செய்து அப்பெருமானுடைய ஒற்றைக் கண்ணாற் சாம்பராகி அழிந்தா னென்ற இழவு செய்தியைப் பொன்னிறமான செந்தாமரைப் பூவிலிருக்கும் இலக்குமிதேவி காதாரக்கேட்டு நிலத்தில் விழுந்து வருந்தி மயங்கி (த் தேறி) ஏக்கங்கொண்டு தன் பூப்போன்ற கைகளினால் மார்பின்

கண்ணே (புத்திரசோகங் காரணமாக) அடித்தாள், (அடித்தவிடத்து) அம்மார்பிற் படிந்து உலர்ந்திருந்த செங்கழுபச் சேற்றின் துகள் எழுந்தது. (31)

"முத்திருக்கும்......"

எத்திக்கிலும் வாசனை வீசுகின்ற சோலைபொருந்திய திருமலைராயனுடைய மலை நாட்டின்கண்ணே ஆமணக்கஞ் செடியும் மதங்கொண்ட யானையை நிகர்த்ததாகும்; ஆமணக்கிற்கு: முத்தென்று வழங்கப்படும் விதையுண்டு, (காற்று வீசும்போது) தன் கிளைகளை அசையச் செய்யும், செறிவுள்ள தண்டுகள் பொருந்தியதாய் வளரும், காய் கொத்தைப் பொருந்தியிருக்கும், நேருக்கு நேராகக் காய்க் குலைகள் தொங்க விட்டிருக்கும். யானைக்கு: முத்துக்களுக்கு இருப்பிடமாகிய தன் மருப்புக்களை அசைக்கும்; வலிய (இருப்புலக்கையாகிய) தண்டினை (த் துதிக்கையிலே) பற்றிக் கொண்டு எதிரேவரும், மத்தகத்திற் பாகன் அங்குசத்தினுற் கொத்திய தழும்பைப் பொருந்தியிருக்கும், பகைவர்களுடைய கூட்டத்தைச் சிதைக்கும்; நேரார் - பகைவர். (32)

"வாரிக் களத்தடிக்கும்......"

சிறப்புப் பொருந்திய செந்நிறமான மேனியை யுடைய திருமலைராயனது மலைப் பிரதேசத்தில் வைக்கோலும் பெரிய யானையை ஒக்கும்; வைக்கோலுக்கு: உழவர்களால் அள்ளி நெற் களத்தில் அடிக்க (மிதிக்க)ப் படும், பின்னர் அங்கிருந்து கொண்டுவந்து கோட்டைபோற் பட்டடையாகக் குவிக்கப்பட்டுச் சிறந்து பொலிவுடன் விளங்கும். போர் - வைக்கோற் பட்டடை. யானைக்கு: யுத்த களத்திற் பகைவர்களைச் சேர்த்துப் பற்றி யுத்தபூமியிற் புடைக்கும், பின்புவந்து கூடத்திற்சேரும், யுத்தத்திற்குரிய நால்வகைப் புடையுள் மேலாக வெற்றிபெற்று விளங்கும். (33)

"ஆடிக் குடத்தடையும்......"

பாம்பிற்கு: ஆடிவிட்டுக் கூடையுட் புகுந்து அடங்கி யிருக்கும்; அப்படி யாடும்போது இரையும், மூடிவைத்த கூடையைத் திறக்கும் போது பாம்பு படமெடுத்துத் தலைகாட்டும், (கடித்தால் அதன் நஞ்சானது) தலைவரையி லேறித் திகைப்பையும் சொறிவையும் உண்டாக்கும், பிளவோடுகூடிய நாக்கும் உண்டாம். பிண்ணுக்கு - பிளவுடையநாக்கு. எள்ளுக்கு: செக்கில் இட்டு ஆட்டப்பட்டபின்பு எண்ணெய்க் குடத்துட் பெய்யப்படும். செக்கிலிட்டு ஆட்டப்படும்போது ஒலி உண்டாகும். எண்ணெய்க் குடத்தின் மீதிட்ட மூடியை அகற்றியவுடன் அகற்றியவருடைய முகம் அந்த எண்ணெயிற் பிரதிவிம்பிக்கும்; தலையில் வார்க்கும்போது பரபர எனப் பரந்து செறியும். எண்ணெ யெடுத்தபின் அதிற் பிண்ணுக்காகும். பாரில் - உலகிலே. ஓது - சொல்லு. (34)

''பெரிய விடமேசேரும்......''

பாம்பிற்கு: அதிக நஞ்சு பொருந்தியதா யிருக்கும், ''பித்தர்'' என்றுஞ் சொல்லப்படும் பரம சிவனுடைய சடைமுடியில் ஏறியிருக்கும், (அரி உண்ணும்) காற்றை யுட்கொள்ளும் (அரி - காற்று) (உப்பும்) அதனால் உடம்பு பூரிக்கப்பெறும் (உப்புதல் - பூரித்தல், பருத்தல்) படமெடுத் தெழுந்து ஆடும், தீண்டப்பட்டார்க்கு எரிவைச்செய்யு மியல்பினதாகும்; எரிகுணம், என்பதற்குக் கோபித்துச் சீறுங் குணமெனினும் பொருந்தும். அரியுண்ணும் என்பதற்குத் தவளையைப் பிடித்துத் தின்னும் எனலும் பொருந்தும். எலுமிச்சம் பழத்திற்கு: (பெரிய+இடமேசேரும்) பெரியவர்களுடைய சமுகத்தையடையும், அரசன் பெரியாரென்னு மிவர்கட்குக் கையுறையாக வழங்கப்படும் என்றபடி, பைத்தியங் கொண்டார்க்கு மருந்தாகத் தலையிற் பிழியப்படும். (அரியுண்ணும்) வெட்டப்படும்; மேல் உப்பாடும் - அரிந்த பின் ஊறுகாயாதற்பொருட்டு உப்பிடப்படும். (எரிகுணமாம்) கண்ணிற் புண்ணிற் பட்டால் எரியுமியல்புண்டாம். (35)

''நிலவாய் விளங்குதலால்......''

மலைக்கு: (நில + வாய்) பூமியினிடத்து நின்று விளங்குவதனால், பரந்த முகில்கள்போய்ப் படிந்து சிலநேரஞ் சஞ்சரித்தலால், சிகரங்கள் மேலே தோன்றி விளங்குவதனால்; வான் - முகில், தலை - சிகரம். சந்திரனுக்கு: (நிலவுஆய்-விளங்குதலால்) நிலவோடு கூடியதாய் விளங்குதலினாலே, பரந்த ஆகாயத்திலே சிலவேளைகளிற் சஞ்சரித்தலால், (மறைந்து) கடலின் மீது உதித்தலால், (தலைமேல் - என்பதற்குக் கடலாகிய இடத்தின்மீது) (வழுத்து - பாராட்டு.) (36)

''ஓடுமிருக்கும்......''

தேங்காய்க்கு: சிரட்டை யென்று சொல்லப்படும் ஓடும் உண்டு, அத் தேங்காயின் உட்புறம் வெண்ணிறமா யிருக்கும், விரும்பப்படுகின்ற (பெரிய) குலையைத் தானும் பொருந்தி யிருத்தலிற் சோர்வடையாது, சேடி - தோழி, தீங்காயதில்லா - எவ்வகையான தீமையு மில்லாத. (37)

''மன்னீரிலே பிறக்கும்......''

மீனுக்கு: (மன்நீரிலே பிறக்கும்) பெருமையான நீர்நிலையில் உற்பத்தியாகும், நீர்த்திரையிலே மேய்ந்து திரியும், பின் நீச்சில் குத்தும் - பின்பு நீந்தித் துள்ளிப் பாயும்; பேனுக்கு: மன் ஈரிலே பிறக்கும் - மிகுதியான ஈரிலிருந்து தோன்றும் (ஈர் பேனாக வளரும் என்றபடி) மல்தலையிலே மேயும் - வலிய தலை மண்டை யோட்டிலே உணவு தின்னும், பின்ஈச்சிற்குத்தும் - பின்பு (பேன் பார்க்கும் பெண்களால்) ''ஈச்'' என்ற அநுகாண ஒலியுடன் குத்தப்படும், பெருமையால் - இவ்வொற்றுமையினால், தேன்உற்று - தேன் பிலுற்றுகின்ற. (38)

"ஓடுஞ் சுழிசுத்த முண்டாகும்......"

ஆட்டக் குதிரைக்கு: வேகமாக ஓடும், சுத்த சுழியுண்டாம் - சுத்தமான (நற்) சுழிகள் பொருந்தி யிருக்கும், துன்னலரைச்சாடும் - பகைவரைக் கொல்லும், விரும்பத்தக்க விதமாகத் தன் தலையைச் சாய்த்து ஆடும்; காவிரிக்கு: (வெள்ளப் பெருக்கினால் விரைவாகப்) பாயும், சுழி உண்டாகும்) - நீர்ச் சுழிகளை ஆக்கும், சுத்த முண்டாகும் - தன்னிடத்தில் மூழ்குவோருக்குப் பரிசுத்தத்தைப் பயக்கும், துன்னலரைச் சாடும் - தன்னிடத்தில் வந்து சிந்தும் பூக்களை அள்ளிச் செல்லும், பரிவாய்த் தலைஅசைக்கும் - குதிரைகளுக்கு ஒப்பாகச் சொல்லப்படுகின்ற திரைகளை வீசும். பரி - குதிரை. (39)

"கட்டி யடிக்கையாற்......"

கீரைப் பாத்திக்கு: கட்டி யடிக்கையால் - நிலத்தைக் கொத்தி (உழுது) மண்ணாங் கட்டிகளை யடித்துடைத்துப் பண்படுத்துதலால், கால் மாறிப் பாயவிடுதலால், வெட்டி மறிக்கின்ற மேன்மையால் சதுரமாகவேனும் வட்டவடிவாகவேனும் பாத்திகோலி நீர் உடைத்துப் பாயுமானால் தடுக்கின்றதாகிய இயல்பினால், முட்டப்போய் மாறத் திரும்புகையால் - நீர் நிறைந்தபின் மாறி மடைகட்ட நீர் திரும்பிச்சென்று நிறைதலால்; ஏறுகுதிரைக்கு: கட்டப்படுதலாலும் (சவுக்கால்) அடிக்கப்படுதலாலும், கால்களால் மாறி மாறி யோடிப் போதலாலும், கடிவாளத்தைச் சிறிது (வெட்டி) இழுத்து வழிமாறிச் செல்ல விடுதலாகிய செயலாலும், போகவேண்டிய இடம் முழுவதும்போய் மீண்டு வருதலினாலும். (40)

"கொம்பிலையே தீனிதின்னும்......"

ஆட்டிற்கு: மரக்கொம்பர்களி லுள்ள இலைகளை உணவாக உண்ணும், (கொண்டு அதன்மேல் வெட்டுதலால்) விலைக்கு வாங்கிக்கொண்டுபோய் பிறகு (மாமிசத்தின் பொருட்டு) வெட்டிக் கொல்லப்படுதலால், அம்புவியில் நல் நடையதாதலால் - உலகத்திலே நல்ல கால்நடைவர்க்கத்தி லொன்றாக வைத்தெண்ணப்படுதலால், கால்நடை - ஆடுமாடுகள், "கால்" என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது; மூலபாடத்தில் "அம்புவியின் அந்நடைய" என்றிருப்பதை அம்புவியின் நன்னடைய தெனத் திருத்திக் கொள்க; குதிரைக்கு: (கொம்பு + இலையே) கொம்பில்லை, தனக்காகிய உணவையுண்ணும், போர் வீரர்கள் அக் குதிரையின்மேல் ஏறியிருந்து பகைவரை வெட்டுகின்ற காரணத்தினால், சிறந்த நிலத்தில் நல்ல ஐவகையான கதிகளை (நடையை)உடைமையால், உம்பர்கள் - தேவர்கள். குதிரையின் நடை ஐந்து, அவையாவன: சுவரிதம், ஆக்கிராந்திரம், வல்கிதம், இரேசிதம், புலிசம்; அவை முறையே 1. மெல்லியநடை, 2. விரைவுநடை, 3. இருகால் தூக்கியாடி வருநடை, 4. சுற்றியோடல், 5. முழுஓட்டம் எனவுஞ் சொல்லப்படும். (41)

"ஆணி வரையுறலால்......"

துப்பாக்கிக்கு: விசையாணி பொருந்தப் பெற்றமையினால், தவறாத இலக்கினையே பார்த்துப் பிரயோகிக்க வேண்டி யிருத்தலால்; புலப்படும்படி கருநிற முள்ளதாகிய வெடிமருந்து இடப்பட் டிருப்பதால்; ஓலைச்சுருளுக்கு: எழுத்தாணியைக்கொண்டு எழுதப்படுதலால், (அங்ஙனம்) எழுதப்பட்டவற்றின் பொருளைப் பிறர்க்குத் தெரிவித்தற்குக் கருவியா யிருத்தலினால், (வரையப்பட்ட எழுத்துக்கள் படிப்போர் கண்ணுக்குத் தெளிவாய்ப்) புலப்படும்படி கருநிறமான மைக்காப்பு இடப்படுதலால். (42)

"நீரிலுளதால்......"

வானவில்லுக்கு: நீர்கொண்ட முகிலே தோன்றுவதனால், பசியநிறம் காணப்படுதலால், திருமால் அழகுபொருந்தி யிருத்தலால், பாரிற்பகை தீர்க்குந் தன்மையால் - உலகத்திலே வெம்மையோடு கூடிய கோடைக்காலமாகிய பகையை மழைக்கு அறிகுறியா யிருந்து ஒழித்துவிடலால், உலகத்திலுள்ள மக்களின் பசிப்பிணி முதலிய நோய்களை மழைபெய்தற்கு அறிகுறியாகத் தோன்றி நீக்குதலால்; விஷ்ணுவுக்கு: பாற்கடலின் கண்ணே பொருந்தி யிருத்தலால், பச்சைநிறத் திருமேனியை உடைமையால், திருமால் - மகாலக்குமி மார்பிற் பொருந்தப் பெற்றிருத்தலால், உலகத்திலே (அசுரருக்குந் தேவர்கட்கு மிடையே நேரும் பகைமையை (அசுரரைக் கொன்று) ஒழிக்கும் இயல்பினால், தம்மைத் தஞ்சமென் றடைந்த மக்களின் பலவகையான பாவங்களை நீக்கியருளுதலினால்; வெற்றிலைக்கு: நீர் நிறைந்த பாத்திகளிலிருந்து உண்டாதலால், பசுமையோடுகூடி யிருத்தலால், திருமால் - மங்கலப் பொருளாதலால், உலகத்திலே குடும்பத்தினர்க்குப் பகை நேர்ந்தவிடத்து, அப்பகையை நீக்கிச் சமாதானஞ் செய்தற்கு வழங்கப்படுதலாம், மக்களைப் பீடிக்கும் பல நோய்களுக்கும் மருந்தாகி அவற்றை அகற்றுதலால்; விண்டு - விஷ்ணு. (43)

"அடிநந்தி சேருதலால்......"

பூசினிக்காய்க்கு: (அடிநந்தி சேருதலால்) அடியிலே கொம்பு (காம்பு) பொருந்தி யிருத்தலால் (ஆகம்) புறம் முழுவதும் வெண்ணிறம் அமைந்து ஒரு பக்கத்திற் (பூசினிக்) கொடி பொருந்தப்பெற்று அழகிய நீறுபூத்து வளைவாகிய வரைவுகள் காணப்படுதலால், மாசுணத்தைப் பூண்டு - (இங்கே) மிகவும் நீறுபூத்து, தண்ணம் தணம் என வந்தது. வரைவு - பிரிவு. சிவனுக்கு: திருவடியின்கீழ் இடபதேவர் அமைந் திருத்தலால், திருமேனி விபூதிப் பூச்சுக்காரணமாக வெண்ணிறமாக விளங்கிக் கொடி போன்ற இடையினை யுடைய உமாதேவியாரை இடப்பாகத்தில் இருத்தி, நீண்ட வடிவத்தைக் கொண்ட பாம்புகளை அணிந்து, காமாட்சியம்மையார் கட்டித் தழுவிய போது அவ்வம்மையாருடைய வளைத்தழும்பு பொருந்தப்பெற்று;

மாசுணம் - பாம்பு, விளத் தழும்புபெற்ற வரலாற்றைக் காஞ்சிப் புராணத்திற் காண்க. போற்று - பாராட்டு. (44)

"மாயன் துயின்றதுவும்......"

மாயன்துயின்றது பச்சைவடம் (பசிய நிறமுள்ள ஆலமிலை) வடம் - ஆலமரம். மாமலராள் - செந்தாமரைப்பூவில் இருக்கும் மகாலக்குமி, சொல்வது - (வெல்லப்) பாகுபோன்ற இனிய வார்த்தை; பொருந்திய குருந்த மரத்திலே, கண்ணன் கவர்ந்துகொண்டு ஏறியிருந்தது, (கோபிகாஸ்திரிகள்) இடையர்குலப் பெண்கள் அவிழ்த்துவைத்த சேலை, இடப்பாகன் வாமபாகத்தில் இறைவியை வைத்த சிவபெருமான், சென்னி - சிரசு, சடைமுடி, சோமன் - சந்திரன். (45)

"உடுத்ததுவும் மேய்த்ததுவும்......"

விஷ்ணுமூர்த்தி உடுத்திக் கொண்டது (பொன்) பொன்னிறமாகிய பீதாம்பரம், கிஷ்ணவதாரத்தில் மேய்த்தது (ஆ) பசுக்கள், இந்திரன் கன்மழை பெய்யச்செய்து பசுக்களுக்கு அழிவுதேட முயன்றபோது, கண்ணபிரான் அம்மழையைத் தடுக்கும்படி குடையாகப் பிடித்தது (வரை) கோவர்த்தனகிரி, சர்வசங்கார காலத்திற் பிரளய வெள்ளத்தின்மேற் படுக்கையாகக் கொண்டது (இலை) ஆலமிலை, (அந்நாள் எறிந்து) அக் காதத்திற் கன்றைக் கவணைக்கொண்டு எறிந்தது (காய்) விளாங்காய், (அன்பின் இரந்தது) சிவபத்தியோடு பூசித்து வரங்கேட்டது, (பூ) தமது கண்ணாகிய தாமரைப்பூ. இனி, அன்பின் இரந்தது பூ என்பதற்கு விருப்பத்தோடு யாசித்து மாவலிச் சக்கரவர்த்தியிடம் (வாமனராகச் சென்று) பெற்றது (பூ - பூமி (நிலம்) எனப் பொருள் கொள்ளினுமாம். (46)

"சென்னிமுக மாறுளதாற் சேர்கரமுந் நாலுகையால்......"

விநாயகருக்கு: சென்னிமுகம் மாறு உளதால் - சிரமும் திருமுகமும் யானையின் தலைபோலவும் முகம்போலவும் மாறுபட் டிருத்தலால், சேர்கரமும் நாலுகையால் - பொருந்திய துதிக்கையும் விளைந்திருத்தலால் (நாலுதல் - விளைதல்) இந்நிலத்தில் - சிறந்த இப் பூவுலகிலுள்ள திருக் கோயில்களில் ஒற்றை மருப்புடையவராய் எழுந்தருளி யிருத்தலால், (கோடு - கொம்பு) மன்னுகுளக் கண்ணுறுதலால் - நிலைபெற்ற சர்க்கரையினாலாகிய மோதகம் தும்பிக்கையாகிய திருக்கரத்தில் இருப்பதால், குளம் - சருக்கரை, இங்கே சருக்கரையினாலாகிய மோதகத்திற்கு ஆகிநின்றது; முருகவேளுக்கு: சென்னி முகம் ஆறு உளதால் - சிரமும் திருமுகமும் தனித்தனி ஆறென்னுந் தொகை கொண்டமையினால், செங்கரம் முந்நாலு கையால் - பொருந்திய கரங்கள் (3×4) பன்னிரண்டாகையால், இப் பாத 'கண்டமாகிய தேசத்தில், திருச்செங்கோடு என்னும் சுப்பிரமணிய தலமொன்று விளங்குவதினாலும், மன்னு

குளக் கண்ணுறுதலால் - நிலையான (நீர் வற்றுதலற்ற) சரவணவாவி யெனப்படும் குளத்திற் பொருந்தி வளர்ந்தமையினுல், சிவனுக்கு: சென்னிமுகம் ஆறுஉளதால் - திருமுடியினிடத்துக் கங்கையாறு படிந்திருத்தலால், பொருந்திய திருக் கரங்களும் நான்காக விருத்தலினுல், இன்னிலத்திற் கோடு ஒன்று இருத்தலால் - சிறந்த இப்பூவுலகத்தில் (பூலோக கைலாயம்) என்று சொல்லப்படும் சிறந்த தலம் விளங்குவதனுல், (தீ) செறிந்த நெற்றிக் கண் பொருந்தி யிருப்பதனுல்; இங்கே கோடு என்றதன்பொருள் அரனிருக்கையாகும்; சிவபிரான் சாந்நித்தியமாக எழுந்தருளியமையினுற் கைலாசம் விசேடித்துக் கொள்ளப்பட்டது. குளம் - நெற்றி. மூலபாடத்தில் மூன்ளுலு என்றிருப்பதை மூந்நாலு எனத் திருத்திக்கொள்க. இங்கே முகம் என்பது இடப்பொருளில் வந்த ஏழாம் வேற்றுமை யுருபு. (47)

"நஞ்சிருக்குந் தோலுரிக்கும்......"

பாம்புக்கு: நஞ்சு உண்டு, இடையிடையே தன்தோலைக் கழற்றும், இறைவருடைய திருமுடியில் வாழும், கோபங்கொண்டு (சீறிக்) கடித்தால் கடியுண்டவருடைய உயிர் பிழைக்காது; வாழைப் பழத்துக்கு: நைந்திருக்கும் - அறக்கனிந் திருக்கும், நஞ்சு நைந்து என்பதன் போலி; தோல் உரிக்கப்படும், இறைவருடைய திருமுடியில் அபிடேகத் திரவியமாகப் பொருந்தும், (வெஞ்சினத்தில்) உணவுக்குரிய பதார்த்தமாகிப் பல்லால் உண்ணப்படும் போது தப்பாது, விஞ்சுதல் - மிகுதல். வெஞ்சன மென்பது சிலேடை நோக்கி வெஞ்சின மென்ருயிற்று, வெஞ்சனம் - உணவுப்பொருள். (48)

"சங்கரத்து மாறுதலை......"

சிவபெருமானுக்குக் கங்கையாறு திருமுடியிலுண்டு, சண்முகக் கடவுளுக்கு ஆறு சிரங்களுண்டு, (ஐங்கரற்கு + மாறுதலை) ஐந்து திருக்கரங்களை யுடைய விநாயகக் கடவுளுக்கு மாறுபாடான யானைத்தலை யமைந்துள்ளது, சங்கைப் பிடித்தோற்கும் ஆறுதலை - சங்கினைத் தம்கரத்திற் பரித்தருளிய திருமாலுக்கும் ஈராற்றினுக்கிடையே கோயிலுண்டு, பரமசிவனே தேவரீருடைய திருவடிகளைத் தோத்திரம்பண்ணும் மெய்யன்பர்களுக்கு மனஆறுதல் வரும்படி கண்பார், பித்தன் - சிவன், திருமாலுக்கு ஈராற்றிற் கிடையே யென்றது கொள்ளிடங் காவிரியென்னும் இரு ஆறுகளுக்கு மிடையேயுள்ள, தலை - இடம், ஸ்ரீரங்கம் என்னுந் தலம். இங்கே தலையென்பது, வலைத்தலை யென்றதுபோல் இடப்பொருளில் வந்தது. (49)

"நேற்றிரா வந்தொருவன்......"

வஞ்சியரே - சேடியரே, ஒருவன் நேற்று இரவு என்னிடம்வந்து நான் உறங்கிக் கிடக்கும்போது என்கையைப் பிடித்தான், வேற்றூரான் என்று விடாய் என்றேன் - பிடித்தவன்-(என் தலைவனல்லன்) அந்நியனென் றுணர்ந்து என்கையை விட்டுவிடு என்று (சினத்துடன்) சொன்னேன், ஆற்றியே - என்

கோபத்தைச் சமாதானஞ் சொல்லித் தணித்து, கஞ்சி குடியென்றான் - நான் குடியிருப்பது காஞ்சீபுரம் என்று சொன்னான், (குடியிருப்பது காஞ்சீபுரம் என்று சொல்லவே, நான் ஏகாம்பர நாதரென் றறிந்து) இன்று களித்துபோ என்றேன் - இன்றிரவு என்னுடன் மகிழ்ச்சியோடிருந்து போகலாம் என்று (அன்புடன்) சொன்னேன், மறைந்து சென்றான் - உடனே மறைந்துபோய் விட்டார். வஞ்சியே என்றும் பாடம். இச்செய்யுளில் விடாய் என்பதற்குத் தாகம் என்பதும், தாகமானல் கஞ்சியை ஆற்றிக்குடி யென்பதும், (நான் கஞ்சி குடிக்கிறேன்) நீ களி தின்றுவிட்டுப் போ என்பதும் சிலேடையாகத் தொனித்தல் காண்க, வேற்றூர் - வேறுஊர். (50)

''ஆடல் புரிந்தா னென்றும்......''

(சிதம்பரத்தின் கண்ணே ஆநந்தத்) தாண்டவம் செய்தருளினு னெனவும், முற்காலத்தில் (அப்பர் சுந்தரர் சம்பந்தர் என்னும்) மூவர் பாடிய தேவாரங் களைக் கேட்டருளினு னெனவும், திருவருட் பண்பினுல் மதுரைப் பதியிலே (மாணிக்கவாசகசுவாமி பொருட்டுப் பாண்டியனுக்குக் கொடுக்கும் வண் ணம்) நல் நரிவாசிக்கு - நரிகளாகிய நல்லகுதிரைகட்கு ஐவகையான நடை களையும் பழக்கினு னெனவும், கிளி கின்னரி வாசிக்கும் - கிளியானது கின் னரம் என்னும் வாத்தியத்தை இசைக்கும், மூன்று மடியில் வாசி - குதிரை, கின்னரி - வீணை. (51)

''மன்னு திருவண்ணுமலை......''

நிலைபெற்ற திருவண்ணுமலையில் வாழும் சம்பந்தாண்டார் என்பவ ருக்கு, சொல்லப்படுகிற சவுரஞ் செய்தல் ஏனெனில், மின்னற்கொடி போலத் துவளுகின்ற இடையினையுடைய பெண்கள் இச்சம்பந்தாண்டாருடைய குடு மியைப் பற்றித் தலையை வளைத்து இழுத்துக் குட்டாமற் செய்யும் பொருட்டாகும். மூலபாடத்திற் பண்ணுதலை என விருப்பதைப் பன்னுதலை யெனத் திருத்திக் கொள்க. (52)

''கரியதனையே யுரித்தகையா......''

கயன் என்னும் யானையின் தோலையுரித்த திருக்கரத்தையுடையவரே, சங்கைக் கரத்திற் பரித்த விஷ்ணுவுக்கும் பிரமதேவருக்கும் முறையே அடியும் முடியுந் தேடிக் காண்டற்கரியவராய் நின்ற பெருமானே, தேவர்க ளெல் லாரும் (அசுரர்களுடன்) சேர்ந்து (பாற்கடலின் கண்ணே) அமிர்தத்தை (விரும்பி)க் கடைந்தபோது, (நஞ்சானது அக்கடலிற் பிறந்து தேவர்களைக் கொல்லும்படி தொடர, அத்தேவர்கள்மீது) இரக்கங்கொண்டு வாயி விட்டுத் திருக் கண்டத்தில் அடக்கிய நஞ்சினை உமிழ்ந்தருள்க; கரி - யானை, இங்கே யானை வடிவங்கொண்ட கயன் என்னும் அசுரனைக் குறித்தது, வளை - சங்கு, சக்கரம், அரி - திருமால், அயன் - பிரமா, பரிவாக - அன்புகொண்டு, அண்டர் - தேவர். (53)

"முக்காலுக் கேகாமுன்......"

இரண்டு கால்களோடு ஊன்றுகோலையும் கால்போற் கொண்டு நடக்கின்ற முதுமைப்பருவம் வருதற்குமுந்தி, (முன் + நரையின் வீழாமுன்) தலையினிடத்துள்ள மயிர்நரைத்தற்கு முந்தி, கால் - உயிரானது, அக்காலனைக் கண்டு அஞ்சாமுன் - அந்தக்கால (யம) தூதுவரைக்கண்டு பயப்படுதற்கு முந்தி, (முதுமைகாரணமாக) விக்கலெழுந்து இருமுதற்குமுன், மாகாணிக்கு ஏகாமுன் - பெரிய சுடலைக்குக்கொண்டு போகப்படுதற்கு முந்தி, கச்சி ஒரு மாவின் கீழரை இன்று ஓது - காஞ்சீபுரத்திலுள்ள மாமர நீழலிற் கோயில் கொண்டருளிய ஏகாம்பரநாத சுவாமியை இப்பொழுதே (இந்த இளமைப் பருவத்திலேயே) தோத்திரஞ் செய்க.

இச் செய்யுளின்கண், முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை முதலிய பின்ன எண்களைக் குறிக்குஞ் சொற்கள் விரவி வருதல் காண்க. (54)

"வாழ்த்து திருநாகை......"

பாராட்டப் படுகின்ற செல்வத்தோடு கூடிய நாகபட்டணத்தில் வசிக்கும் அழகிய தேவதாசி (ஒருத்தி) பாழான தன் குரலினாற் பாடினாள், (பாடக் கேட்டு) முதனாள் தன் கழுதையை இழந்த (தவறவிட்ட) வண்ணான், தன் கழுதை மீண்டுவந்து விட்டதென்றெண்ணி (அதனைக் கட்டிக்கொண்டு போதற்குக்) கயிற்றை யெடுத்துக்கொண்டு ஓடி வந்தான்; பார், முன்னிலையசை. கழுதை கத்துவதற்கும் அவள் பாடுவதற்கும் பேதமில்லை யென்றபடி. (55)

"மாடுதின்பான் பார்ப்பான்......"

இதில் ஈற்றிலுள்ள பறை யென்னுஞ் சொல்லை மாடுதின்பான் என்னும் முதல் வாக்கியத்துடன் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளின் ஏனையவற்றின் பொருள் பொருத்தமாக அமைதல் காண்க; பறை - பறையன். (56)

"துதிவாணி வீரம்......"

1. துதிவாணி - துதிக்கப்படுகின்ற சரசுவதி கடாட்சம் (கல்வி), 2. வீரம் - வலிமை, 3. விசயம் - வெற்றி, 4. சந்தானம் - சந்ததி விருத்தி, 5. துணிவு - சூரத்துவம், 6. தனம் - செல்வம், 7. அதிதானியம் - அதிக தானிய விளைவு, 8. சௌபாக்கியம் - சகல பாக்கியங்களோடுங் கூடியிருத்தல், 9. போகம் - மாதரின்பம், 10. அறிவு - ஞானம், 11. அழகு - பேரழகு, 12. புகழ்தாம் பெருமை - மேலும் மேலும் வரும் மதிப்பு, 13. அறம் - தருமம், 14. குலம் - உயர்குடிப் பிறப்பு, 15. நோயின்மை - நோயற்றவாழ்வு, 16. பூண்வயது - நீடித்த ஆயுள் என்னும் பதினாறு வகை

யான பேறுகளையும் தந்தருளுவீர் மதுரைத் திருப்பதியிற் கோயில் கொண்டருளிய பரம்பொருளே என்பது கருத்து. (57)

"வில்லா லடிக்கச்......"

வில்லா லடித்தவன் அர்ச்சுனன், செருப்பா லுதைத்தவர் கண்ணப்பர், வெகுண்டு - கோபங்கொண்டவர் போன்று, கல்லா லெறிந்தவர் சாக்கிய நாயனுர், பிரம்பாலடித்தவன் - அரிமர்த்தன பாண்டியன், காசினியில் - உலகிலே, அல்ஆர்பொழில் - இருள் நிறைந்த சோலையோடுகூடிய, தில்லையம்பலவாணர் - சிதம்பரத்தில் நடனஞ் செய்கின்ற நடராஜர், அன்னைபிதா இல்லாத தாழ்வு - தாய்தகப்ப னில்லாமையாகிய குறைவு, இங்ஙனே எளிதானது - இப்படியெல்லாம் எளிமைப்பட்டதன் காரணம்; கேட்பாரில்லாமையினுற்ருன் அடிபட்டதும் உதை பட்டதும் எறியுண்டது மென்றபடி. (58)

## சத்திமுத்தப்புலவர் பாடல்

"நாராய், நாராய், செங்கால் நாராய்......"

பழம்படு பனையின் கிழங்கு - பனங் கிழங்கு, பிளந்தன்ன - பிளந்தாற் போன்ற, பவளக் கூர்வாய் - பவள நிறமான கூரிய அலகு, உன் மனைவி - உனது பெடையாகிய நாரை, தெற்குத் திக்கின்கண்ணே யுள்ள குமரி தீர்த்தத்தில் முழுகி, வடுவிராயின் - போக நேர்ந்தால், நாம் குடியிருக்கும் ஊராகிய சத்தி முற்றத்திலுள்ள, வாவியில் - குளத்தில், வேயப்படாமையினுல் மழையால் நனையுஞ் சுவரிற் பொருந்தியகூரை, கனைகுரற் பல்லியின்பாடு பார்த்திருக்கும் - ஒலியோடுகூடிய பல்லி சொல்வதால் விளையும் பயனை எதிர்பார்த்துக்கொண் டிருக்கின்ற, ஆடை - துணி, புடைவை; வாடை - குளிர்காற்று, மெய் - உடம்பு, தழீஇ - தடவி, பேழை - பெட்டி, உயிர்க்கும் - பெருமூச்சுவிடும், ஏழையாளர் - வறுமையுடையவள், என்பதற்கு பெண்ணுகிய உன்னுடைய கணவனெனப் பொருள் கொள்ளினுமாம், ஏழை பங்காளன் எனவருதல் காண்க. (59)

## இரட்டையர் பாடல்

"மூடர்முனே பாடல்......"

தென்புலியூர் ஆடு எடுத்த அம்பலவா - தெற்குத் திக்கின்கண்ணே யுள்ள புலியூ ரெனப்படும் சிதம்பரத்திலே ஆநந்தக் கூத்தாடும் பொன்னம்பலவாணரே, மூடர் முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ - கல்வியறிவில்லாதவர்களது முன்னிலையிற் பாட்டைப் படித்தால், (அவர்கள்)அதன் பொருட்சுவையை விளங்கிக் கொள்வார்களோ, (கொள்ளமாட்டார்என்றபடி) ஆடகப் பொன் செந்திருவைப்போல் அணங்கை - பொன்போன்ற அழகிய பொற்குட்டோடு கூடிய செந்தாமரைப் பூவிலிருக்கின்ற மகாலக்குமியை யொத்த

பேரழகுடைய பெண்ணை, நாயகன் அந்தகனுனல் - அவளுடைய கணவன் குருடனு யிருப்பானேயாயின், சிங்காரித்து என்னபயன் - (அவளுக்கு) அலங்காரஞ் செய்து அக்குருடன் முன்பு விடுதலினல் என்ன பிரயோசனம் (ஒரு பயனுமில்லையாம்), அந்தகன் - குருடன். குருடன் முன்னிலையில் அவனுடைய பெண்டாட்டியை அலங்காரஞ் செய்துவைத்தலால் எங்ஙனம் பயனில்லையோ, அங்ஙனமே கல்வியறிவில்லார்மீது அரியபிரபந்தத்தைப் பாடுவதனுற் பயனில்லையாம் என்றபடி. (60)

## அரிச்சந்திர புராணம் : நகர்நீங்கு காண்டம்

61. தலம் - நாடு, தவமுனிவன் - கௌசிக முனிவர், (விசுவாமித்திரர்) அளித்தல் - கொடுத்தல், தகுதியன்று - முறையல்ல, இலகு - விளங்குகின்ற, எழில் - அழகு, மணிச்சிங்காதனம் - இரத்தினங்கள் அழுத்திய சிங்காசனம், பதாதி - காலாட்படை, மொய்க்க - சூழ, குலமகன் - சிறந்தமகன் (தேவதாசன்) மடமயில் - இளமை பொருந்திய மயில்போன்ற சாயலையுடைய சந்திரவதி, கோற்றம் - வெற்றி.

62. தோடை - மாலை, துறந்து - விடுத்து, பணி - ஆபரணம், துடி - உடுக்கை, தாமம் - (இங்கே) முத்துமாலை, கவரிக்குழாம் - வெண்சாமரைத் தொகுதி, கரி பரி - யானை குதிரை, குலம் - கூட்டம், கடை - கடைவாயில், மறுகு - வீதி, அடைய - ஒருங்கு; முழுப்பேரும், மனம் அழிந்து - உள்ள முடைந்து.

63. போகில் - பறவை, காம் - (இங்கே) தும்பிக்கை, பொறி - சூத்திரமாகிய சயிறு, தத்தமக்கு நிகழ்ந்த வெல்லாம் சாற்றுகின்றூர் - தங்கள் தங்கள் உள்ளத்தில் நேர்ந்த கவலை முழுவதையும் எடுத்துச் சொல்லுகின்றூர்கள்.

64. கோடிமீது செறிதேர் — கோடிகள் மேலே நெருங்கியுள்ள தேர், குஞ்சரம் - யானை, படி - நிலம், படித்தனவோ - பயின்றனவோ, பார் வேந்தன் - (இங்கே) அரிச்சந்திரன், சுட்டபொடி - சுடுமணல், குலக்குமாரன் - சிறந்த புதல்வன், (தேவதாசன்).

65. அம்சாயல் அன்னத்து அணிதூவி - அழகிய சாயலையுடைய அன்னப்பறவையின் சிறந்த மிருதுவாகிய சிறகு, அனிச்சம் - மோப்பினும் வாடுமியல்பினையுடைய மிருதுவாகிய ஒருவகைப்பூ, பதத்தாட்கு - அடிகளையுடைய சந்திரவதிக்கு, பலித்தது - வந்து சேர்ந்தது, செஞ்சாலிக் கோசலம் - செந்நெல் விளையுங் கோசலநாடு.

66 முல்லைமுகை நகைமாளும் - முல்லை யரும்பு போன்ற பற்களையுடைய சந்திரவதியும், மணஅறை - விவாகமண்டபம், மலர்அணை - பூக்கள் பரவப்பட்ட படுக்கை, தொல்லை விதிப் பயனுலே - பழைய ஊழின் பயன்

காரணமாக, ஈந்தோர் - கொடுத்தவர்களாகிய அரிச்சந்திரன் சந்திரவதி, பேறும்பேறு - அடையும் பயன்.

67. அல்லார்க்கும் குழல் மடவீர் - இருள்போன்ற கரிய கூந்தலை யுடைய பெண்களே, வல்லார்க்கும் மாட்டார்க்கும் மறமே நன்று என்று உரைப்பர் - வலியவரா யுள்ளவர்களுக்கும் வலிமை யற்றவர்களுக்கும் வீரமே சிறந்தது என்று (உலகோர்) சொல்லுவர், மறம் நன்றாமோ - (அப்படியான) வீரம் நன்மை பயக்குமோ? அறமே நன்று என்று உரைப்பர் - (வீரமல்ல) தருமந்தான் பயன்தருவது என்று (சிலர்) சொல்வார்கள், அது நன்றாகில் - அத் தருமந்தான் நன்மை பயப்பதெனின், நல்லார்க்குந் தீயார்க்கும் எல்லார்க் கும் ஒருமையினால் நடவாதென்னே - நல்லவர் தீயவராகிய எல்லாருக்கும் ஒரே தன்மையாக சேரா திருத்தற்குக் காரணமென்ன? எல்லார்க்கும் நன் மையே நடப்பதானால், எங்கள் அரசனுக்கு மாத்திரம் இல்லாதொழிந்தமை எக்காரணத்தினால் என்று கூறுவார்கள்.

68. கொண்டிருந்த - ஆண்டுகொண் டிருந்த, திரு - செல்வம், பண்டு இருந்த - முந்தியே யுள்ளதாகிய, பரிசனம் - பரிவாரங்கள், வண்டு இருந்த தாரான் - வண்டுகள் படிகின்ற மாலையை யணிந்த அரிச்சந்திரனும், வாள்நுத லும் - ஒளிபொருந்திய நெற்றியையுடைய சந்திரவதியும், விலக்காத - போக வேண்டா மென்று தடுக்காத.

69 செம்மையினால் - மனப்பூர்வமாக, செறி - (மரங்கள்) அடர்ந்த, தேம்பி - வருந்தி, ஒரு மனைக்குத் தலம் - ஒரு இல்லிடம், கரங்கள் நடுக்கி - கைகளை உதறி, மாறவெம்மை - தீராத மனப்புழுக்கம், வெய்துயிர்த்து - பெருமூச்சுவிட்டு.

70. அலமந்து - சுழன்று; வருந்தி, வயிறலைத்து - வயிற்றி லடித்து, கன்று - யானைக்குட்டி - (மகனாகிய தேவதாசன்), பிடி - பெண்யானை (சந்திர வதி), கிளை - யானைக்கூட்டம் (பரிசனர்), களிறு - ஆண்யானை (அரிச்சந் திரன்) இன்று அளித்த அருள் முனிவற்கு எற்றனவோ எற்றிலவோ - நாம் இப்பொழுது கொடுத்தவை அருளுடைய கௌசிக முனிவருக்குத் திருப்தி யானவோ அல்லவோ, குன்று - சிறுமலை, தனிநடந்து - வேகமாக நடந்து, சரயு - ஒரு நதி, துறுகினான் - அடைந்தான்.

71. இரவிதலம் - சூரியகுலம், வழிவழியே - பரம்பரையாக, உரிமை - சூரிய குலத்தரசரால் பரிபாலிக்கப்படும் கோசல நாட்டின்கண்ணே பாய்த லாகிய தொடர்பு, தாதி - செவிலித்தாய், வினைதான் ஏது என்று - நேர்ந்த தீவினை என்னவென்று, விரை - வாசனை, அரற்றிட - கதற, இழிந்து ஏகி - இறங்கி நடந்துபோய், நறும் - வாசனையுடைய, கா - பூஞ்சோலை, அரிச் சந்திரன் சந்திரவதி முதலியோருடன் ஆற்றில் இறங்கி நடக்கும்போது அவ னுடைய கால்களிலே அலைபோய்ப்படுதல் உங்களுக்கு நேர்ந்த பொல்லாக்கு

என்ன என்று சரயுநதி யென்னும் பெண்ணானவள் தன் திரைகளாகிய கைகளால் அவன் கால்களைப் பற்றிக்கொண்டு வினவி யழுதல்போன் றிருந்தது என்றபடி.

72. ''வரைக் கனக புயத்தினன்......''

வரைக்கனக புயத்தினன் - (கனகவரைப் புயத்தினன்) பொன்மலையை யொத்த (திண்ணிய) புயங்களையுடைய அரிச்சந்திரன், விரைக் கரும் பூங்குழலாள் - (விரைப்பூங்கருங் குழலாள்) வாசனை பொருந்திய பூவைத்து முடித்த கரிய கூந்தலையுடைய சந்திரவதி, செங்கதிரோன் பொருமெனைத் திரைக்கடலுட் போய்ச் சென்றனன் - சூரியன் (தன்குலத்து அரசனாகிய அரிச்சந்திரன் படுந் துன்பத்தைப் பார்க்கச்) சகியாதவன்போல, அலைமறிகின்ற கடலுட் புகுந்து முழுகினான் (பொழுதுபட்டது என்றபடி) சென்ற அக்காலை - போய் மறைந்த சமயத்து, உரைப்பனவும் விளைப்பனவும் அறிதும் என - அரிச்சந்திரன் முதலானோர் தங்களுட் பேசுவனவற்றையும், செய்வனவற்றையும் (மறைந்திருந்து) அறிவோ மென்று.

73. ''அக்காலத் தமைச்சரோலாம்......''

அமைச்சர் - மந்திரிமார், அடல் - வலிமை, முக்காலம் - இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம், முதூர் - பழமை பொருந்திய கோசலநாடு, ஏங்கி (அறிவு சோர்ந்து) வீழ்ந்தார்கள்!

74. ''முன்செய்த தீவினையோ......''

உபகாரம் முன் உண்டாக - உபகாரம் முன் தனக்குக் கிடைக்க, முனி பின்செய்த கைம்மாறோ - கௌசிக முனிவன் பின்னர்ச் செய்த பிரதியுபகாரமோ? மின்செய்த - ஒளிவீசுகின்ற, மெய்த்தவன் - கௌசிகன், உண்மையான தவத்தைச் செய்தவன், போதும் - புறப்படுவோம், அவன் போருக்கு எதிர்க்க - அம் முனிவருடன் எதிர்த்துப் போர் புரிதற்கு.

75. ''தோல்ஏந்து மார்பில்......''

தோல் - மான்றோல், தொடை - மாலை, தருப்பை முடிச்சுருக்கம் - தருப்பைப் புல்லை நுதியிற் சேர்த்து முடியப்பட்ட தொகுதி, கோல் - திரிதண்டு, குறும்கை - குறுகியகை; கொடையற்ற கை, கோடீரம் - சடைத் தொகுதி, கால்ஏந்தி - பாதங்களைப் பணிந்து, கனல் மூழ்கல் - நெருப்பில் வீழ்ந்து சாதல், அமையும் - தகுதியாகும்,

76. ''சடை பிடித்தும்......''

மாஉரியால் தகைத்து உடுத்த - மரப்பட்டையினால் மறைத்து உடுத்தியுள்ள, ஈர்த்து - இழுத்து, அவனை - அம்முனிவனை, மடைபிடித்த - வாய்க்

கால்கள் பொருந்திய, புரக்க - ஆளுதற்கு, படை - படைக்கலம், பதம் - பாதம்; காலடி, விறல்வேந்தர் - வலிய சிற்றரசர்,

77. படிபுரக்கும் மன்னவன்......''

படி - உலகம், நாடு, இருகாத்தாற் செவி புதைத்து - (அப்படிச் செய் வது மாத்திரமன்றிச் சொல்லுவதும் பாவம், சொல்லக் கேட்டலும் பாவம் என்று) தன் இருகைகளாலும் காதுகளைப் பொத்தி, அந்தோ - ஐயோ! குடிகெடினும் – என் குடும்பம் முழுதும் அழிந்தாலும், உயிர்கெடினும் - என் னுயிர் போனாலும், கடி - காவல்; வாசனை, வந்தெதிர்ந்தான் - வந்து வெளிப் பட்டார், அடியிணை - இருபாதங்களில், முடிசார்த்தி - தன்தலை பொருந்தும் படியாக வைத்து, உறப்பூண்டான் - இறுக்கப் பற்றினான்.

78. ''வெய்தா நீ வேடுவரால்......''

வெய்தாய் நீ - கொடியவனாகிய நீ, வெகுண்டு - கோபித்து, ஏனம் - பன்றி, என்மக்கள் - என்றது கௌசிக முனிவர் தோற்றுவித்த இருபெண் மக்கள், இதன் விரிவை இந்நூலிலுள்ள சூழ்வினைக் காண்டத்துக் காண்க, இசை - சங்கீதம், துரந்தடித்தாய் - அடித்துத் துரத்தினாய், வய்தாய் - வைதாய் - ஏசினாய், மன்டலம் - (மண்தலம்) நாடு, இவர் உரைத்த தீமை யெலாம் செய்தாய் - என்மக்கள் எனக்கெடுத்து முறையிட்ட தீமைகளை யெல்லாம் செய்தவனானாய், செப்பினன் - சொன்னான்.

79. சிறுத்தவர்கள் அறியாமல்......''

சிறுத்தவர்கள் - சிறியோர்கள், செவ்வியோய் - சிறந்தவரே! பொறை என்னும் - பொறுமை எப்படிப் பயன்படும்? முறை - நீதி, புலமை - கல்வி யறிவு, ஒறுத்திடினும் - தண்டித்தாலும், மறுத்து - மீட்டு, வாட்டம் - முக வாட்டம், மனச்சோர்வு,

80. ''பொன்கேட்கப் பொன்னளித்தான்......''

அளித்தல் - கொடுத்தல், புவி - நாடு, இல்லையெனும் புன்மை - இரப்போர்க்கு இல்லையென்று சொல்வதாகிய கீழான இயல்பு, ''இலம் என் னும் எவ்வம் உரையாமை'' என்பது திருக்குறள், முன்கேட்ட பொருள் - முக்தி யாகஞ் செய்யத்தரும்படி கேட்ட திரவியம், மொழிவழு வந்துஎய் தும் - சொல் தவறுதல் நேரும், முடக்கமானல் - தடைபடுமானால், பின் கேட்டார் இகழ்வார்கள் - அரிச்சந்திரனைக் கொண்டு பொய்சொல்லுவிக்க என்னால் முடியவில்லை யென்பதைப் பின்னர்க் கேள்விப்படும் வசிட்டர் முதலானோர் என்னை அவமதிப்பார்கள், பொறுத்தும் - பொறுத்திருப்போம்.

81. ''ஒன்றுரைக்க நீ கேளாய்......''

கேளாய் - கேட்பாயாக, வண்மை - கொடை, அழல்வேள்வி - அக்கினி யாகம், வாய் புதைத்து - கையால் வாயைப் பொத்திக்கொண்டு, இது பெரியோர்க்குச் சிறியோர் ஏதுஞ் சொல்லும்போது செய்யும் பணிவு.

82. "உன்னுடனே யுரைத்தபொருள்......"

உகந்து - விருப்பத்தோடு, மனப்பூர்வமாக; உரிமை - அரசுரிமை, முனிவால் - (நீர்) கோபிப்பதனால், தருவல் - தருவேன், சபதம் - உறுதி வார்த்தை, பொன்னுடனே தருவன் (பொன் + உடனே தருவன்) - பொன்னை உடனே கொடுப்பேன், புகரோன் - சுக்கிரன்; வெள்ளி, அவன் - கௌசிக முனிவர், பொருத்தினன் - (அரசனுடன் சென்று பொருள் வாங்கிவரும்படி) ஒழுங்கு செய்தான்.

83. உள்ளிய தீவினை அனைத்தும்......"

உள்ளிய - (தான் அரிச்சந்திரனுக்குச் செய்ய) நினைத்துள்ள, வகை வகையாய் - வேறு வேறாக, அள்ளியிடும் பொருள் கவராது - அள்ளித் தருகின்ற திரவியத்தை வாங்காமல், ஆனையில்மேற் கவண்சிலை போமளவு - ஒருவன் யானையின் முதுகில்நின்று ஒருகவண் கல்லை எறிய; அந்தக்கல் எவ்வளவு உயரத்திற்குப் போகிறதோ அந்த உயரம்வரை குவிக்கக்கூடிய பொன்னை, கொள்ளுதி - வாங்கிக்கொள், பின்போனகூலி - நீ அரிச்சந்திரனுடன் கூடிக்கொண்டு நடந்த சிரமத்திற்கு ஆகியகூலி, [மூலபாடத்தில் வெள்ளிதனை உடன் கூட்டிடும் எனத் தவறு யிருப்பதை உடன்கூட்டி மீண்டும் எனத் திருத்திக் கொள்க.]

84. "துன்றுபசிக்கு அடகுகனி......"

துன்று - மிகுந்த, அடகு - இலை (இலைக்கறி), ஏலாது - ஏற்றுக் கொள்ளாது, இவன் ஊண்பெற்றல் - இந்த அரிச்சந்திரன் (உனக்கு விருப்பமான) உணவைத் தேடித்தந்தாலும், உணற்கு அகலேன் - உண்ண வர மாட்டேன், அவதி - தவணை, நின்றவரை - அங்குநிற்கும் ஏனையோரை, கரிதுறித்து - சாட்சிவைத்து, மறுதினத்தில் - அடுத்தநாள்.

85. "அடுத்திருத்தி மனங்கலக்கி......"

அடுத்திருத்தி - (அரசனை) உன் பக்கலில் இருக்கச்செய்து, மனம் கலக்கி - மனத்தை மாறுபடுத்தி, முனிக்களித்த.........எடுத்துரைக்கில் - முனிவனுக்குக் கொடுப்பேன்என்று அரசன் (முந்திச்) சொன்ன வாக்கு மாறுபட்டுத் தரமாட்டேன் என்று சொல்வானாகில், இசைந்தானாகில் - உடம்பட்டானாகில், கூட்டிவிடுத்தனன் - அரிச்சந்திரன் முதலியோருடன் போகும்படி விட்டார் (முனிவர்).

86. முனியேக மன்னவனும்......"

மூரி - வலிமையுடைய, ஏகும் - போகுதிர். அவர்க்கினியார் எனக்கினியார் - முனிவருக்கு நல்லவர்களே எனக்கும் நல்லவராக மதிக்கப்படுவர், பனிஏதும்முனம் - பனிநீங்குதற்கு முந்தி (அதிகாலையில்); பைந்தோடி - பசிய வளையலையணிந்த சந்திரவதி.

87. "வருகின்ற மந்திரியை......"

உருகினிய (உருகு இனிய) - உள்ளத்தை யுருக்குகின்ற நல்ல, மறை முனிவன் - வேத முனிவராகிய கௌசிகர், உறுநர் - துணைவர், அமைச்சர் பிரான் - முதன் மந்திரி.

88. "கோதிலாப் பெருங் குணத்தாய்......"

கோதுஇலா - குற்றமற்ற, இந்நெடுநாள் - இவ்வளவு நீடித்த காலமாக, அருஞ்சுரத்தில் - கஷ்டங்களோடுகூடிய காட்டில், பணித்தபணி - இட்டவேலைகளை, மாதரார் - சந்திரவதி, ஏதிலான் - அந்நியன், இடியேறுண்டமரம் - இடிவீழப்பெற்ற மரம்.

89. "இடிவிழ்ந்த மரம்போல......"

அரற்றும் - கதறுகின்ற, மேனிப்பொடி - உடம்பிலே படிந்தமண், முடிதடவி - தலையைத்தடவி, விழிநீர்தனைமாற்றி - கண்ணீர் துடைத்து, பொருமல் - கவலை, கடிநகரில் - காவலோடுகூடிய அயோத்திமா நகரில், காமர் - அழகிய, அழுங்குதல் - வருந்துதல்.

90. "வாழ்வினை வளர்ந்த பொழுதென்னின்......"

வாழ்வினை - வாழ்தற்காகிய நல்வினை, ஆகூழ், தாழ்வினை - கெடுதற்குரியவினை, போகூழ், சூழ்வினை - (முனிவனுல்) யோசித்துச் செய்யப்படுந் தீவினை, ஊழ்வினை - பழவினைப்பயன், விதி.

91. "நண்பினேடு மின்புரிசை......"

நண்பினேடு - விருப்பத்துடன், மின்புரிசை - ஒளிவீசுகின்ற மதில், விண்புலம் - ஆகாயம்வரை, வேலி - காவல், தடங்கள் - தடாகங்கள் குளங்கள்; புனல் - நீர், காரிகை - சந்திரவதி.

92. "பாதகமலங்கள் பதற......"

பாதகமலங்கள் - பாதங்களாகிய தாமரைப் பூக்கள்; தாமரைப் பூ போன்ற அடிகள், காதலி - சந்திரவதி, நாதன் - இறைவன்; சிவன், நக்கான் - சிரித்தான், ஆதவன் - சூரியன், அழன்றெழும் - (கோபத்தோடு) வெப்பத்துடன் உதித்தெழுந்து மேலேசெல்லும், அருஞ்சுரம் - சஞ்சரித்தற்கு முடியாத பாலைவனம்.

93. "அந்தநெடு வெஞ்சுரம்......"

மதிமந்திரி - புத்திசொல்லும் மந்திரியாகிய சத்தியகீர்த்தி, படும்பரிசு - வருந்துந்தன்மை, இவர்வாய் - ஏறுதி.

94. "பூமகளும் மண்மகளும்......"

பூமகள் - செந்தாமரைப்பூவில் இருக்கின்ற இலக்குமி, மண்மகள் - பூமிதேவி, மாமுனிவனுக்குற அளித்த நின்மணித்தோள் - (அச் செல்வத்தையும் இராச்சியத்தையும் அவற்றின் பொறுப்பையும் பெரிய கௌசிகமுனிவருக்குக் கொடுத்த உமது அழகிய தோளில், நாம நெடுவேல் இறைவ - (பகைவர்களுக்கு) அச்சத்தைத்தரும் நீண்ட வேலாயுதத்தை யுடைய அரசரே! எளியள் - சின்னவளாகிய நான், நரகு ஆழ்ந்து அழிவன் - நரகத்தில் வீழ்ந்து நாசமடைவேன்.

95. "என்று மயில் கூறிட......"

மயில் - மயில்போன்ற சாயலையுடைய சந்திரவதி, இரங்கி - வருந்தி, எறுழ் - வலிமை, நீர்உக - நீர் சிந்த, உயிர்த்து - நெட்டுயிர்த்து; பெருமூச்சுவிட்டு, மன்றல்சோரிகின்ற - வாசனை வீசுகின்ற, வல்லியனையாய் - கொடியை யொத்தவளே!

96. "நீருமிலை நெட்டிலையின்......"

நெட்டிலையின் நீழல் இலை - நீண்ட மரங்களின் இலைகளாலாகிய நீழலுமில்லை, பேய்த்தேர் - கானல்நீர்; பாலைவனத்திலே நீர்பாய்வது போலத் தோற்றும் பொய்த்தோற்றம், அரவு அடர்ந்து சீறிஎழும் - பாம்பு நெருங்கிச் சீறிக்கொண்டு பட மெடுக்கும்.

97. "காவலவன் அப்பரிசு கண்டு......"

காவலவன் - அரசன்; அரிச்சந்திரன், அப்பரிசு - அத்தன்மை, கை அறைந்து - கை யுதறி, பாரில் - உலகில், இது பட்டார் - இப்படியான துன்பங்களை அனுபவித்தவர், மூவரையும் - (பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும்) மும் மூர்த்திகளையும், நோகிலன் - குறைகூறி வருந்திலன், தேவரையும் - இந்திரன் முதலிய தேவர்களையும், முன்தீவினை - பழையஊழ்.

98. "மைதிகழ் துறும் பொறை......"

மைதிகழ் - முகில்படிந்து விளங்குகின்ற, துறும்பொறை வனத்தில் - சிறு குன்றுகள் செறிந்த காட்டில், இழியுமால்யாறு - பாய்கின்ற பெரிய கோமதியாற்றை, எய்தி - அடைந்து, இழிந்து - இறங்கி, புனல் உண்டு - தண்ணீர் குடித்து, கைதவம் - முனிவன்செய்த வஞ்சனை, மிளிர் - விளங்குகின்ற, கலுழி - கண்ணீர், மணல் வண்டல் - மணலாலாகிய ஆற்றிடைக்குறை யெனப்படும் திடர், பேதை - சந்திரவதி.

99. "அந்த அமையத் தடவி......"

அமையத்து - சமயத்தில், அடவி - காடு, பொழில் - சோலை, அடி வருந்திய வருத்தம் - வழி நடந்தமையால் உண்டான சிரமம், உணராமல் - சிந்தியாமல்; பொருட் படுத்தாமல், கந்தம் - கிழங்கு, மந்திரி - சத்தியகீர்த்தி.

100. "அக்கணம் எடுத்திறைவன்......"

அக்கணம் - அப்போது, இறைவன் - அரிச்சந்திரன், மிக்கன - சிறந்தவை, மறைவிப்பிரன் - வேதப் பிராமணனாகிய சுக்கிரன், நக்கனஉரைத்து - உபசாரவார்த்தை கூறி, சஞ்சலம் - கஷ்டம், அருந்து - உண்க.

101. "நீயும் முனியும் நிகழ்த்தும் நெறி......"

முனி - கௌசிகர், நிகழ்த்துப்நெறி - சொல்லுகிறபடி, தோயும் - மிகுதியான, (தயிர் நெய், பால் முதலியவற்றோடு சோற்றை யுண்பேனே யொழிய, காயும் கிழங்கும் கனியும் இலையுந் தின்றறியேன்.)

102. "என்று புகர் இயம்ப ஏங்கி......"

புகர் - சுக்கிரன், தலைதலைந்து - சஞ்சலப்பட்டு, மொழிதுழறி - சொல் தடுமாறி, வாய்புலர்ந்து - நாவரண்டு, திருக்கரத்தால் தாள்பூண்டு - தன்னுடைய கைகளாற் சுக்கிரனுடைய காலைத் தொட்டுக்கொண்டு, குன்று - மலை, சிலை - கல்.

103. "நாடும் நகரும் முனிக் களித்து......"

பால் அடிசில் - பாற்சோறு, பரிசு - வகை, தா - (உனக்கு) உதவ.

104. "கன்னெஞ்சராய கௌசிகனார்......"

கன்னெஞ்சு (கல்+நெஞ்சு) - இரக்கமற்ற உள்ளம். தன்னெஞ்சம் உருகி - (சுக்கிரன்) தன் மனம் இரங்கி, தயையாகி - கருணையுற்று, தெண்ணீர் - தெளிந்த நீர்.

105. தாமம் திகழ் புயன் - பூமாலை விளங்குகின்ற தோள்களையுடைய அரிச்சந்திரன், மாமந்திரி - முதன்மந்திரி (சத்தியகீர்த்தி) தேமென்கனி - தேன்பொருந்திய இனிய மிருதுவான பழங்கள், செவ்வாய் வெளுப்பேற - சிவந்த அதரங்கள் வெண்மையடைய (செவ்வாய் வெளுப்பேறுதல் கவலை பசி முதலியவற்றா லென்க), தாரணிமேல் - (வெறு) நிலத்தில், கண்வளர்தல் - உறங்குதல்.

106. "மாறுவதும் இல்லை மழைதான்......"

மாறுவதும் இல்லை மழைதான் - (மழைதான் மாறுவதுமில்லை) மழை விடப் போவதுமில்லை, மறையோனே - சுக்கிராச்சாரியரே! ஆறு - கோமதி யாறு, அப்பாற்படும் - அக்கரையைப் போய்ச் சேருவோம்.

107. "எந்நகரிற் புக்கோம்......"

எந்நகரிற் புக்கோம் - (இப்பொழுது) எந்தப் பட்டினத்தை வந்தடைந்தோம் (ஒரு பட்டினத்தையும் அடையவில்லை யென்றபடி), இடர்வனம் -

தின்பத்திற் கிடமாகிய காடு, தூயோய் - பரிசுத்தமானவரே! அவன்தாள் பூண்டார் - அந்தச் சுக்கிரனுடைய அடிகளில் வீழ்ந்து வணங்கினர்கள்.

108. "அன்று விடிந்தபின்......"

அத்தலம் - அவ்விடம், கன்ற - நோவ, அணிகங்கை - அழகிய கங்கா நதி.

109. "மன்னவ கேள்வினை......"

சற்றேவினை வந்தது - இதுகாறும் நீ அனுபவித்த துன்பம் அற்ப மாகும், எல்லை யில்லாத இன்னும்வரும் - அளவற்ற துன்பங்கள் இனி மேலும் உன்னை வந்துசூழும், முனிக்கு அளியேன் என்று - முனிவனுக்குக் கொடுத்ததாகிய இராச்சியத்தைக் கொடுக்கமாட்டேன் என்று பொய்சொல்லி விட்டு, உத்தமம் - மேலானது, என்றன் - என்று சுக்கிரன் சொன்னன்.

110. "நின்பரம் ஈந்திலன் யான்......"

யான் ஈந்திலன் என நிற்றல் நின்பரம் - முனிவருக்கு நாட்டை நான் கொடுத்திலேன் என்று சாதித்தல் உன்பொறுப்பு, நின் அரசு எய்த அளித்தல் என்பரம் - உனது இராச்சியத்தைத் (தொன்மைபோல்) உனக்குச் சேரச்செய்தல் என்பொறுப்பாகும்; நீ படும்துன்பத்தைக் கண்டு (உன்பொருட்டுத் தான்) இவைகளைச் சொல்லத் துணிந்தேன், மின்பயில் வேலவ - ஒளிவீசுகின்ற வேலாயுதத்தைப் பிடித்த அரசனே, மீளுதி - மீண்டு (அயோத்திக்கு) வருவாயாக.

111. "அந்தணன் அவ்வுரை கூறிட......"

அந்தணன் - பிராமணனுகிய சுக்கிரன், அண்ணல் - அரசன், நைந்து - வருந்தி, தொலைவு எய்தினும் - மாண்டு போனலும், மாறிலன் - மறுக்க மாட்டேன், தணித்தான் - சுக்கிரன் கொண்ட கோபத்தை ஆற்றினன்.

112. "சொன்னவை கோள்கிலை......"

சொன்னவை கோள்கிலை - நான் சொன்னவற்றை ஏற்றுக்கொள்கின்றிலை, சூழ்வினை எய்தின் - தீவினை வந்தடையும்போது, அன்னவை பட்டறி - அவைகளை அனுபவித்து அறிந்துகொள், ஆதலமன்னு - துன்பப்படுகிற அரசனே, ஏகலும் - நீங்குதலும்.

113. "எந்தம் நாயக உமக்கெமர்......"

எமர் - எம் சுற்றத்தார், நெடும்பிழை - பெருந்தவறு, இழைத்தல் - செய்தல், கரந்து - மறைத்து; ஒழித்து, எதிர் உரைத்தல் - மாறுபாடாகக் கூறுதல், வருத்தம் அற - (நான் கொண்ட) கவலை யொழியும்படி.

114. "இந்த வேங்கடம் அணைந்து......"

வேம்கடம் - வெம்மை யுடைய பாலைவனம், இடைந்தனை - வருந்தியே, படர் - துன்பம், மொழிதந்து - என்னிடஞ் சொல்லி, அரசுகோண்டு உறைக - இராச்சியத்தை ஏற்றுக்கொண்டு வாழுதி.

115. "எந்தம் நல்லுயிரும்......"

கிளைஞர் - *சுற்றத்தவர்,* மன்னுயிர்கள் - *(நாட்டில்) வாழும் மக்கள்,* நந்தினும் - *அழிந்தாலும்,* நரகத்தினில் இருத்திவிடினும் - *நரகத்திலே கிடத்தினுலும்,* அந்தணர் அறிந்திட - *பிராமணர்கள் சாட்சியாக,* உரைசெயத் தகுவதோ - *சொல்வது முறையாகுமோ.*

116. "கடிதை யிட்ட பலியை......"

கடிதை - *பிச்சையேற்கும் பாத்திரம்,* இட்டபலியை - *இடப்பட்ட உணவை,* கையில் எடுத்து அடுபசிக்கு நுகரும் - *மீளக்கையிலே யெடுத்துத் தம்மை வருத்தும் பசியின் பொருட்டு உண்ணும்,* மிடியர் - *தரித்திரர்,* அடிகளிற் கரம் இறுக்கினன் - *(முனிவருடைய) பாதங்களை அழுந்தப் பற்றினன் (காலில் வீழ்ந்து வணங்கினன் என்றபடி),* கடிய சொற்கொடு - *வன் சொற்களைக் கொண்டு,* வினை - *தீவினைசெய்யும்,* கழறுவான் - *சொல்லுகின்றார்.*

117. "தோக்க பற்பல விலங்குகள்......"

*(அரிச்சந்திரனே! தந்நாட்டை மீள வாங்குதல் உனக்கு இஷ்டமில்லையாயின் இன்னுமொன்று சொல்கிறேன் கேள்)* புக்க இக்குடிதையில் - *நீவிர் வந்திருக்கிறதாகிய இந்த யமுனையாற்றங் கரையில்,* தோக்க பற்பல விலங்குகள் - *கூட்டமாகிய பலவகையான (துஷ்ட) மிருகங்கள்,* தொடர்ந்து உடல் பிளந்து நலியும் - *உங்களைத் தூரந்துபற்றி உடலைப் பிளந்து வருத்தும் (கொல்லும்),* குடிதை பற்பல பொருப்பும் அஃது - *அரிவிகள் பல வீழப்பெற்ற மலையிலும் அப்படியே (துஷ்ட மிருகங்கள் சஞ்சரித்தல்) ஆகும்,* இக்கடத்தினில் - *இந்த வனத்திலே,* அவத்தில் எளிதிற் புகுதல் தக்கதல - *அநியாயமாக எளியர் போலச் சஞ்சரிப்பது (அரசனுயிருந்த உனக்குத்) தகுதியன்று,* என் மக்களைத் திருமணஞ்செய்து - *(ஆனதினுல்) எமது கன்னியர் இருவரையும் நீ விவாகஞ் செய்துகொண்டு,* மகிழ்ந்து நின்வளம் பெறுதி - *மகிழ்ச்சியுடன் உனது இராச்சியம் முதலிய செல்வங்களை மீள ஏற்றுக் கொள்ளுதி,* குடிதை - *யாறு.*

118. "துக்கி புக்கது செருக்கொடு......"

துக்கிபுக்கது - *வயிற்றின்கண் (உணவாக) புகுந்தது,* செருக்கொடு *(சீரணித்த லின்றி) மாறுபட்டுக் குடலின்கண்ணே அருவருப்பை யுண்டாக்க,* கக்கிவிட்டது - *உமிழ்ந்துவிடப்பட்டது (உவாந்திக்கப்பட்டது),* புசிப்பவர் கடற் புவியிடத்து உளரோ - *அதனை மீள உண்பவர் கடலினுற் சூழப்பட்ட உலகத்திலே யிருக்கிறுர்களோ (இல்லை யென்றபடி),* தக்கசொல் திறம் உரைத்திலை - *செய்யத் தக்கதைச் சொன்னீரல்லீர்,* சழக்கினன் - *செருக்குடையவன்; வீணன்,* குக்கி - *வயிறு.*

119. "இந்த உத்தரம் உனக்கினி......"

உத்தரம் - மறுமொழி, வகிர் இட்டுவிடினும் - பிளந்தாலும், வன்பி னுடன் - வன்கண்மையோடு (இரக்கமின்றி), என்வயின் - என்னிடம், முனிவு - கோபம்.

120. "புனித நின்சொலை மறுத்தலில்......"

புனித - தூயவரே; பரிசுத்தமானவரே, வெறுத்திடல் - கோபங்கொள்ள வேண்டாம், பனி தவழ்ந்த விழியன் - நீர் ததும்புங் கண்களை யுடையவ னாய், படிவிழுந் தடி பணிந்து - நிலத்தில் வீழ்ந்து பாதங்களை வணங்கி, இனிவரும் பரிசு - இனிமேல் (உனக்கு) வரும் துன்பங்களை, அரோ - அசைச்சொல்.

121. "கன்னியும் மன்னனும்......"

கன்னி - சந்திரவதி, சென்னியைத் துளக்கி - (கோப மேலீட்டினால்) தலையசைத்து, வன்னி - அக்கினிதேவன், உன்னினான் - நினைத்தான்.

122. "வருகென நினைத்தலும்......"

மலர்த்தண் சூழலில் - (தண்மலர்ச் சூழலில்) குளிர்ச்சி பொருந்திய பூஞ்சோலையில், இரு பிறப்பாளனாய் - பிராமண வடிவங் கொண்டவனாய், பிராமணருக்குப் பூணூல் தரிக்குமுன் ஒருபிறப்பும், தரித்தபின் ஒரு பிறப்பு மாக இருபிறப் புண்டென்பர், கருமம் ஏது உரை - காரியம் என்ன வென்று சொல்லுதிர், கனல் - அக்கினிதேவன்.

123. "கடுநெருப் பின்னணம்பகர......"

கடுநெருப்பு - வெவ்விய அக்கினி தேவன், பொடிபட - சாம்பராகும் படி, மறித்து - (அவர்களைப்) போகவொட்டாது தடுத்து, அடர்ந்து - நெருங்கி, கோளோடும் - வஞ்சனையுடன்; வலிமையுடன்.

124. "கற்பினில் மிக்கவள் கன்னி......"

நன்னெறிப் பொற்பினன் - நல்ல ஒழுக்கமாகிய சிறப்பினை யுடையவன், சுடவும் போதிலேன் - அவர்களைச் சுடுதற்குத் தகுதியுடைய னல்லேன், வெற்பினில் அருந்தவ - மலைபோன்ற திண்ணிய அரிய தவத்தை யுடைய வரே, வெளியடக்கி - காட்டிலுள்ள இடைவெளி முழுவதையும் எனக்குள் அடங்கச்செய்து (அக்கினி மயமாக்கி).

125. "இவ்வகை கேட்டபின்......"

வெவ்வழல் மறித்து இனிதிருக்க - கொடிய நெருப்பானது அரசன் முதலியோர் செல்லும் மார்க்கத்திலே இடையிட்டு நன்கு பற்றிப் பரவ, நவ்வியன்னாளுடன் - மறிமானின் பார்வையை நிகர்த்த நோக்குடையவ ளாகிய சந்திரவதியுடன்.

126. "வெறிகமழ் சோலையும் வெற்பும்......"

வெறிகமழ் - நறுமணம் வீசுகின்ற, வெற்பு - மலை, வெண்திரை - எறிபுனற் பொய்கை - வெள்ளிய திரை மறிகின்ற நீர் நிறைந்த தடாகம், செறிகழை (கழைசெறி) - மூங்கில்கள் அடர்ந்த, சேணிடை - (சற்றுத்) தூரத்தில்.

127. "கண்டனர் புகைவதே......"

கண்டனர் - கண்டு, மண்தலம் வளர்ந்து - வட்டவடிவாகப் பரந்து, அண்டாரண்டங்களும் - தேவர்களுக்குரிய உலகங்களும், ஆர்த்து - சடசட என ஒலிசெய்து, மண்டலம் (மண்+தலம்) பூமியின் எவ்விடத்தும்.

128. "இடஞ் சிறிதிலை யென......"

எண்திசாமுகம் - எட்டுத்திக்கி னிடங்களிலும், இரிந்து பாறிட - ஓடி மறைய, கடந்த அத்தோதுதியை - ஓடிய அவ்விலங்கினங்களை, கடிது நாடியே - விரைவில் தேடியே, சுடர் - சுவாலை.

129. "அவ்வழல் வளர்ந்திட......"

அரசர் கோமகன் - அரிச்சந்திரன், இவ்வழல் எவ்வழல் - இந்நெருப்பு எங்ஙன முண்டாயது, செவ்வழல் அயிற்படை - செவ்விய ஒளியோடுகூடிய வேற்படையைக் கொண்ட, வெவ்வழல் அனைய நீர் - வெவ்விய நெருப்புப் போன்ற கோபக் குணத்தையுடைய, வெள்ளி - சுக்கிராச்சாரி.

130. 'சண்ட வெம்பசியினல்......"

சண்ட வெம்பசியினல் - விரைவில் அதிகப்படுகின்ற பொல்லாத பசி காரணமாக, அண்டகோளத்தினை - உருண்டை வடிவாகிய இப்பூமியை, அரசர்தம் மரபில் - அரச வமிசத்தில், உண்டலது - புசித்தல்லாமல், ஏகலது - போகமாட்டாது; மூலபாடத்தில் எகிலது என இருப்பதை ஏகலது எனத் திருத்திக் கொள்க.

131. "ஒருவரை யாருயிர் உண்டு..."

ஒருவரை - ஒரு ஆளை மாத்திரம், உய்ந்து - உயிர்தப்பி, திரு - இலக்குமிபோன்ற சந்திரவதி, அனல் எதிர் - எரியும் நெருப்பினிடத்து.

132. "புரவல னடிகளைப் பூண்டமைச்சன்......"

ஒருவன் நிற்கவே - அரசராகிய நீர் சாகத் துணிந்து முற்பட்டு நிற்றலால், அரசழிவது நலன் அன்று - இராச்சியம் கெட்டுப்போதல் நன்றன்று, நிற்றி நீ (நீ நிற்றி) - நீர் நெருப்பிற்கு இரையாகாது நிற்குதிர், விரைவோடு - சீக்கிரத்தில்.

133. "அன்னவை உரைக்க......"

அவனை மார்பிறுகப் புல்லி - அச் சத்திய கீர்த்தியைத் தன்மார்போடு உற அணைத்து, நீ இறக்கினும் யான் இறக்க வேண்டும் - அரச வமிசத்தவ

னல்லாத நீ உயிர்விட்டாலும், உன்னை அக்கினி இரையாக ஏற்றுக்கொள்ளாதாதலால், அரச வமிசத்தவனாகிய நானும் இறந்தேதீரவேண்டும்.

134. "இருவரும் இறந்தோமாகில்......"

இவரை ஓர் பதியிற் சேர்க்க - சந்திரவதி தேவதாசன் என்னுமிவர்களை ஒரு பட்டினத்திலே கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு, பதி யென்பதற்கு ஊர், நாடு எனவும் பொருள் கொள்ளலாம். உறுபொருள் உணர்ந்தோய் - எதிர்காலத்தில் நிகழவிருக்கும் விஷயங்களையுந் தேர்ந்து சொல்ல வல்லவனே, மருமலர் நறுந்தார் - வாசனை மிகுந்த மாலையை யணிந்த, மறுதலைத்து - தடுத்து, திருஎழில் - இலக்குமி போன்ற அழகுடைய, வடமீன் கற்பின் - அருந்ததியை யொத்த கற்புடைய, வடமீன் - (வசிட்டருடைய பத்தினியாகிய) அருந்ததி, திருந்திழை - சிறந்த ஆபரணங்களை (முந்தி) யணிந் திருந்தவளாகிய சந்திரவதி.

135. "மாந்தரால் இறத்தல் வாழ்தல்......"

பெருமையிற் சிறந்த மந்திரியே! கற்புடைய மகளிருக்கு, அவர்களுடைய ஆடவர் பொருட்டு இறக்க நேர்ந்தால் இறத்தலும், அவர்கள் உயிரோடு வாழும்போது உடன்வாழ்தலும் முறையாகுமென்று, சகல சாத்திரங்களையு முணர்ந்தவர்களாகிய அறிஞர்கள் சொல்ல, (மேல்நாள்) முன்பு (இளமைப் பருவத்தில்) நான் கேட்டறிந்துள்ளேன்; அந்த நியாயத்தினால், (நீ)எங்கள் அரசனைத் தீக்கிரையாகவிடாது தடுத்துக்கொள்; இந்தக் கொடிய நெருப்பில் நானே குதித்து இதற்கு இரையாகின்றேன், என்று சொல்லிக்கொண்டு பசிய வளையலை யணிந்த சந்திரவதி முற்பட்டு (நெருப்பினிடம்) ஓடினாள்.

136. "அன்னைதான் ஏகமைந்தன்......"

அன்னைதான் ஏக – (நெருப்பிற் குதிக்கும்படி) தன் தாய் முற்பட்டுப் போக, மைந்தன் - தேவதாசன், அலறிச் சென்று - கதறிக்கொண்டோடி, அடியில் - (தாயின்) பாதங்களில், நீர் பயந்தீர் - நீவிர் இருவீரும் பெற்றமை, இடுக்கணுக்கு உதவ அன்றே - உங்களுக்கு ஏதும் ஆபத்து நேரும் போது உறுதுணையாக நின்று அவ் வாபத்தைக் காப்பதற்காக அல்லவோ, முன்னையூழ் விதியினாலே - முன்செய்த தீவினை காரணமாக விளைந்த விதியின்படி, முந்த - உங்க ளிருவீருக்கும் முந்தி, பிழைமின் - உயிர் தப்பிக் கொள்ளுங்கள், அருவிநீர் பெருதுங் கண்ணன் - சிற்றாறு பாய்வது போல் நீர் சொரிகின்ற கண்களை யுடையவனாகிய மகன்.

137. தையலாள் அச்சோறு கேட்டு......"

தையலாள் - சந்திரவதி, தனையன் - மகன்; தேவதாசன், மோந்து - முத்தமிட்டு, செய்ய வாய்ப்பல் வீழ்ந்திலாய் - சிவந்த அதரத்தோடு கூடிய வாயினின்றும் பற்கள் வீழப்பெறவில்லை (ஏழுவயசாகவில்லை என்றபடி) செய்திறம் - செய்யவேண்டிய முறை, ஐய - அப்பனே! எங்கு அடுத்தது - எப்படி வந்து சேர்ந்தது?

138. "செய்தவப் பயத்தினுலே......"

பயத்தினுலே - பலன் காரணமாக, கைதவம் - வஞ்சனை; தீமை, உய்தக உதவும் - உயிர் பிழைக்கச் செய்யும், ஒழி நீ - நீ கவலை யொழிக, மோய்தழல் - சுவாலித் தெரிகின்ற பெரு நெருப்பு, முடுகிநின்று - சமீபித்து நின்று.

139. "மறைவழி கடந்தோமாகில்......"

மறைவழி கடந்தோமாகில் - வேதத்திற் சொல்லப்பட்ட ஒழுக்கத்தை மீறி நாங்கள் நடந்ததுண்டானல், வருவிருந் திகழ்ந்தோமாகில் - வீடு தேடி வந்த அதிதிகளை அவமதித்திருந்தோமானல், முறைவழி - செங்கோன் முறைப்படி, மூப்பர் - பெரியோர், நயத்தல் - விரும்புதல்; ஆசைப்படுதல், பிறர்நலங் கோன்றேமாகில் - பிறர் செய்த நன்றியை மறந்துளோமானல்; குறை சில - ஏதுங் குற்றங்கள், கோல் - என்னை எரித்துக் கொன்றுவிடு.

140. "மதுரமேன் மொழியாள் கற்பு......"

மதுர மேல்மொழியாள் - இனிய மிருதுவாகிய வார்த்தையைப் பேசுகின்ற சந்திரவதியினுடைய, கற்பு வளர்நெடு வடவைத்தீயின் முதிர்தழல் - கற்பாகிய சுவாலிக்கின்ற பரந்த வடவாமுகாக்கினியாகிய முற்றிய நெருப்பு, என்னைச் சுடும் - அக்கினிதேவ னென்று சொல்லப்படும் என்னையே எரித்து விடும், ஆர்ப்பு — இரைச்சல், நா ஒடுங்கு - சுவாலைகள் தணியப்பெற்று, கதிரவன் - சூரியன்.

141. மண்டழல் தணிந்து......"

மண்டழல் (மண்டு அழல்) செறிந்த நெருப்பு, வாவி - பெருங்குளம், முண்டகம் - வெண்தாமரை, குமுதம் - ஒருவகை நீர்ப்பூ; அல்லி யெனப்படும், நீலம் - நீலோற்பலம், முளரி - செந்தாமரை, கண்டு அகம் குளிர்ந்து - (அவற்றைப்) பார்த்து மனம் குளிரப்பெற்று, வண்டல் - சேற்று நிலம், மணி - முத்து, கொழிக்கும் - அள்ளி வீசுகின்ற, வாரணவாசி - வாரணம் அசி யென்னும் இரு நதிகள் சங்கமிக்கும் (பொருந்தும்) தானம், காசிக்கும் இப்பெயர் வழங்கும்.

142. "வாரண வாசி நண்ணி......"

வண்துறை யதனில் - வளப்பம் பொருந்திய (ஆற்றங்) கரையில், மேவி - போய், ஆரணநெறி நீர் ஆடி - வேதத்திற் சொல்லப்பட்ட முறைப்படி தீர்த்தமாடி (மூழ்கி) பூரணக்குணம் - நிறைவான குணங்கள், காரணத் தமைச்சன் - மேல்வருங் கருமங்களை உணர்ந்துகொள்ள வல்ல மந்திரி.

செந்தமிழ் வாசக மஞ்சரி முற்றிற்று.

அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்